இறக்கை: 14 இறகு: 8

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஆகஸ்ட் 2025 | விலை ₹ 50



**இந்துத்துவாவின் உடலரசியல்**

- ஜமாலன்

**இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலமே அரண்**

- சு. குமணராசன்

**2025ல் நமது உலகம்**

- வல்லபாய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org















கட்டுரை | சுகதேவ்

# தமிழ்நாடு வளமும் நலமும் திட்டக்குழுவின் வழித்தடம்

**ஊட**கங்களில் அல்லது சமூக உரையாடல்களில் பொருளாதாரம் என்றால், பெரிதும் பங்குச் சந்தை ஏற்ற இறக்கம் மற்றும் தங்கம்-வெள்ளி விலை உயர்வு-குறைவு என்பதாகச் சுருங்கி நாளாகிவிட்டது. பட்ஜெட் வேளையில் வருமான வரி வரம்பு, பெட்ரோல் மற்றும் இதர அத்யாவசிய பொருள்கள் மீதான வரி உயர்வு போன்றவை பற்றி பேச்சு இருக்கும். குறிப்பாக, பட்ஜெட் வெளியான அன்று நடக்கும் தொலைக்காட்சி ஊடக விவாதத்தில் கலந்துகொள்ளும் "நிபுணர்கள்" இவற்றுடன் கூடுதலாக மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு அல்லது அதில் பாகுபாடு பற்றிப் பேசுவார்கள். மற்றபடி, வாழும் மண்ணின் பொருளாதார நிலவரம் பற்றி நாம் பெரிதாகக் கவலைப்படுவதில்லை.

இப்படியான பின்னணியில், மாநிலத் திட்டக் குழு சார்பில் தமிழ்நாடு அரசிடம் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அறிக்கைகள் மிகுந்த கவனத்துக்கு உரியதாக அமைகிறது. மைய ஊடகங்களில்கூட அவை எந்த அளவுக்கு பேசப்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு பேசப்படவில்லை.

தமிழ்நாடு மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெயரஞ்சன் முன்னெடுப்பில் இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை அவரும் இதர துறைசார் அதிகாரிகளும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் அளித்திருக்கிறார்கள்.

முதன்மைத் துறையான வேளாண் துறை சார்பிலிருந்து விலகி புதிய தடத்தில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதிலும் பெருக்குவதிலும் தமிழ்நாடு வளர்முகத்தில் இருக்கிறது என்பதை ஆதாரக் கண்ணோட்டமாகக் கொண்ட ஊரக வேளாண் அல்லா வேலைவாய்ப்புகள் பற்றிய மீளாய்வை 107 பக்க அறிக்கையாக திட்டக்குழு சமர்ப்பித்திருக்கிறது.

உலக அளவிலான மாற்றங்களுக்கும் புதிய சவால்களுக்கும் ஏற்ப மாநிலத்தின் மனித வளத்தை சீர்படுத்தி கூராக்கும் பணியை வேகமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் 28 பக்கங்கள் கொண்ட அறிவுசார் பொருளாதார நிலவர அறிக்கை இன்னொன்று.

"ஆசியாவின் டெட்ராய்ட்" என்று கருதப்படும் தமிழ்நாடு, வாகன உற்பத்தித் துறையில் முன்னிலை இடத்தை தக்கவைத்துக் கொள்வது பற்றியும் புதிய வாய்ப்புகளை திறம்படப் பயன்படுத்துவது குறித்தும் அலசுகிறது 63 பக்கங்கள் கொண்ட பிறிதொரு அறிக்கை.

இந்த மூன்று அறிக்கைகளையும்விட மிக முக்கியமானது, 600 பக்கங்களுக்கு மேலான, வளம் குன்றா வளர்ச்சி இலக்குகள் குறித்து, பல்நோக்கில் விவாதிக்கும் விரிந்த அறிக்கை.

-தொடர்ச்சி மூன்றாவது அட்டையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14

இறகு: 8

திருவள்ளுவராண்டு 2055

ஆடி - ஆவணி

ஆகஸ்ட் 2025

ஆசிரியர்

வி. முத்தையா

9841457503

ஆசிரியர் குழு

முகிலன்

இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்

காலஞ்சென்ற

கி. பி. அரவிந்தன்

வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:

க. முகுந்தன்

K. Mukunthan

kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:

Courtesy: Img.freepik.com

உள் ஓவியங்கள்:

லெசி

தொடர்பு முகவரி:

காக்கை, 22, MJB தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை- 600 005.

செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:

kaakkaicirakinile@gmail.com

இணைய முகவரி: kaakkai.in

www.facebook.com/kaakkai.cirakinile


## தேர்தலும் ஜனநாயகமும்

சந்தைமயமும் வலதுசாரி அடையாள அரசியலும் கைகோர்த்துப்பயணிக்கும் காலமிது. கடந்த 11 ஆண்டு கால ஆட்சியினைத் திரும்பிபார்க்கும்போது, ஜனநாயகத்தின் தூண்களான சட்டசபை- நாடாளுமன்றம்; ஆட்சித்துறை; நீதித்துறை; ஊடகங்கள் மட்டுமின்றி, ஜனநாயகத்தின் துணை நிறுவனங்களாக விளங்குகின்ற தேர்தல் ஆணையம், யு.ஜி.சி, சி.ஏ.ஜி, யு.பி.எஸ்.சி யாவுமே சந்தைமயம் மற்றும் வலதுசாரி அடையாள அரசியலின் தாக்கத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஜனநாயகம் என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

தேர்தல் ஆணையமானது அரசியலமைப்புச் சட்டத்தினால் நிறுவப்பெற்ற ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இதன் பணியென்பது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் இருந்து, சட்டமன்றம், நாடாளுமன்றம், குடியரசுத்தலைவர், குடியரசுத்துணைத்தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் ஒரு ஜனநாயக நிறுவனமாகும். வயதுவந்த குடிமக்கள் அனைவருக்கும் "ஒரு வாக்கு ஒரு மதிப்பு" எனும் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமையை உறுதி செய்வது இதன் கடமையாகும்.. இன்றைய, சந்தைமயம் மற்றும் வலதுசாரி அடையாள அரசியலின் கட்டுப்பாடுகளற்ற போக்கினால், தேர்தல் ஆணையம் என்பது மக்களுக்கு சேவகர்களாக இருப்பதற்குப் பதிலாக நிர்வாக அணுகுமுறையினை மக்கள்மீது மேலிருந்து திணிப்பதாக இருக்கிறது. தேர்தலென்பது இப்போதெல்லாம், நிதிமூலதனம், பெரும்பான்மை மத அடையாள அரசியலின் ஆதிக்கமிக்கதாக மாறி நிற்கிறது.

கடந்த ஒருவருடத்தில் நாடுமுழுக்க நடந்த ஹரியானா, டெல்லி, மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களில் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல்கள் யாவுமே, குளறுபடிகள் மட்டுமின்றி, ஏதோ ஒருவகையில் ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு இணக்கமானச் சூழலை உருவாக்கித் தந்ததாக ஜனநாயகச் சக்திகள் தங்களது கண்டனக்குரல்களைப் பொதுவெளியில் பதிவு செய்தன. இதுபற்றியெல்லாம் எந்தக் கவலையுமற்ற தேர்தல் ஆணையமானது வருகிற அக்டோபர்-நவம்பரில் நடக்கவிருக்கும் பீகார் மாநிலத் தேர்தல் நடவடிக்கையில் தனது கவனத்தைச் செலுத்தத் தொடங்கிவிட்டது.

அரசியலமைப்பின்படி, தேர்தல் ஆணையமானது தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமானதாகவும் நடத்தப்படுவதை உறுதிசெய்ய கடமைப்பட்டுள்ளது. நடக்க இருக்கும் பீகார் தேர்தலிலோ, அப்படியில்லாமல் குடிமக்களை வாக்களிக்கும் உரிமையிலிருந்து விலக்கிவைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது. தேர்தல் நடப்பதற்கு குறைந்த காலமே இருக்கும் நிலையில், வாக்காளர் பட்டியலில் "சிறப்பு தீவிர திருத்தம்" எனும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. அதன்படி, 01.01.2003 அடிப்படையாகக் கொண்டு அன்றைய தினத்தில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களும் அவரது வாரிசுகளும் தங்களது பிறப்புச்சான்றிதழையும், 01.01.2003க்குப்பிறகு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றவர்கள் தேவையான சான்றிதழ்களை சமர்ப்பிப்பது மட்டுமின்றி, தங்களது குடியுரிமையையும் நிறுவவேண்டும். அவ்வாறு நிறுவ முடியாதவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது என்கிறது. இதனால் ஏழைமக்களே அதிகம் பாதிக்கப்படுவர். இப்பிரச்சினையில் உச்சநீதிமன்றமும் தலையிட்டு சான்றாதாரங்களில் ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையையும் சேர்த்துக்கொள்ள பரிந்துரைத்திருக்கிறது. இச்சமயத்தில், தேவையான ஆவணங்கள் இல்லாதவர்களை பட்டியலிலிருந்து விலக்க உதவும் ஆணையத்தின் தீவிர சிறப்பு திருத்த நடவடிக்கையினை விலக்கிவைத்து, 18 வயது நிரம்பியுள்ள குடிமக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கிடக்கோருவது அவசியம். •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை ரூ. 50.00
ஆண்டு சந்தா ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 2000.00

வெளிநாடு
ஆண்டு சந்தா $ 50.00

வங்கி விவரம்
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்
பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை ரூ.5000

**காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.**


## சிறகுக்குள்ளே...


தமிழ்மயமாதலும் சம்ஸ்கிருதமயமாதலும்
● கி.இரா.சங்கரன் ........ 05

இந்துத்துவாவின் உடலரசியல்
● ஜமாலன் ........ 11

இந்திபேசாத மக்களுக்கு ஆங்கிலமே அரண்
● சு.குமணராசன் ........ 16

வடமொழி மேலாண்மையைத்
தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாதது ஏன்?
● டாக்டர் சு. நரேந்திரன் ........ 21

வாக்குரிமைக்கு சவால்.. இன்று பீகார்.. நாளை?
● தி.சிகாமணி ........ 25

வழிபாட்டு அரசியலும், அரசியல் வழிபாடும்!
● இரா.மோகன்ராஜன் ........ 27

நீலகேசி உடைத்த சனாதனம்
● இரா.முரளி ........ 32

வள்ளுவரின் இறைக்கோட்பாடும்,
திராவிட இயக்கத்தாரின் உரைத்திறனும்
● வெ. மதியரசன் ........ 36

ஆன்மிகம் என்னும் சொல்லுக்குப் பின்னே...
● சு.பொ.அகத்தியலிங்கம் ........ 40

2025 இல் நமது உலகம்
● வல்லபாய் ........ 42

மானிட மேம்பாட்டுக்கும் சமூக மாற்றத்திற்குமான கல்வி!
● ரூபன் சிவராஜா ........ 47

மதச்சார்பற்ற வரலாற்றுக்கதையாடல்களும்,
வகுப்புவாத சவால்களும்
● பி.பி. சைதாலி, மு.சாகுல் ஹமீது ........ 51

அரசுடன் சமூகம் இணைய வேண்டும்
● க. பழனித்துரை ........ 54

பொன்.தனசேகரனின் கவிதை உலகம்
● எஸ்.வி.ராஜதுரை ........ 59

ஈழத் தமிழ் நாடகங்கள்
● அம்ஷன் குமார் ........ 62

65/66
● இரா.எட்வின் ........ 65

ஒன்றிலொன்று
● களந்தை பீர்முகம்மது ........ 67

நூற்றாண்டு காணும் மகத்தான திரைக்கலைஞன்
● அஜயன் பாலா ........ 71

ஆள் இல்லா விமானங்கள்
● சு.இராமசுப்பிரமணியன் ........ 74

விண்ணை வளைக்கப் போகும் இந்தியா!
● துருவன் ........ 78





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | கி.இரா.சங்கரன்

# தமிழ்இலக்கியத்திலும் கல்வெட்டிலும் கடவுள்பெயர்கள் கோயில்பெயர்கள் தமிழ்மயமாதலும் சம்ஸ்கிருதமயமாதலும்



**01. சமயம்:** கடவுள் நம்பிக்கையும் அதுதொடர்பான செயற்பாடுகளையும், சடங்குகளையும் சமயம் என்று சுருக்கமாகக் கூறலாம். விரிவான பொருளில், சமயப் பண்பாட்டுமுறை, நடைமுறை வழக்கம், நம்பிக்கை, ஒழுங்கு, அறிந்தேற்கப்பட்ட பனுவல்/நூல், புனிதப்படுத்தப்பட்ட இடங்கள், சமயத்தலைவர்கள், தீர்க்கதரிசிகள் இவற்றை ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் அனைத்தையும் சமயத்தின் கூறுகள் எனலாம்.

**02.** தமிழ்ச்சமூகம் பொருத்து இந்நிறுவனங்கள் பலவாறாக இலக்கியத்திலும் கல்வெட்டுகளிலும் சுட்டப்பட்டுள்ளன. தொடக்கத்தில், முன்னோர் வழிபாடாக இருந்த நம்பிக்கைகள் சமயமாக உருத்திரள்கிறபோது, மனிதர்களாக வாழ்ந்துமறைந்த அம்முன்னோர்கள் கடவுளர்களாக வணங்கப்படுகின்றனர். அவர்களின் பெயர்களும் மாற்றப்படுகின்றன. க்காட்டாக, சென்னைக்கருகேயுள்ள மக்கள்கடவுளான கருமாரியம்மன் அண்மையில் கிருஷ்ணமாரி என்று துதிக்கப்படுகிறார்.[1] சமூகத்தின் போக்குகள் மாறுகிறபோது சமயங்களின் நிலைகளும் மாறுகின்றன. சமய நிறுவனங்களும் அவற்றை ஆள்வோரும் மாறுகின்றனர். தமிழ்நாட்டு வரலாற்றைப் பொருத்து சமய நம்பிக்கையின் முன்னோர்வழிபாடு இரும்புக்காலம் தொடக்கம் நடுகல்வழியே ஈடேறுகிறது. நடுகல் கோயிலாக வழிபடப்பட்டதனை நிழல்கா னெடுங்க நின்ற மன்றம் என்ற சிலப்பதிகாரக்கூற்று உறுதிப்படுத்துகிறது.[2] நடுகல் வீரர்களுக்கு மயில்பீலி முதலியன வைத்து வழிபட்டது பற்றிய குறிப்புகள் தமிழ்ச்செம்மொழி இலக்கியத்தில் கிடைக்கின்றன. நடுகல்வழிபாட்டிற்கு அடுத்து கல்லறைப் பெட்டிகள் (*Sacrophagus*) அந்த இடத்தினைப் பிடித்தன. இத்தகைய புதைகுழி வழிபாட்டு அமைப்புகள் அடுத்துவரவிருக்கும் கோயில் கட்டடங்களுக்குத் தொடக்கநிலை அமைப்பாக இருந்தன என்பர் அறிஞர்.[3] செம்மொழி இலக்கியத்தில் சமய நிறுவனங்கள் கோயில், கோட்டம், பள்ளி என்று பலவாறாகச் சுட்டப்பட்டுள்ளன. பல சமயங்களின் கோட்டங்கள்பற்றி சிலப்பதிகாரம் பேசுகிறது. போதிமன்றம் என்றசொல் சிலப்பதிகாரத்தில் பதியப்பட்டுள்ளது. (சிலப்பதிகாரம், *23:76*). புத்தபீடிகை, தர்மபீடிகை, என்ற சொற்கள் மணிமேகலையில் பதிவாகியுள்ளன என்பதனை அனைவரும் அறிவர் (மணிமேகலை, *3:45; 8:63*).

**03.** தமிழ்நாடுபொருத்து, வடக்கிலிருந்துவந்த சமயங்களில் சம்ஸ்கிருதத்தினை முன்னிறுத்தி பிராமணக் கடவுளர்கள்/வேதக்கடவுளர்கள் அறிமுகமாயினர். அச்சமயம் இங்கு நிலைபெறுவதற்குத் தோதானசூழல், பண்பாடு, சமூகம், மரபு, நம்பிக்கை போன்ற கூறுகள் இருந்தன என்பர் அறிஞர். வடக்கில் அசோகர்

---

1 கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், (முதல் பதிப்பு,1983) என்.சி.பி.எச். சென்னை,1994,ப.26.

2 உ.வே.சாமிநாதையர், இளங்கோவடிகள் அருளிச்செய்த சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்குநல்லாருரையும், (பதினொன்றாம் பதிப்பு) டாக்டர் உ.வே.சா.நூல்நிலையம், சென்னை.2008. நிழல்கா னெடுங்க நின்ற மன்றம் (5;127) என்ற தொடருக்கு நெடியகல்நாட்டி நின்ற மன்றம் என்று உரையாசிரியர் பொருள் தருகின்றனர். பக்.144;163;685.

3 K.R.Srinivasan, Temples of South India, National Book Trust, India, New Delhi, 1971.p.6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலில் சமயத்தினை அரசு நிறுவனமயமாக்கினார். சைத்தன்யங்களையும், விகாரைகளையும், குடைவரைக் கோயில்களையும் உருவாக்கினார். அவர்தாம் முதன்முதலில் சமய நிறுவனக் கட்டமைப்பிற்குக் கல்லினைத் தேர்வுசெய்தார்.[4] அடுத்து, பிறசமயங்களும் அதனைப் பின்பற்றின. செம்மொழிப்பாக்களின் அடுக்குகளை உற்றுநோக்கும்போது அரசுருவாகும் காலத்தில் மக்களை ஈர்த்து அவர்களின் அறிந்தேற்பினைப் பெறுவதற்கு ஒரு கருத்தியல் தேவை ஆள நினைப்பவருக்கு ஏற்பட்டது. அதற்கு வேத மரபும், புராண மரபும் பெரிதும் துணைபுரிந்தன.

**04. தமிழ்மயமாதல்:** கருத்தியல்கள் வடக்கிலிருந்து வந்தாலும் கருத்தியல் தொடர்பான சொற்களைத் தமிழ்ச் சமூகம் தமிழ்ப்படுத்தியது *(Tamilisation)*. வடபுலத்திலிருந்து வந்த சம்ஸ்கிருதக் கடவுளரின் பெயர்கள் தமிழ்மயமாயின *(Tamilised)*. இதற்குப் பலகாட்டுகள் செம்மொழிப்பாக்களில் உண்டு. கடவுளரின் பெயர்களே பல கருத்தியல்களைக் கொண்டிருந்தன. ஆனால், அவை தமிழ்மயமாயின. யமன் என்ற கடவுள் கூற்றுவன் என்றானான். திரிநயனன் முக்கண்ணன், முக்கட்செல்வர், கண்மூன்றுடையான், முக்கட்பகவான் என்றானான். நீலகண்டன், காரியுண் கடவுள் என்றும் நீலமணிமிடற்றொருவன் என்றும், மணிமிடற்றண்ணல் என்றும் ஆனான். இந்திரன் வேள்விமுதல்வன், ஐயிருநூற்று மெய்நயனத்தவன் என்று தமிழ்ப்படுத்தப் பட்டான். விஷ்ணு மாயோன் என்றும் மாயவன் என்றும் அஞ்சன உருவன் என்றும் அறியப்பட்டான். மாயோனின் ஜன்மநட்சத்திரம் திருவோணம் என்றும் முக்கட்செல்வனின் பிறப்புநட்சத்திரம் ஆதிரை என்றும்

**கருத்தியல்கள் வடக்கிலிருந்து வந்தாலும் கருத்தியல் தொடர்பான சொற்களைத் தமிழ்ச் சமூகம் தமிழ்ப்படுத்தியது (Tamilisation). வடபுலத்திலிருந்து வந்த சம்ஸ்கிருதக் கடவுளரின் பெயர்கள் தமிழ்மயமாயின (Tamilised). இதற்குப் பலகாட்டுகள் செம்மொழிப்பாக்களில் உண்டு. கடவுளரின் பெயர்களே பல கருத்தியல்களைக் கொண்டிருந்தன.**

கற்பிக்கப்பட்டது.[5] இப்படிக் கடவுளுக்கே பிறப்பு நட்சத்திரம் உண்டு என்ற கருத்தியல் புதிதாகத் தமிழ்நாட்டிற்கு வந்தது. இதுபோன்ற நட்சத்திர வழிபாட்டுமுறை வடக்கிலிருந்து தெற்கே வந்த சமூகப் பழக்கம் என்பர் அறிஞர்.[6] இதனைப் பின்பற்றியே தமிழ்நாட்டு அரசர்கள் கல்வெட்டுகளில் தங்களின் பிறப்பு நட்சத்திரத்தினை பொறித்தனர்போலும்.[7] இந்தத் தமிழ்மயமாதல் எனும்போக்கு இந்தியமயமாதல் என்ற பின்னணியில் *(against the backdrop of pan-Indianisation)* நிகழ்ந்தது. ஆனால், உண்மையில் இது அசம்ஸ்கிருதமயமாதலாகும் *(de-sanscritisation)*.

**05.** பிராமண சமயத்தின் நூலான வேதம் எழுதப்படாமல் வாய்மொழிவழியே பயிற்றுவிக்கப்பட்டு வந்த வழக்கத்தினை மாயாவாய்மொழி என்றும் எழுதாக்கற்பு என்றும் செம்மொழிப்பாக்கள் சுட்டுகின்றன. வேதம் ஓதுகிறவரை வாய்மொழிப்புலவீர் என்றது செம்மொழி. மேலும் அவர்கள், நான்மறைமுனிவர், நான்மறைமுதல்வர், நான்மறையாளர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். காலத்தால் பிந்தைய சிறுபாணாற்றுப்படையில் அவர்கள் அருமறையந்தணர் எனப்பட்டனர். வேள்விசெய்பவர், வேள்ளிவியந்தணர் எனப்பட்டனர். அந்தணர்க்கான பள்ளியினை

4 K.R.Srinivasan, Temples of South India, National Book Trust, India, New Delhi, 1971.p.2. தென்னகத்தில் கல் நெடுங்காலம் இறப்புச்சடங்கோடும் வழிபாட்டோடும் தொடர்பு கொண்டிருந்ததால் கல்லில் கோயில்கட்டுவதற்கு சமூகவிலக்கு இருந்தது. இதனை முதலில் உடைத்தவர் சாளுக்கிய அரசன் மங்களேசன். இவன் பதாமியின் மூன்றாம் குடைவரைக்கோயிலை கி.பி.578 இல் உருவாக்கினான். இக்கோயில் அவனுடைய சகோதரன் கீர்த்திவர்மனின் நாராயணபலி எனும் சடங்கிற்காக உருவாக்கப்பட்டதாம். சாளுக்கியரைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பல்லவரும் பாண்டியரும் குகைக்கோயிலை உருவாக்கினர்போலும்

5 பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, சங்கநூல்களும் வைதீகமார்க்கமும், திருச்சினாப்பள்ளி, 1951, பக்.48;51. மதுரைக்காஞ்சி: 591–மாயோன் மேய வோண நன்னாள்; கலித்தொகை:150,20–அரும்பெறலாதிரையன்.

6 Y.Subbarayalu, Contacts between the North and South: An Epigraphical Perspectice, ICHR, New Dehi,2012.

7 முதல் இராஜராஜன் தன் பிறந்த நட்சத்திரமான சதையத்தன்று சிறப்புக் கொடைகளை அளித்தார் என்பர் அறிஞர். R.Champakalakshmi, Religion, Tradition and Ideology:Pre-Colonial South India, OUP,2011p.509



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக்காஞ்சி சுட்டுகிறது. இப்படி, வடக்கிலிருந்துவந்த கடவுள் பெயர்களும் சமயப்பனுவல்களும் தமிழ்மயப்படுத்தப் பட்டன. அவையனைத்தும் இலக்கியச் சான்றுகள்.[8]

**06.** இப்பத்தி கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் அமைகிறது. அதற்காக மேற்சொல்லப்பட்ட கருத்தியல் பின்னணியில் தமிழ்நாட்டின் ஒரு வறண்ட வட்டாரமான புதுக்கோட்டைப் பகுதி ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ்வட்டாரத்தின் நவீன காலத்திற்கு முந்தைய வரலாற்றின் கல்வெட்டுகளில் பதியப்பட்டுள்ள கோயில்கள், கடவுளர்களின் பெயர்கள் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே, ஓராயிரமாண்டு காலத்திற்கான (கி.பி.800 முதல் கி.பி1800 வரை) வெளியிடப்பட்ட 1130 கல்வெட்டுகளும் படிக்கப்பட்டு அவற்றிலிருந்து தரவுகள் திரட்டப்பட்டன. இக்காலகட்டம் 5 உபகாலகட்டங்களாகப் பிரிக்கப்பட்டன (பார்க்க: அட்டவணைகள்-1,2). கல்வெட்டுகளில் கோயில்கள், கடவுளர் பெயர்களின் முதல்பதிவே கணக்கில் கொள்ளப்பட்டது. 5 காலகட்டங்களிலும் மொத்தம் 107 கோயில்கள் நிறுவப்பட்டன. இவற்றுள், இரண்டு மற்றும் மூன்றாம் காலகட்டங்களில் எண்ணிக்கையில் அதிகமான கோயில்கள் நிறுவப்பட்டுள்ளன. அதாவது 80 கோயில்கள். பாண்டியரின் ஆட்சிக் காலகட்டத்தில் மட்டும் (1200-1400) மொத்தம் 57 கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இது, கோயில்களின் மொத்த எண்ணிக்கையில் 53%. இவற்றுள் சில ஊர்க்கோயில்கள், நாட்டுக்கோயில்கள் என்று தனித்தனியே அறியப்பட்டுள்ளன. மொத்தம் 18 நாட்டுக்கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் 2 மற்றும் 3 ஆம் காலகட்டத்தின் நாட்டுக்கோயில்கள் 83%. அதன்பிறகு கோயில்களின் எண்ணிக்கை குறைந்தது.[9]

**07. மீ-சம்ஸ்கிருதமயமாதல் (re-sanscritisation):** ஆய்வுக்களத்தில் 20க்கும் மேற்பட்ட குடைவரைக்கோயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றினை உருவாக்கியவர்கள் முத்தரையர்கள் என்று அறியப்படுகிறது. இங்கு, ஆர்வமூட்டும் கருத்து யாதெனில், இடைக்காலத்தில் கட்டப்பட்ட அக்கோயில்களில் கடவுளின்பெயர்கள் தூயதமிழில் பதிக்கப்பட்டுள்ளன. ஆனால், சென்ற நூற்றாண்டில் அப்பெயர்கள் புதுக்கோட்டை தனியரசு வெளியிட்ட கல்வெட்டுத்தொகுதியில் அக்கோயில்கள் சம்ஸ்கிருதத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. வழிபடுகிறவர்களும் கடவுளர்களின் கோயில்களின் தூயதமிழ்ப்பெயர்களை மறந்தனர். கல்வெட்டில் குறிக்கப்பட்ட அழகுகண்டவிண்ணகரம் என்ற குடைவரைக் கோயிலின் பெயர் சுந்தரபெருமாள்கோயில் என்று தற்போது அழைக்கப்படுகிறது. இப்படி அழகப்பெருமாள், சுந்தரப்பெருமாளானார். ஒரு கட்டுமானக்கோயிலின் கடவுளான திருத்தான்தோன்றீஸ்வரர், ஸ்வயம்வர மூர்த்தியானார். பூவாலைக்குடி என்ற ஊர்க்குடைவரைக் கோயிலின் கடவுள் புஷ்பவனேஷ்வர் என்றானார். முன்பே, கைலாசநாதர் வடபுலநாயனார் என்று தமிழ்மயமாகி மீண்டும் அக்கடவுள் கைலாசநாதர் என்று சம்ஸ்கிருதமயமானார். மேற்சொல்லப்பட்ட கடவுளர்பெயர்களில் சுந்தரம் என்ற முன்னொட்டு சம்ஸ்கிருதச்சொல்; ஈஸ்வரர் என்ற பின்னொட்டும் சம்ஸ்கிருதச்சொல். இப்படி, தமிழும் சம்ஸ்கிருதமும் கடவுள்பெயர்களைச் சுட்டுவதற்கு சம்ஸ்கிருதமயமாதல் தமிழ்மயமாதல் என்ற பின்னணியிலும் இரண்டின் இயைபு (*synchronisation*) என்ற பின்னணியிலும் ஊடாடியுள்ளன.

**08. கோயில்பெயர்களும் கடவுள்பெயர்களும்:** கல்வெட்டுகளில் கோயில்கள் பொதுவாகத்

8 இப்பத்திக்கான மேலதிகப்புரிதலுக்கு எஸ். வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுகளும் பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களின் ஆய்வுகளும் பெரிதும் பயன்படும். பார்க்க: எஸ்.வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம் தொகுதி, 2,1988.பக்.226–230. பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, சங்கநூல்களும் வைதீகமார்க்கமும், திருச்சினாப்பள்ளி, 1951.பக்.48;51. எஸ்.வையாபுரிப்பிள்ளை "தமிழும் வைதீகவார்த்தைகளும்" என்ற கட்டுரையில் வேதமொழிச்சொற்கள் தமிழ்ப்படுத்தப்பட்டதனை பட்டியலிட்டுள்ளார். பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி தம் நூலில் சம்ஸ்கிருத இலக்கியங்களில் வகுக்கப்பட்ட வாழ்க்கைமுறைகள் தமிழ் இலக்கியங்களில் விளக்கப்பட்ட வாழ்க்கைமுறைகளுடன் ஒத்திருப்பதனை தக்க சான்றுகளுடன் நிறுவுகிறார். இதனை தமிழியம், சம்ஸ்கிருதமயமாதல் என்ற திரையில் வரையப்பட்டதுபோல் காட்டுகிறார். இப்பின்புலத்தில் சம்ஸ்கிருதக் கடவுளர்கள் தமிழ்மயப்பட்டதனை புரிந்துகொள்ளவேண்டும். இந்நூலிலுள்ள தெய்வங்கள் என்ற பகுதி ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

9 Inscriptions of the Pudukkottai State,1929.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்நாட்டு வரலாற்றில் 12–13 ஆம் நூற்றாண்டுகளிலேயே பிராமணச் சமயநிறுவனங்களான கோயில்களில் பெண்கடவுளர்கள் துணைக்கடவுளர்களாக உள்ளிழுக்கப்பட்டனர் என்பது அறிஞர் கூற்று. ஆய்வுக்களத்தில் பொதுவாகப் பெண்கடவுளர்கள் சம்ஸ்கிருதமயப் படுத்தப்படவில்லை என்று தெரியவருகிறது.**

தளி, மேற்றளி, கோயில், ஸ்ரீகோயில், முற்றம், திருமூலட்டானம், விண்ணகரம் என்று பதிவாகியுள்ளன. இவற்றில், விண்ணகரம் என்பது விஷ்ணுகிரகம் என்பதன் தமிழ்வடிவம்; மூலஸ்தானம் என்பதன் தமிழ்வடிவமே திருமூலட்டானம். கல்வெட்டுகளில் ஆண்கடவுளர்கள் பொதுவாக உடையார், நாயனார், நயினார், அடிகள், பெருமானடிகள் என்றவாறு குறிக்கப்பட்டுள்ளனர். ஊர்க்கடவுளர்கள் ஊர்நயினார், ஊர்உடையார், ஊர்நாயனார் என்றும் நாடு அளவிலான கடவுளர்கள் நாட்டுஉடையார், நாட்டுநயினார் என்றும் நாடு அளவிலான கோயில்கள் நாட்டுக்கோயில் என்றும் பதிவாகியுள்ளன. வடகோநாட்டு உடையார் என்றொரு கடவுள் சுட்டப்பட்டுள்ளார். சிவபெருமான், பெரும்பாலும் கல்வெட்டுகளில் தூய தமிழ்ப்பெயர்களில் சுட்டப்பட்டுள்ளார். முன்பே சொல்லப்பட்டதுபோல் வளர்மதீஸ்வரர், திருமதீஸ்வரர், திருமாங்கனீஸ்வரர், திருத்தான்தோன்றீஸ்வரர் என்ற பெயர்களில் முன்னொட்டுகள் தூயதமிழ்ப்பெயர்களே. ஆனால், பழங்கரை உடையார் என்ற கடவுளின் தமிழ்ப்பெயர் புராதனபுரீஸ்வரர் என்று சம்ஸ்கிருதமயமானது.

**09. பெண்கடவுளர்கள்:** *தமிழ்நாட்டு வரலாற்றில் 12-13 ஆம் நூற்றாண்டுகளிலேயே பிராமணச் சமயநிறுவனங்களான கோயில்களில் பெண்கடவுளர்கள் துணைக்கடவுளர்களாக உள்ளிழுக்கப்பட்டனர் என்பது அறிஞர் கூற்று.*[10] ஆய்வுக்களத்தில் பொதுவாகப் பெண்கடவுளர்கள் சம்ஸ்கிருதமயப் படுத்தப்படவில்லை என்று தெரியவருகிறது. பெண்கடவுளரின் பெயர்கள்: நாச்சியார், பெரியநாச்சியார், திருப்பள்ளியறைநாச்சியார், தம்பிராட்டியார், திருக்காமக்கோட்ட தம்பிராட்டியார், உலகுடையநாச்சி, உலகுடைய நாச்சியார், அழகப்பெருமாள் நாச்சியார், நல்லமங்கை நாச்சியார், தையல்நாயகி, தையல்நாயகிஅம்மன், ஆட்சிவல்லி என்பன. ஆனால், ஓரிடத்தில் சிவகாமசுந்தரி என்ற குறிப்பு காணப்படுகிறது. இது காலத்தால் பிந்தைய கல்வெட்டுக்குறிப்பு (கி.பி.1504) அருவுடைமலைமங்கை, மலையாமங்கை போன்ற பெயர்கள் ஆய்வாளர்களை ஈர்ப்பன. இவ்வட்டாரத்தில் பெண்கடவுளர் உருக்கள் (*images*) பெரும்பாலும் ஆட்சியாளர்கள், வட்டாரத்தலைவர்கள், தேவரடியார்கள் போன்றோரால் நிறுவப்பட்டனவாகத் தெரிகின்றன. கவனத்தினை ஈர்க்கும் மற்றொரு கருத்து: விதேசி பெண்கடவுளான அய்ம்பொழில் பரமேஸ்வரி என்பவர் அய்யாபொழில்நாச்சியார் என்று தமிழாக்கப்பட்டார். உள்ளூர் பெண் கடவுள் தேசிநாச்சியார் என்று குறிப்பிடப்பட்டார். இங்கு, பெண் கடவுளர்களின் பெயர்கள் பெரும்பாலும் சம்ஸ்கிருதமயமாகவில்லை என்று அறியலாம். இதனைப் பெண்கடவுளர்களின் தனித்த தன்மையினைக் காட்டுவதாகக் கொள்ளலாம். என்றாலும் விதேசி, சுதேசி என்பன சம்ஸ்கிருதசொற்கள்.

**10.** மேற்சொல்லப்பட்ட போக்கினைத் தூய தமிழில் அமைந்த பெண்கடவுளர்களின் பெயர்களை செம்மொழிப்பாக்களிலுள்ள பெண்கடவுள் பெயர்களின் பதிகைகளின் தொடர்ச்சி எனலாம். அப்பாக்களில் பெண்கடவுளர்கள் தூய தமிழ்ச்சொற்களான சூலி, வெற்றிமடந்தை, கானமர்செல்வி, காடுறைகடவுள், காடமர்செல்வி என்றும் கொற்றவை என்றும் சுட்டப்பட்டுள்ளனர். ஓரிடத்தில் பழையோள் என்று அழைக்கப்பட்டுள்ளாள். சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் எருமைத்தலைமீதமர்ந்த பெண்கடவுள் கானத்தெருமைக் கருந்தலை மேனின்றாய் என்றழைக்கப்பட்டுள்ளார் (சிலப்பதிகாரம், 12:9). இது, மகிஷாசுரமர்த்தினி என்ற சம்ஸ்கிருத தொடரின் தமிழ்வடிவம்.

---

10 குறிப்பாக, சோழர் காலத்தில் முதன்மையான சிவன்கோயில்களின் வளாகத்திற்குள் பெண்கடவுளர்க்கென தனிக்கோயில்கள் முதல் இராஜேந்திரன் (1012–1044) காலத்திலிருந்தே வழக்கிற்கு வந்தன. தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலின் வளாகத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே பெண்கடவுளுக்கென்று தனிக்கோயில் நிறுவப்பட்டது. K.A.Nilakanta Sastri, The Colas, (reprinted,1984) University of Madras, Madras, p.715.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்னிந்திய வரலாற்றியலில் தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திற்கும் இடையிலான ஊடாட்டம் 1800களிலேயே தொடங்கியிருந்தாலும் தென்னிந்திய சமூகங்களின் சம்ஸ்கிருதமயமாதலை சமூகவியல் பின்னணியில் ஆய்வுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் எம்.என். ஸ்ரீநிவாஸ் அவர்கள். தம் முதல் நூலில் கூர்க் இனத்து மக்களின் சம்ஸ்கிருதமயமான சமூகவழக்கங்களை மெலிதாகச் சுட்டிக்காட்டினார்.**

**11.** இப்போக்கு அடுத்துவந்த பக்தி இலக்கியங்களிலும் பின்பற்றப்படுகிறது. தொடர்ந்து, பல்லவர் காலத்தின் நந்திக்கலம்பகத்தில் கமலத்திருவுக்குமுன் பிறந்த தையல் என்றொரு குறிப்புள்ளது. காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலின் ஒரு பெண்கடவுளின் உரு திருக்கேட்டைகிழத்தி என்று கல்வெட்டில் சுட்டப்படுகிறது (*ARE,1918:318*). இப்படி, தூயதமிழ்ப்பெயர்களில் தனித்த அடையாளத்துடன் அழைக்கப்பட்ட பெண்கடவுளர்கள் பல்லவர் காலத்தில் ஒரு குழுவாக/பரிவார தேவதைகளாக/சிற்பத் தொகுதியாகக் கோயில்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். இச்சிற்பத்தொகுதி சப்தமாத்ரிகா என்று வருணிக்கப்படுகிறது. சங்க காலத்தில் தனித்த கோயில்களை உறைவிடமாகக்கொண்ட பெண்கடவுளர்களின் பெருமை குலைக்கப்பட்டுப் புடைப்புச்சிற்பங்களாகக் குடைவரைக் கோயில்களில் பரிவாரக்கடவுளர்களாக வைக்கப்பட்டனர் என்பர். அம்மாதர்கள்: பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வராகி, வைஷ்ணவி, இந்திராணி, சாமுண்டா என்பன. ஆனால், இவர் பற்றிய குறிப்புகள் செம்மொழிப்பாக்களில் இல்லை. இச்சிற்பத்தொகுதியிலுள்ள கடவுளர்கள், ஆய்விற்குத் தெரிவுசெய்யப்பட்ட புதுக்கோட்டை வட்டாரத்தின் சில ஊர்களான மலையடிப்பட்டி, திருக்கோகர்ணம், போன்ற இடங்களில் பரிவாரக் கடவுளர்களாகச் சமைக்கப்பட்டுள்ளனர்.[11] இப்பண்பாடு சாளுக்கியர்களைப் பின்பற்றி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம். இப்படிப் பெண்கடவுளர்கள் சம்ஸ்கிருதமயமாயினர். இப்போக்கு சோழர்காலத்தில் மேலும் வலுவானது. சிலப்பதிகாரத்தில் தனித்த கோயிலைக்கொண்ட துர்க்கைசோழர்காலத்தில் துர்க்காபரமேஸ்வரி, என்றும் துர்க்கையார் என்றும், அழைக்கப்பட்டுப் பரிவாரக்கடவுளானார். ஓம்காரசுந்தரி, ஸ்ரீபட்டாரகி, சேட்டையார் போன்ற பெயர்களும் இங்கே கவனிக்கத்தக்கன.[12]

**12. காமக்கோட்டம்:** தமிழ்நாட்டிற்கு வெளியில் நெல்லூர் மற்றும் கர்நூல் வட்டாரங்களிலிருந்து காமக்கோட்டம் பற்றிய முதல் கல்வெட்டுக்குறிப்பு கிடைக்கிறது. அக்கல்வெட்டில் காஞ்சிபுரத்திலுள்ள பெண்கடவுள் காமகோட்டியாம்பிகா என்று சுட்டப்படுகிறார்.[13] அவருக்குப் பலிகொடுக்கப்பட்ட வட்டப்பாறையினை இன்றும் காணலாம். கி.பி.1200 களுக்குப்பிறகே, முதன்மை ஆண்கடவுளர்க்கான கோயில் வளாகங்களில் பெண்கடவுளர்க்கான தனித்த கோயில்கள் நிறுவப்பட்டன. ஆனால், அவர்கள்

11 K.R.Srinivasan, "Some Aspects of Religion as Revealed by Early Monuments and Literature of the South" Sankara Parvati Endowment Lecture, 1959–1960.p.162.

12 R.Makalakshmi, The Making of the Gods: Korra–vai–Durga in the Tamil Tradition, Penguin Books, New Delhi,2011. இக்கருத்தினை கல்வெட்டுசான்றுகள் கள ஆய்வுகள் அடிப்படையில் இந்நூலாசிரியர் நிறுவுகிறார். செம்மொழிப்பாக்களில் வணங்கப்பட்ட கொற்றவை தொடர்ந்துவந்த காலங்களில் துர்க்காவாக்கப்பட்டு சோழர்காலத்தில் அக்கடவுள் பலமாற்றுருக்களில் பரிவாரக்கடவுளாக்கப்பட்டார். செம்மொழிப்பாக்களின் காலத்தால் முந்தியவற்றில் கொற்றவை தனித்து வணங்கப்பட்டிருந்தாலும் அடுத்தடுத்த காலகட்டத்தில் அவர் முருகனோடும் சிவனோடும் இணைத்துவைக்கப்பட்டார். R.Champakalakshmi, Religion, Tradition and Ideology:Pre–Colonial South India, OUP,2011p.498–499. கொற்றவையினை சிவனோடு இணைத்தலே தமிழ் சம்ஸ்கிருத இயைபுதான் என்று புரிந்து, கொள்ளலாம்.

13 ARE.1905:217. Nellore Inscription No.16. A.D.1205. K.R.Srnivasan...., இச்சான்றினை முன்மொழிகிறார். காமகோட்டம் பற்றிய முதல் இருகல்வெட்டுக்குறிப்புகள் தமிழ்நாட்டிற்கு வெளியிலிருந்து கிடைக்கின்றன. இவ்விரு கல்வெட்டுகளும் பல்லவ இருமடிபசவசங்கர அல்லாட பிரேமயதேவா என்பவரை சுட்டுகிறது. அவர் காஞ்சியிலுள்ள காமாகோட்டியாம்பிகாவின் உபாசகர் என்று குறிக்கப்படுகிறது. மற்றொரு அறிஞர் பிடாரி, படாரி, சப்தமாத்ரிகா என்று வணங்கப்பட்ட பெண்கடவுளர்கள் அடுத்தடுத்த காலகட்டங்களில் திருப்பள்ளியறைநாச்சியார், திருக்காமக் கோட்டத்துநாச்சியர் என்று அழைக்கப்பட்டனர் என்கிறார். பார்க்க: R.Makalakshmi, The Making of the Gods: Korravai–Durga in the Tamil Tradition, Penguin Books, New Delhi,2011. p.198.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுருக்களாக பெரியநாயகி (பெரிய+நாயகி) என்றும் பிருகன்நாயகி என்றும் பிரகதாம்பாள் (பிரகதம்+அம்பாள்) என்றும் கருவறையில் பூட்டி வைக்கப்பட்டனர். இங்கு ஒருபுறம் பெரிய என்ற முன்னொட்டும் அம்பாள் என்ற பின்னொட்டும் தமிழாயிருக்க மறுபுறம் நாயகி என்ற பின்னொட்டும் பிரகதம் என்ற முன்னொட்டும் சம்ஸ்கிருதமாயிருக்கின்றன. இப்படி இப்பெண்கடவுளர்கள் தமிழுக்குள்ளும் சம்ஸ்கிருதத்துக்குள்ளும் இயைந்தனர் (synchronised). புதிதாக உருவாக்கப்பட்ட காமகோட்டத்து நாச்சியர்கள் பொன்னால் உருச்செய்யப்பட்டனர். இவரே, திரு உலாவின் உற்சவருடன் சமதியாக வலம் வருவார். கல்லினைவிடப் பொன் மேலல்லவா!

இப்படி, இடைக்காலத்தின் தமிழ்நாட்டு வரலாற்றில் சமயத்திற்குள்ளும் வழிபாட்டிற்குள்ளும் மொழிகள் ஊடாடியுள்ளன. மந்திர ஓசைகளுடன் வந்த சம்ஸ்கிருதத்திற்குத் தமிழகம் கிரந்தவடிவத்தில் புத்தாடை அணிவித்தது.

அட்டவணை 1

| ஊர்க்கோயில்கள் / கடவுள்கள் | | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| காலகட்டம் 1 | 800-1000 | 11 | 11% |
| காலகட்டம் 2 | 1000-1200 | 23 | 21% |
| காலகட்டம் 3 | 1200-1400 | 57 | 53% |
| காலகட்டம் 4 | 1400-1600 | 11 | 10% |
| காலகட்டம் 5 | 1600-1800 | 04 | 4% |
| மொத்தம் | | 107 | |

அட்டவணை 2

| ஊர்க்கோயில்கள் / கடவுள்கள் | | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| காலகட்டம் 1 | 800-1000 | 01 | 6% |
| காலகட்டம் 2 | 1000-1200 | 06 | 33% |
| காலகட்டம் 3 | 1200-1400 | 09 | 50% |
| காலகட்டம் 4 | 1400-1600 | 01 | 6% |
| காலகட்டம் 5 | 1600-1800 | 01 | 6% |
| மொத்தம் | | 18 | |

தென்னிந்திய வரலாற்றியலில் தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திற்கும் இடையிலான ஊடாட்டம் 1800களிலேயே தொடங்கியிருந்தாலும் தென்னிந்திய சமூகங்களின் சம்ஸ்கிருதமயமாதலை சமூகவியல் பின்னணியில் ஆய்வுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் எம்.என். ஸ்ரீநிவாஸ் அவர்கள். தம் முதல் நூலில் கூர்க் இனத்து மக்களின் சம்ஸ்கிருதமயமான சமூக வழக்கங்களை மெலிதாகச் சுட்டிக்காட்டினார். பார்க்க: *M.N.Srinivas,Religion and Society Among the Coorgs of South India, (first printed,1952) Media Promotors Pvt.Ltd, Bombay (reprinted)1989,p.238.* சம்ஸ்கிருதமயமாதலினால் கூர்க் இனத்தில் கைம்பெண்கள் நடத்தப்படுவதில் மாற்றம் உண்டானது என்று கள ஆய்வில் கண்டு வெளிப்படுத்தினார். இக்கருத்தினை அடுத்து விரிவாக ஒரு கட்டுரையில் விளக்கியிருந்தார். பார்க்க: *M.N.Srinivas,"A Note on Sanskritization and Westernization" in Far Eastern Quarterly, Vol.15,No.4, August.1956.pp.481-496.* அடுத்து 1966 இல் *M.N.Srinivas, Social Change in Modern India, University of California Press, Berkely,1966,* என்ற தலைப்பில் வெளியிட்ட நூலில் நவீன இந்திய சமூகத்தின் மாற்றத்தினை விளங்கிக்கொள்ள நவீன காலத்திற்கு முன்பு நிலவிய சம்ஸ்கிருதமயமாதல் இந்தியமயமாதல் என்ற பின்னணியை விளக்கினார். ஆனால், இதற்கு முன்பே மற்றோர் அறிஞர் சம்ஸ்கிருதமயமாதல் பற்றி விளக்கியிருந்தார். பார்க்க: *Barnabas, A.P."Sanskritization"EPW,Vol.13.No.15 April,15,1941, pp.613-618* கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில்தான் எஸ்.வையாபுரிப் பிள்ளையும் பி.எஸ்.சுப்பிரமணியசாஸ்திரியும் தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திற்குமான ஊடாட்டத்தினைத் தேசிய கண்ணோட்டத்துடன் வெளிப்படுத்தினர். இங்கே சுட்டப்பட்ட ஆய்வுகள் அளித்த ஊக்கத்தில் இக்கட்டுரை வரையப்பட்டது. அவ்வறிஞர்களுக்கு நன்றி.

6/6/2025 அன்று தமிழின் சமயப் பன்மைத்துவம் என்ற தலைப்பில் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நடத்திய ஒன்பதாவது சர்வதேசத் தமிழியல் ஆய்வுமாநாட்டில் அளிக்கப்பட்ட கட்டுரை.

•

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஜமாலன்

# இந்துத்துவாவின் உடலரசியல்

**உடலரசியல் என்றால் என்ன?**

“முதலில் உடலரசியல் என்பதை எனது புரிதலடிப்படையில் இங்கு வரையறுத்துக் கொள்வோம். உடலரசியல் என்பது ஓர் உடல் எப்படி அதிகார அமைப்பால் கட்டமைக்கப் பட்டுள்ளது என்பதையும் அதிலிருந்து அவ்வுடலை எப்படி மீட்டெடுப்பது அல்லது தப்பிச் செல்வது என்பதையும் பேசுபொருளாகக் கொண்ட அரசியலே ஆகும். அதாவது உடலின் “இயல்புத்தன்மை” குறித்த அரசியல் எனலாம். உடலை “இயல்பானதாக” கட்டமைத்துள்ள அனைத்து துகள்கள் பற்றிய ஆய்வாகவும் அவற்றை தகர்த்து அதிகாரமற்ற வெளியாக உடலை கட்டமைப்பதுமே ஆகும். இவ்வரையறையில் உடலரசியில் பற்றிய 3 கூறுகளைக் காணலாம்.

1. ஓர் உடலின் ‘இயல்பு’ என்கிற கட்டமைவுகளை படிப்பது
2. அக்கட்டமைப்புகளை மீறிச்செல்ல முயலும் அவ்வுடலின் எத்தனிப்புகள் பற்றிப் படிப்பது.
3. உடலை அதிகாரமற்ற வெளியாகக் கட்டமைப்பதற்கான முயற்சிகள்.

இதில் ஓர் உடலைக் கட்டமைப்பதில் அதன் குடும்பம் அதன் பாரம்பரியம், சாதிய, மத அமைப்பு மற்றும் வாழிடங்களின் கருத்தியல் ஆதிக்கம் முக்கியமானது” (2020,123-124).

ஆக, உடலரசியல் இரண்டு அடிப்படைகளில் அணுகக் கூடியது. ஒன்று, நேர்மறையாக அதிகாரமற்ற சுதந்திரமான உடல்களை கட்டமைப்பது. அதாவது புரட்சிகரமான மாற்றுத் தன்னிலையைக் கொண்ட உடல்களை உருவாக்குவது. இரண்டு, எதிர்மறையாக அதிகாரத்திற்கான உடல்களைக் கட்டமைப்பது.




ACCORDING TO VEDIC CASTE SYSTEM ALL NON HINDUS AND VEDIC CASTE SYSTEM NON IMPLEMENTED DEMOGRAPHIES OR SOCIAL GROUPS ARE ALSO OUT CASTES OR ATISHUDRAS; ITS THE REASON WHY FOREIGNERS ARE NOT ALLOWED TO HINDU TEMPLES TILL TO DATE IN INDIA. OUT CASTES ARE ALSO NAMED AS DALITS, UNTOUCHABLES, HARIJANS ETC. IN INDIA. ACCORDING TO VEDIC CLASS SYSTEM EINSTEINS TO SHAKESPEARE AND OBAMA TO BILL GATES ALL ARE OUT CASTES.

அப்படியான ஒரு உடல் உருவாக்கத்தை நிகழ்த்துவதே ஆதிக்க அரசியலாக உள்ளது. அது சாதிய, இன, பாலின, மத உடல்கள் என்ற பெயரில் அதிகாரத்திற்கான, ஆதிக்கத்திற்கான ஆளும் கருத்தியலை ஏற்கும் அடையாள உடல்களைக் கட்டமைக்கிறது. அவ்வகையில், உடலரசியல் என்பது ஒரு உடல் என்னவாக உருவாக்கப் படுகிறது என்ற அரசியலைப் படிப்பது.

பொதுவாக இதனை ஒரு மாற்று அரசியலாக முன்வைக்கும்போது, ஒரு உடல் தனது ‘இயல்பாக’ உருவாக்கப்பட்டுள்ள அதிகாரவெளியைக் குறித்து ஓர்மை (பிரக்ஞை) அடைந்து தன்னை சுயத்திறனாய்வு (சுயவிமர்சனம்) செய்வதன் மூலம் அதிலிருந்து விடுபட்டு தப்பிச் செல்ல முனைவது. அதற்கு ஒரு உடல் சமூகத் தளத்தில் நிகழும் பல எதிர்ப்பியங்கங்கள் வழியாக தனது உடலை அதிகார எதிர்ப்பு நிலையில் கட்டமைக்க முனைய வேண்டும். ‘இயல்பு’ என்பது அதிகாரம் செலுத்தப்பட்டுள்ள ஓர் உடல், தனது அதிகார வெளியை அறியாதிருப்பதன் வெளிப்பாடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக இருத்தல் என்பது ஓர் உடல் தன்னை அதிகாரத்திற்கான ஊடகமாக கட்டமைத்துக் கொள்வதே. இக்கட்டமைப்பு அரசியல் சார்ந்தும் அதற்கான கருத்தியல் சார்ந்தும் உருவமைக்கப்படுவது. இன்று இந்திய ஒன்றியத்தில் பரவிவரும் இந்துத்துவ கருத்தியலும் அதற்கான அரசியலுமே 'இயல்பானது' என்பதாக 'இந்து' மதம் என்ற பெயரில் பிராமண மேலாதிக்க சனாதன வருண உடல்களை உருவாக்குவதை வாசிக்க முனைவதே இங்கு எழுத்தாகி உள்ளது.

### சனாதன வருண தர்மமும் உடலரசியலும்

ஒரு சமூகத்தை முதன்முதலாக உடலோடு உருவகப்படுத்திய ஆரம்பநிலைப் பிரதி சுமார் கி.மு. 1500 வருடங்களுக்கு முந்தையதாக சொல்லப்படும் ருக் வேதத்தின் 'புருஷ சூக்தம்' எனப்படும் ஒரு பாடலே. 'புருஷா' என்கிற ஆதிப் புனித உடலின் வாயில் பிறந்தவன் பிராமணன், .அதன் கைகளில் பிறந்தவன் சத்ரியன், அதன் தொடையில் பிறந்தவன் வைசியன், அதன் கால்களில் பிறந்தவன் சூத்ரன் என்கிற ஒரு பேர் உருவகமே உடலரசியலின் துவக்கப் புள்ளி (Harvey, 10). இந்திய அல்லது பாரத உடல்கள் பற்றிய இந்த வர்ணப் பிரிவினை ஒரு உளவியலாக கட்டமைந்த ஆழ்தள உடலரசியே இன்றைக்கான இந்திய உடல்கள்.

ஓர் உடல், ஒரு உடற்தொகுதியாக மாற்றப்படுவதற்கு, அவற்றை ஒரு குறிப்பிட்ட குறியமைப்பிற்குள் கொண்டுவர வேண்டும். அப்படியான ஒரு குறியமைப்பே வர்ணம். அதன் வழியாக உடல்மீது கருத்தியலான அடையாளங்கள் பொறிக்கப்படுகின்றன. சான்றாக மனு தர்மத்தில் வர்ண அடையாளத்தை வித்தியாசப்படுத்த பூணூல் எனப்படும் முப்புரிநூல் (மூன்றாகத் திரிக்கப்பட்ட நூல்) புனித நூலானது முதல் மூன்று வர்ணங்களுக்கும் அணியப்பட வேண்டும் என்கிறது. பிராமணர்கள் பருத்தி நூலும், சத்திரியர்கள் சணல் நூலும், வைசியர்கள் கம்பளி நூலும் அணியவேண்டும் என்கிறது. (Laws of Manu. Ch.II.44) இப்படி தனியுடல்களை குழுவாக அடையாளப்படுத்துவதன் வழியாக ஒரு அமைப்பிற்குள் (இனம், மதம் என) கொண்டுவருவதும், அவற்றை ஒருமித்த உடல்களாக கட்டமைப்பதும் சாத்தியமாகிறது" (2020,16). அதாவது முப்பரி நூல் எனப்படும் பூணூல் என்பது ஒருவகையில் வர்ணத்தை அறிந்து கொள்வதற்கான குறியீடாக அதாவது ஒரு குலக்குறியாக அமைந்திருப்பதை இதிலிருந்து அறிய முடிகிறது. இந்நூல்கள் வழியாக வர்ணத்தைசேர்ந்தவர்கள் அடையாளப்படுத்திக் கொள்ளவும் ஒருவருக்கொருவர் தங்களை ஒரு குழுவாக கருதுவதற்கான அடிப்படையையும் வழங்குகிறது. இது ஒரு வருணத்தின் தூய்மையைக் காக்கும் ஏற்பாடு.

பிற்காலங்களில் இது பல சாதிகளாக பிரிந்தபின், சாதிய அடையாளங்கள் குலக்குறிகளாகவும், அதற்கான குல தெய்வங்கள், வழிபாடுகள், வாழ்க்கை முறைகள் ஆகியவை தனித்த குல அடையாளங்களை ஏற்பதாகிறது. இந்த அடையாளங்கள் வழியாக ஒவ்வொரு சாதிக்கும் ஒரு புத்தி உள்ளதான பொதுபுத்திக் கட்டமைக்கப்படுகிறது. காரணம் ஒவ்வொரு சாதியும் இச் சடங்குகள், வழிபாடுகள், தினவாழ்வின் பழக்க வழக்கங்கள் வழியாக தங்களை ஒரு குழுவாக மாற்றிக் கொள்கின்றன. இக் குழுக்கள் வெவ்வேறு நிலபரப்பில் வாழ்ந்தாலும், அதன் வாழ்நிலை இந்நடைமுறைகள் வழியாக ஒருபடித்தானதாக அமைகிறது. மார்க்ஸ் கூறியதைப்போல "வாழ்நிலைதான் சிந்தனையை தீர்மாணிக்கிறது" என்ற அடிப்படையில் ஒவ்வொரு சாதிக்கான வாழ்நிலையும் அதற்கான சிந்தனைகளை, உணர்வுகளை உடலரசியலாகக் கட்டமைக்கிறது.

இந்திய ஒன்றியத்தில் குறிப்பாக தமிழகத்தின் கிராம மற்றும் நகர அமைப்புகளின் புவியியல் 'சாதியப் புவியியலாக' (Caste Geography) அமைக்கப்பட்டுள்ளது. ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாக தனி ஊர்களாகவும், தனித் தெருக்களாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். சாதிகள் குழுக்களாகக் கூடி வாழும் முறையைப் பின்பற்றுவதையும், ஊர், பகுதிகளே சாதிய அடையாளமாகவும் இருக்கின்றது. "தீண்டாமை என்பது இங்கு தொடர்ந்து வருவதற்கான காரணங்களில் ஒன்று இந்திய கிராமப் புவியியல் அமைப்பு. இதில் "சேரி" என்பது ஊரின் விளிம்பிலும், உயர்த்தப்பட்ட சாதிகளின் தெரு சாதிவாரியாக அடுத்தும், பிராமணர்கள் ஊர் மையத்தில் உள்ள கோவிலைச் சுற்றியும் அமைந்துள்ளது" (2019, 185). ஊர் கோவிலை மையமாக வைத்தே அமைக்கப் பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் பண்டைய நிலவுடமை மன்னராட்சி சமூகங்களில் ஒரு பொருளாதார மையமாக விளங்கியுள்ளது. இன்றைய இந்தியா போன்ற அரைநிலவுடமை சமூகங்களில் கோவில் ஒரு பண்பாட்டு மையமாக மாறியுள்ளது. "பெருவாரியான ஊர் அமைப்புகளின் வாழிட அமைப்பு இதுதான். அரசு இப்புவியியல் அமைப்பை மாற்றியமைப்பதற்கான முயற்சியில் இதுநாள்வரை ஈடுபடவில்லை. மாறாக, இந்த அமைப்பை அப்படியே காத்துவருகிறது. நகரங்களில்கூட, தீண்டப்படாதவர்கள் இணைந்து வாழும் சேரிகள், காலனிகளாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் திரளாக அமைக்கப் பட்டிருக்கிறது *(2019, 185)* இத்தகைய சாதியரீதியான தீண்டாமை பாராட்டும் புவியியல் வாழிட அமைப்பு உருவாக்கும் ஒருபடித்தான உணர்வுகளே சாதிகளின் தனித்துவமான உணர்வுகளாக மாறுகின்றன. இந்த வாழ்நிலையை அச்சாதிகளின் பண்பாட்டுக் கூறுகள் உருவாக்கக் கூடியதாக அமைந்துள்ளது. அதுதான் "ஒவ்வொரு சாதிக்கும் தனித்துவமான சாதி புத்தி" உள்ளது என்கிற பொதுச் சொல்லாடலாக சமூகப் புழக்கத்தில் உள்ளது. இந்த "சாதி புத்தி" என்பது சாதிகளின் உடலரசியல் சார்ந்து உருவாகும் ஒன்று.

வாழ்நிலை ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்போடு மட்டுமே உறவு கொண்டது அல்ல. அது ஒரு பண்பாட்டுச் சூழலால் உருவாகும் ஒன்று. அவ்வகையில் சாதியப் பண்பாடுகள் என்பதே சாதியத்தின் வாழ்நிலையை உருவாக்குவதாக உள்ளது. ஒரு ஊரில் பல சாதிகள் இருந்தாலும் அவை ஒவ்வொன்றும் தங்கள் சாதிகளுக்கான பண்பாட்டைப் பின்பற்றுவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு சாதியும் தனக்கான வாழ்நிலையைக் கொண்டதாக உள்ளது. அவ் வாழ்நிலைக்கான உடல்களைக் கட்டமைத்துக் கொள்கிறது. இப்படியாக சாதி ஓர் உடலரசியாக மாறுகிறது. இந்த சாதியை நடைமுறைப்படுத்தும் விதிமுறைகள், சடங்குகள், கடவுள்கள், வழிபாடுகள் என ஒரு பண்பாட்டுச் சூழலை சனாதன வருண தர்மம் தீர்மானிப்பதாக அமைவதன் வழியாக அனைத்து சாதி உடல்களையும் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்துள்ளது. அதற்கு அது கண்டுபிடித்த ஒரு கருத்தியலே 'இந்து மதம்' என்பது. இன்றைய இந்து மதத்திலிருந்து இந்திய ஒன்றியத்தில் நிலவும் அனைத்து சாதிகளின் தனித்தன்மை வாய்ந்த சடங்குகள், வழிபாடுகள், பண்பாட்டு பழக்கவழக்கங்களை கழித்துவிட்டால் மிஞ்சவது பிராமண சனாதன வருணப் பண்பாட்டு அம்சங்கள் மட்டுமே.

இந்திய ஒன்றியத்தின் காலனியம் உருவாக்கிய கலப்பின ஒட்டுயிர் நவீனத்துவம் *(Hybrid Modernity)* திணித்த நவீன வாழ்வில் இந்து மதம் ஒரு பொதுத் தொகுப்பாக அடையாளப்படுகிறது. அது பெரும்பான்மை மக்களின் இந்திய தேசியமாக அதாவது மதவாத தேசியமாக உருவாக்கம் பெறுகிறது. அதிலிருந்து ஊட்டம் பெற்ற பிராமண சனாதன வருணவாதிகள் அந்த தேசியத்தை இந்து மதம் என்பதிலிருந்து இந்து இனம் என்பதாக மாற்ற முயல்வதே இந்துத்துவா.

அவர்களது அறிக்கை உச்சாடனம் செய்யும் சமஸ்கிருதவார்த்தைகளான ராஷ்டீரியம்(தேசம்), தர்மம்(மதம்), சான்ஸ்கிருதி(கலாச்சராம்) மற்றும் அரபி பார்சி சொல்லான 'ஹிந்து', 'ஹிந்துஸ்தான்' ஆகிய சொல்லாடல்கள் வழியாக கட்டமைக்கப்பட்டதே 'தேசபக்தி' என்பது.

**செவ்வணக்க அஞ்சலி**



**வி.எஸ். அச்சுதானந்தன்**

20.10.1923 - 21.07.2025

**சுதந்திரப் போராட்ட வீரர், முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர், முன்னாள் கேரள முதலமைச்சர், எளிமையின் சிகரமாகவும், நேர்மைக்கு இலக்கணமாகவும் திகழ்ந்த தோழர் வி.எஸ். அச்சுதானந்தன் அவர்கள் தனது 102-வது வயதில் 21.07.2025 அன்று இயற்கை எய்தினார். மறைந்த தோழருக்கு காக்கை இதழின் செவ்வணக்க அஞ்சலி.**

**- ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துத்துவக் கோட்பாட்டை உருவாக்கிய சாவர்க்கர் இந்து என்பதும் இந்துத்துவாவும் ஒன்றல்ல என்கிறார். ஹிட்லர், முசோலினி நாசிச, பாசிச இனவாதத்தால் கவரப்பட்ட அவர் இந்துத்துவா என்பதை ஒரு இனமாக வரையறுக்க முனைகிறார். அதற்காக, மீச்சிறுபான்மையான (*micro minorities*) பார்ப்பன ஆரிய இனம் என்பதை மறைத்து இந்துத்துவா என்ற சொல்லை பயன்படுத்தி அதனை பெரும்பான்மையாகக் கட்டமைக்கிறார். இனம் என்பதற்கான வரலாற்றுரீதியான பொருளில் அது இனமல்ல ஆனால், ஒற்றைக் கலாச்சாரம், தர்மம், மதம் என்று வழக்கமான தந்திர வாதங்களை முன்வைக்கிறார். அடிப்படையில் ஆரிய இனம் என்பதற்கான ஒரு புதிய பெயரிடலே இந்துத்துவா என்பது. இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களை ஒற்றை இனமாக மாற்றும் முயற்சி. அதற்காகத்தான் ஒற்றை மொழியாக அதாவது தேசிய மொழியாக இந்தியையும், அதன் பின்னால் உள்ள சமஸ்கிருதத்தையும் இந்திய ஒன்றியத்தின் மொழியாக மாற்ற முயல்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.ஸில் 40 ஆண்டுகள் அதன் தலைமைப் பொறுப்பில் இருந்து, அதனை விரிவுபடுத்திய கோல்வால்கரின் இந்துத்துவா குறித்த வரையறை இந்திய ஒன்றியத்தில் வாழும் அனைவரும் பாரதவாசிகள் என்றும் அதனை இந்துத்துவா என்ற ஒற்றை பண்பாட்டுத் தேசியத்திற்குள் அடையாளப் படுத்த முனைவதுமே ஆகும். இந்துத்துவா என்பது ஒரு வாழ்நிலை என்று சங் பரிவார்கள் கூறுவதன் பின்னணி இதுதான். ஆக, இந்துத்துவா அடிப்படையில் ஒரு இனவாத தேசியத்தை மத அடிப்படைவாத தேசியமாக மாற்றி, இந்திய ஒன்றியத்தின் பல்வேறு சமய மற்றும் பழங்குடி நம்பிக்கை சார்ந்த உடல்களை மத அடிப்படைவாத பாசிச உடல்களாக கட்டமைக்க முயல்கிறது. அதற்காக, பல நூற்றாண்டுகளாகப் பிராமண வேத மதத்தின் சனாதன வருண அடிப்படையில் இந்திய உடல்களை அது சாதியமாக உருவாக்கி வைத்துள்ளது. இன்றைய பாஜகவும் அதன் தாய் நிறுவனமான ஆர்.எஸ்.எஸ்.ம் இந்துத்துவாவை இந்து மக்களின் ஓர் உடலரசியலாக கடந்த நூறு ஆண்டுகளாக மாற்ற முயன்று வருகிறது. சாதியத்தை மறைக்க அது நிகழ்த்தும் நுட்பமான உடலரசியலே இந்துத்துவக் கருத்தியல். இதற்கான பண்பாட்டையும் அது சார்ந்த வாழ்நிலையையும் அது பழம் புராணங்கள் வழியாக கட்டமைக்கிறது. இறைசார் நம்பிக்கைகளை அது அரசியல் அதிகாரத்திற்கான உயிர் முதலீடுகளாக (*bio-capital*) மாற்ற முயல்கிறது. மொழி, கல்வி என அனைத்திலும் சமஸ்கிருதம், இந்தி என பிராமண சனாதன வருண தர்மத்திற்கானதாக மாற்ற முயல்கிறது. மொழியும், கல்வியும் ஒரு உடலை ஒழுங்கறுத்தும் (*disciplined*) அடிப்படை உடலரசியல் காரணிகளாகும்.

இன்றைய இந்திய அரசியல் சூழலைப் பாரிய அரசியலின் வெளிப்பாடாக உள்ள ஜனநாயகம், கம்யூனிசம், பாசிசம் இவற்றைக் கொண்டு மட்டுமே புரிந்துகொள்ள முடியாது. மனித உடல்களை கட்டமைக்கும் அதாவது மனிதத் தன்னிலைகளாக மாற்றும் நுன்னரசியலே இன்றைக்கான அரசியல். இந் நுன்னரசியலை புரிந்துகொள்ள மார்க்சிய விமர்சனச் சிந்தனைத் துவங்கி இன்றைய பின் நவீனத்துவம் மற்றும் உடலரசியல் அறிவாய்வுமுறை வரை முக்கியமான பங்களிப்பை செய்யக் கூடியவை. அதன் அடிப்படையில் இன்றைய இந்தியாவின் ஆதிக்கக் கருத்தியலாக தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இந்துத்துவாவின் உடலரசியலையும், அதற்கான இயங்குபுலத்தை உருவாக்கும் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பையும் அதன் நடைமுறைகளையும் அறிந்து கொள்வது அவசியம்.

### ஆர்.எஸ்.எஸ்ஸின் உடலரசியல்

ஆர்.எஸ்.எஸ். என்ற இன்றைய ஆளும் பாஜகவின் தாய்நிறுவனம், தேசவிரோத செயல்களில் ஈடுபடுகிறது என்று மூன்று முறை தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. அது இன்று தன்னை ஒரு தேசபக்தி இயக்கமாகக் காட்டிக் கொள்ள பல நாடகங்களை, நிகழ்வுகளை அறங்கேற்ற முனைகிறது. அது நிகழ்த்தும் விநாயகர் ஊர்வலம், பெண்களுக்கான பூஜைகள், பல்வேறு கோவில் திருவிழாக்கள், புகழ் வாய்ந்த கோவில்களினை கைப்பற்ற முனைவது, அயோத்திப் போல திருப்பரங்குன்றம், காசி, மதுரா உள்ளிட்ட மாற்று மத தலங்களை இடிக்க முனைவது, கரசேவை மற்றும் கடவுள் சேவை, சிறுவாரி கிராமத் தெய்வங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவாரி தெய்வங்களுடன் இணைப்பது, மதுரை முருகபக்தர் மாநாடுகள் போன்ற பல மாநாடுகள் வழியாக சராசரி கடவுள் நம்பிக்கையாளர்களைத் திரட்டுவது. கும்பமேளா, மாமாங்கம் உள்ளிட்ட பல பெரும் நிகழ்வுகளை நிகழ்த்தி அதில் பல கோடி பக்தர்களைத் திரட்டுவது உள்ளிட்ட அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் அதில் திரட்டப்படும் எண்ணற்ற உடல்களை மதநம்பிக்கையின் திளைப்பில் உள்ள மகிழ்வுந்தத்தைப் பயன்படுத்தி, மதவெறிகொண்ட இன்ப நுகர்ச்சியாக மாற்றுவதே அதன் உடலரசியல்.

அதாவது, ஒருவர் இந்துவாக இருப்பதே பெருமிதம் என்ற உணர்வை இறைபக்தியைத் தாண்டி கட்டமைக்க முனைகிறது. உண்மையில் இந்து என்பதன் அடிப்படை என்ன என்பதைப் பற்றி மைசூர் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை ரீடரும், சிந்தனையாளருமான முனைவர் கே. எஸ். பகவான் கூறுகிறார் "பிராமண தருமத்தின் குறிக்கோள் சூத்திரர்களை முற்றிலுமாக ஒடுக்கி, அடக்கி ஆள்வதும் பிராமணர்களை சிறப்பானவர்களாகவும் மேம்பட்டவர்களாகவும் ஆக்குவதும்தான். இந்து தருமம் என்பது பிறரை எல்லாம் பின்னுக்குத் தள்ளி, தான் மட்டும் முன்னேறும் பிராமணர்களின் குயுக்தியே ஆகும்" (2005, 100) ஆக, இந்து என்பதன் அடிப்படை பிராமணராக தனது உடலை உருவமைத்துக் கொள்ளும் வேட்கையே. இந்த வேட்கை இறை பக்தி என்பதன் மூலமாக நுட்பமாக பிராமணர் அல்லாதவர்களின் உடலுக்குள் உருவமைக்கப்படுகிறது. பக்தி என்பது இறைநாட்டத்தைக் கொண்ட ஒரு வேட்கை. இந்த வேட்கையை மத உணர்வாகவும், பிற மத வெறுப்பாகவும் கட்டமைத்து பாசிச உடலாக வடிவமைக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

ஒருவர் கோவிலுக்குள் அல்லது இறை ஆலயத்திற்குள் செல்லும் போது அவரது உடல் அதற்கு ஏற்ப தகவமைக்கப்படுவதும், அந்த சூழலின் விதிமுறைக்கு ஆட்படுவதையும் உதாரணமாகச் சொல்லலாம். அந்த பாதிப்பு *(Affect)* அவரது தன்னுணர்வாக மாறி அவரது தன்னிலையை *(subject)* அதற்கு ஏற்ப உருவாக்கிவிடும். இந்த உருவாகுதல்கள் *(becoming)* ஒரு சாதாரண உடலை ஒரு அடையாள உடலாக மாற்றியமைத்து விடும். இம்மாற்றம் சராசரி இந்து உடலை இந்துத்துவ உடலாக உருவமைத்து விடுகிறது. அதாவது இறை நம்பிக்கைக் கொண்ட பாமர இந்து உடல்களை இந்துத்துவ பாசிச உடல்களாக மாற்றும் ஒரு வேதிவினையை நிகழ்த்துவதே இந்துத்துவ உடலரசியல். அதனால்தான் சோதனைக் கூடம் என்று குஜராத்தில் எண்ணற்ற இஸ்லாமியர்களைக் கொன்று கொலையின் பாசிச அழகியலை இந்திய அளவில் மேட்டுக்குடி இந்துக்களின் உடலுக்குள் ஒரு திளைப்பாக, களிப்பாக மாற்றியுள்ளார்கள். பாஜகவின் வளர்ச்சி ஒரு சராசரி அரசியல் கட்சியின் வளர்ச்சியாகப் பார்க்கக் கூடாது. அதன் அடிப்படையே பாசிச உடல்களை உருவாக்கும் உடலரசியலே.

இத்தகைய இந்துத்துவ உடல்களை உருவாக்க அது முன்வைக்கும் வாதங்கள் அனைத்தும் முழுமையாக பொய்யும், புரட்டும், வரலாற்றுத் திரிபும், புராணக் கதையாடலும் கொண்டவை. பொய், இரட்டை நாக்கு, பலகுரலில் பேசுவது என்பதே அதன் மூல உத்தி. அதனை அளித்தவரே அதன் கருத்தியல் தந்தையான சாவர்க்கர். இரட்டை நாக்கு, சுயநலம் குறிப்பாக பாரப்பனிய நலமே அதன் நோக்கம். பெரியார் கூறியதைப்போல 'பலித்ததுவரை பார்ப்பனியம்' என்பதே அவர்களது அரசியல். அதனால்தான் அந்த அமைப்பு தன்னை ஓரிடத்தில் கலாச்சார அமைப்பு என்கிறது. மற்றொரு இடத்தில் சேவைக்கான தேசபக்தி அமைப்பு என்கிறது. ஆனால், தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டு வருகிறது. இன்றைய இந்திய ஒன்றியத்தின் அதிகாரமிக்க அமைப்பாக மாறியுள்ளது. மக்கள் நலப்பணியே நோக்கம் என்றுக் கூறிக் கொள்ளும் ஆனால் வருமானவரியை ஏய்க்க தன்னை மதம் சார்ந்த அறக்கட்டளை அல்ல ஓர் கலாச்சார அரசியல் இயக்கம் என்று வாதாடும். இந்துத்துவா என்பது ஓர் பாசிச உடரலசியல் வாழ்நிலை அதை உருவாக்க அதிகாரம் தேவை. அதற்கான அமைப்பு என்பதால் தன்னை அரசியல் அமைப்பாக வடிவமைத்துக் கொண்டுள்ளது. அது பல்வேறு தோற்றங்களை தருவது மட்டுமல்ல, பல்வேறு வடிவங்களையும் கொண்டதாக உள்ளது.

-தொடரும்

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சு.குமணராசன்

# இந்திபேசாத மக்களுக்கு ஆங்கிலமே அரண்



**இந்திய நாட்டின் வளர்ச்சிக்குத் தடைக்கல் இந்தித் திணிப்பாகும். ஆங்கில மொழியும் இந்திய அரசமைப்பு (Constitution) 8ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும்.**

இந்திய நாட்டின் மொழிக் கொள்கையென்பது நாட்டின் விடுதலைக்கு முன்பு இருந்ததைவிட, தற்போது அதிகச் சிக்கல் நிறைந்த ஒன்றாகவும் இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு சவாலாகவும் அமைந்துள்ளது.

பெரும்பாலான வட இந்திய மக்களும் ஒன்றிய அரசில் ஆட்சிக்கு வரும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அடிக்கடி குறிப்பிடுகின்ற ஒன்று பிற நாடுகள் தனக்கென ஒரு பொது மொழியைக் கொண்டிருக்கும் போது, இந்தியா ஏன் தனக்கென ஒரு பொது மொழியை (இந்தி மொழியை) மேற்கொள்ளக் கூடாது? என்று துடிக்கின்றனர். இவ்வுணர்ச்சியை மேலோட்டமாகப் பார்க்கையில் இயல்பான ஒன்றாகத் தோன்றினாலும் இது பகுத்தறிவுச் சிந்தனையடிப்படையில் எழுந்த ஒன்றாக இல்லை.

### பொதுமொழி சாத்தியமா?

செருமனி, பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின், சீனம் போன்ற நாடு அல்ல இந்தியா. இந்தியா என்பது ஐரோப்பியக் கண்டத்தைப் போன்றது. சற்றொப்ப 8 கோடி மக்கள்தொகை கொண்ட அய்ரோப்பிய நாடுகளில் 287 மொழிகள் பேசப் பட்டாலும் அதில் ஆங்கிலம், ஜெர்மனி, இத்தாலி உட்பட 24 மொழிகள் அய்ரோப்பிய ஒன்றியத்தின் அலுவல் மொழிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன. அங்கு ஒரு பொது மொழி கிடையாது. கிரேக்கம், ரஷ்யா நீங்கலாக எல்லா மொழிகளுக்கும் அங்கு பொது எழுத்து வடிவம் இருந்த போதிலும், அய்ரோப்பியக் கண்டம் முழுமைக்கும் ஒரு பொதுவான நாணயத்தை உருவாக்க முயன்று வெற்றி கண்டாலும், ஒரு பொது மொழி ஏற்படுத்த முயன்று அது தோல்வியைத் தழுவியது என்பது வரலாறு.

தென் அமெரிக்கா கண்டத்திலுள்ள பொலிவியா என்ற நாட்டில் பெரும்பாலான மக்கள் ஸ்பானிஷ் மொழியைப் பேசினாலும் அங்கு 37 மொழிகள் அலுவல் மொழிகள் என அந்நாட்டின் அரசமைப்புச் சாசனம் வகுத்துள்ளது. காரணம் பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாட்டில் பொது மொழி சாத்தியமில்லை என்பதை இது உணர்த்துகிறது.

இந்திய நாடு பன்முகத் தன்மை கொண்ட மொழிவழிப் பண்பாடுகளையும் நாகரிகக் கூறுகளையும் கொண்டிருப்பதால் இந்திய நாட்டுக்கு அதன் அரசமைப்பில் தேசிய மொழி என்ற ஒன்று கிடையாது.

### அரசமைப்பில் இந்தியின் இடம்

எனினும் இந்திய அரசமைப்புப் பிரிவு 343 ஆம் விதி இந்திய ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக தேவநாகரி எழுத்துருவில் எழுதப் படும் இந்தியும், அதனுடன் ஆங்கிலமும் பயன் படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

இவை தவிர இந்திய நாட்டின் வட்டார மொழிகளாக அரசமைப்புஅட்டவணை 8 இல் 14 மொழிகள் வரிசைப் படுத்தப் பட்டிருந்தன. இதில் ராஜஸ்தான் மாநிலத்தில் பெருவாரியாகப் பேசப் படும் ராஜஸ்தானி, மார்வாரி ஆகிய மொழிகள் இல்லை. அந்த மாநிலம் இந்தி பேசும் மாநிலம் என வகைப் படுத்தப் பட்டு அம்மாநில மொழிகள் இந்தி என்ற பெயரில் விழுங்கப் பட்டுள்ளன. இதே நிலைதான் போஜ்புரி, சத்தீசுகரி போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல மொழிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

அதன்பின் இந்திய அரசமைப்புப் பல முறை திருத்தப்பட்டு தற்போது இந்தப் பட்டியலில் அஸ்ஸாமி, வங்காளம், போடோ, டோக்கிரி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காசுமீரி,கொங்கணி, மைதிலி,மலையாளம், மணிப்பூரி, நேபாளி, ஒடியா, பஞ்சாபி, சமற்கிருதம், சந்தாலி, சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய 22 மொழிகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் இந்த அட்டவணையில் ஆங்கிலத்துக்கு இடமளிக்கவில்லை.

நம் நாட்டில் அரசியல் காரணங்களுக்காகவும் வட இந்திய வல்லாண்மையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் இந்தித் திணிப்பு தொடர்ந்து புகுத்தப்பட்டு வருகிறது. இதன் மறைமுகத் திட்டம் என்பது இந்தி பேசாத தென்மாநிலங்கள், வட மாநிலங்களைப் போல ஆங்கிலம் பயன்படுத்துவதை முற்றாகத் துறந்து விட்டால் இந்தியா முழுமைக்கும் இந்தியைப் புகுத்துவது அல்லது இந்தி என்ற பெயரில் சமற்கிருதத்தைப் புகுத்துவதற்கு எளிதாகும் என்று கருதுகின்றனர். இதன் வெளிப்பாடு தான் செம்மொழிகளாக விளங்கும் வட்டார மொழிகளை மாற்றான் தாய் மனப்பான்மையில் அணுகுவதும் இந்தி மற்றும் சமற்கிருத மொழிகளுக்கு கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்வதும் ஆகும். இன்று ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியாவின் ஒரு வட்டார மொழியான இந்தியே பயன் படுத்தப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசின் சார்பில் பெரும் அழுத்தம் தரப்படுகிறது. அதற்காக இந்திய ஒன்றிய அரசு கோடிக்கணக்காக மக்கள் வரிப் பணத்தையும் செலவிடுகிறது.

### வட இந்திய வல்லாண்மை

1960 களில் இந்திதான் இந்தியாவின் தேசிய மொழியாக ஆக்கப் பட வேண்டும் என்று மிகத் தீவிரமாகப் போராடிய சேத் கோவிந்ததாஸ் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் 1965 ஆம் ஆண்டு தமிழ் நாட்டு மாணவர்கள் நடத்திய இந்தி திணிப்பு போராட்டக் காலகட்டத்தில் இந்திய இராணுவத்தை அனுப்பியேனும் இந்தியைத் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளச் செய்வோம் என கொக்கரித்தார். பின்னாளில் அதுவும் நடந்தேறியது, நூற்றுக்கணக்கான இந்தி எதிர்ப்பாளர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலியானர்கள்.

இந்தியாவின் மொழிச்சிக்கல் கடுமையானதாக இருந்த நிலையில் அன்றையக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் 31-7-1956 இல் ஒரு சிறப்புக் குழுவை நியமித்தார். ஆனால் அந்தக் குழுவின் பரிந்துரைகள் வெளியிடப் படாமலே காலாவதியாகிவிட்டது.

இந்திய அரசமைப்பு வரையறுக்கப் பட்டபோது நிலவியல் அடிப்படையில் இந்திய ஒன்றியத்தில் மூன்று வகையான மாகாணப் பிரிவுகள் மட்டுமே இருந்த நிலையில் 1956 மொழிவாரி மறுசீரமைப்பு எல்லை மாற்றியமைக்கப் பட்ட பின்பு 14 மாநிலங்களும் 6 யூனியன் பிரதேசங்களும் அமைந்தன. இதை அரசமைப்பு அட்டவணை 1 பட்டியலிடுகிறது. ஆனால் இன்று அந்த அட்டவணையில் 28 மாநிலங்களும் 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. இந்திய மாநிலங்களின் எண்ணிக்கைப் பெருக்கமும், எட்டாவது அட்டவணை மொழிகள் நீட்சியும் உணர்த்தும் செய்தி என்ன என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

**நம் நாட்டில் அரசியல் காரணங்களுக்காகவும் வட இந்திய வல்லாண்மையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் இந்தித் திணிப்பு தொடர்ந்து புகுத்தப்பட்டு வருகிறது. இதன் மறைமுகத் திட்டம் என்பது இந்தி பேசாத தென்மாநிலங்கள், வட மாநிலங்களைப் போல ஆங்கிலம் பயன்படுத்துவதை முற்றாகத் துறந்து விட்டால் இந்தியா முழுமைக்கும் இந்தியைப் புகுத்துவது அல்லது இந்தி என்ற பெயரில் சமற்கிருதத்தைப் புகுத்துவதற்கு எளிதாகும் என்று கருதுகின்றனர்**

பேச்சு வழக்கற்ற சமசுகிருத மொழியினை இந்தியாவின் ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டும் என 19-11-1967 இல் இந்து மகாசபை மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தனர். எனினும் அவர்கள் கனவு இன்று வரை நிறைவேறாமல் தென் மாநிலங்கள் தடுத்து வருகின்றன. தற்போது மகாராட்டிர மாநிலமும் ஆபத்தை உணர்ந்து எதிர்க்கத் துணிந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இந்தியாவின் ஒரு வட்டார மொழியான இந்தி மொழி போதிய வளமையோ, சொல்லாட்சியோ பெற்றிராத காரணத்தால் அரசின் அலுவல் மொழியாக ஆங்கில மொழி 15 ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று சொல்லப்பட்டு, பின்பு அதன் தேவைக்கேற்ப திருத்துவதற்கு வழிகோலியது. அது கூட ஆட்சி மொழி விவாதிக்கப்பட்டபோது ஆங்கிலம் - இந்தி ஆகியவற்றிற்கு ஆதரவாக 77-77 வாக்குகள் என்ற சமநிலையில் குழுவின் தலைவர் வாக்கு இந்தி மொழிக்கு ஆதரவாக அளிக்கப்பட்டுப் பெரும்பான்மையென ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். தற்போது 75 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தி மொழியால் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்க இயலவில்லை.

இந்திய அரசமைப்புச் சட்ட அலுவல் மொழி விதிகளைச் சுட்டிக் காட்டி இந்தி பேசாத மாநில அரசின் அலுவல்கள், கல்வி, வணிகம், நிருவாகம், செய்தித் தொடர்பு, வானொலி, தொலைக்காட்சி, தொடர்வண்டி, வங்கிகள் மற்றும் அஞ்சல்துறை என அனைத்திலும் இந்தியைத் திணிக்க முயலும் ஒன்றிய அரசின் போக்கு பகுத்தறிவின் பாற்பட்டதல்ல!. அரசமைப்புப்படி தொடக்கக் கல்வி என்பது அவரவர் தாய்மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்பதே. அதைத் தவிர்த்து பிற மொழிகளில் கற்க வேண்டும் என கட்டாயப்படுத்தக்கூடாது. இன்று நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் ஒன்றிய அரசின் துறைகளில் பயன்படுத்தப்படும் இந்தி என்பது பேச்சு வழக்கிற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு வடிவம் ஆகும். இந்த இந்தி முக்கால் பகுதி சமற்கிருதமேயாகும்.

இந்தி என்ற பெயரில் இன்று கையாளப்படும் மொழி என்பது வட இந்திய வட்டார மொழிகளிலிருந்து பெரிதும் மாறுபட்ட ஒன்றாகும். ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஊதுகுழலாகவும் அவற்றின் கொள்கைகளை நிறைவேற்றும் ஒரு கருவியாகவும் தற்போதைய பாஜக அரசு திகழ்கிறது என்பதை கடந்த 10 ஆண்டுகாலச் செயல் முறைகளிலிருந்து நம்மால் நன்கு உணரமுடியும். எனவே ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற முழக்கத்துடன் இந்தி பேசாத மாநிலங்களிலும் இந்தி திணிப்பைச் செய்து வருகின்றனர். இது ஒன்றிய அரசின் வல்லாண்மைப் போக்கை வெளிப்படுத்துகிறது.

### ஆங்கிலம் ஓர் அயல் மொழியா?

இந்த மொழி மாற்றச் சிந்தனைக்கு அவர்கள் விடுக்கும் காரணங்கள்:

1. ஆங்கிலம் ஓர் அயல் மொழி
2. இந்தியாவின் நிருவாகப் பயன்பாட்டுக்கு ஒரு தேசியமொழி இன்றியமையாதது
3. கிராம மக்களையும் அறிவாற்றல் மிக்கவர்களையும் அம்மொழி பிரிக்கிறது
4. இந்திய அரசமைப்பின் 343ஆவது பிரிவு இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக இந்தியை முதன்மைப்படுத்துகிறது.

இதில் நமது முதல் கேள்வி ஆங்கிலம் ஓர் அயல் மொழியா? மொழி என்பது கருத்தை வெளியிடும் ஒரு தொடர்புக் கருவி; மொழிக்கு இனம், மதம், பாலினம் என்ற ஒன்று கிடையாது. இந்துக்கள் பல மொழிகள் பேசுகின்றனர். ஒரே நாட்டைச் சார்ந்த மக்கள் பல மொழிகளைப் பேசுவது; பல நாடுகளைச் சார்ந்த மக்கள் ஒரேமொழி பேசுவது என்பவையெல்லாம் இன்று நாம் கண்கூடாகக் காணும் உண்மையாகும். எனவே ஒரு நாட்டின் பூகோள எல்லைக்குள் தோன்றியதால் அம்மொழியின் பிறப்பிடம் குறிப்பது ஒரு அளவையாயின் சமசுகிருதம், இந்தி, சிந்தி உட்பட வடஇந்தியாவில் பேசப்படும் பெரும்பாலான மொழிகள் அனைத்தும் தென்னிந்திய மக்கள், வடகிழக்கு மக்கள் அனைவருக்கும் அயல் மொழிகளே. ஒரு நாட்டின் மொழித்தூய்மை அல்லது பிறப்பிட மூலம் தான் அளவுகோல் எனில், டாக்டர் அம்பேத்கர் சுட்டிக்காட்டியிருப்பது போல, தமிழ் மொழி ஒன்று தான் இந்தியாவின் ஒரே மொழியாக எண்ணத்தக்கது என்பதை ஒப்புக்கொள்ள முன்வருவார்களா?

இந்திய நாட்டு வட்டார மொழிகளுடன் அராபி மொழியும், பாரசீக மொழியும் கலந்தமையால் உருது என்ற மொழியும், அதைப்போல சமற்கிருதம் கலந்தமையால் இந்தி என்ற மொழியும் தோன்றின. அந்த இந்தியும் உருதுவும் கலந்த மொழி இந்துஸ்தானி எனவும் அழைக்கப் படுகிறது. இந்த மொழியையே மகாத்மா காந்தியும் முன்னெடுத்தார். இந்தக் கலப்பும் உருவாக்கமும் கடந்த 200 ஆண்டுகளில் உருவான ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தென் இந்திய மக்களுக்கு இந்தி, இந்துஸ்தானி, சமற்கிருதமும் அயல் மொழிகளே! ஆங்கிலமும் இதே காலவரையறைக்கு உட்பட்ட ஒன்றாகும்.

நாட்டு மக்களிடையே ஒரு மொழி உருவாக்கும் ஏற்பிசைவு, எளிமை, நடைமுறைப் பயன்பாடு ஆகியவையே அம்மொழியின் செல்வாக்கை நிலை நிறுத்தும். இன்று உலக மக்கள்தொகையில் ஆங்கிலம் பேசுவோர் அதிகம் உள்ள நாடு என்ற பட்டியலில் முதல் இடத்தைப் பிடிப்பது இந்தியாவாகும். இந்திய மக்கள் தொகை எண்ணிக்கையில் 2.5 விழுக்காடு ஆங்கிலப் புலமை பெற்றவர்கள் என்பதை உலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே நிலவியல், தோற்றம், பயன்பாடு என எவ்விதமான காரணிகள் கொண்டு அளந்தாலும் ஆங்கிலம் இந்திய வட்டார மொழிகளுக்கு இணையாகவே உள்ளது.

1951 இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் 750 வட்டார மொழிகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் சில மொழிகள் மிகச்சிறிய எண்ணிக்கை மக்களால் பேசப்படும் மொழிகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக அவ்வறிக்கையில் 555 இந்திய மக்களே சமசுகிருதம் பேசுபவர்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது. தற்போது மக்கள்தொகைப் பெருக்கத்துக்கொப்ப சில ஆயிரங்களாகப் அது பெருகி உள்ளது. தென்னிந்தியாவிலும் வட இந்தியப் பெரு நகரங்களிலும் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளும் தகுதி படைத்தவர்களாக உள்ளனர் என்பதையும் 1951 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைச் சுட்டிக் காட்டியது. எனினும் அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்தப் பட்டபோது அதில் அஸ்ஸாமி, பெங்காலி, இந்தி, சமற்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது உட்பட 14 மொழிகள் மட்டுமே அட்டவணை 8-இல் இடம் பெற்றன. பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இன்று பல இலட்சக் கணக்கில் உள்ளனர். இன்று 8 வது அட்டவணையில் 22 மொழிகள் உள்ளன. ஆனால் ஆங்கிலம் இந்தப் பட்டியலில் இடம் பெறவில்லை. இந்த 22 மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியைப் பேசுபவர்களுக்கு மீதியுள்ள 21 மொழிகளும் அயல் மொழிகளே. எனவே ஆங்கிலம் ஒரு அயல் மொழி என்ற வாதம் ஏற்புடையது அல்ல.

மேலும் ஆங்கிலம் இயல்பாகவே இந்திய நாட்டின் தவிர்க்க இயலாத ஒரு மொழியாகிவிட்டது. ஆங்கிலத்தின் மூலமே நாம் அரசியல் உணர்வு, விடுதலை உணர்வு பெற்றோம். செய்திதாள்கள், ஒன்றிய, மாநில சட்ட அவைகள், நாடு முழுவதும் நடைபெற்ற சொற்பொழிவுகள், எழுத்துகள் என அனைத்திலும் மகாத்மா காந்தியும் மற்ற தலைவர்களும் ஆங்கிலத்தையே கையாண்டனர். இந்திய நாட்டின் விடுதலைக்கு ஆங்கிலம் வழியாகத் தான் போரிட்டனர். இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆங்கிலமே துணை நிற்கிறது. அம்மொழியின் சொல் நுட்பமானது, தொழில், மருத்துவம், சட்டம், இலக்கியம், பொருளியல், வணிகம் ஆகியவற்றிற்கு ஏற்றதாக உள்ளது. இதன் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளில் அதுவே இணைப்பு மொழியாகவும் வணிக மொழியாகவும் பயன்படுத்தப் பெறுகிறது.

இந்தியாவில் சற்றேறக்குறைய 250 ஆண்டுகளாக பணித்துறை அலுவலகங்கள், சட்டம், மருத்துவம், உயர் கல்வி ஆகியவற்றில் அதுவே பயிற்று மொழியாகவும் இந்திய ஒன்றியம் மற்றும் மாநிலங்களுக்கிடையே ஓர் இணைப்பு மொழியாகவும் விளங்கி வருகிறது.

ஆங்கிலத்தை நீக்கி விடுவதால் நிருவாகம் செம்மையுறுமா? உண்மையில் ஆங்கில மொழியை ஒரு கருவியாகக் கொண்டே இந்திய நாட்டில் ஒரு நல்ல நிருவாக அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். ஆங்கிலேயர்கள் நம்மை விட்டுச் சென்றபோது ஒரு தலைசிறந்த நிருவாக அமைப்பை இந்தியா பெற்றிருந்தது. ஆனால் அது இன்று சீர்கேடடைந்து இந்தியப் பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் தனி மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த தனியார் நிறுவனங்களின் மேலாண்மையில் இந்தி மொழியைப் பயன்படுத்துகின்றனரா அல்லது ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனரா? என்பதுவும் சிந்திக்க வேண்டிய ஒன்று. ஆங்கிலமே எங்கும் நிறைந்திருக்கிறது.

**மக்களாட்சி, கூட்டாட்சித் தத்துவம் என்றால் என்ன?**

கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட நாட்டின் முதன்மைப் பணி யாதெனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் உள்ள தனிநல முரண்பாடுகளை அகற்றி இணங்கச் செய்வதும், எதிர்காலச் சிக்கலைப் போக்குவதற்கு வழிவகை செய்வதும் ஆகும். அதைப் போல ஜனநாயக மரபு என்பது பெரும்பான்மையோர் எண்ணம் ஈடேற வேண்டும் என்பதல்ல! சிறுபான்மையோரும் அச்சமின்றி அரசியல் களத்தில் பங்கேற்கவும், அவர்களின் உரிமைகளும் உணர்வுகளும் மதிக்கப் பட வேண்டும் என்பதாகும். ஆனால் இன்றைய அரசியல் மேற்சொன்ன அனைத்திற்கும் முரணாக உள்ளது. இந்த நிலை நீடித்தால் எதிர்கால இந்தியாவின் ஒற்றுமை என்பது பெரும் கேள்விகுறியாகி விடும்?

விடுதலை பெற்ற இந்தியாவின் அரசமைப்பு உருவானபோது குறிப்பாகச் சட்டம், நீதித்துறை, கல்வி முறை என முப்பிரிவுகளாக பிரித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் ஆட்சி மொழி ஒன்றிய அரசு, மாநில அரசு பணித்துறை, தொடர்பு மொழி குறித்தும் வரையரை செய்துள்ளது, குறிப்பாக மாநிலக் கல்விக் கொள்கை, தாய்மொழி, பயிற்று மொழி குறித்தும் அரசமைப்பின் பிற்காலத் திருத்தங்கள் தெளிவு படுத்தியுள்ளன.

இந்திய அரசமைப்புச் சாசனத்தின் 343 வது பிரிவு ஒன்றிய அரசின் அலுவல் மொழிகள் குறித்தும், 345 வது பிரிவு மாநில வட்டார மொழிகள் குறித்தும் 346 வது பிரிவு ஒன்றிய மாநில அரசுகளின் தொடர்பு மொழி குறித்தும் விளக்குகின்றன. அரமைப்புப் பிரிவு 348 உச்சநீதி மன்ற, உயர் நீதி மன்ற வழக்காடு மன்ற மொழியாக ஆங்கிலம் மட்டுமே திகழும் எனவும் வகைப்படுத்தியுள்ளது. இன்று வரை ஆங்கிலம் மட்டுமே நீதி மன்ற மொழியாக உள்ளது. இந்தி உட்பட வேறு எந்த வட்டார மொழிகளும் ஆங்கிலத்தின் இடத்தை எட்டவில்லை. மேலும் கல்வி நிலையங்கள் மொழித் தொடர்பாக எந்த விதமான ஆணையும் இந்திய அரசமைப்புச் சாசனத்தில் இடம் பெறவில்லை. 1956 ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளியில் தாய்மொழி மூலம் பாடம் கற்பிக்க அந்தந்த மாநில அரசுகள் வகைசெய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டு அரசமைப்புத் திருத்தம் கொண்டு வந்து 350A என்ற பிரிவு சேர்க்கப்பட்டது.

### இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலமே பாதுகாப்பு அரண்

ஆங்கில மொழி இந்திய மக்கள் மீது கட்டாயமாகத் திணிக்கப் பட்ட ஒன்று அல்ல. விடுதலைக்கு முன்பு இந்தியாவில் ஆங்கிலம் அறிந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 2% மட்டுமே, ஆனால் இன்று அது 25% அளவுக்கு உயர்ந்துள்ளது. அறிவியல், கணிதம், மருத்துவம், அணு ஆய்வு, மின்னியல், எண்ணியல் துறைகளில் ஆங்கிலத்தின் விரிந்து பட்ட சொல்லாட்சியும் பயன்பாடும் உலக மக்களை அதன் பால் ஈர்த்துள்ளன. தாய்மொழி என்று ஒரு மொழிக் கொள்கையைப் பின்பற்றிய ஜப்பான், சீனம், ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கூட தாய்மொழிக்கு அடுத்து ஆங்கில மொழியைக் கற்பதில் இன்று பேரார்வம் காட்டுகின்றன.

இந்திய மாநிலங்களில் அருணாசலப் பிரதேசம், நாகலாந்து, மேகாலயா ஆகியவற்றில் ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக உள்ளது. இதைத் தவிர்த்து இந்திய மாநிலங்களில் 10க்கும் மேற்பட்ட மாநிலங்களில் தாய்மொழியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக உள்ளது. நாம் ஆங்கில மொழியை இந்திய மொழிகளில் ஒன்று என்று ஒப்புக் கொண்டு விட்டால் ஆங்கிலத்தின் மீதுள்ள வெறுப்புணர்ச்சி மறைந்து விடும்.

இந்திய மாநிலங்களில் இருமொழிக் கொள்கை என்ற ஒரு தனித்துவத் தன்மையுடன் விளங்கும் தமிழ்நாடு இதற்கு முன்பு மாநிலத் தன்னுரிமை, மொழிக்காப்பு, மத நல்லிணக்கம், சமுகநீதி, கல்விக்கொள்கை ஆகியவற்றில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியது போன்று மேலும் ஒரு பாதை அமைக்க வேண்டும்.

இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் ஆங்கிலமும் இடம் பெற வேண்டும் என்று தமிழ்நாடு சட்ட மன்றத்தின் தீர்மானம் மூலம் ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும். இது இந்தி பேசாத மாநிலங்களுக்கு எதிர் காலத்தில் ஒரு பாதுகாப்புக் கவசமாக அமையும். பிற மாநிலங்களையும் விழிப்படையச் செய்யும்.

●

*கட்டுரையாளர்: சமூகச் செயல்பாட்டாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | டாக்டர் சு. நரேந்திரன்



# வடமொழி மேலாண்மையைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாதது ஏன்?

இந்தியாவில் ஏனைய மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இந்தி எதிர்ப்புணர்ச்சி மிகுதியாகக் காணப்படுகிறது? தமிழ் எந்தக் காலத்திலும் பிறமொழிகளின் குறிப்பாக வடமொழியின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதில்லை என்பதும் தமிழ் தன்னிறைவு பெற்ற வளர்ச்சி குன்றாத மொழியாகத் திகழ்கின்றமையுமே இதற்குக் காரணங்களாகும் என்று டாக்டர் தெ. பொ.மீனாட்சி சுந்தரனார் கருதுகின்றார்.

இதன் தொடர்ச்சியாக இதே மனநிலை தமிழகத்தில் நீடித்து வருகிறது. இந்திய ஒன்றிய அரசு 1960களில் கலைச்சொல் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு தயாரித்த கலைச்சொல் அகராதியில் சமஸ்கிருத சொற்களே அதிகம் காணப்பட்டன. அக்குழுவில் பங்குகொண்ட தமிழ் அறிஞர்கள் மறுப்புரைத்தனர். அதன் பயனாக அச்சொற்கள் தமிழில் கையாளப் படவில்லை.

சமஸ்கிருதச் சொற்களை ஏற்றுக் கொள்வதைவிட ஆங்கிலச் சொற்களையே ஏற்றுக்கொள்ளலாம். அது இன்னும் எளிது என்கிற கருத்தோட்டம் நிலவியதால் மேற்படிக் குழுவின் முயற்சி இங்கு வெற்றி பெறாது போயிற்று. இன்னும் இந்த நிலையே நீடிக்கிறது. எனினும் இப்படி ஒரு முயற்சி பாரதி காலத்தில் நடந்தது என்பதும், ஏகாதிபத்திய எதிரியாகிய பாரதி ஆங்கிலமொழி ஆதிக்கத்துக்கெதிராகக் காட்டிய கருத்தை காசியில் நடைபெற்று வந்த முயற்சியைக் குறிப்பிட்டு இந்தியா முழுமைக்கும் ஓரே மாதிரி கலைச்சொல் இருப்பது நல்லது என்று தெரிவிக்கிறார்.

1940 ஆம் ஆண்டின் சீனிவாச சாஸ்திரி குழுவினரின் அன்றைய தமிழறிஞர்களால் பெரிதும் விமர்சிக்கப்பட்டு வந்தது. இக்குழுவில் பணியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டது. மேலும் இக்குழுவினரிடையே ஒற்றுமையின்மையில் இக்குழுவினர் கலைச்சொல் பட்டியல் நீண்ட நாட்கள் வெளியிடாமலேயிருந்தது. அதன் பின்னர் நாடு விடுதலை அடைந்த 1947ஆம் ஆண்டில் தான் இக்குழுவினர் பட்டியல் வெளிவந்தது. அக்குழு எவ்விதத்தில் செயல்பட்டது என்பதைப் பார்ப்போம்.

### இறுதி வடிவம்

இவ்வாறாக மோதல்களுடன் நடைபெற்ற கலைச்சொற்கள் குழு 1947 ஜனவரியில் தம் பணியினை முடித்து அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்தது. 'அப்ஜஹரிதி சிகாமிலம்' போன்ற கருடுமுரடான வடசொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொல்லே மேலென்று முடிவெடுக்கப்பட்டது. இ.மு.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் நல்ல தமிழ்ச் சொற்களைப் புகுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டார். பத்தாண்டுகளாக இடையறாத போராட்டங்களில் ஈடுபட்டுத் தமிழ்மொழிச் சிதைவைத் தடுத்தார். இ.மு.சு.வை 'கலைச்சொல்லாக்கம் கவினுறத் தொகுத்தும்' என்று பாவாணர் பாராட்டுகிறார். பாவாணர் அவர்களுடன் நெருங்கிப் பழக நேரிட்டதும் முதற் கலைச்சொல்லாக்க மாநாட்டில்தான்.

இக்குழு முந்தைய குழு தயாரித்த கலைச்சொற்களை மறுஆய்வு செய்து 1947இல் அரசுக்கு வழங்கியது. புதிய குழுவினர் அளித்த கலைச்சொற்களை 1947இல் அரசு வெளியிட்டது.

ரசாயனம், வர்த்தகம், உடலியல், நலவியல், பௌதிகம், கணிதம் சரித்திரம், பொருளாதாரம், நிர்வாகம், குடிமைநூல், இயற்கை விஞ்ஞானம் முதலிய பாடங்களுக்குரிய கலைச்சொற்கள் தொகுதிகளை இதில் உள்ள பெரும்பாலான சொற்கள் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டிருந்த கலைச்சொற்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமஸ்கிருதச் சொற்களை ஏற்றுக்கொள்வதைவிட ஆங்கிலச் சொற்களையே ஏற்றுக்கொள்ளலாம். அது இன்னும் எளிது என்கிற கருத்தோட்டம் நிலவியதால் மேற்படிக் குழுவின் முயற்சி இங்கு வெற்றி பெறாது போயிற்று. இன்னும் இந்த நிலையே நீடிக்கிறது.**

நூலிலிருந்தே எடுத்துக்கொள்ளப்பட்டன என்று அக்குழு வெளிப்படையாக அறிவித்தது. அதிக எண்ணிக்கையிலான ஆங்கிலச் சொற்களையும் சமஸ்கிருத மொழியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கலைச்சொற்களையும் கொண்டிருப்பதால் அக்கலைச் சொற்கள் தற்போதைய தமிழ் அறிஞர் புலத்தின் உணர்வுகளுக்கு எதிராக இருக்கின்றன. எனவே, சாஸ்திரி குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக்கொள்வது பயனற்றது என்று இத்துணைக்குழு கருதுகிறது என்றும் அவ்வறிக்கை கூறியது.

இக்குழு நியாயமாக உருவாக்கப்பட்ட அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொற்கள் பட்டியலை அளித்தது. சாஸ்திரியார் மொழி வெறியென பழிக்கப்பட்ட ஒன்று மொழிப்பற்று என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### கலைச்சொல் பட்டியல்

1947இல் தமிழ்நாடு அரசாங்கம் பல்வேறு பாடங்களுக்கான கலைச்சொல் அகராதிகளை வெளியிட்டது. 1940இல் அமைக்கப்பட்ட கலைச்சொல் குழு உருவாக்கிய சொற்கள் இதில் இடம்பெற்றன. இந்திய மொழிச் சொற்களை அடுத்து ஆங்கிலச் சொற்களையும் கொடுப்பது, நூலின் இறுதியில் கலைச்சொல் பட்டியல் தருவது, ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இச்சொற்களை மறுஆய்வு செய்வதுமான சில கொள்கைகளை 1940இல் அமைக்கப்பட்ட குழு வரையறுத்திருந்ததாகவும் அதற்கேற்ப இச்சொற்பட்டியல் வெளியிடப்படுவதாகவும் இச்சொற்களைப் பள்ளிகளில் பயன்படுத்த வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் தமது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

1936இல் வெளிவந்த கலைச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என அன்றைய தமிழ்நாடு அரசு பரிந்துரை செய்தது. ஆனால் 1947இல் பதவியிலிருந்த அரசு, தான் வெளியிடும் சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியது பழைய சொற்களின் பொருத்தமின்மை பற்றி இம்முன்னுரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

| ஆங்கிலச்சொல் | அரசு பட்டியல் (1947) | த.ப.க.கலைச்சொற்கள் (1997) |
|---|---|---|
| Distortion | விகாரம் | உருகுநிலை உருமாற்றம் |
| Dynamics | டைனமிக்ஸ் | இயக்கவியல் |
| Catalysis | கிரியாஊக்கம் | வினைவேக மாற்றம் |
| Radioactivity | ரேடியக் கிளர்ச்சி | கதிரியக்கம் |

இதில் உள்ள பெரும்பாலான சொற்கள் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டிருந்த கலைச்சொற்கள் என்ற நூலிலிருந்தே எடுத்துக்கொள்ளப்பட்டன என்று அக்குழு வெளிப்படையாக அறிவித்தது. அதிக எண்ணிக்கையிலான ஆங்கிலச் சொற்களையும் சமஸ்கிருத மொழியில் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கலைச் சொற்களையும் கொண்டிருப்பதால் அக்கலைச் சொற்கள் தற்போதைய தமிழ் அறிவுப் புலத்தின் உணர்வுகளுக்கு எதிராக இருக்கின்றன. எனவே, சாஸ்திரியார் குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக்கொள்வது பயனற்றது என்று இத்துணைக்குழு கருதுகிறது என்றும் அவ்வறிக்கை கூறியது. 1947இல் வெளியிடப்பட்ட கலைச்சொற்களில் பாதிக்கு மேல் ஆங்கிலச் சொற்களும் சில தமிழ்ச் சொற்களும் இருந்தன. இத்தகு தடைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் இடையில் தனித்தமிழியக்கம் கலைச் சொல்லாக்கத்தில் பெரும் தாக்கம் பெற்றுள்ளதை இன்றுள்ள கலைச்சொல் தொகுதிகளை மேலோட்டமாகப் பார்த்தாலே அறியலாம்.

இதுவரை வெளியிடப்பெற்ற கலைச்சொல் தொகுதிகளின் பட்டியலையும் அவற்றில் இடம் பெறும் சொற்களின் எண்ணிக்கையையும் இராதா செல்லப்பன் தொகுத்தளித்துள்ளார். மரித்துவரும் சொற்களை நீக்கி இரண்டு இலக்கத்திற்கும் மிகுதியான சொற்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக அப்பட்டியல்களிலிருந்து அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது (2023) அரசு அகரமுதலி இயக்கத்தின் அறிவின்படி 14 இலட்சம் கலைச்சொற்களை தொகுத்துள்ளதாக இதழ்களில் செய்திகள் வெளிவந்துள்ளது மகிழ்ச்சியை அளிப்பதாக உள்ளது. மூன்று ஆங்கிலச் சொற்களுக்கு முறையே கிறீன் மருத்துவர் (1875) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்(1938) சென்னை மாநில அரசு (1947), இலங்கை அரசு(1955) சென்னைக் கல்லூரி தமிழ்குழு ஆகியோர் ஆக்கியுள்ள கலைச்சொற்களை இலங்கை.கா.பொ.இரத்தினம் எடுத்தளித்துள்ளார்.

| | Chemistry | Hydroge | Physiology |
|---|---|---|---|
| 1875 | கெமிஸ்தம் | ஜருதம் | சுகரணம் (சுகரணவர்தம்) |
| 1938 | வேதிநூல் இயைபுநூல் | நீரகம் | உடலியல் |
| 1947 | ரசாயனம் | ஹைடிரஜன் | சரீசாஸ்திரம் |
| 1955 | இரசாயனவியல் | ஜதிரஜன் | உடற்றொழிலியல் |
| 1960 | ரசாயனவியல் | ஹைட்ரஜன் (நீர்வாயு) | உடலியல் |

இப்பட்டியல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தொகுத்தளித்த கலைச்சொற்களைப் புறக்கணித்து ஆங்கிலம், சமஸ்கிருதக் கலைச்சொற்களை நிலைபெறச் செய்யும் முயற்சிகள் நடைபெற்றதைக் காட்டுகிறது. ஆனால் தனித்தமிழியக்கத்தார் முயற்சியால் மேல் குறித்த சொற்களுக்கு வேதியியல், நீர்வளி, உடற்கூறியல் என்ற தமிழ்க் கலைச்சொற்கள் இன்று வழங்கப்பெறுகின்றன.

இதுகுறித்து கைலாசபதி கூறுகையில் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் வெளியாகியுள்ள அறிவியல், சட்டம், ஆட்சித்துறை, வணிகவியல் தொடர்பான கலைச்சொற் பட்டியல்களை ஆராய்ந்தால் கலைச்சொல்லாக்கத்தில் தனித்தமிழியக்கம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தோன்றுகிறது"

**கலைச்சொல்லாக்கத்தில் இத்தாக்கம் ஏற்படக் காரணங்கள்**

பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் சமஸ்கிருதத்தை எதிர்த்துப் போராடியபோது இந்தி எதிர்ப்பில் மறைமலையடிகளும் பெரியாரும் ஒத்த கருத்துடையராய் இருந்தனர். இராஜாஜி சென்னை மாகாண பிரதமராக 1937இல் பொறுப்பேற்ற பிறகு, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தும் அவரது திட்டம் பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது. இதனை எதிர்த்து 1938 ஆகஸ்ட் 1ஆம் நாள் திருச்சியிலிருந்து புறப்பட்ட தமிழ்ப் படை செப்டம்பர் 11ஆம் நாள் சென்னையை அடைந்து மெரினா கடற்கரையில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இதில் மறைமலை அடிகளாரும் பெரியாரும் இணைந்து உரையாற்றியது வரலாற்று சிறப்பு மிக்கதாகும். இந்தி பொது மொழியா? என்ற ஆங்கில நூலை அடிகளார் வெளியிட்டார். பெரியார் நடத்திய இதழ்களுக்குக் குடியரசு, பகுத்தறிவு, புரட்சி, விடுதலை எனத் தனித்தமிழ்ப் பெயர் சூட்டியமை பொது தமிழுணர்வைக் காட்டுகிறது. பெரியார் வடமொழி எதிர்ப்பைக் காட்டும்போது "தமிழுடன் எம்மொழி தொடர்பிருந்தாலும் பரவாயில்லை நமக்கு வடமொழித் தொடர்பு மட்டும் கூடாது" என்பதில் மிக உறுதியாய் இருந்தார்.

பெரியார் நூற்றுக்கு நூறு தனித்தமிழை ஆதரிக்கவில்லையெனினும் அவர் இயக்கத்தைச் சார்ந்த அறிஞர்களான பாரதிதாசன், புலவர் பொன்னம்பலனார், புலவர் குழந்தை, கா.அப்பாத்துரையார் முதலியோர் தனித்தமிழை ஏற்றுத் தூயத்தமிழ்க் கோட்பாட்டை பரப்பவும் செய்தனர்.

மொத்தத்தில் சுயமரியாதை இயக்கத்தால், தனித்தமிழ்க் கொள்கையாளர்கள் வலுப்பெற்றனர். தமிழில் கலந்த வடமொழிச் சொற்களை அகற்றி தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டுமென்ற ஆர்வம் தமிழரிடையே எழுந்தது.

இது குறித்து பாரதிதாசன் தமிழியக்கத்தில் (1945)

**"பவன்" மண்டல் முதலிய**
**இனியேனும் தமிழகத்தில்**
**பயிலா வண்ணம்**
**அவண் சென்று முழங்கிடுவீர்!**
**ஆங்கிலச் சொல் இந்திமொழி**
**வடசொல் யாவும்**
**இவண் தமிழிற் கலப்பதுண்டோ"**

என அறிவுறுத்தினார். பட்டியலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருதச் சொல் மிகுதியாக உள்ளதால் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் இ.மு. சுப்பிரமணியம் போன்ற ஆன்மீகவாதிகளும் பெரியாரையும் துணைக்கொண்டு போராடினர். இம்முயற்சி மொழி உணர்வுக்கு முதன்மை தருவாயிற்று. 1940இல் அமைக்கப்பட்ட சாஸ்திரியார் குழுவுக்கு எதிரான கண்டனமும் இதன் அடிப்படையிலேயே எழுந்ததேயாகும். இந்தக் காலக்கட்டத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தலையெடுக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இது கலைச்சொற்களைத் தமிழ் மயமாக்குதல் எனலாம். ஆங்கிலம் / பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குவதில் ஏற்கெனவே உள்ள சமஸ்கிருதச் சொல்லுக்கிணையாக தமிழ்ச்சொல்லே எடுததுக்கொள்ளப்பட்டது. இதன்மூலம் தகுந்த தமிழ்க் கலைச்சொல்லுடன் அறிவு பரப்பும் பணி தொடங்கியது.

### 1932ஆம் ஆண்டுக்குப் பின் சமஸ்கிருத எதிர்ப்புடன் இந்தி எதிர்ப்பும் கைகோத்தது

1932இல் சென்னை மாநில அரசு கலைச்சொல் பட்டியலை வெளியிட்டபின் பல்முனை எதிர்ப்புக்குப் பின் இராஜாஜி முன்னுரையுடன் கலைச்சொல் நூல் வெளிவந்தது என்றாலும் அக்காலகட்டத்தில் மாநில பிரதமராகப் பதவி வகித்தபோது அவர் இந்தியை கட்டாயப் பாடமாக்கினார். இதை நீதிக் கட்சிக்காரர்களும் கட்டாய இந்தியை தீவிரமாக எதிர்த்தனர். அவர்களுள் சர் ஏ.டி.பன்னீர்செல்வம், கே. வி.ரெட்டிநாயுடு, உமாமகேஸ்வரம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். உமாமகேஸ்வரம் பிள்ளை "இந்தியை புகுத்துவதற்கான காரணம் சமஸ்கிருதத்தை பரப்புவதே" என்றும் அதன்மூலம் தமிழ்நாட்டின் படிப்பறிவில்லாதோரின் கல்வி முன்னேற்றத்தை தடுப்பதுதான் என்றும் குறிப்பிட்டார். இதன் தொடர்ச்சியாக ஒரு கட்டத்தில் சாதாரண எதிர்ப்பு இயக்கமாகத் தொடங்கியது, போராட்ட வடிவம் எடுக்கச் செய்தது. அரசாங்கத்தின் அடக்குமுறை காரணமாகவே சுயமரியாதை இயக்கத்தின் மாவட்டம் தோறும் மாநாடுகளை நடத்தி கட்டாய இந்திக் கொள்கையை எதிர்த்தனர். இதில் முக்கியமாக குறிப்பிடத்தக்கது திருச்சி (26.12.1937) மாகாணத் தமிழ்நாடு. இதைத் தொடர்ந்து இந்தி எதிர்ப்புப் படை 1938 ஆகஸ்ட் 1ஆம் நாள் திருச்சியிலிருந்து புறப்பட்டு சென்னையை அடைந்தது. பிறகு செப்டம்பர் 11ஆம் நாள் மெரினாவில் கடவுள் மறுப்புக்கொள்கை கொண்ட பெரியாரும், கடவுள் பற்றாளருமான மறைமலையடிகளும் கலந்துகொண்ட மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இதன் பயனாக அது மாணவர்களுக்கு விருப்பப் பாடமானது. இந்தி போராட்ட விளைவுகளை அண்ணா தொகுத்துக் கூறியதாவது: "இராஜாஜியின் கட்டாய இந்தி எங்கள் உணர்வுகளைத் தூண்டி நாங்கள் மிகுந்த பலத்துடன் உழைக்க உதவியது. திராவிட உணர்வுகள் வளரவும் அது உதவிற்று. இராஜாஜியின் அடக்குமுறைக் கொள்கை திராவிட, உணர்வுகளை அழிப்பதற்குப் பதிலாக இனஒற்றுமை, புத்துயிர் பெற்று வளர உதவியது" என்றார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் எதிர்கால தமிழ்நாட்டிற்குப் பல அரசியல் தலைவர்களையும் பேச்சாளர்களையும் எழுத்தாளர்களையும் அளித்த பெருமைக்குரியது. இராஜாஜிக்கு எதிராக எழுந்த தமிழ் உணர்வு தொடர்ந்தது. இந்தித் திணிப்புக்கு எதிராக எடுத்த போராட்டம் 1942ஆம் ஆண்டு நடைபெற்றது. பிரகாசம் முதலமைச்சராக இருந்தபோது 1946இல் இந்தியை கட்டாயப் பாடமாக்க முயன்றபோது அண்ணா தலைமையில் போராட்டம் தொடங்கப்பட்டது. விடுதலைபெற்ற பின்னரும் இந்தி எதிர்ப்பு தொடர்ந்தது.

இந்தியை கட்டாயப் பாடமாக புகுத்தப்பட்ட 1948ஆம் ஆண்டில் எதிர்ப்பு இயக்கத்திற்கு பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க. போன்றோருடன் அண்ணாதுரையும் இணைந்து கொண்டிருந்தார். அதன்பின் 1950ஆம் ஆண்டு கட்டாய இந்திக்கு எதிராக தீவிர போராட்டம் தமிழ்நாட்டை உலுக்கியது. மாபெரும் இந்தி எதிர்ப்புப் போரை தமிழ்நாடு 1965இல் கண்டது. இந்த வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கும்போது வழக்கொழிந்த சமஸ்கிருதத்தையோ அல்லது இந்தியையோ பெரும்பான்மையான தமிழர்கள் எதிர்த்தே வந்துள்ளனர் என்பது வெள்ளிடைமலை. அது இன்றளவும் தொடர்கின்றது என்பது கண்கூடு.

●

---

கட்டுரையாளர் : முதுநிலை மருத்துவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குரிமைக்கு சவால்..
# இன்று பீகார்..
# நாளை?

"அவன் பட்டு வேட்டி பற்றிய கனாவில் இருந்தபோது கட்டி இருந்த கோவணமும் களவாடப்பட்டது" என்ற முறையில்தான் பீகாரில் சிறப்பு தீவிர வாக்காளர் சீர்திருத்தம் என்ற பெயரில் லட்சக்கணக்கானோரின் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்படுகிறது. ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒரு வகை மோசடி அஸ்திரத்தை பாரதிய ஜனதா ஏவுகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் கூட்டாளியான "ஆடுறா ராமா ஆடுறா" தேர்தல் கமிஷன் தனது சட்ட எல்லைகளை மீறி சேட்டை செய்கிறது. இந்த ஆண்டு நவம்பரில் பீகாரில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வாக்காளர்கள், இருப்பிடம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களைச் சமர்ப்பிக்கச் சொல்கிறது. பிழைப்புக்காக இடம் பெயர்ந்து வாழ்பவர்கள், ஊர் ஊராக வேலை நிமித்தம் செல்பவர்கள் பீகாரில் அதிகம். தங்கள் ஆவணங்களை அவர்கள் எப்படி பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியும்? ஒன்றிய அரசு கொடுத்த ஆதார் அட்டை செல்லாதாம். வாக்காளர் அடையாள அட்டை யும் செல்லாதாம். ரேஷன் கார்டும் செல்லாதாம். மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்ட அட்டையும் பயன் தராதாம். இவர்களின் நோக்கம் என்ன? தேசிய மக்கள் பதிவேடு திட்டத்தை வேறு உருவத்தில் கொல்லைப்புற வழியில் அரங்கேற்றும் வேலையை சீர்திருத்தம் என்ற பெயரில் தொடங்கியுள்ளனர். இதன் மூலம் இஸ்லாமியர்களின் வாக்குரிமையை பறித்து விட்டால் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்று கணக்கு போடுகிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சி நடத்திய ஆய்வின் மூலம் அவர்களுக்கு பீகாரில் மொத்தம் உள்ள 243 இடங்களில் சுமார் 50 சட்டசபை இடங்கள் கூட கிடைக்காது என்று தெரியவந்துள்ளது. இதன்பின் தான் இந்த சீர்திருத்தம் என்ற



தந்திரத்தை தனது எடுபிடி தேர்தல் கமிஷன் மூலம் முன் வைக்கிறது. அதுவும் ஜூன் 24 முதல் ஒரு மாதத்திற்குள் இந்த சீர்திருத்தம் செய்யும் வேலையை செய்து முடிக்க வேண்டுமாம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இந்த வாக்காளர் சீர்திருத்தக் காரணத்தை முன்னிட்டு தங்கள் இருப்பிடத்திற்கு உடனே திரும்புவது கடினமான காரியம். ஆய்வில் 35.69 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தாங்கள் குறிப்பிட்ட இருப்பிடங்களில் வசிக்கவில்லை என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. 7.9 கோடி வாக்காளர்களில் குறைந்தது பத்து சதவீத வாக்காளர்களை ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி நீக்கிவிடுவார்கள் போல் தெரிகிறது.1987 முதல் 2004 வரை பதிவு செய்த வாக்காளர்கள் தங்களது ஒரு பெற்றோரின் பிறப்பிடச் சான்றிதழை விண்ணப்ப மனுவில் சேர்க்க வேண்டும்.

2004 க்குப் வாக்காளராக சேர்ந்தவர்கள் தங்கள் தாய் தந்தை இருவரின் இருப்பிட சான்றிதழை தர வேண்டும்

மகாராஷ்டிரா தேர்தலில் வாக்காளர் எண்ணிக்கையை அதிகம் ஆக்கி தேர்தல் வெற்றியை சாத்தியமாக்கிய பாரதிய ஜனதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி இப்போது பீகாரில் வாக்காளர் எண்ணிக்கையை குறைத்து வெற்றியை ஈட்டப் பார்க்கிறது. பாரதிய ஜனதா கட்சி தனது மதவெறி அரசியல் திட்டத்திற்காக தேர்தல் கமிஷனை வளைத்து போடும் வேலையை முன்பே செய்து விட்டது. தேர்தல் கமிஷனரை பரிந்துரைக்கும் குழுவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பதிலாக ஒன்றிய அமைச்சர் ஒருவரை சேர்க்க வகை செய்தது. இது ஜனநாயகக் கொலையின் தொடக்கம். மகாராஷ்டிராத்தில் 2019 முதல் 2024 வரை ஐந்து ஆண்டுகளில் 31 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்றால் 2024 முதல் ஐந்து மாதங்களில் 41 லட்சம் புதிய வாக்காளர்களை சேர்த்துள்ளனர். இந்த மாயம் எப்படி நடந்தது என்று ராகுல் காந்தி கேட்கிறார். இவ்வாறு வாக்காளர் அதிகரிக்கப்பட்ட 50 தொகுதிகளில் 47 தொகுதிகளில் பாரதிய ஜனதா கூட்டணி வெற்றியை ஈட்டியது. மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி குறைவான வாக்குகள் பெற்ற 85 சட்டசபை தொகுதியைச் சேர்ந்த 12,000 பூத்துகளில் அதிக வாக்காளர்கள் வந்துள்ளனர். இது எப்படி நடந்தது?

வாக்காளர் பட்டியலை டிஜிட்டலாக வெளியிடுங்கள் என்று ராகுல் காந்தி கேட்டார். அதோடு மாலை 5 மணிக்கு மேல் வாக்குச்சாவடிகளில் கூடுதல் வாக்காளர்கள் வந்தார்கள் என்பதற்கான வீடியோ ஆதாரத்தை சிசிடிவி பதிவுகளை வெளியிட வேண்டும் என்று ராகுல் கேட்டார். அந்த பதிவுகளை 45 நாட்கள் தான் வைத்திருப்போம் அதன்பின்பு அழித்து விடுவோம் என்று தேர்தல் கமிஷன் பதில் கூறியுள்ளது. இது குறித்து ராகுல் காந்தி நேரில் சந்தித்து தேர்தல் கமிஷனிடம் விளக்கம் பெற்றுக் கொள்ளலாம் என்று கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்கள். பாரதிய ஜனதா கட்சியின் உத்தரவின் பேரில் எல்லா வகையான அழிச்சாட்டியத்தையும் தேர்தல் கமிஷன் செய்கிறது.

இச்சூழலில் பீகாரில் நடக்கும் இந்தத் தீவிர வாக்காளர் சீர்திருத்தம் என்பது பீகாருக்கு மட்டுமானதல்ல. 2026 இல் மேற்கு வங்காளத்தில் சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. அங்கும் இதேபோன்ற நடைமுறையை கொண்டு வருவார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் முதல்வர் மம்தா பானர்ஜி தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் பங்களாதேஷ் உள்ளிட்ட இடங்களில் இருந்து வாக்காளர்கள் ஊடுருவி விட்டார்கள் என்று மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சி செய்த காலத்தில் புகார் சொல்ல ஆரம்பித்தவரே மம்தா பானர்ஜிதான். பெருமளவில் வாக்காளர்களை நீக்கிவிட்டு மேற்கு வங்கத்தில் ஆட்சியை பிடிப்பதுதான் பாரதிய ஜனதா கட்சியின் நோக்கம். பீகார் வாக்காளர் சீர்திருத்த பிரச்சனையை நாடாளுமன்றத்தில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. நாடாளுமன்றம் முன்பு போராட்டமும் நடத்தி உள்ளன. இந்தப் பிரச்சனை நீதிமன்றத்திற்கும் சென்று உள்ளது. நாங்கள் கேட்கும் ஆவணங்களை தராதவர்களை நாங்கள் குடிமகன் இல்லை என்று சொல்ல முன்வரவில்லை. ஆனால் வாக்காளர்கள் இந்த நாட்டின் குடிமக்களாக இருக்க வேண்டியது அவசியம் என்று சொல்லி உள்ளது.

18 வயது என்பது வாக்கு செலுத்துவதற்கான வயது. அதை பரிசீலித்து வாக்காளர் ஆக்க சட்டப் பிரிவு 326 வலியுறுத்துகிறது . ஒருவர் இறந்து விட்டார் எனில் அவர் பெயரை நீக்குவதும் போன்ற பணிகளைத்தான் தேர்தல் கமிஷன் இதுவரை செய்து வந்தது. ஆனால் தற்போது புதிய நடைமுறையாக ஒரு வாக்காளரை நான் ஒரு இந்திய குடிமகன்தான் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷன் கேட்கிறது. குடிமகன் யார் என்பது பற்றிய முடிவை உள்துறை அமைச்சகம்தான் செய்ய வேண்டும். இப்போது 20 ஆண்டுகளுக்கு பின் வாக்காளரை நிரூபிக்கச் சொல்லுவார்கள் என்றால் இடைக்காலத்தில் நடந்த தேர்தல்களில் அவர்கள் வாக்களித்து விட்டார்களே.. அதை என்ன செய்வது? ஒருவரை காரணம் இன்றி வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க முடியாது. நீக்கும் முன்பு விளக்கம் தருவதற்கு உரிய வாய்ப்பளிக்க வேண்டும் என்று விதி 21 ஏ தெரிவிக்கிறது. ஆனால் எந்த விதியையும் மதிக்க பாரதிய ஜனதா கட்சி முன் வருவதில்லை. நாடு முழுவதும் கூட்டாக எழுந்து நின்று மக்கள் சமூகம் போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலம்தான் தொடரும் ஜனநாயகக் கொலையை தடுக்க முடியும்.

●

---

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.மோகன்ராஜன்

# வழிபாட்டு அரசியலும், அரசியல் வழிபாடும்!



பகுதி–1

வழிபாடு இயற்கையையும், தன்னைச் சுற்றியதாகவும் இருந்தது. பயத்திலிருந்தே கடவுள்கள் தோற்றம் பெற்றதாக மானிடவியலாளர்கள் எழுதுகிறார்கள். இடி, மின்னல் போன்ற இயற்கை சீற்றங்களினால் ஏற்பட்ட அச்ச உணர்வே கடவுளை தோற்றுவித்தது. எனினும் தனது பாதுகாப்பிற்கு இயற்கையில் அமைந்த குகைகளையும், பாறை இடுக்குகளையே நம்பினான் மனிதன். இயற்கை சீற்றத்திலிருந்து இயற்கை மட்டுமே காப்பாற்ற முடியும் என்பதை அவன் அறிந்து கொண்டபோது அந்த இயற்கை வடிவங்களை வழிபடத் தொடங்கினான். மண்ணும், மரமும், மலையும், மடுவும், அவனது வழிபாட்டு வடிவங்களாகவும், இடங்களாகவும் தோற்றம் பெற்றன.

இயற்கையோடு இணைந்தும் முரண்பட்டும் அவன் தனது இருப்பை தக்க வைக்க முயன்றான். புவி பரப்பெங்கும் அலைவுற்ற அவன் நிலையான தரிப்பிடம், நிலையான வாழ்வு. வேளாண் உற்பத்தி முறை என்பன அவனை வரலாற்றுக்கு முன் பின் என பிரித்தது. வரலாற்றை அவனும், வரலாறு அவனையும் எழுதத் தொடங்கிற்று. நிலவியல் குழுவாக்கியது. குழுக்கள் இனங்களாகின. இருத்தலுக்கானப் போராட்டம் புதிய புதிய தேவைகளை உருவாக்கிற்று. கைகளின் நீட்சியாக கருவிகளைக் கண்டறிந்தான். உலோகக் கருவிகள், சக்கரங்கள் என மனிதனின் இருப்பை சுழற்சி முறையாக்கியது. உற்பதி முறை உபரியைக் கொண்டுவர உபரி இனக்குழுவிற்கு அரசனைக் கொண்டுவருகிறது. இனக்குழு அரசனைக் கட்டுப்படுத்தியது போக அரசன் மக்களைக் கட்டுப்படுத்த தொடங்கிய காலத்தில் அரசதிகாரம் தோன்றுகிறது. இரண்டு இனக்குழுக்களின் அதிகாரங்கள் மோதத் தொடங்குகின்றன. மனிதகுல வளர்ச்சியின் பொதுவான வரலாறு.

மனிதனுக்கு முன்பாக சில இலட்சம் ஆண்டுகள் முன்புவரை இந்த புவியை டைனோசர்கள் ஆண்டன. டைனோசர்கள் பேசுவதாக இருந்தால் தம்மை கடவுள் உருவாக்கினாரா இல்லையா என்பதை சொல்லியிருக்கக்கூடும். அல்லது அவை தமது அதிகாரத்திற்காக உபரியை தக்கவைத்துக் கொள்வதற்கான போராட்டத்தில் ஒரு மூலதனக் கடவுளை அவை உருவாக்கியிருக்கக் கூடும். இரண்டும் நிகழவில்லை. ஒரு அறிஞர், சிந்திப்பதால் நான் மனிதனாக இருக்கிறேன் என்றார். டைனோசர்கள் சிந்திக்க முடியவில்லை. மனிதன் சிந்தித்தான். சிந்திப்பும் ஒரு கருவியாகிற்று. அந்தக் கருவி அதிகாரம், அரசியல், அடக்குமுறைகளுக்கான ஆயுதமாகிற்று. இனக்குழுக்களை பிரிப்பது பிற இனக்குழுக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது தொடங்கி நிலங்களுக்கு எல்லைகளை எழுதுவது அதை மீறுவது, மாற்றி எழுதுவது அவற்றிற்காக போர் செய்வது என மனிதன் எல்லைக் கோடுகளை வரலாறு நெடுக குருதியால் எழுதினான். வரலாறு மனித குருதிகளால் எழுதப்பட்டது. மூலதனத்தை அவன் ஆட்சி செய்தது போக மூலதனம் அவனை ஆட்சி செய்யத் தொடங்கிற்று.

ஆதிக்கடவுள் அச்சத்தையும், நவீன கடவுள் மூலதன அதிகாரத்தையும் கொண்டு தோன்றியது. இனங்களின் கடவுள்கள், மொழிகள், இனங்கள், பண்பாடுகள் அதிகாரங்களாக மோதிக் கொள்ளத் தொடங்கின. வால்காவிலிருந்து பிழைப்பிற்காக இமயமலையின் கைபர்- போலன் கணவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக ஆரியர்கள் ஏறக்குறைய கி.மு. ஆறாயிரம் ஆண்டு தொடக்கத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் நுழைகின்றனர். இங்கிருக்கும் நாகரிகம் முதிர்ந்த திராவிட இனத்தினருடன் இணங்கியும், பிணங்கியும் தலைமையைக் கைப்பற்றுகின்றனர். திராவிடர்-ஆரியர் மரபார்ந்த, உள்ளார்ந்த போர் காலம் காலமாக துவங்குகிறது. இது கடவுள், கலை, கலாச்சாரம், மதம், அதிகாரம், போர், ஆக்கிரமிப்பு என விரிகிறது. இந்திய வரலாறு என்பது ஆரியர்-திராவிட போர் என்பதாகிறது.

மேம்பட்ட திராவிட கலாச்சார நகர நாகரிகமாக இருந்த சிந்து வெளி ஆரியர்களால் அழித்து எழுதப்படுகிறது. திராவிட இன, மொழி, பண்பாட்டு எச்சங்களின்மீது தொடர்ந்து தனது அழித்தொழிப்பை எஞ்சிய ஆரிய இனக்கலப்பின் வழித் தோன்றல்கள் முன்னெடுக்கத் தொடங்கினர். இனவரைவியலாளர்கள் இன்றைக்கு தூய ஆரிய-திராவிட இனங்கள் இல்லை என்கிறார்கள். கடவுள், மதம், கலை, கலாச்சாரம், எல்லாம் கலப்புகளே. ஆரிய-திராவிட நிற வேறுபாட்டை முன்வைத்த ஆரிய நிற மேலாண்மை கலப்பிற்குள் கரைந்து போக மேலாண்மைக்கான அரசியலை அவர்கள் நிற பாகுபாட்டை வர்ண வேற்றுமைகளை சாதியாக, தொழிலாக, கலை, கலாச்சாரமாகப் பிரிக்கிறார்கள். நான்கு நிறங்களாக மனிதர்களைப் பிரிக்கிறார்கள். வரலாற்றில் போரின் வழி வெற்றிக் கொள்ள இயலாத திராவிடர்களை அவர்கள் சமூக அரசியல் வழியில் அடிமைப்படுத்துகிறார்கள். ஆரிய பாடல் தொகுப்புக்களான ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் பாகுபாட்டைக் கொண்டிருக்கவில்லை. அவை வெறும் கடவுள் வணக்கங்களாகவும், ஆரியர்களின் தேசிய பாணமான சுர, சோம பாணத்தின் பெருமை பேசும் துதிகளாகவும், யாகத் தீயின் நன்மைகள் குறித்துப் பேசுவதாகவுமே முடிந்தன. யாகம் வழி அவ்வுலகை கற்பிக்க முயன்ற ஆரியர்களை திராவிடர் யாதொருவரும் நம்பவில்லை. அதற்கு காரணம் இருந்தது. திராவிடர்கள் இவ்வுலக கோட்பாட்டாளர்களாகவும், ஆரியர்கள் அவ்வுலக கோட்பாட்டாளர்களாகவும் இருந்தனர். அவர்கள் மூளையை பயன்படுத்துபவர்களாகவும், இவர்கள் உடலை பயன்படுத்துபவர்களாகவும் இருந்தார்கள். மார்க்சிய மொழியில் சொன்னால் ஆரியர் கருத்து முதல் வாதியாகவும், திராவிடர் பொருள் முதல்வாதியாகவும் இருந்தனர். இந்திய நில பரப்பு எங்கும் இதன் துல்லியமான வேறுபாட்டை பார்க்க முடியும்.

மூளை மனித உடலை இயக்குவது போல ஆரிய மூளை திராவிட உடலை இயக்கும் வழிமுறைகளை யோசித்து கண்டறிகிறது. திராவிடர் உடலாகவும், ஆரியர் மூளையாகவும் சமூக இயங்கியல் அரசியல் நிறுவப்படுகிறது. அதன்படி ஆரியர்கள் ரிக் வேதத்தை தூசு தட்டுகிறார்கள். பொழுது போகாமல் சுர பாணத்தை அருந்திய ஆரிய பார்ப்பனர்கள் அதில் உள்ள புருக்ச சூத்திரத்தை உயிர் புதிர்கள் என்று சொல்லி தமது மேலாண்மைக்கான அரசியலை கட்டமைக்கிறார்கள். அதில்தான் நால்வருண கோட்பாடு, நிற வேறுபாடு மற்றும் உடல் உறுப்புகளிலிருந்து தோன்றும் சாதிகளையும் கொண்டிருக்கிறது. இவை எல்லாம் கி.மு. முதலாண்டிலிருந்து தொடங்குகின்றன.

தொடக்கத்தில் சோமன், இந்திரன், வாயு, வருணன் என்பவர்களே ஆரியக் கடவுள்கள். ஆரிய மன்னர்கள் இந்திரன் என்றே அழைக்கப்பட்டனர். ஆரிய இனக் கலப்பை தடுப்பதற்கு அவர்கள் பிறகு பிரம்மனை படைக்கின்றனர். பிரம்மனின் உடல் பாகங்களிலிருந்து சாதிக்குரியவர்கள் பிறக்கிறார்கள். தலையில் பிராமணன் அது அறிவை குறிக்கிறது. தோளில் சத்திரியன் அது புஜபலத்தை வீரத்தைக் குறிக்கிறது. வயிற்றில் வைசியன் அது வணிகனைக் குறிக்கிறது. இறுதியாக பாதத்தில் சூத்திரன் பிறக்கிறான். ஒரு உடல் போல நிலம் இயங்குவதற்கான உளவியல் சமூக அரசியலை அவர்கள் வடிவமைக்கிறார்கள். திராவிட இன மக்களுடன் கலந்துறவாட வேண்டிய நிலை ஏற்பாட்டதும் போரின் முக்கியத்துவத்தைக் குறைத்து கொண்டு எஞ்சியிருந்த வெகு பிந்தய சிந்து வெளி மக்களின் வழிபாட்டுக் கடவுள்களான சிவன் மற்றும் சக்தியை ஏற்றுக் கொண்டதன் வழி ஒருவாறு திராவிடருடன் இணக்கப் போக்கை உருவாக்கிக் கொள்கின்றனர். தொடக்க கால சிந்துவெளி மக்களிடம் கடவுள்கள் இல்லை. அரசன் இல்லை. மக்கள் தம்மை தாமே ஆண்டு கொண்டனர். தலைமையை சமூக கூட்டு மனமே இயக்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேம்பட்ட திராவிட கலாச்சார நகர நாகரிகமாக இருந்த சிந்து வெளி ஆரியர்களால் அழித்து எழுதப்படுகிறது. திராவிட இன, மொழி, பண்பாட்டு எச்சங்களின்மீது தொடர்ந்து தனது அழித்தொழிப்பை எஞ்சிய ஆரிய இனக்கலப்பின் வழித் தோன்றல்கள் முன்னெடுக்கத் தொடங்கினர். இனவரைவியலாளர்கள் இன்றைக்கு தூய ஆரிய–திராவிட இனங்கள் இல்லை என்கிறார்கள். கடவுள், மதம், கலை, கலாச்சாரம், எல்லாம் கலப்புகளே.**

அந்த மனதை தமது மூட உளவியல் கருத்துக்களாலும் வேள்விகளாலும் வென்று கைப்பற்றுகின்றனர் ஆரியர்.

வெள்ளை நிறமுடைய ஆரியர் இந்திய துணைக் கண்டத்திலிருந்த மனிதர்களை நிறமாகப் பிரிக்கின்றனர். தொடக்கத்தில் பிராமணர், சத்திரியர், வணிகர் என்பவர்கள் ஆரியர்களாகவே இருக்கிறார்கள் கறுப்பு நிறமுடையவர்களை அசுரர் அல்லது தாசர் அல்லதுதிராவிடர்,சூத்திரர் என்றழைக்கின்றனர். வரலாற்றில் வெற்றி பெற்றவர் எழுதுவதே வரலாறு. சொல்வதே வேதம். தோற்கடிக்கப்பட்ட திராவிடர் பெருங்கூட்டம். அதை சிறுகூட்டமான ஆரியர் வாளால் வெகுகாலம் அடக்கி வைக்க முடியாது என்றே வர்ண பாகுபாட்டையும், சாதி பாகுபாட்டையும், கடவுளையும், விதிகளையும், வினைப்பயனையும் ஒரு ஆயுதமாக பயன்படுத்தி உளவியல் போரில் நிரந்தரமாக வெல்கின்றனர். பெருங்கூட்டத்தைத் தொழில் பிரிவினைகளுக்கு அப்பால் சாதிப் பிரிவினையாக்கி அவை ஒன்றுடன் ஒன்று கலவாமல் வரலாறெங்கும் கற்பிதங்களை உருவாக்கி வைக்கின்றனர். அதிகாரத்தைக் கொண்டு, சாதி சடங்குகளைக் கொண்டு சமூக, அரசியல் சட்டங்களை உருவாக்குகின்றனர். இந்துக்கள் எந்த ஒரு காலத்திலும் தமக்குள் ஒற்றுமையை உணராமல் இருக்கவும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை பூசல் கொள்ளவும் இந்துமத ஏற்பாட்டில் சாதி முக்கிய பங்குவகிப்பதாக அம்பேத்கர் குறிப்பிடுவது இதைத்தான்.

குப்தர் காலத்தில் எழுதப்பட்ட புராணம் ஒன்றின் படி சாதியின் நிறங்கள் இப்படி பிரிக்கப்படுகின்றன. பார்ப்பனர் வெள்ளை, சத்திரியர் சிகப்பு, வைசியர் மஞ்சள், சூத்திரர் கறுப்பு(வருண சாதி உருவாக்கம்-கு.வெ.கி. ஆசான்)

வராகிமிரர் வருண நீதியில்(கி.பி.5) குடியிருப்பு குறித்து எழுதுகிறார். பார்ப்பனர் வீட்டில் 5 அறைகளும், சத்திரியன் வீடு கட்டினால், நான்கு அறைகளும், வைசியன் 3 அறைகளும் கொண்டிருக்க வேண்டும். சூத்திரனுக்கு இரண்டு அறை வைத்த வீடு மட்டுமே கட்டிக்கொள்ள அனுமதி. இது அரசனிடம் செல்லும் போது சட்டமாகவும் ஆகிவிடும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மலபாரில் தீண்டபடாதவர்கள் ஒரு மாடிக்கு அதிகமாக வைத்துக் கட்டக்கூடாது என்ற சட்டம் இருந்ததாகவும் அவர்களில் இறந்தவர்களை எரிக்கவும் அனுமதியில்லை என்பதை அம்பேத்கர் எழுதுகிறார்(அம்பேத்கர் நூல் தொகுப்பு -25,பக்-78) அண்மை காலத்தில் உத்திரபிரதேசத்தில் இஸ்லாமியர் வீடுகள் இடிக்கப்படுவதை அதன் தொடர்ச்சியாகக் கொள்ளலாம். சில இடங்களில் சாத்திரத்தின் படி பக்கத்து வீட்டு கூறை தாழ்ந்து இருக்க வேண்டும் என்று சொல்வதை பார்க்கலாம்.

சுரபாணத்தை குடிப்பவர்கள், குடிக்காதவர்கள் என்ற இரு பிரிவில் சுரபாணத்தை தொடாதவர்களை ஆரியர், அசுரர் என்றனர். அது திராவிடர்களை குறித்தது. குடியும், கும்மாளமும், முறையற்ற வாழ்வும் அவ்வுல கனவும், கற்பனையுமான சுரபாண ஆரியர் தேசிய வாழ்வு முறை. ஆரிய புராணங்கள் எங்கும் சுரபாணத்திற்கு எதிரானவர் அசுரர் ஆகினர். அந்த அசுரர்களை தொடர்ந்து ஆரியர் யுத்த முனைகளில் எல்லாம் தோற்கடித்ததை வரலாறாகவும், பேரிலக்கியங்களாகவும் ஆக்கினர். இராமாயணம் திராவிடரை அசுரரை–அசுர பாணம் அருந்தாதவரை அழித்த கதையே. குடி குடிக்காதவர் குடியை அழித்த கதையே. ஆரியர் வென்றதை புகழ்ந்துரைக்கவும் திராவிடரை இழிவுபடுத்தவும் எழுந்த கதையே.

உபநிசத்துகள் என்று சொல்லப்பட்டவை பார்ப்பனர்களின் மெய்யியல். அவை அவ்வுலக கோட்பாடுகளை வரைகின்றன. பிறப்பு கர்மாவினால் அமைகிறது என்றும். பிறப்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு தாழ்வை உறுதிபடுத்துகிறது என்றும். ஆன்மா, மறுபிறப்பு, வினைப்பயன் என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு அந்த மெய்யியல் அரசியல் புனையப்படுகிறது. பிராமணர், வைசியர், சத்திரியர் போன்றோர் சிறப்பான பிறவிகளை அடைவார்கள். பிறர் தாழ்ந்த குலமாகவும், நாய், பன்றி, போன்றவையாகவும் பிறப்பார்கள் என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறுகிறது. நம்பிக்கையை மூலதனமாகக் கொண்ட ஆரியரின் மெய்யியல் அரசியலானது இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் தமது மேலாண்மையின் பொருட்டு புராணங்களாகவும், இதிகாசங்களாகவும், போர்களாகவும், புரட்டுக்களாகவும் மதங்களாகவும் பரப்பப்படுகிறது. போதாததற்கு அவை சமண, பவுத்த நெறிகளையும் உள்வாங்கிக் கொள்கிறது. உலகெங்கும் கலைகள், இலக்கியங்கள் மனித மேன்மைக்கானவையாக இருக்க, ஒற்றுமைக்கானவையாக இருக்க, இந்தியாவில் அவை மனிதர்களை பிளப்பவையாக, இழிவுபடுத்துபவையாக பிறப்பு சாதி அடிப்படையில் அமைவதாக நிரந்தர அடிமை சாசனத்தை வகுப்பவையாக இருக்கின்றன.

இராமன் பார்ப்பனர்களின் அடிமை. ஆரிய இனக்கலப்பினன். கறுப்பன். இராமனின் வரலாற்றை எழுதிய வால்மீகியும் ஆரியன் அல்ல. கம்பராமாயணத்தை எழுதிய கம்பரும் ஆரியன் அல்ல. யாகத்தை ஒரு எத்து வேலை என்பதை அறிந்து அதை தடுக்க முற்பட்ட தடாகையை கொன்று பார்ப்பனரை காப்பாற்றியதால் சத்திரிய தர்மம் என்று சொல்லப்பட்ட பார்ப்பனரைக் காப்பாற்றும் வேலையை செய்ததால் ராமன் பார்ப்பனரின் தெய்வத்துள் வைக்கப்படுகிறான். இங்கு வ்ள்ளுவனின் தெய்வம் வேறு. தெய்வத்துள் வைக்கப்படும் அறமும் வேறு. இராமாயணம் என்பது திராவிட எதிர்ப்பு அரசியலின் கதையாடல் என்றே பெரியார் சுட்டுகிறார். பார்ப்பன பண்பாட்டுக்கு அதன் அரசியலுக்கு எதிரான ஆதிதிராவிடர் மற்றும் இஸ்லாமியரை எதிர்ப்பதால் குஜராத்தில் அரசியல் கொலைகளை நிகழ்த்திய மோடியை நவீன பார்ப்பனர் நவீன இந்திரனாக - நவீன அரசனாக, நவீன யுக இராமனாக்கியுள்ளதை புரிந்து கொள்ள முடியும்.

யாகங்களை, வேள்விகளை அதன் நம்பிக்கை மாய்மாலங்களை சமகால திராவிடர்களும், சமணர்களும், பவுத்தர்களும் எதிர்க்கிறார்கள். பிறப்பாலான பாகுபாட்டையும், ஏற்ற தாழ்வையும் மகாவீரரும், கவுதம புத்தரும் ஏற்கவில்லை. யாகம், வர்ண பாகுபாடு, கர்மவினை, சாதி முறைமை போன்றவற்றை எதிர்த்து பார்ப்பனர்களை வாதங்களில் வெற்றிக் கொள்கின்றனர். இதனால் ஆரியரின் யாக, வேள்வி கட்டுக்கதைகளும், புரட்டுக்களும் செல்வாக்கிழக்கின்றன. இது குறித்து அம்பேத்கரின் தம்மபதம் பேசுகிறது. புத்தர், பார்ப்பனர்களின் தியான, யோக முறைகளை பின்பற்றிப் பார்த்துவிட்டு அவை எல்லாம் புரட்டு என்பதை உணர்ந்த பின்னரே அவருக்கு உலக அறிவு கைகூடிற்று.

மந்தையோடு மந்தையாக இந்தியாவிற்குள் உள்நுழைந்த ஆரியர், மிகுதியாக வளர்ந்த பசு, குதிரை மந்தைக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முதலில் யாகங்களில் பசுக்களையும், தமது குதிரைகளையும் பலியிட்டனர். முடிந்தவரை பசுக்களை பலியிட்டு அவற்றை உண்ணவும் செய்தனர். இந்திய துணைக் கண்டத்தில் குதிரைகள் எங்கும் கிடையாது ஆரியர்களே இந்த நிலப்பகுதிக்கு மேய்ச்சலை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் கொண்டு வருகின்றனர். அவர்களது வருகைக்கு முந்தய சிந்துவெளி நாகரிகத்தில் ஒரு குதிரையின் எலும்புத்தானும் கிடைக்கவில்லை என்பதால் சிந்து வெளி நாகரிகம் தம்முடையதில்லை என்றமிகுவருத்தம்இன்றைய பார்ப்பனர்களிடம் வரை நீண்ட மன அழுத்தமாக இருந்துவருகிறது. வந்தேறி என்ற தழும்பு அவர்களை தூங்கவிடாமல் செய்கிறது. அவ்வப்போது சிந்து வெளி தொடர்பான அகழ்வுகளில் அதோ குதிரை எலும்பு கிடைத்துவிட்டது. இதோ குதிரை சிலை என்று புரளியை கிளப்பியவாறுள்ளனர். சிந்து வெளியில் கிடைத்த நடன மங்கைக்கு நிறமூட்டி சரஸ்வதி என்று பாஜக அரசு சொல்ல முயன்றது. சிந்து வெளியின் எழுத்து முத்திரைகள் தமிழிக்கு முந்தய கீறல் வடிவம் என்பதை ஆர். பாலகிருஷ்ணனின் தமது ஆய்வில் நிறுவியிருக்கிறார். ஆனால் அவை சமஸ்கிருத எழுத்தின் தொடக்க நிலை என்று சொல்வதற்கு அவர்கள் வழக்கம்போல பல கதையாடல்களை அவிழ்த்த படியிருக்கின்றனர்.

ஆரிய பார்ப்பனர் வந்தேறி அல்ல என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவ அவர்கள் பல கட்டுக்கதைகளை புராணமாகவும், கதையாடல்களாகவும் வளர்த்தெடுத்தனர். இந்திய துணைக் கண்டம் முழுவதும் அவர்களது உடலில் ஓடும் முப்புரி நூல்போல அவர்களுக்கேயுரிய ஒரு கலாசார, இதிகாச, புராண வைதீக, கடவுள் சாரம் ஒன்று அவர்களை இணைத்தபடிக்கும் மற்றவர்களை பிளந்தபடியும் செல்வதான வேறுபாட்டை பார்க்க முடியும். வரலற்றை தமக்கேற்றபடி திருத்துவது, அழித்து எழுதுவது. கல்வெட்டுக்களை சிதைப்பது அல்லது அதை அழித்து மீண்டும் செதுக்குவது என்பதாகவே இருக்கிறார்கள். காலத்தை, வரலாற்றை முன் சென்று திருத்துவது என்பது அவர்களது அடங்காவெறி. அதிகார மேலாண்மையை அவர்கள் எதன் பொருட்டும் விட்டுக் கொடுக்க விரும்பியதேயில்லை. அதிகாரமும் அவர்களும் வேறு வேறல்ல.

வடக்கே சிந்து சித்பவானந்த பார்ப்பனர் அசல் ஆரிய வழித்தோன்றல்களாகவும் தெற்கே திராவிட பார்ப்பனர் கலப்பினத்தினர் நகல் பார்ப்பனர் என்ற வகையிலான போக்குகளுக்கும் இடையே கர்நாடகா, ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு என பார்ப்பனர் ஆரிய சரடுகளாக இந்திய, இந்து தேசியத்தை இணைப்பவர்களாக இருக்கின்றனர். அகண்ட பாரதத்தை இணைப்பவர்களாக இருக்கிறார்கள். திராவிடர் இந்திய துணைக் கண்டத்தின் பெருபான்மையினர் என்ற மெய்மையை அவர்கள் இந்த சரடுகளை இணைப்பதன் வழி தம்மை பெரும்பான்மை என்று காட்டிக் கொள்ளும் இந்து- இந்துத்துவ தேசிய அரசியலுக்கு பயன்படுத்துகின்றனர். இதில் சரடாக பார்க்குமிடத்து பெரும்பான்மையாகத் தோன்றுவதும் மாநிலங்கள் என்று வரும்போது சிறுபான்மையினராகவும் இருப்பதால் அந்த மெய்யான குறைபாட்டைப் போக்க சூத்திரர்களை, திராவிடர்களையும் இந்து என்ற போர்வைக்குள் அடக்கி பெரும்பான்மையாக்குகின்றனர். பார்ப்பன சிறுபான்மையை இந்து பெரும்பான்மைக்குள் வைத்தே தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆங்கிலேயரிடமிருந்து அதிகாரத்தைப் பெற அந்த வழியையே அவர்கள் தெரிவு செய்தனர். அதனால்தாம் பெரியார் பார்ப்பனருக்கு அதிகாரத்தை மாற்றித்தரும் நாள் என்று இந்திய விடுதலை குறித்து குறிப்பிட்டார்.

திராவிடரின் கீழடிக்கு முன்பே ஆரிய நாகரிகம் இந்த மண்ணில் இருந்தது என்று சொல்வதற்கு அவர்கள் புவியை தோண்டிக் கொண்டே இருக்கின்றனர். புவியின் கீழடியை திருத்த முயன்று கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் மண் என்று சொல்வதற்கு ஒரு மொழி, ஒருபிடி மண் இருந்தால்தானே மண்ணின் மைந்தர்கள் என்று சொல்வதற்கு. கீழடியின் சமகாலத்தில் ராஜஸ்தான் தீக் மாவட்டத்தில் அகழ்ந்த ஒரு இடத்தை கிமு 4,500 என்றார்கள். மகாபாரத யுகம் என்றார்கள். 75 அடி ஆழத்தில் சரஸ்வதி நதி பாய்ந்து கொண்டிருக்கிறது என்றார்கள். அதன் ஈரம், தடம் இருக்கிறது என்றார்கள். யாகசாலைகள் கிடைத்திருக்கின்றன சரி. அதன் சாம்பல்கள் கிடைத்திருக்கின்றன என்றுதான் சொல்லவில்லை.

கிருஷ்ணன், இந்திரன், சிலைகளை எதிர்பார்த்தார்கள். அகழ்வின் காலக்கணக்கில் இன்னும் பல பூஜியங்களை சேர்த்துக் கொள்ளவும் தயார். ஆனால் அறிவியல் புராணங்களை ஏற்பதில்லை. பொய்களை ஏற்பதில்லை. அவர்கள் நீந்தி விளையாடிய சரஸ்வதியை, அவர்கள் போற்றிய வாசுகி பாம்பை அவர்கள் வழிபட்ட இந்திரனை கண்டெடுக்க பெரிதும் முயன்றனர். புராணங்கள் மண்ணில் தடயங்களாக இருப்பதில்லை. ஆகவே அங்கு கண்டெடுத்த மவுரியர் கால மண் வெறும் 2000 ஆண்டுகால சரித்திரத்தின் மண் அவர்களது கற்பனையில், பேராசையில் ஒரேடியாக விழுந்து. மூடியது. அவ்வுலக கற்பனைக்கு மண்ணின் மேலும், கீழும் இடமிருப்பதில்லை. ஏனெனில் மண் என்பது இவ்வுலக கோட்பாட்டிற்கான இடம். திராவிடரின் பண்பை கருத்தியலாக அல்லது கோட்பாடாகக் கொண்டால் ஒருவேளை அதற்கான தடயங்களே கிடைக்கும். இவ்வுலக வாழ்வுமுறையை மட்டுமே கொண்ட திராவிடரின் தடயங்களே மேலடியிலும், கீழடியிலும் கிடைப்பதே அறிவியல் வழிபட்ட மெய்மையாக இருக்க முடியும். வரலாற்று இயங்கியலாக இருக்க முடியும். வரலாறு என்பது கற்பனை, கனவுகளை சேமித்து வைக்கும் இடமல்ல.

●

---

**கட்டுரையாளர் : எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.முரளி

# நீலகேசி உடைத்த சனாதனம்

தமிழ் மெய்யியல் வரலாற்றின் முக்கிய நூலாகிய நீலகேசி இலக்கிய மொழியில் எழுதப்பட்ட முழு தர்க்க நூலாகும். பேயாக இருந்து ஞானம் பெற்று, பிறகு தனது சமண குருநாதரின் வழி காட்டுதலின்படி நீலகேசி, அக்காலத்தில் தழைத்திருந்த பல மெய்யியல் கோட்பாடுகளை மக்களுக்குப் போதித்து வந்த ஆளுமைகளைச் சந்தித்து, அவர்களை வாதத்தில் தோற்கடித்து தன்னுடைய சமண மதமாகிய அருகத மதத்தை நிலைநாட்டப் புறப்படுகின்றாள். அவள் சந்தித்த சமயவாதிகளின் சமயங்களைக் கொண்டு பழந்தமிழகத்தில் தழைத்திருந்த சமயங்கள், அவற்றின் மெய்யியல் கோட்பாடுகள் பற்றி நாம் அறிய முடிகின்றது. அவள் பௌத்தம், ஆசீவகம், சாங்கியம், வைசேடிகம், வேதவியல், மற்றும் பூத வாதம் சார்ந்த அறிஞர்களுடன் வாதம் மேற்கொள்கின்றாள். ஒவ்வொரு பிரிவினரிடமும் அவரவர் கோட்பாடுகளுக்கு ஏற்ற தருக்க முறைகளை ஒட்டி விவாதித்து தோற்கடிப்பதாக இக்கதை எழுதப்பட்டுள்ளது. இந்த தருக்க விவாதங்கள் தமிழர் மெய்யியல் பரப்பில் மிகவும் முக்கியமான பங்களிப்பாகும். மேற்கூறிய பல மெய்யியல் பள்ளிகளில் அவள் வேதவாதிகளுடன் விவாதம் தொடுப்பது வெறும் தருக்க முறையில் மட்டுமின்றி, சமூக நீதிக்கான வாதமாகவும் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பானதாகும்.

நீலகேசியின் இந்தப் பகுதி இன்று தீவிரமாக விவாதிக்கப்படும் சனாதன தர்மத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கடுமையாக விமர்சனம் செய்கின்றது: இது சங்கரர் தோன்றுவதற்கு முன்பு இருந்த காலமாகும் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

நீலகேசி, வேதவாதியான பூதிகன் என்ற அந்தணரை வேத தத்துவங்கள் பற்றி விவாதம் புரிய சந்திக்கின்றாள். அவர் வேத ஆசிரியராவார். நீலகேசி மற்றும் பூதிகன் என்பன கற்பனை பாத்திரங்கள் என்பதையும் மனதில் கொள்க. காகந்தி நகரில் இருந்த அவர் பல மாணவர்களுக்கு வேதம் பயிற்றுவித்து வந்தார். மாணவர்கள் சூழ்ந்திருக்கும் சூழலில் அவர்களுக்கிடையே வாதம் தொடங்கியது.

"உங்கள் சமயத்தின் கொள்கைகள் என்ன?" என நீலகேசி பூதிகரை வினவினாள். வயோதிகராக இருந்த பூதிகன், நீலகேசியைக் கண்டு, ஆதியும் அந்தமும் இல்லா வேதங்களைப்பற்றியும், அவற்றுக்குப் பின் தோன்றிய அது சார்ந்த நூல்கள் பற்றியும் விளக்கலானார்.

**என்னை யிங்குநும் பொருளென வினவலு**
**மிவ்விருந்த**
**வன்னைதன் வரவிதே லாதியி லருமறை**
**யதுமுதலாப்**
**பின்னைவந் தனகளு மிவையெனப் பையவே**
**பெயர்த்துரைத்தான்**
**முன்னமங் கிருந்தவோர் முதுமக னவைதன்**
**முறைமையினே** - 825

வேதங்கள் எமக்கு முதன்மையான நூல். அவை காலத்தைக் கடந்தவை. அது அனாதியானது. வேதத்தை அடிப்படையாகக் கொண்டு பல வித உட்கிளைகள் உண்டாகின என்றும், இவை எல்லாமே வேதத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குபவை என்றும் விளக்கினார் பூதிகர்.

"அப்படியாயின் மீமாம்சம் என்பது கடவுள் மறுப்புக் கொண்ட நாத்திகம் தானே! ஆனால் வேத மரபைப் பின்பற்றும் நீங்கள் பல கடவுளரை வணங்கு கின்றீர்களே! உங்கள் வேதங்களின் ஒரு பகுதி நாத்திகம் அல்லவா? ஒவ்வொரு பகுதியும் ஒன்றோடு ஒன்று முரண்படவில்லையா?" என அவள் விவாதத்தைத் தொடங்கினாள். இது பூதிகரைக் கோபம் கொள்ளவைத்தது.

"நாத்திகம் அல்லது சொல்லலை யாயின் முன் நான் பயந்த சாத்திரமாவது வேதம் அன்றோ அதுதான் சுயம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரி நீயது வல்லைய லாமையின்
சொல்லுகிலாப் போத்தந்தி யோஅதன்
தீமைஎன் றான் பொங்கிப் பூதகனே". 826

"நீ ஒரு சூத்திரச்சி! உனக்கு நாத்திகம்தான் தெரியும். வேறு எதுவும் பேச உனக்கு அறிவு இல்லை. எங்கள் வேதம் யாவராலும் போற்றப்படும் பொக்கிஷம். நீ கீழ் சாதிப் பெண்ணாகையால் அதைப் படிக்க உனக்கு அனுமதி இல்லாமல் போனது. எனவே உனக்கு வேதம் பற்றி எதுவும் தெரியாது. அதைப் பற்றி குற்றம் கூற உனக்குத் தகுதி இல்லை" - என்று பூதிகர் படபடத்ததை மேற்காணும் பாடல் விளக்குகின்றது. இந்த வசைகள் சாதியப் பாகுபாடு தமிழகத்தில் அக்காலத்தில் கடைபிடிக்கப்பட்டது என்பதை மட்டுமல்ல, வேதங்களை சூத்திரர்கள் பயில்வதற்கான வாய்ப்பு மறுக்கப் பட்டதும் தெரிகின்றது. அது மட்டுமல்ல, இந்தச் சமூக பிரச்சினையை அப்போதே தம் நூலில் நூலாசிரியர் சுட்டுவதையும் கவனிக்கவேண்டும்.

இந்தத் தாக்குதலால் சற்றும் தளரவில்லை நீலகேசி.

"குற்றம் கூறுகின்றேன் பார். முடிந்தால் அக்குற்றங்களுக்கு நீர் பதில் கூறுக," - என்று உறுதியாக நின்றாள்.

"அப்படியா! நீ சரியான முறையில் குறைகளைக் கூறுவாயானால் நான் ஏற்கின்றேன்", - என்றுரைத்தார் பூதிகர்.

"உங்களின் வேதம் மனிதர்களால் செய்யப்பட்டது. பொய்கள் நிறைந்தது. தன்னைப் பயில்பவர்கள் பொருள் ஆசை கொள்வதைத் தடுக்காது. இதைப் பயில்பவர்கள் கூடாஒழுக்கம் கொள்ளவும் தடையில்லை. இவை இருளை ஒத்த மயக்கமும், தடுமாற்றமும் கொள்ளவைக்கும். அதன் விளைவாக கொலைகள் கூட செய்ய வைக்கும். உயிர்களைக் கொல்லுவதும் இங்கு ஏற்கப்படும். இப்படிப்பட்ட வேதத்தை தொடக்கமும், முடிவும் இல்லாதது என்று கூறுவது சரியல்ல"- என படபடத்த நீலகேசி மேலும் தொடரலானாள்.

"வேதத்தை யாரும் செய்யவில்லை. அது தானே உருவானது என்பது பொய். ஒருவன் ஒரு ஊரின் நடுவேயுள்ள ஒரு வீட்டினுள், ஒரு இரவில், மலம் கழித்துவிட்டு யாரும் அறியாதபடி போய்விட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை தீவிர ஆராய்ச்சிக்குட்படுத்தியும் அதை கழித்தவன் யாரென்று தெரியவில்லை என்ற காரணத்தால் அம்மலம் சுயம்புவாக தோன்றியது என்று சொல்லுவது சரியா? அப்படித்தான் உங்கள் வேதமும் தாமே தோன்றியவை என்று சொல்லுவதும் ஆகும்".

நல்ல மருத்துவ ஆய்வாளர்கள் அந்த மலத்தை ஆராய்ந்தால் என்ன சொல்லமுடியும்? அதன் நிறம் மற்றும் பிற தன்மைகளைக் கொண்டு அது நோயை உண்டாக்க வல்லது, அல்லது அப்படி அல்லாதது என்றுதான் சொல்லமுடியும். அதை விட்டு, அதைக் கழித்தவன் மேல் சாதிக்காரனா அல்லது கீழ் சாதிக்காரனா என்பதை யாராலும் கண்டு பிடிக்க முடியாது. அப்படித்தான் வேதங்களின் தன்மையைப் பற்றி வேண்டுமானால் ஆராய முடியுமே தவிர, அதைச் செய்தவன் மேல் சாதிக்காரனா அல்லது கீழ்சாதிக் காரனா என்பதை அறியவே முடியாது" - என்று மேலும் தொடர்கின்றாள்.

"மனிதர்களால் எழுதப்பட்ட பிற நூல்களில் காணப்படும் அதே ஒலி கொண்ட எழுத்துக்களால்தான் உங்கள் வேதங்களும் படைக்கப்பட்டுள்ளன. அதில் உள்ள எழுத்துக்கள் மக்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் எழுத்துக்களே! இவை தவிர வேதங்களைச் செய்தவர்கள் பெயர்கள் அந்த வேதங்களிலேயே கூறப்படுகின்றன. எனவே வேதங்கள் தாமே சுயம்புவாகத் தோன்றியவை அல்ல. மனிதர்களால் செய்யப்பட்டதே! இக்கால நூலாசிரியர்கள் எழுதுவது போலத்தான் வேதாந்தங்களும் எழுதப்பட்டுள்ளன. எனவே தொடக்கம் அறியப்படாததால் அது தொடக்கமற்றது ஆகாது;" - என வாதிடத் தொடங்கினாள்.

"இது மட்டுமா, வேதங்கள் முரண்பாடுகளின் மூட்டை அல்லவா? ஒருபுறம் கொலை என்பது தீவினை என்று கூறும். மறுபுறம் செல்வம் சேர்க்க வேள்விகளில் உயிர்பலியை ஆதரிக்கும். வேள்விகளிலே ஏராளமான உயிரினங்கள் கொல்லப்படுகின்றன. காமம் தீமையானது. அதைக் கட்டுப்படுத்தி இல்லாமல் ஆக்க பல வழிகளை முன்மொழியும். அதே சமயம் காமத்தின் மூலம் எப்படி வீடு பேறு அடைவது என்பது பற்றியும் சொல்லும். பிற சமயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பன்னர்கள் கூறுபவை எல்லாம் தீமையானவை, தவறானவை என்று முழங்கும். அதே சமயம் பிற மத சித்தாந்தங்கள் எல்லாம் எங்கள் வேதத்திலே உள்ளவைதான் என முரண்பட ஆர்ப்பரிக்கும். மொத்தத்தில் முரண்பாடுகள் நிறைய உடையவைதான் உங்களின் வேதங்கள்" - என நீலகேசி கூறினாள்.

இந்த நூலில் பிற சமயத் தலைவர்களின் விளக்கங்கள் யாதும் அவர்கள் முழுவதாக விளக்குவதாக அமைக்கப்படவில்லை. நீலகேசியே அந்தந்த சமயங்களுடைய தத்துவங்களை முன்வைத்து விமர்சனத்தைத் தருகின்றாள் என்பதையும் கவனிக்க வேண்டியுள்ளது.

"தவப்பயன் என்பது கீழ்சாதியினருக்குக் கிட்டாது என்று ஒரு புறம் சொல்லும். மறுபுறம் இப்பிறவி கர்ம வினைகள் மறு பிறவியில் இயங்கும் எனவும் முரணாகவும் சொல்லும். பிரம்மனுடைய உடல் உறுப்புகளிலிருந்துதான் நான்கு வகுப்பினர்களும் தோன்றினர் என்றாலும் சூத்திரர் வேள்வி செய்வதற்குத் தகுதியற்றவர் என்று கூறுவதை அறிவுள்ளவர்கள் ஏற்பார்களா? தெளிவுள்ளவர்கள் இவற்றை அறிவின் மயக்க நிலை என்றே கொள்வார்கள். இப்படி முரண்பாடுகளும், மயக்கநிலை கொள்ள வைக்கும் தன்மையும் கொண்ட உங்கள் வேதங்கள் வாயிலாக மெய்ப்பொருளை எப்படி அறிவது? எனவே அவை மெய் நூல் என்று கொள்ளமுடியாது. மேலும் இந்தப் பொய்ப் புனித நூல்களை ஓதி பொருள் சம்பாதிப்பவர்களும் உள்ளனரே! உங்கள் ஆட்களுக்கு இந்த ஊதியங்கள் இவ்வுலக வாழ்க்கைக்கு அவசியம். ஆகையால் அவர்கள் வேதங்களைக் காட்டி சம்பாதிப்பது உங்களால் கண்டிக்கப்படுவதும் இல்லை", அவள் குற்றச்சாட்டுகளை அடுக்கியவள் அடுத்த அஸ்திரத்தை எய்தினாள்.

**"கொல்வது தீதெனப் பொருவழி வேள்வியிற்**
**கொலப்படுவ**
**வெல்லையொன்றிலதென்ப லிணைவிழைச்**
**சொழிகென்ப வம்முகத்தாற் செல்கதி யுளதென்ப**
**தீர்த்திக நெறியென்றுந் தீயவென்று**
**பல்லவர் துணிவுமெம் வேதத்தி னுளவெனப்**
**பயின்றுரைப்ப" - 833**

என்ற எடுத்துக்காட்டை வைத்து மேலும் தொடர்ந்தாள்.

"நீங்கள் பிற உயிரினங்களின் மீது கருணையற்றவராக இருக்கின்றீர்கள். பசுக்களையும், குதிரைகளையும், புலி, நாய் என கணக்கற்ற பிற உயிரினங்களை ருத்திரருக்கும், பிதுரருக்கும், இன்னும் பல தேவர்களுக்கும் படையலிடுவதாகச் சொல்லி கொல்லுகின்றீர்கள். அவற்றை நீங்களே தேவர்களின் பெயரை சொல்லித் தின்னவும் செய்கின்றீர்கள். ஆனால் வானத்து தேவர்களுக்கு ஊட்டுவது போலவும் நடிக்கின்றீர்கள். எனவே இந்த தீய செயலுக்குப் பொறுப்பு நீங்கள்தானே தவிர அந்தத் தேவர்கள் அல்ல. மேலும் அப்படி உயிரினங்களைத் தீயிலிட்டு பலி கொடுப்பதால் உங்களுக்கு அவை நற்பயனை அளிக்கும் வினையாகத்தான் இருக்கும் என்று சொன்னால், கொலை செய்யும் பிறருக்கும் அவரவர் செய்த கொலைகளின் வினைப்பயன்கள் அவரவர்களுக்குக் கிட்டும். கொல்வது தீவினைதானே தவிர நல்வினை என கொள்வது தவறு", என தான் சார்ந்துள்ள சமண சமயத்தின் உயிர் கொல்லாமையை வலியுறுத்தினாள்.

"நாம் செய்யும் நல்வினைப் பயன்கள் வானுலகத்தே வாழும் வானவர்களுக்கேச் சென்று சேரும் என்பது உங்கள் கொள்கை. இது அபத்தமானது. வீடு பேறு பெற்று மறைந்த சான்றோர்களை நினைந்து இங்கு நாம் செய்யும் நல்வினைகளின் பயன்கள், செய்பவருக்குக் கிட்டாமல், வீடுபேறு பெற்று சென்றுவிட்டவர்களுக்கேச் சேரும் என்பது அர்த்த மற்றதாகும். எப்படி தேவர்களைத் தீவினை சேராதோ அப்படி பிறரால் கொல்லப்பட்ட ஊனைத் தின்பவனுக்கும் அதைக்கொன்ற பாவம் அணுகாது. மாறாக கொன்றவனுக்கே அது சேரும் என்பதும் ஏற்புடையது அல்ல. உண்பவனுக்காகத்தான் உயிர்க்கொலை நடக்கின்றது. ஆகையால் அதை உண்பவனுக்கும் பாவத்தில் பெரும்பங்கு உண்டு. ஒருவேளை நீங்கள் கொன்று படைக்கும் மாமிசத்தை தேவர்கள் உண்டால் அவர்களுக்கும் அத்தீவினை உண்டு. தேவர்களுக்கு படைப்பதற்காக உயிரினங்களைக் கொல்வதைத் தடுக்க இயலாத தேவர்கள் எப்படி புனிதர்களாவார்கள்? மாமிசத்தோடு சோற்றையும் கலந்து உண்ணும் வயிறு படைத்த அற்பப் பிறவிகளா அவர்கள்?." - என ஆணித்தரமாக கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈகளு நாய்களுங் கொன்ற வரீவகண் டின்புறலிற்
றீயவை யேசெய்யுந் தேவரத் தீவினை
தீர்க்கிற்பவோ
நோய்களும் பேய்களு மொழிக்குவ மெனினவை
நுங்களுக்கு
மாய்விடி னுணரினஃ தாம்வினையகற்றுதற்
கரியதென்றாள் 842

தேவர்கள் ஈக்களையும், நாய்களையும், பிற உயிர்களையும் கொன்று அவற்றின் இறைச்சியை உண்டு இன்புற்றால் அவர்களும் தீவினையாளரே. இனி நீங்கள் அவரை வழிபட்டு பிணிகளையும், பேய்களையும் அகற்றிக் கொள்வோம் என்றால் அதன் ஊழ்வினைப் பயன் உமக்கே என்று அறிக என்றும் கூறினாள்.

"இத்தீவினையில் பங்கு பெறும் அத்தேவர்கள், தெய்வங்கள் எப்படி தங்களை வழிபடுவோரின் துயர் தீர்க்க முடியும்? வழிபடுவோரின் தீவினைகளை நீக்க இயலும்? வேத விற்பன்னராகிய பலருக்கு ஏன் நோய்கள் வருகின்றன? ஏன் அவர்கள் தங்கள் நோய்களைத் தெய்வங்களிடம் வேண்டுதலின் மூலம் தீர்த்துக் கொள்ள முடிவதில்லை? காரணம் அவையனைத்தும் ஊழ்வினையின் பலனாக வருபவை. அவற்றைப் போக்குதல் அரிது என்பதை உணர்வீராக! மேலும் நமக்கு வரும் துன்பங்களையே நம்மால் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் பிற மனிதரின் துன்பங்களைத் தீர்ப்பது என்பது கடினமான காரியம்தான். இதில் தேவர்கள் அல்லது தெய்வங்கள்கூட அவரவர் வினைப்பயனை அவரவர்களால் தீர்த்துக் கொள்ள இயலாது. எனவே தங்கள் துன்பங்களையேத் தீர்த்துக் கொள்ள இயலாத தேவர்கள் நம் துன்பங்களைத் தீர்த்து வைப்பார்கள் என கருதுவது அறியாமையே"- என விளக்கினாள். சமணத்தில் ஊழ்வினை என்பது அடிப்படையானத் தத்துவம் ஆகும். அதை அவள் இங்கு நிலைநாட்டுகின்றாள்.

நீலகேசியின் கேள்விகள் வேதங்களின் மூல தத்துவங்கள் மீது எழுப்பப்படாமல், வேதநெறிவழி வாழ்வில் கடைபிடிக்கப்படும் வாழ்க்கை முறைகள் மீதான விமர்சனங்களாக இருந்ததைக் கவனிக்க வேண்டும். அவள் மூலம் நீலகேசியின் ஆசிரியர் அந்த விவாதத்தை மேற்கொண்டமைக்கு என்ன காரணங்கள் இருக்கக்கூடும் என்று தெரியவில்லை. நீலகேசியின் ஓலைச்சுவடிகள் தொகுப்பில் 845 ஆம் செய்யுள் முதல் 851 ஆம் செய்யுள் வரை எழு செய்யுள்கள் காணப்படவில்லை என்கின்றனர். ஒருவேளை அச்செய்யுள்களில் வேத தத்துவங்கள் மீதான நீலகேசியின் தத்துவங்கள் முன்வைக்கப்பட்டிருக்கலாம். சமணம் தன்னுடைய பன்மியக் கோட்பாடான அனேகாந்த வாதம் மூலம் வேதத்தின் ஒரே பேருண்மை எனும் பிரம்மக் கோட்பாட்டை மறுக்கின்றது. அதற்கான பல விளக்கங்களும் தரப்பட்டே உள்ளன. எனவே நீலகேசியின் ஆசிரியர் இங்கு கொல்லாமை என்பதையும், சாதியப் பாகுபாடு ஒழிக்கப்படவேண்டும் என்ற சமூக நீதிக் கருத்தையுமே வலியுறுத்தும் வகையில் நீலகேசியின் விவாதத்தை முன்வைக்கின்றார் எனக் கருதலாம். நீலகேசியின் மூலம் பேசப்படும் இந்த விமரிசனங்கள் இன்றளவும் பேசுபொருளாக, விவாதப்பொருளாக இருப்பதற்குக் காரணம் சமூக அமைப்பு வர்ண தர்மத்தைக் கட்டிக் காத்து வருவதே ஆகும்.

நீலகேசியின் விளக்கங்களையும், கேள்விகளையும் கேட்ட பூதிகர் ஒரு புறம் அதிர்ந்து உட்கார்ந்து இருக்க, மறு புறம் சூழ்ந்திருந்த அவரது மாணவர்கள் அவரிடம் பேசத் தொடங்கினார்கள்.

"ஐயா! இது வரை நாங்கள் பயின்று வந்த வேதமொழிகள் எல்லாம் பொய்யுரைகள் என எங்களுக்குப் புரிந்துவிட்டது. இந்த வேதங்களால் மனிதருக்கு நன்மையுண்டாகாது. தீமைகள் உண்டாகும் என்பதும் புரிகின்றது. உங்கள் கருத்து என்ன என்பதை உண்மையாகச் சொல்லுங்கள்"- என மாணவர்கள் பூதிகரைக் கேட்டனர்.

"ஆம் நீங்கள் சொல்வது சரிதான். நீலகேசியின் கருத்துக்கள் விளக்கங்கள் ஏற்புடையவை என நான் கருதுகின்றேன்", - என நேர்மையாக தன் தோல்வியை ஒப்புக்கொண்டார் பூதிகன்.

அன்று தொடங்கிய இந்த விவாதம் இன்றும் தொடர்வது எம்மாதிரி வளர்ச்சியைக் காட்டுகின்றது?

**(இக்கட்டுரை மறந்த காவியம் நீலகேசி எனும் என் நூலிலிருந்து எடுக்கப்பட்டது)**

---

கட்டுரையாளர் : பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரை | வெ. மதியரசன்

# வள்ளுவரின் இறைக்கோட்பாடும், திராவிட இயக்கத்தாரின் உரைத்திறனும்

திருக்குறளுக்குத் தமிழ் அறிஞர்கள் பலர் உரையெழுதியுள்ளனர். இப்போது வரை திருக்குறளுக்கு உரை எழுதி வருகின்றனர். திருக்குறள் தமிழ் நீதி இலக்கிய வரிசையில் முதன்மையாகப் பார்க்கப்படுகிறது. இதனைப் பின்பற்றிப் பல அறம் சார்ந்த நூல்கள் தோன்றின. எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய கருத்தியல் வலிமை கொண்ட நூலாகத் திருக்குறள் விளங்குகிறது. பெரு வேந்தர்கள், பல குறுநில மன்னர்கள் தாங்கள் வாழும் காலத்தில் எழுதப்பட்ட நூல்களைக் கொண்டாடியுள்ளனர். சோழர் காலத்தில் சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணம், நிலதிருவிற் பாண்டியன் காலத்தில் தொல்காப்பியம் முதலிய நூல்கள் அரசாங்கம் சார்பாக அரங்கேற்றப்பட்டுக் கொண்டாடப்பட்டுள்ளன. பிற்கால குலோத்துங்க சோழன் காலத்தில் 'மநு' நூல் போற்றப்பட்டுள்ளது. ஆனால், திருக்குறளுக்கு அப்படியோர் அரங்கேற்றமோ, கொண்டாட்டமோ அரசாங்கம் சார்பாக நிகழ்ந்ததாகப் பார்க்க முடியவில்லை. திருவள்ளுவரின் குறட்பா தனது வடிவத்தாலும்,பொதுமையாலும், சாதி மற்றும் மதம் எனும் பிற்போக்கு வாதத்தை மறுதலிப்பதாலும், சமூக நடப்பியலோடு ஒத்துப்போவதாலும் காலத்தால் புறக்கணிக்க முடியாத கருத்தியல் வலிமை கொண்ட நூலாக இருந்தமையால் மக்களே கொண்டாடி வந்துள்ளனர் என்பது புலனாகிறது.

திருக்குறள், குறள் வெண்பா வடிவில் ஒரு கருத்தை வெளிப்படுத்துகிறது. அதனை வாசகர்கள் புரிந்துகொள்வது கலையாக இருக்கிறது. சமூகத்தோடு உடன்பட வேண்டிய விடயங்கள், உடன் பட முடியாத விடயங்களையும் நுட்பமாக எடுத்துரைக்கிறது. காமத்துப் பாலில் கவித்துவத்தை வெளிப்படுத்துகிறது. குறளின் மறைபொருள் தத்துவம் சார்ந்தும், லௌகீக வாழ்க்கை குறித்தும், கவிதை சார்ந்தும், உள்ளுறை கொண்டும், வேற்றுப் பொருளோடும், அணிநயத்தோடும் கூறப்பட்டிருப்பதால் உரையாசிரியர்கள் தங்களுக்கு ஏற்றவாறு புரிந்துகொண்டு உரை எழுதுகின்றனர்.

திருக்குறள் மொழி தொன்மையான தமிழ்மொழி. ஏறத்தாழ கி. மு. 3 ஆம் நூற்றாண்டுக் காலத்தைச் சார்ந்தது. இதனை படித்துப் புரிந்துகொள்ள உரையின் ஊடாகத்தான் முடியும். அதனால்தான் திருக்குறள் பெற்ற புகழினை உரையாசிரியர்களும் பெற்றனர்.

திருக்குறளுக்குப் பத்துப் பேர் உரை உள்ளது எனப் பழைய பாட்டுஒன்று கூறுகிறது.

**"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிதி பரிமே லழகர்-திருமலையர்**
**மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு**
**எல்லையுரை செய்தார் இவர்"**

உரை எழுதியவர்களில் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள் ஆகிய ஐவர் உரைகள் மட்டும் வெளிவந்துள்ளன. தருமர், தாமத்தர், நச்சர் ஆகிய மூவரின் உரைகள் சில குறட்பாக்களுக்கு மட்டும் கிடைத்துள்ளன என்று தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும், திருக்குறளுக்கு ராமானுஜ கவிராயர், திரு.வி.க., நாமக்கல் கவிஞர், சரவணபெருமாள் ஐயர், தண்டபாணி தேசிகர், அரசஞ் சண்முகனார், புலவர் குழந்தை, பாரதிதாசன்,தேவநேய பாவாணர், மு. வரதராசன், கலைஞர் மு. கருணாநிதி,கவிஞர் கண்ணதாசன் (காமத்துப் பால் மட்டும்) நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுஞ்செழியன் ஆகியோர் பிற்காலத்தில் உரை எழுதினர். இன்னும் இன்றுவரை எழுதிக்கொண்டுதான் இருக்கின்றனர். இவர்களுக்கு முன்பு பண்டிதர் அயோத்திதாசர் திருக்குறளைத் திரிக்குறள் என்னும் தலைப்பிட்டு உரை எழுதியது குறிப்பிடத்தக்கது.

கிடைத்துள்ள இந்த உரைகளில் காலத்தால் பிந்தைய பரிமேலழகர் உரை 13 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. திருக்குறள் பா வடிவத்தின் வாயிலாகவும், கருத்தியல் வளத்தாலும், அழகியல் நயத்தாலும் காலத்தால் நிலைத்து நிற்பது ஒரு புறம் இருந்தாலும் இதில் உரை முக்கியப் பங்கு வகிக்கிறது. பரிமேலழகர் உரை பாண்டித்துவம் கொண்டது. கல்வி கற்ற மேட்டிமை சமூகத்திற்குப் புரிதலைத் தரக்கூடியது. இத்தகைய மரபை உடைத்து திருக்குறளை மக்கள் அரங்கத்திற்குக் கொண்டுசென்றது திராவிட இயக்கம். வெகுசன மக்கள் இயக்கமாகத் திருக்குறளைப் பரப்பினர். நாவலர் நெடுஞ்செழியன் திருக்குறள் உரைகளை ஏன் மறு வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்பதற்கு மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை கூறிய முக்கியமான கூற்றினை மேற்கோள் காட்டுகிறார். 'வள்ளுவர் செய் திருக்குறளை மறு அற நன்கு உணர வேண்டும்' என மனோன்மணியம் கூறுகிறார். அதாவது மறு என்பதற்கு பரிமேலழகர் தம் உரையில் புகுத்திய சமய - வைதீக கற்பனைக் கருத்துகள் என விளக்கம் தருகிறார் நெடுஞ்செழியன். அத்தகைய மரு அகற்றப்படவேண்டும் என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

காங்கிரஸ் பேரியக்கத்தைத் தமிழகத்தில் வீழ்த்த மொழியையும், இலக்கியத்தையும், திரைக்கலையையும் கருவியாகப் பயன்படுத்தியதில் திருக்குறள் எனும் நீதி இலக்கியத்திற்கு முக்கியப் பங்கு உண்டு. அண்ணாவின் திரைக்கதையிலும், கலைஞர் மு.கருணாநிதியின் திரைப்பட வசனத்திலும், என்.எஸ். கிருஷ்ணன் நடிப்பிலும் திருக்குறள் இடம்பெற்றதை நாம் பார்க்க முடியும்.இதன் தாக்கத்தால் தமிழ் எழுத்தாளர்கள் பலர் நீதி சார்ந்த கதைகளைப் புதினங்களாகவும், சிறுகதைகளாகவும் எழுதினர். காங்கிரஸ் கட்சியின் வைதீகச் சார்புக்கு எதிராக அவைதீகக் கோட்பாடு கொண்ட திருக்குறளை நிறுத்தினர்.

அண்ணா அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் தமிழகப் பேருந்துகளில் ஏதேனும் ஒரு திருக்குறள் எழுதுவது கட்டாயமாக்கப்பட்டது. இன்றைக்கு சென்னை மெட்ரோ மின் தொடர்வண்டியிலும் திருக்குறள் எழுதியிருப்பதைப் பார்க்க முடியும். மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை அதிபர் கோயங்கோ அவர்கள் வேட்பாளராக நின்றபோது அவரை தி.மு.க. சார்பில் எதிர்த்து நின்றவர் திருக்குறளைத் தனது பெயருக்கு முன்னால் சிறப்புப் பெயராக இட்டுக்கொண்ட திருக்குறள் முனுசாமி ஆவார். கோயங்கோ அவர்கள் வீதிக்கு வீதி சென்று ஓட்டுக்கேட்காமல் பணக்காரத் தன்மையுடன் நடந்து கொண்டபோது திருக்குறள் முனுசாமி திருக்குறள் ஊடாகக் கதைகளைச் சொல்லி மக்கள் மனதில் இடம்பிடித்து மக்களவை உறுப்பினரானார் என்கிற கூற்று உண்டு.

வள்ளுவன் அறிவுக்குப் புகழ் வணக்கம் செய்யும்விதமாக கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஐயன் வள்ளுவனுக்குக் கன்னியாகுமரியில் 133 அடியில் சிலை. ஒவ்வோர் ஊராட்சி மன்றத்திலும் ஐயன் வள்ளுவன் பெயரில் படிப்பகம், திருவள்ளுவர் பெயரில் விருது முதலியவை ஏற்படுத்தி வெகுசன மக்களிடம் கொண்டுசென்றதில் திராவிட இயக்கத்திற்கு முக்கியப் பங்குண்டு என்பதை மறுக்க முடியாது.

வள்ளுவரின் உருவத்தையும் குறட்பாவையும் மக்கள் மத்தியில் கொண்டுசென்றது போல் குறட்பாவிற்கான உரையை பரிமேலழகருக்கு மாற்றாகப் புதிய நோக்கில் எழுதினர். வள்ளுவரின் அறத்துப்பாவில் பாயிரவியலில் அதிகாரம் ஒன்று என்பது கடவுள் வாழ்த்தாகச் சுட்டப்பட்டுள்ளது. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு என்பது வள்ளுவனின் முதற் குறளாக இருக்கிறது. இதற்கு உரை கூறிய பரிமேலழகர் எழுத்து எல்லாம் அகரம் ஆகிய முதலை உடையன. அது போல் உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடைத்து என்கிறார். தமிழ் எழுத்திற்கே அன்றி வட எழுத்திற்கும் முதன்மையாதலால், எழுத்து எல்லாம் என்றார் வள்ளுவர். அது போன்று உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க என உரை தருகிறார் பரிமேலழகர். அதாவது ஆதிபகவன் என்பது கடவுள் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுக்கு வந்தடைகிறார்.

பண்டிதர் அயோத்திதாசர் திருக்குறள் மூலபாடத்தைப் பௌத்த நோக்கில் அணுகுகிறார். முதற்குறளில் வரும் 'பகவன்' என்னும் சொல்லுக்குப் 'பகலவனாகிய புத்தர்' என்று தெளிவாகக் கூறியுள்ளார். வாலறிவன் - பாலதானத்தில் அறிவின் விருத்தி பெற்று நின்றவன், இறைவன் - வேந்தனாம் புத்தர், அறவாழி அந்தணன் - தருமச் சக்கரத்தோனாம் சாந்தரூபி என்றவாறு புத்தரை நேரடியாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். 'விசும்புளார் கோமான்' என்பதற்கு 'வானுலகோர்க்கு அரசனாக விளங்கும் புத்தபிரான்' என்று கூறுகிறார். இது உரை மரபிலிருந்து மாறுபடாத முறை என்று எழுத்தாளர் பெருமாள் முருகன் கூறுகிறார்.

மொழிஞாயிறு தேவநேயபாவாணர் ஆதிபகவன் எனும் சொல்லிற்கு பரிமேலழகர் கருத்துக்கு மாற்றாக உரை விளக்கம் கொடுக்கிறார். இறைவன், கடவுள், தேவன் என்னும் பிற சொற்கள் இருக்கவும் ஆதிபகவன் எனக் கையாண்டது அகரம் என்னும் சொல்லிற்கு எதுகை நோக்கி சொல்லப் பட்டது. மேலும், அகரம் எல்லா எழுத்துகளுக்கும் முதன்மையாகவும்,ஏனைய உயிரெழுத்துகளோடு நுண்ணியதாகக் கலந்தும், எல்லா மெய் எழுத்துகளையும் இயக்கியும் நிற்கிறது. அதுபோல இறைவன் உலகிற்கு முந்தியாகவும், உயிருக்கு உயிராகவும் உயிரற்ற பொருள்களை இயக்கியும் நிற்பவன் என்னும் உண்மை இந்த முதற்குறளில் உணர்த்தப்பெற்றது. எனவே, வள்ளுவனின் இறைக் கோட்பாட்டைப் பொருள் முதல்வாதக் கோட்பாடு என விளக்கம் தருகிறார். முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் ஆதிபகவன் என்பதைப் பருப்பொருளாகவும், நுண்பொருளாகவும் காண்கிறார். எழுத்துக்கள் எல்லாவற்றிலும் 'அ' - நுண்ணியதாக கலந்துள்ளது. (எ.து) க்+அ=க 'அ'கலவாத எழுத்தே இல்லை. எதை ஒலிக்க வாயைத் திறந்தாலும் 'அ' எவ்வளவு நுண்பொருளாக மறைந்திருக்கறதோ அதுபோல ஆதிபகவனும் மறைந்து காணப்படுகிறான் என்பது வள்ளுவர் முடிபு என கி.ஆ.பெ.வின் கருத்தாகும்.

வள்ளுவரின் கடவுள் வாழ்த்தினைப் புலவர் குழந்தை இறைநலம் என்கிறார். இறை என்பதற்கு முதன்மை நலம் என விளக்கம் தருகிறார். நாவலர் நெடுஞ்செழியன் அறிவன் சிறப்பு எனச் சுட்டுகிறார். ஆதிபகவன் என்பது அறிவை முதன்மையாக உடையவன் என்று உரைவிளக்கம் தருகிறார். வள்ளுவர் கூறும் 'மலர்மிசை ஏகினான்' என்பதற்கு அறிவாற்றலில் சிறந்து விளங்கக் கூடியவன் என்பது நாவலர் உரையாக இருக்கிறது. புலவர் குழந்தையின் கருத்தும் இதுவாக இருக்கிறது. பாவேந்தர் பாரதிதாசனும் அறிவுடைய சான்றோன் என்றும் மெய்யுணர்வுதான் நிலையான இன்ப நிலை எனவும் உரை விளக்கம் கொடுக்கிறார்.

வள்ளுவரின் கடவுள் வாழ்த்தினைக் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வழிபாடு எனப் பெயர்மாற்றம் செய்துள்ளார். தொன்மையைப் பாதுகாத்து இயம்பும் தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இல்லாதபோது வள்ளுவரும் கடவுளை மையப்படுத்தி வாழ்த்துப் பாடியதற்கு வாய்ப்பில்லை என்பது அண்ணாவின் கருத்தாகும். இதனைப் பின்பற்றி கலைஞர், வள்ளுவர் கூறும் இறைக் கோட்பாடு அறிவுதான் என்னும் முடிவுக்கு வருகிறார். அதற்கு எந்த உருவமும் இல்லை. "இருசேர் இருவினையும் சேரா இறைவன் /பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்பதற்கு கலைஞர் தரும் விளக்கம், இறைவன் என்பது ஒரு பொருளைக் குறிக்கும். அதனைப் புரிந்துகொண்டால் நன்மை தீமைகளை ஒரே அளவில் எதிர்கொள்வார்கள் என்பதை நவீன உரைத்தன்மையுடன் அணுகுகிறார். கடவுள் நம்பிக்கையைவிட ஒழுக்கம் உயர்வானது என்னும் கோணத்தில் வள்ளுவனின் "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்." எனும் குறளுக்குப் பொருள் கூறுகிறார். மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலையானதாக அமையும். ஐந்தவித்தான் என்பதை இவர் கடவுளாகப் பார்க்கவில்லை தூயவன் எனக் கூறுகிறார். ஆனால்,பரிமேலழகர் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவர் என உரை எழுதியுள்ளார்.

'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு' எனும் குறளுக்கு ஒரு பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல்லை. இதற்கு பரிமேலழகர் துன்பங்கள் மூன்று வகையாக வரும் என்கிறார். தன்னைப் பற்றி வருவன, பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப் பற்றி வருவன என்று கூறுகிறார். இதன் உட்பொருளாகத் தெய்வத்தின் திருவடிகளைச் சரணடைந்தவர்களுக்குத் துன்பம் இல்லை என உரை விளக்கம் தருகிறார்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்/ மனக்கவலை மாற்றல் அரிது." என்பதற்கு அறிஞர் மு. வரதராசன், தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நிற்கின்றவர் அல்லாமல் மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது எனக் கூறுகிறார். உரையாசிரியர்கள் சிலர் கடவுளின் திருவடிகளைத்தான் வள்ளுவர் கூறியிருக்கிறார் என் வாதிடுகின்றனர். பாவேந்தர் பாரதிதாசன் தனக்குவமை இல்லாதன் என்பதற்கு அறிவில் மெய்யுணர்வு பெற்றோர் எனக் கூறுகிறார். கடவுள் நம்பிக்கையைவிட மெய்யுணர்வு மேலானது என்கிறார். இதனை வழிமொழிந்து திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் இறைவன் என்பதற்கு அறிவன், அரசன், ஆசான், தலைவன், மூத்தோன் எனும் பொருள்களைத் தரக்கூடிய சொல் என இனங்காட்டுகிறார். எனவே, இறைவன் என்னும் சொல் உருவ வழிபாட்டுடைய பொருளைக் குறிப்பது அன்று என்னும் கருத்துக்கு வருகிறார். பொதுவாக வலதுசாரி கருத்தியல் நூல்கள், தாள் என்னும் சொல்லைக் கால்கள் எனப் பொருள் கூறுகின்றன. கீழ் நிலைக்கு நிகராகப் பார்க்கின்றன. ஆகையால்தான் பாதத்தில் பிறந்தவன் சூத்திரன் என வரையறை செய்கிறது. அதனை வள்ளுவர் புறந்தள்ளி தாள் என்பதனை வழிபடும் இடமாகப் பார்ப்பது புதுமை. அதனால்தான் அடுத்து வரும் குறளில் 'அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு' என உறுதிபட உணர்த்துகிறார். சில வைதீகச் சார்புடையவர்கள் தாள் என்னும் சொல்லுக்குப் பின் இருக்கிற தத்துவத்தைப் பார்க்காமல் ஒருவனின் கால் என வலிந்து பொருள் உரைப்பதைப் பார்க்க முடிகிறது.

ஐயன் வள்ளுவனின் 'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் / தாளை வணங்காத் தலை' என்னும் குறளில் எண் குணத்தான் என்பது முக்கியச் சொல்லாகப் பார்க்கப் படுகிறது. இந்தக் குறளுக்கு மிக எளிமையான விளக்கம் கலைஞர் உரையில் மட்டும்தான் பார்க்க முடிகிறது. உடல்,கண், காது,மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகள் இருந்தும், அவை இயங்காவிட்டால் என்ன நிலையோ அதே நிலைதான் ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலையும் ஆகும் என்று கலைஞர் உரையின் ஊடாக வெளிப் படுத்துகிறார்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்/ இறைவன் அடிசேரா தார்' என்னும் குறளுக்கு பரிமேலழகர் இறைவன் அடியை நினைப்பார்க்குப் பிறவி அறுத்தலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அது அறாமையும் ஆகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன என உரை விளக்கம் தந்துள்ளார். பிறவி வாழ்வு துன்பம் மிக்க சிற்றின்பம் கொண்டது. அதிலிருந்து விடுபட்டுப் பேரின்ப நிலையை அடைய இறைவன் அடியை புனையாக, ஒரு கலமாக வள்ளுவர் கூறுகிறார். இங்கு இறைவன் அடி என்பது மருங்குருவம் என்கிறார் தேவநேய பாவாணர். கலைஞர் மு. கருணாநிதி, இறைவன் அடி என்பற்குத் தலையானவன் என விளக்கம் தருகிறார்.

முதன்மை மற்றும் துணைமைச் சான்றுகளை வைத்துப் பார்க்கும்போது, திராவிட இயக்கச் சார்புடைய தமிழ் அறிஞர்கள் திருவள்ளுவரின் இறை மற்றும் கடவுள் என்னும் சொல்லினை சமய சார்புக்கு அப்பாற்பட்டு பொருள்முதல் மற்றும் அறம் சார்ந்த நோக்கல் திருக்குறளை உலகப் பொதுமறையாக மக்கள் முன் நிலைநிறுத்தியதில் திராவிட இயக்க உரையாசிரியர்களுக்கு முக்கியப் பங்கு இருப்பதை பார்க்க முடிகிறது.

**கட்டுரைக்குத் துணை நின்ற நூல்கள்**

- புலவர் குழந்தை உரை – திருக்குறள்
- பரிமேலழகர் உரை – திருக்குறள்
- தேவநேயபாவாணர். மரபு வள உரை – திருக்குறள்
- பாரதிதாசன் உரை – திருக்குறள்
- நாவலர் நெடுஞ்செழியன் உரை – திருக்குறள்

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகம் என்னும் சொல்லுக்குப் பின்னே...

ஆன்மிகம் என்ற சொல் போல் மிகவும் மலினப்படுத்தப்பட்ட; மிகவும் கொச்சைப்படுத்தப்பட்ட வேறொரு சொல் இருக்குமா என்பது சந்தேகமே. இதனை நிரூபிக்க நாத்திகவாதிகளின் எழுத்துகளோ பேச்சுகளோ தேவை இல்லை. தங்களை ஆன்மிகவாதிகள் என்று பிரகடனப்படுத்திக் கொள்வோர் வாக்குமூலங்களே போதும். இதில் எல்லா மதத்தவரும் ஒரேபோல்தான் இருக்கின்றனர்.

குறிப்பாக இரண்டு கோணங்களில் இதனை அலசலாம். ஒன்று, ஆன்மிகவாதிகள் என்று தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் சந்நியாசிகள்,உபந்யாசிகள், பிரச்சாரகர்கள் பேச்சையும் எழுத்தையும் தொகுக்க ஆரம்பித்தால் அது முரண்பாடுகளின் மூட்டையாகப் பல்லிளிக்கும். அவை தன்னைத்தானே அம்பலப்படுத்திக்கொள்ளும். மீண்டும் சொல்கிறோம் மதம் எதுவாயினும் நிலைமை இப்படித்தான். ஆயினும், “ எங்கள் மனம் காயப்பட்டுவிட்டது” என அவர்களின் சிஷ்யகோடிகள் கூப்பாடு போடக்கூடும் என்பதால் அவை குறித்து இங்கே பேசப்போவதில்லை. அவை உங்கள் தனிப்பட்ட நம்பிக்கை என விட்டுவிடுகிறோம்.

இரண்டாவது, ஆன்மிக இதழ்களாக மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் வெளிவரும் ஏடுகள் மற்றும் காட்சி ஊடகங்களை ஆய்வு செய்தாலே ஆன்மிகத்தை மிகவும் கேலிக்குரியதாக மாற்றிக்கொண்டிருப்பவர்கள் இவர்களே என்பது வெட்டவெளிச்சமாகும். பெரும்பாலான ஆன்மிக இதழ்கள் ‘இந்து இதழ்’களாகவே முழுதாய்த் தங்களை வெளிப்படுத்திக்கொள்கிறது. தங்களைப் பொதுவானவர்கள் எனக் காட்ட ஓரிரு பக்கங்களில் பிற மதம் குறித்துப் போகிறபோக்கில் சில துணுக்குகளை வீசுவதோடு சரி! ஆக, இவ்வேடுகள் தோற்றத்திலேயே ஆன்மிகம் என்ற முகமூடியைக் கழற்றிவிட்டு மத பிரச்சார ஏடாகவே வெளிப்பட்டுவிடுகிறது. கிறித்துவ, இஸ்லாமிய, இதர மத பிரச்சார ஏடுகளிலும் ஆன்மபலம்மிக்க மானுடரை உருவாக்கும் நோக்கம் இருப்பதில்லை; ‘மதம் பிடித்த மனிதனை’ உருவாக்கவே மெனக்கிடுகிறது. ஆன்மிக ஏடுகளை, காட்சி ஊடகங்களை முன்வைத்து இங்கு நான் சில கேள்விகளை முன்வைக்கிறேன். அவற்றை முன்வைத்து நீங்களே உங்களுக்கு விருப்பமான மேற்படி ஏடுகளில் அல்லது காட்சி ஊடகங்களில் பதிலைத் தேடுங்கள்! ஆய்வுக்கு உட்படுத்துங்கள் நான் கூறுவது சரியா பிழையா என்பது தெளிவாகிவிடும்.

1] கஷ்ட நிவர்த்திக்கு பரிகார ஸ்தலங்கள்,பரிகார பூஜைகள்,பரிகாரச் சடங்குகள், தொழுகைகள், பிரார்த்தனைகள், ஜெபங்கள் என வாராவாரம் பல்வேறு யோசனைகளை முன்வைக்காத ஊடகம் ஏதேனும் உண்டா? இவற்றைப் பட்டியல் போட்டால் ஒவ்வொரு பிரச்சினைக்கும் பலநூறு யோசனைகள் - தப்பு தப்பு பல ஆயிரம் யோசனைகள் முன் மொழியப்பட்டிருக்கும் அல்லவா; அவற்றில் எது சரி, எது தவறு, என்பதை ஏதேனும் வழியில் ஆய்வுசெய்து பட்டியிலிட முடியுமா?

2] அவற்றைக் கடைப்பிடித்தும் இன்னும் பக்தர்கள் முழுவதும் ஏதேனும் பிரச்சினைகளில் சிக்கித் தடுமாறுவது ஏன்? குறிப்பாக உடனே வேலைகிடைக்க, கல்யாணம் ஆக, பணக்கஷ்டம் தீர,கடனில் இருந்து விடுதலை பெற, நோயிலிருந்து விடுபட என அன்றாடம் உலுக்கும் ஆயிரம் பிரச்சினைகளுக்கு இவ்வளவு எளிய பரிகாரங்களும் நிவாரணங்களும் முன்மொழியப்பட்டும், பக்தியும் இவற்றில் நம்பிக்கையும் கொண்டு பின்பற்றும் கோடிக்கணக்கான மக்கள் தொடர்ந்து பிரச்சினைகளில் உழல்வது ஏன்? ஒற்றைக் கலாச்சாரம் ஒற்றைப் பண்பாடு ஒற்றை மொழி என உளறுவோர் ‘ஒற்றைப் பரிகாரத்தை’ முன்மொழியலாமே! அதைச் செய்யாமல் வாராவாரம் புதுசு புதுசாகக் குழப்புவது யார்? ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3] ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு சாமிக்கும் ஒவ்வொரு கடவுளுக்கும் விஷேச சக்தி இருப்பதாகவும், அந்தக் குறிப்பிட்ட சாமியைக் குறிப்பிட்ட முறையில் வழிபடுவோர் அந்தக் குறிப்பிட்ட பிரச்சினையிலிருந்து விடுபடுவதாகவும் வாராவாரம் எழுதுகின்றன அவ்வேடுகள். அவற்றைத் தொகுத்துப் பார்த்தால் ஒரே பிரச்சினைக்கு நூறு சாமிகளை ஒரே ஏடு எழுதியிருக்கும்; புரட்டிப் பார்த்தால் பட்டியல் நீளும். அதில் எது உண்மை, எது பொய், எது சக்தி மிக்கது, எது சக்தி அற்றது எனக் கூற முடியுமா? அல்லது வெறும் விளம்பரச் செய்திகள்தாமா அவை? அந்தந்தச் சாமிக்காவது தனக்கு இப்படிப்பட்ட 'விஷேச ஆற்றல்' இருக்கிறது என்பது தெரியுமா? ஏன் இந்தக் கேலிக்கூத்து?

4] புராண கதைகளாக வாராவாரம் வெளியிடுகிற அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒவ்வொன்றைக் குறித்தும் நூறு பொய் இருக்கும். அவற்றிற்கும் இன்றைய நவீன வாழ்க்கைக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அவற்றில் எத்தனை ஆபாசக் கதைகள் இருக்கும்? அவற்றை எல்லாம் கூச்சநாச்சமின்றி எப்படி எழுதவும் பேசவும் முடிகிறது?

5] மகான்கள் வாழ்வில் நடந்ததாக இவ்வேடுகள் எழுதிக் குவித்த செய்திகள் எதற்காவது தக்க ஆதாரம் உண்டா? ஒரே கதையை வெவ்வேறு மகான்கள் வாழ்வில் நடந்தாக வெவ்வேறு இடங்களில் எழுதி வைத்துள்ளவற்றை மறுக்க முடியுமா? சரி! இப்படி எழுதிவைக்கிற செய்திகளில் எத்தனை ஆன்மிக மேம்பாட்டுக்கு உகந்தவை சொல்ல முடியுமா; அவை பொய்மையையும் போலிபிம்பத்தையும் கட்டமைப்பதைத் தவிர உருப்படியாய்ச் செய்தது என்ன?

6] ஆன்மிகம் என்பது மதம் சார்ந்ததா? மனித விடுதலை சார்ந்ததா? இந்த ஏடுகள் எழுத்தும் பார்வையும் மதம் சார்ந்து இருக்கிறதா, மனித விடுதலை சார்ந்ததாக இருக்கிறதா? ஆன்மிக குருக்களிலும் மனித குலம் முழுவதையும் அன்பால் குளிப்பாட்டிய மனிதகுல விடுதலைக்காக அர்ப்பணித்த சிலர் உண்டு. அவர்கள் சார்ந்து எழுதும் போதாவது மனிதகுலத்தை வாரி அணைக்கும் வெள்ள அன்பு இவ்வேடுகளில் வெளிப்பட்டது உண்டா? அவர்களை வெறும் கருவேப்பிலையாகப் பயன்படுத்தல் அன்றி வேறு நோக்கில் எப்போதேனும் சொன்னது உண்டா?

7] "இதை இதைச் செய்யலாம் இதை இதைச் செய்யக் கூடாது" என இவ்வேடுகளில் பட்டியல் போட்டு பக்தர்களைக் குறிப்பாகப் பெண்களை மிரட்டி எழுதுவதில் ஏதேனும் வரைமுறை உண்டா? இப்படி ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போட்ட பட்டியலைத் தொகுத்தால் ஒன்றுக்கொன்று முரணாக அல்லவா இருக்கும்? இன்றைய அறிவியல் வளர்ச்சி காலத்தில், ஆணும் பெண்ணும் உழைத்து வாழும் யுகத்தில், கல்வி அறிவு மேம்பட்டிருக்கும் காலத்தில், அறிவியல் அன்றாடம் புதிய சாளரங்களைத் திறந்திருக்கும் சூழலில், இவ்வேடுகள் போடும் பட்டியலுக்கும் வாழ்க்கை அனுபவத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

8] இவ்வேடுகள் சுட்டும் ஆன்மிகம் இதுதான் என ஒரு இலக்கணத்தை வரைந்து காட்ட முடியுமா? மூடநம்பிக்கைகளை மட்டுமே அவ்வேடுகள் விதைத்தன எனக் கூறுவதில் பிழை இருக்க முடியுமா? மதம்,சாதி இவற்றின் பெயரால் மனிதகுலம் அடித்துக்கொண்டு சாவதைத் தடுத்து நிறுத்த, "எல்லோரும் இறைவனின் பிள்ளைகள்; எல்லோரும் அன்பு செய்து வாழ்வீர்!" என வலியுறுத்த இவ்வேடுகள் ஒரு துரும்பையேனும் எப்போதேனும் கிள்ளிப் போட்டது உண்டா?

இப்படி வினாக்கள் நீண்டுகொண்டே போகும். நீங்களே நூறு இதழ்களைச் சேகரித்து இவற்றுக்கும் இதுபோல் நீங்கள் எழுப்பும் வினாக்களுக்கும் விடை காண முயல்வீர்! ஆய்வுசெய்வீர்! அப்போது, ஆன்மிகம் என்ற சொல் போல் மிகவும் மலினப்படுத்தப்பட்ட; மிகவும் கொச்சைப் படுத்தப்பட்ட வேறொரு சொல் இல்லை என்பதை இந்த ஆன்மிக வியாபாரிகள் வழியே நீங்கள் கண்டடைவீர்கள்! ஆன்மிக வியாபாரத்தின் வீச்சும், செழிப்பும், கொள்ளை லாபமும், மோசடியும், திருட்டும் உங்களைத் திடுக்கிடவைக்கும். இவை வெறும் வார்த்தை அன்று. உண்மை. உண்மை. உண்மை.

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக்கக் கட்டுரை | வல்லபாய்

# 2025 இல் நமது உலகம்



நமது பூவுலகம் 2025இலும் பிரிந்து நிற்கும் சமூகமாகவே தொடர்கிறது. முதலாளித்துவமும் அதனுடைய சட்டபூர்வ சித்தாந்தமான புதிய தாராளமயமும் நாம் இந்தச் சமத்துவமற்ற சமூகத்தில் தொடர்வதை உறுதிசெய்கின்றன. இது ஒன்றும் புதிதன்று.

இது ஏன் இவ்வாறிருக்கிறது? இது எவ்வாறு உருவானது? இந்தச் சமமற்ற, சீரற்ற சமூக அமைப்பினின்றும் பயன்பெறுவது யார் என்னும் வினாக்களுக்கு, "உருவாக்காத உடைமையாளர் - நியாயமற்ற வறுமையும் உழைக்காமலே காலனியாதிக்கம் சுருட்டிய வளமும்" என்னும் தலைப்பிலான ஆக்ஸ்ஃபாமின் அண்மைய ஆய்வு தரும் விடைகள்தாம் புதியவை. வறுமை இன்னமும் தொடர்வதற்கான பல காரணங்களுள் ஒன்றாக வரலாற்று நூல்களும் ஊடகங்களும் கடந்த காலத்தில் காலனியத்தை அடையாளம் காட்டின. காலனியமும் மிகக் கோரமான சமத்துவமற்ற சமூகமும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத குணாம்சங்கள்தாம். ஆனால், காலனியத்தின் விளைவுகளும் தாக்கங்களும் 2025லும் தொடர்வதுதான் வேதனை.

இன்று காலனியத்தின் வேஷம் மாறியிருக்கிறது. ராணுவரீதியிலான படையெடுப்புகளுக்குப் பதிலாக நிதியாதார நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் தலையெடுத்திருக்கின்றன. கூடவே ஏழைகளெல்லாம் சோம்பேறிகள் என்ற ஒரு வசதியான வாதமும் இன்றைய உலகில் நிலவும் வறுமையை நியாயப்படுத்துகிறது. உலகமயமாதல் என்ற சாமர்த்திய பெயரிடப்பட்ட நிதியாதாரக் காலனியம் என்பது தென்புலத்து (பூமத்திய ரேகையின் வடக்கே, தெற்கே என்கிற அடிப்படையில்) உலக நாடுகளிடமிருந்து பணம் உறிஞ்ச, அவற்றைச் சுரண்ட கண்டறியப்பட்ட ஒரு நுட்பமான வழிமுறை. அவற்றின் வளங்கள் யாவும் வடபுலத்தில் கோலோச்சும் ஒரே ஒரு சதவீத பகாசுரப் பணக்காரர்களுக்கு மடைமாற்றம் செய்யப்படுகின்றன. இன்றளவும் நவ காலனியத்தின் கொள்ளையென்பது பெருந்தொகையளவாய்த் தொடர்கிறது. ஒரு மணி நேரத்திற்கு 30 மில்லியன் டாலர்கள் என்கிற வேகத்தில் இருபத்துநான்கு மணி நேரமும் வளங்களும், செல்வமும் தென் புலத்திலிருந்து வட புலத்து நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன. உதாரணத்திற்கு இந்தியாவில் ஒரு நூற்றாண்டு கால பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் போது 64.82 ட்ரில்லியன் டாலர்கள் பிரிட்டனால் கொள்ளையடிக்கப் பட்டன; அதில் பாதியான 33.8 ட்ரில்லியன்கள் பிரிட்டன் மக்கள்தொகையில் பத்தே விழுக்காடான பிரித்தானிய உயரடுக்கு செல்வக் கனவான்களுக்கே சென்றடைந்தன. இந்தத் தொகையின் பரிமாணம் புரிய வேண்டுமென்றால், இந்தத் தொகையை 50 பவுண்ட் நோட்டுகளாக மாற்றினால் அதைக் கொண்டு லண்டன் மாநகரத்தின் வீதிகளை 4 அடுக்குகளாக நிரப்ப முடியும். ஒரு முறை சற்று நிதானித்தால் இந்தக் கொள்ளையின் வீரியம் விளங்கும். அடிப்படை மருத்துவத் தேவைகளிலிருந்து அன்றாட வாழ்விற்கே போராடிக்கொண்டிருந்த லண்டனின் ஏழைகள் மற்றும் உலகெங்கிலும் நிலவிய அகோர வறுமையின் மத்தியில்தான் இப்படியொரு சூறையாடல் நடந்திருக்கிறது.

மறுபுறம் ட்ரம்பின் வெற்றி, பில்லியனர்களின் கனவிற்கு உற்சாகமூட்டுவதாய் அமைந்துள்ளது. அமெரிக்காவையும் இன்னும் உலகின் பல நாடுகளையும் மேலும் அதிகதிக சமத்துவமற்ற சமூகங்களாய் உருவாக்கும் புண்ணியத்தை ட்ரம்ப் செய்வார். உலக வங்கி வெறும் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று காலனியத்தின் வேஷம் மாறியிருக்கிறது. ராணுவரீதியிலான படையெடுப்புகளுக்குப் பதிலாக நிதியாதார நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் தலையெடுத்திருக்கின்றன. கூடவே ஏழைகளெல்லாம் சோம்பேறிகள் என்ற ஒரு வசதியான வாதமும் இன்றைய உலகில் நிலவும் வறுமையை நியாயப்படுத்துகிறது. உலகமயமாதல் என்ற சாமர்த்திய பெயரிடப்பட்ட நிதியாதாரக் காலனியம் என்பது தென்புலத்து (பூமத்திய ரேகையின் வடக்கே, தெற்கே என்கிற அடிப்படையில்) உலக நாடுகளிடமிருந்து பணம் உறிஞ்ச, அவற்றைச் சுரண்ட கண்டறியப்பட்ட ஒரு நுட்பமான வழிமுறை. அவற்றின் வளங்கள் யாவும் வடபுலத்தில் கோலோச்சும் ஒரே ஒரு சதவீத பகாசுரப் பணக்காரர்களுக்கு மடைமாற்றம் செய்யப்படுகின்றன.**

விழுக்காட்டு மக்கள்தான் மிகக் குறைந்த சமத்துவமின்மை நிலவும் நாடுகளில் வாழ்வதாகக் கணக்கிடுகிறது. புதிய தாராளமயத்தை அப்படியே அச்சரம் பிசகாமல் பின்பற்றுகின்ற ஐந்தில் நான்கு நாடுகள் கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துவிட்டன. அதேநேரம் இந்த நாடுகள் நியாயமான ஆரோக்கியமான வரிவிதிப்பு விகிதங்களையும் குறைத்துவிட்டன. இதனால் ஒப்பீட்டளவில் வறியவர்கள் அதிக வரியும் வசதிபடைத்தவர்கள் குறைந்த வரியும் செலுத்துகின்றனர். இது வறியவர், மத்தியதர வர்க்கத்தினரின் வளங்களை அப்படியே செல்வந்தர்களுக்குத் தாரை வார்க்கிறது.

இன்னும் கொடிதாகப் பத்தில் ஒன்பது நாடுகள் தொழிலாளர் உரிமைகள், குறைந்தபட்ச ஊதியம் ஆகியவற்றிலும் கைவைத்து, வறியவர்களை ஒட்டாண்டிகளாக்குவதில் முனைந்துள்ளன. இந்த நடைமுறைகள் தொழிலாளர்களை அடிமைத் தனத்துக்கு இட்டுச் செல்லும் நெறிமுறைகளாகியுள்ளன; உதாரணமாக அமேஸானின் பெரிய பெரிய சரக்கு இருப்பு மையங்களில், ஊழியர்கள் சிறுநீரை பாட்டில்களில் கழிப்பதற்குக் கட்டாயமாகப் பழக்கப்படுத்தப்படுகின்றனர் என்பது இந்தக் குரூரத்தின் உச்சம்.

நிதியாதாரக் காலனியத்தில், பெரும்பான்மையாகவிருக்கும் குறைந்த மற்றும் மத்திய வருவாய் ஈட்டும் நாடுகள் தங்கள் நிதி நிலையில் 48 விழுக்காட்டை வாங்கிய கடன்களை அடைக்கவே ஒதுக்குகின்றன. நியூயார்க்கிலும் லண்டனிலும் அமைந்திருக்கும் தனியார் நிதி நிறுவனங்களுக்கே இவை அதிகம் செலுத்தப்படுகின்றன. இதனால் குறிப்பாக இந்த இரு நகரங்களிலும், உலகெங்கிலும் உள்ள வெகு சிலர் மேலும் செல்வராகின்றனர். வேறு சொற்களில் சொல்வதென்றால் நாம் இப்பொழுது பில்லியனர் காலனிய யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் கசப்பான உண்மை.

36 விழுக்காடு பில்லியனர்களின் சொத்துகள் வழி வழியாய் சுவீகரிக்கப்படுபவையே அல்லாமல் முதலீடுகள் வழியாகச் சம்பாதிக்கப்படுபவையல்ல என்று அண்மைய ஆக்ஸ்பார்ம் அறிக்கையொன்று கணித்திருக்கிறது. மேலும், இந்த வருமானங்களில் பெரும்பகுதி எவ்வித வரிவிதிப்புகளுக்குள்ளும் வரையறுக்கப்படுவதில்லை என்பதுதான் கொடுமையான விஷயம். “கடுமையான உழைப்பு; கணிசமான பலன்” எனும் ஆர்ப்பாட்டமான முழக்கங்கள், புதிய தாராளத்தின் வாதங்கள் ஆகியவை வழியாக இந்தக் கொள்ளைகள் ஒரு சித்தாந்த சட்ட பூர்வ வடிவம் பெறுகின்றன. உலகெங்கிலும் பெருவணிகக் குழுமங்களின் மேலாதிக்க வல்லமை, கட்டுப்பாடுகளற்ற திறந்துவிடப்பட்ட சந்தை என்கிற மாய பிம்பத்தின் மூலமாக அதி உச்ச செல்வக் குவிப்பையும், ஆக மோசமான சமத்துவமற்ற சமூகம் என்பதையும் சாத்தியமாக்குகிறது. ஆதலால் கடந்த கால காலனி ஆதிக்கத்தின் கறை படிந்த நெடிய இருளையும், அது தொடர்ந்து இன்றளவும் எவ்வாறு சமத்துவமின்மையை நீடிக்க வழிவகுக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளாமல், நடப்பில் புழங்கும் இன்றைய சமத்துவமற்ற சமூக ரோகத்தைப் புரிந்துகொள்ள முடியாது. வரலாற்றின் பழைய காலனி ஆதிக்கமும் இன்றைய நவ காலனியமும் இணைந்தே பயணிக்கின்றன. நவ காலனியம் வடபுலத்தின் நிதி வலிமையினால் வழிநடத்தப்படுகிறது.

காலனியாதிக்கத்தின் அரை குறை வீழ்ச்சி நிகழ்ந்தேறி முடிந்திருக்கிற 60 ஆண்டுகள் கழிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 2025இலும் உலகின் தென் புலத்திலிருந்து வடபுல நாடுகளை நோக்கி வளங்களும் செல்வமும் கடந்துசெல்வதை உத்தரவாதமாக்கும் வழியிலேயே நமது நடப்புலகம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வடபுலத்து நாடுகள் மேலும் மேலும் செல்வத்தில் கொழிக்கின்றன. இந்த வரலாறு முழுவதிலும் செல்வர்களான கனவான்களே மூல காரணர்களாயும், பயனாளிகளாகவும் காலனியத்தை முழுதும் அனுபவிப்பவர்களாயும் வலம் வருகின்றனர். உதாரணமாக அடிமைத் தளையினை ஒழித்து ஃப்ரான்ஸிடமிருந்து சுதந்திரம் அடைந்த ஹைட்டி நடப்புக் கணக்கில் 21 பில்லியன் டாலர்களுக்கு

**நிதியாதாரக் காலனியத்தில், பெரும்பான்மையாகவிருக்கும் குறைந்த மற்றும் மத்திய வருவாய் ஈட்டும் நாடுகள் தங்கள் நிதி நிலையில் 48 விழுக்காட்டை வாங்கிய கடன்களை அடைக்கவே ஒதுக்குகின்றன. நியூயார்க்கிலும் லண்டனிலும் அமைந்திருக்கும் தனியார் நிதி நிறுவனங்களுக்கே இவை அதிகம் செலுத்தப்படுகின்றன. இதனால் குறிப்பாக இந்த இரு நகரங்களிலும், உலகெங்கிலும் உள்ள வெகு சிலர் மேலும் செல்வராகின்றனர்.**

இணையான 150 மில்லியன் ஃப்ராங்குகளை ஃப்ரான்ஸிடமிருந்து கடனாகப் பெறுமாறு வற்புறுத்தப்பட்டது. அடிமைகளின் உடைமையாளர்களுக்கு இழப்பீடு செய்வதற்காக என்ற பெயரில் நடந்த இந்தப் பரிவர்த்தனை 80 விழுக்காட்டுக்கும் மேலாக செல்வரான அடிமை உடைமையாளர்களுக்கே செலுத்தப்பட்டது. அவலமான சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்ட அடிமைகளுக்கு ஏதுமில்லாமல், அடிமைப்படுத்தி சித்திரவதைகளுக்குள்ளாக்கி ஒட்டச் சுரண்டிய செல்வர்களுக்குத்தான் இழப்பீடு என்கிற விபரீதமாய் அது நிகழ்ந்தேறியது. இப்படியாக இதன் தொடர்ச்சியாக 1970க்கும் 2023க்கும் மத்தியிலான ஆண்டுகளில் 3.3 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்களை வட்டியாக மாத்திரம் வடபுலத்தின் நிதியங்களுக்கு தென் புலத்து தேசங்களின் அரசாங்கங்கள் கப்பம் கட்டியிருக்கின்றன.

இப்படித்தான் செல்வர்களான கனவான்கள் மேலும் செல்வத்தில் கொழுக்கின்றனர்.

புதிய தாராளத்தின் முனைப்பு நிறுவனமாக முன்னணிச் செல்வர்கள் அனைவரும் இணைந்து "பொருளாதாரக் கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனம்" (OECD) என்கிற ஒரு உலகளாவிய அமைப்பை உருவாக்கி வரி விதிப்புக் கொள்கைகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்கின்றனர். பெருவணிக வரிகளில் நிகழ்த்தப்படும் 70 விழுக்காட்டுக்கும் அதிகமான தகிடுதத்தங்களெல்லாம் இந்த OECD நாடுகளில் இயங்கிவரும் வரிச் சாகச நிறுவனங்கள் வழியாகவே நடத்தப்படுகின்றன. மேலும், உலகச் சந்தையின் பகிர்வு பரிவர்த்தனைகளில் ஆதிக்கம், மலிவான கூலி, தென் புலத்து நாடுகளின் வளங்களைச் சுரண்டுவது ஆகிய உத்திகளைப் பயன்படுத்தி பன்னாட்டு பகாசுர வணிகக் குழுமங்கள் கொழுத்த லாபம் கொழிக்கின்றன.

இப்படியான பொருளாதார நடவடிக்கைகள் தொடருமேயானால் சமத்துவமின்மைக் குறைப்பு என்கிற பேச்சுக்கே இடமில்லையெனவும் வறுமையை ஒழிக்க மேலும் ஒரு நூற்றாண்டு பிடிக்குமெனவும் உலக வங்கியின் வறுமை பற்றிய அண்மைய அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாளித்துவம் தோன்றிய 1760லிருந்து இந்த 250 ஆண்டுகளில் வறுமையும் கூடவே பயணிக்கிறது. முதலாளித்துவம் தொடரும் வரை வறுமையும் தொடரும் என்பது புலனாகிறது. முதலாளித்துவம்தான் பொருள்கள் மற்றும் சேவைகளின் சிறந்த பகிர்வுக்கு உத்தரவாதமானது என்கிற ஜனரஞ்சகமான வாதங்களுக்கு மத்தியில்தான் 2025இல் உலகெங்கிலும் 733 மில்லியன் கணக்கான ஒரு பெருந்திரள் மக்கள் கூட்டம் பட்டினியிலும் பசிக் கொடுமையிலும் தவிக்கிறது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் 450 மில்லியன் மக்கள் தொகையைக் காட்டிலும் அதிகமானது என்பதும், 2019டன் ஒப்பிடும்போது 152 மில்லியன் அதிகமான மக்கள் இந்தப் பட்டினிப் பட்டாளத்தில் இணைந்துள்ளனர் என்பதும் புலனாகிறது.

வறுமைக்கும் சமத்துவமின்மைக்கும் ஒரு தீர்வாக அல்லாமல் அவற்றிற்கான காரணமே முதலாளித்துவம்தான் என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவமின்மையைக் குறைப்பதில் அதற்கு அக்கறை இல்லையென்பதும் புலப்படுகிறது. அதே வேளையில் சாத்தியப்படும் அதிகபட்ச சமத்துவம் பல நியாயமான பலன்களை உள்ளடக்கியிருக்கிறது.

அதிக சமத்துவம் நிலவும் ஒரு சமூகம் மிகக் குறைந்த ஊழல் நிலவரங்களையும், வலுவான ஜனநாயக அரசு நிறுவனங்களையும் உத்தரவாதமாக்குகிறது. அதிக சமத்துவம் நிலவும் நாடுகளில் உறுதியான பரஸ்பரப் புரிதல்கள், குறைந்த அளவிலான குற்றச் செயல்கள், அதிகாரக் குவியலில் ஆர்வமின்மை ஆகியவை உறுதியாகின்றன.

சமத்துவமின்மைக் குறைப்பு என்பது சமமற்ற முறையில் பங்கிடப்பட்டிருக்கிற உலக செல்வத்தை மாத்திரம் பொறுத்ததன்று. வடபுலம் 69.3% வளங்களையும் மீதி 30.7 %த்தை தென்புல நாடுகளும் கொண்டிருக்கின்றன. ஆனால், மக்கள் தொகை என்பது நேர் மாறாக அமைந்திருக்கிறது. அது தென் புலத்து நாடுகளில் 79.4% ஆகவும் வட புலத்தில் 20.6 % ஆகவும் அமைந்திருக்கின்றன. இவ்வாறு உலக செல்வர்கள் சிலராகவும் ஏழைகள் வெகு வெகு பலராகவும் உள்ளனர். இந்த பார தூர வித்தியாசம் ஏதோ ஓரிரவில் நடந்ததன்று. அமெரிக்காவில் ஐரோப்பிய காலனியாதிக்கம் நோய்களையும், கொடூரங்களையும், சித்திரவதைகளையும், வன்முறைகளையும், சுரண்டலையும் கட்டவிழ்த்துவிட்டது. இந்தக் குரூரங்கள் வழியாக அமெரிக்காவின் பூர்வகுடிகளில் 90 விழுக்காட்டினர் அழித்தொழிக்கப்பட்டனர். இப்படி ஐரோப்பிய காலனியர்கள் ஒரு புதிய பூகோளப் பரப்பைக் கண்டடைந்த போது உலக மக்கள் தொகையில் 10 விழுக்காட்டைக் குறைத்தனர்.

இந்தோனேஷியாவின் பாண்டாத் தீவுகளில் டச்கிழக்கிந்தியக் கம்பனியும் அதன் ராணுவமும் அந்தத் தீவின் முழு மக்கள் கூட்டத்தையும் படுகொலை செய்து சூறையாடின. அதன் மூலமாக அந்தக் கொலைகார டச் வணிகக் கும்பல் திரவிய வர்த்தகத்தில் முழு மேலாதிக்கம் பெறவும், அதைத் தன் ஏக போகக் கட்டுக்குள் நிலைநிறுத்திக்கொள்ளவும் வழிபிறந்தது. இந்தப் பரிணாமம் இன்னும் அருவருப்பாகி 1770களில் 40 % டச் பொருளாதார வளர்ச்சி அடிமை வணிகத்தின் வழியாகவே உயர்வடைந்தது. இந்த மனித உடல் வணிகம்தான் டச் செல்வரின் வளம் கொழிக்கும் ஊற்றாகி அதில் முங்கிக் குளித்ததுதான் டச் அரியணை என்பது வரலாற்றின் முடை நாற்றமெடுக்கும் பக்கங்கள். டச் இனம் மாத்திரமன்று; இங்கிலாந்தின் அநேக அரசர்களும் அரசிகளும் இந்த அடிமை வணிகத்தை ஊக்குவித்து அதில் அதிக லாபம் சேர்த்த குரூரர்கள்தாம். இன்றைய பிரித்தானிய ஆகப் பெரிய செல்வர்கள் சிலரின் கஜானாக்களைத் திறந்தால், அதில் இப்பொழுதும் அந்த அடிமைகளின் இரத்தமும் வேர்வையும் கலந்த மனுக் குலத்தின் இழிவான வரலாற்று துர்நாற்றம் வீசும்; சித்திரத் தையலாடையும் செருக்கு மிக்க வாசானாதி திரவியங்களையும் மீறி அந்தச் செல்வர்களின் மேனியெங்கும் இரத்த வாடையெனும் ரோகம்தான் மிஞ்சும்.

வரலாற்றில் மனித உடல் மற்றும் உயிர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இந்த வணிகச் சூறையாடல்களின் பயனாளிகளின் பட்டியல் இன்னமும் நீளமானது. இன்றைய வங்கிகள் சாம்ராஜ்ஜியத்தில் கோலோச்சும் பர்க்லேஸ், ஹசெஸ்பிசி மற்றும் லாயிட்ஸ், வணிகக் கணித நிறுவனங்களான டெலாய்ட், ப்ரைஸ்வாட்டெர்ஹவுஸ் காப்பெர்ஸ், ஜே பி மார்கன் சேஸ், நாட் வெஸ்ட், ஏபிஎன் அம்ரோ என எல்லாமுமே அடிமை வணிகத்தில் கல்லா கட்டியவைதாம். நாய் விற்ற காசு குரைப்பதில்லை.

இவையெல்லாம் முடிந்துபோன வலி மிகுந்த கடந்த காலம் என்று திருப்தியடைய முடியாது. ஏனெனில், இன்றும் உலகின் 94 நாடுகளில் சக மனிதனை அடிமையாக்கும் ஒருவன் மீது வேறெவனும் குற்றம் சாட்ட முடியாது. அடிமைத்தனம் எனும் அருவருப்பான அசிங்கம் இந்த நாடுகளில் இன்னமும் சட்டபூர்வமாய்த் தொடர்கிறது. அடிமைத்தனத்தின் கோரம் இன்றும் படர்ந்துள்ளது. ஹைட்டி ஃப்ரென்ச் காலனியத்தின் கடனாக 21 பில்லியன் டாலர்களை 122 வருஷங்களாய்க் கட்டித் தீர்க்க நேர்ந்தது. தன் சுதந்திரத்திற்காக வெகு கடுமையான கசப்பான விலையை ஹைட்டி கொடுத்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற புளகாங்கிதமான புரட்சியை நடாத்திய நவ நாகரிக தேசமான ஃப்ரான்ஸ் எவ்விதக் கூச்ச நாச்சமுமில்லாமல் ஹைட்டியின் கடைசிச் சொட்டு இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை வழித்து விட்டுத்தான் ஓய்ந்தது. நம்புங்கள் நாம் கடந்துவந்ததும் ஜீவித்திருப்பதும் மனித நாகரிகம் உச்சம் தொட்ட இருபது மற்றும் இருப்பத்தோராம் நூற்றாண்டில்தாம்.

ஊழலும் லஞ்சமும் காலனியம் மற்றும் நவ காலனியத்தின் உடன்பிறந்தவை. இதற்கு பன்னாட்டுப் பெரு வணிக முதலாளித்துவத்தின் ஆங்கிலோ ஸ்விஸ் நிறுவனமான க்ளெங்கோர் (GLENCORE) ஒரு சிறந்த உதாரணம். உலகின் மிகப் பெரிய பொருள் வணிக நிறுவனமான க்ளெங்கோரின் மதிப்பு 65 பில்லியன் டாலர்கள். உள்நாட்டு யுத்தத்தால் சிதைக்கப்பட்டிருக்கும் ஆப்ரிக்க காங்கோ ஜனநாயகக் குடியரசில் சுரங்கங்களை இந்த நிறுவனம் நடத்துகிறது. காங்கோவில் அரங்கேறும் அன்றாடக் கொலைகளில் க்ளெங்கோருக்கு நேரடிப் பங்கில்லைதான்.

2022இல் க்ளெங்கோர் 2021ல் ஈட்டிய லாபத்தை விடவும் 12.8 பில்லியன் டாலர் உயர்வாக மொத்தம் 34.11 பில்லியன் டாலர் லாபமாகப் பெற்றது. இப்படி க்ளெங்கோர் கொழுத்த பணம் பண்ணும்பொழுது காங்கோவில் சராசரி மனிதர்களான மற்றவர்கள் நாள்தோறும் மரணிக்கிறார்கள். அதே வருடம் ப்ரிட்டிஷ் அரசு க்ளெங்கோரின் மீது ஆப்ரிக்காவில் லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அதன் லாபத்தில் 1% அளவான 373,000,000 டாலர் அபராதம் விதித்தது. இவ்வளவு பெரிய அபராதத்தை சட்டையே செய்யாமல் க்ளெங்கோர் அதைத் தன் கணக்குப் புத்தகங்களில் "வணிகச் செலவினங்களில்" சேர்த்துவிட்டுக் கடந்து சென்றது. மறுபடியும் 2023இல் ஒரு அமெரிக்க மாகாண நீதி மன்றம் ஆப்பிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் சட்டத்திற்குப் புறம்பான லஞ்ச, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி 700 மில்லியன் டாலர் அபராதம் விதித்தது. இத்தனையும் கடந்து க்ளென்கோர் எனும் பெரு வணிக நவ காலனியம், சராசரி மனித கற்பனைக்கு எட்டாத பெருந்தொகை நஷ்டங்களைத் தூசியைப் போலத் தட்டி விட்டு இப்பொழுதும் பீடு நடை போடுகிறது.

இவ்வளவும் முடிந்த பிறகும் சுவிஸ் முதலீட்டு வங்கியான யுபிஎஸ் ஸின் (UBS) நிதி அறிக்கையில் இதை "வளங்களின் பிரமிட்" என்றே குறிப்பிடுகிறது. பிரமிட் என்றால் அது தொடரும் என்னும் மாற்றப்பட முடியாதது என்னும் புரிதலில் அப்படிச் சொல்லுகிறது. அது உலக சமத்துவமின்மையையே சுட்டிக்காட்டுகிறது.

இந்தப் பிரமிடின் உச்சத்தில் 58 மில்லியன் நபர்கள் ஒட்டுமொத்த உலகின் 47.5 % வளங்களை/செல்வத்தைத் தக்க வைத்திருக்கின்றனர். இவர்கள்தாம் பகாசுர செல்வர்கள்.

அடுத்து 613 மில்லியன் நபர்கள் 39.4 % செல்வத்தைக் கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் அடுத்தநிலை செல்வர்கள். இவர்களுக்குக் கீழே 1.6 பில்லியன் குடிகள் 12.65 % வளங்களுடன் ஒரு சராசரி திருப்தியுடன் ஜீவனம் நடத்துகின்றனர்.

பிரமிடின் அடிமட்டத்தில் 1.5 பில்லியன் மக்கள் வெறும் 0.5 % கந்தல் உடைமைகளுடன் வறுமையில் உழல்கின்றனர்.

சுருங்கச் சொல்வதென்றால், மிகக் குறைந்த13 % உலகப் பிடிப்புகளுடன் 3.1 பில்லியன் மக்கள் வறுமையில் உழல்கையில், பெருவாரியான 87 % உலக வளங்களையும் வெறும் 670 மில்லியன் நபர்களே தக்கவைத்துக்கொண்டுள்ளனர். இவ்வாறு ஒரு மிகக் குறுகிய அளவிலான ஒரு சிறு கூட்டம் எல்லா வளங்களும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்கின்றபோது, மிகப் பெருவாரியான மக்கள் திரள் ஏதுமற்ற தரித்திர நாராயணர்களாய் நாள்களைக் கடத்துகின்றனர். இவர்களின் அன்றாட இருத்தலே நித்தம் நித்தம் பெரு மூச்சின் பயணமாய், விழி நிறைந்த ஏக்கங்கமாய்த் தொடர்கிறது. இதுதான் இந்த 2025இல் சமூக சமத்துவமின்மையின் நிகழ் தரிசன இலக்கணம்.

இதுதான் நமது இன்றைய உலகு; காலனியாதிக்கம், நவ காலனியம், முதலாளித்துவம், சமத்துவமின்மை, வறுமை மற்றும் சுரண்டலால் வடிவமைக்கப்பட்ட சிக்கல்களும், சீரழிவுகளும், முரண்களும் முட்டி மோதும் நமது இன்றைய உலகு.

*Translated from : Counter Currents.org*
*Article - **"Our world in 2025" by Thomas Klikauer** dtd: 8.5.2025*

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Paulo Freire கண்டடைந்த மானிட மேம்பாட்டுக்கும் சமூக மாற்றத்திற்குமான கல்வி!

## தோற்றம், முறைமை, விளைபயன் பற்றிய பார்வை



**பவுலோ உருவாக்கிய கற்பித்தல் முறையையின் அடிநாதம் ஒடுக்கப்பட்டிருக்கும் மனித ஆற்றல்களை விடுவிப்பதற்கான தனிமனித முயற்சியைத் தூண்டுவதாகும். சாதாரண மனிதர்கள் சுயமரியாதையையும் மனிதப் பெறுமதியையும் மீட்டெடுப்பது முக்கியமானது என்று அவர் கருதினார். மனிதர்கள் தம்மை ஒடுக்கும் அமைப்பு முறைகளிலிருந்து தம்மைச் சுயவிடுதலை செய்துகொள்ள வேண்டும், அதிகாரங்களுக்கும் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டுப் பேணப்பட்டவற்றிற்கும் கீழ்ப்படிதலிலிருந்து விலகவேண்டும்.**

*Augusto Boals*இன் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்களுக்கான உந்துதலாக (*Inspration*) இருந்தவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டோருக்கான மாற்றுக்கல்வி நிபுணர், கல்வியாளர் *Paulo Freire*. இருவரும் ஒரே நாட்டவர்கள், ஒரே காலத்தவர்கள். ஒருவர் கற்பித்தல் முறைமை சார்ந்து புதிய வடிவங்களை உருவாக்கி அறிவூட்டற் தளத்தில் ஒடுக்குமுறைக்கெதிரான கருவியாகக் கல்வியைக் கையாண்டவர். மற்றவர் அரங்கக்கலை வடிவங்களை உருவாக்கி வளர்த்து ஒடுக்குமுறைகளுக்கெதிரான கருவியாகக் கலையைக் கையாண்டவர்.

### விடுதலைக் கல்வி

ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு தொடர்பாக நான் எழுதிவரும் தொடரில் *Paulo Freire* குறித்து ஓர் சுருக்கமான அறிமுகத்தினை வழங்கியிருந்தேன். இக்கட்டுரை அவரையும் அவரது மாற்றுக்கல்வி பற்றிய சிந்தனை உருவான புறச்சூழல், கற்பித்தற் கோட்பாடுகள் பற்றியும் விரிவாக நோக்குகின்றது. மாற்றுக்கல்வி என்பது மாணவர்களைக் கற்றல் செயற்பாட்டுக்குள் ஈடுபடுத்துவதற்கான ஊக்குவித்தல் முறைகளை உள்ளடக்கிய 'விடுதலைக் கல்வி'யின் (*Liberating pedagogy*) முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. சமூக மாற்றத்திற்கான கருவியாகக் கல்வியைப் பயன்படுத்துவது குறித்த விவாதத்தின் மையமாக உலகளாவிய கல்வித்துறையில் பவுலோவின் கருத்தாக்கங்களும் சிந்தனைகளும் இன்றளவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாரம்பரிய கல்விமுறையின் பற்றாக்குறைகள், இறுக்கத்தன்மைகள், ஒதுக்குதல்கள், அழுத்தங்கள், ஒடுக்குமுறைகள், மாற்றுச்சிந்தனை-படைப்பாற்றலுக்கு இடமளிக்காமை போன்ற விமர்சனங்களிலிருந்தே மாற்றுக்கல்விக்கான புறநிலையும் தேவையும் தோன்றியது.

ஒடுக்கப்பட்ட, வறிய மக்கள் மத்தியில் வாசிப்பு மற்றும் எழுத்தறிவை மேம்படுத்துவதற்காகத் தன்வாழ்வை அர்ப்பணித்த கல்வியாளர் பவுலோ பிரெய்ரே (*Paulo Freire*). மனிதர்கள் வாசிப்பறிவைப் பெறுவது, அவர்கள் தகவல்களோடு சமூகத்தில் பங்கேற்பதற்கு உதவும். தம்மீதான ஒடுக்குமுறைகளை எதிர்க்கமுடியும் என்பது அவரது நிலைப்பாடு. அதாவது தாம் ஒடுக்கப்படுகிறோம் என்ற உணரவும் அதனை எதிர்க்கவும் அவர்களுக்குக் கல்வியறிவு (வாசிப்பு, எழுத்தறிவு) அவசியம். அக்காலகட்டத்தில் தென் அமெரிக்க நாடுகளின் மக்கள் ஆட்சியாளர்களால் ஒடுக்கப்பட்டதோடு, அவர்கள் மீது ஆட்சியாளர்களாற் திணிக்கப்பட்ட மோசமான வாழ்வாதார நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெய்ரின் விடுதலைக் கல்வியியலானது ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைக்கான செயல்முறையில் இரண்டு படிநிலைகளைக் கொண்டுள்ளன. ஒடுக்கப்பட்டவர்கள் தாம் வாழ்கின்ற 'ஒடுக்குமுறை உலகை' உணர்வதும் வெளிப்படுத்துவதும் முதலாவது நிலை. அவர்களின் மன-அக ஒடுக்குமுறையிலிருந்து வாழ்வியற்சூழலில் அவர்களைச் சுற்றி அவர்கள் எதிர்கொள்ளும் அனைத்து ஒடுக்குமுறைக் கூறுகளையும் இது குறிக்கின்றது. பொருத்தமான செயற்பாட்டின் மூலம் அவற்றை மாற்றுவதிற் தம்மை ஈடுபடுத்துவது இரண்டாவது படிநிலையாகும். Boal மற்றும் Freire இருவரும் தென் அமெரிக்க மக்கள் மீதான ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு எதிராக அயராது உழைத்தவர்கள். அந்த உழைப்பு மக்களுக்கான அறிவூட்டல் மூலமான விழிப்புணர்வூட்டலையும் சுயசிந்தனைக்கான வழிகாட்டலையும் அடிப்படையாகக் கொண்டது. இருவருடைய சிந்தனைகளும் ஒருவரையொருவர் தழுவியதாகவும் இட்டுநிரப்புவனவாகவும் இருந்தன. ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைக்கான படிநிலைச் செயல்முறை சார்ந்த பிரெய்ரெசின் கருத்தியல் Boalஇன் அரங்க வடிவங்களின் உத்திகளில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

### சமூக மாற்றக் கருவிகளாகக் கல்வியும் கலையும்

நாடகம் ஒரு அரசியற் கருவியாகச் செயற்பட முடியும் என்று Boal நம்பினார். அரசியல் மற்றும் முதலாளிய, அதிகாரக் கட்டமைப்புகள் சமூகங்கள் மீதும் தனிமனிதர்கள் மீதும் சுமத்திய ஒடுக்குமுறைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் உடைப்பதற்குரிய கருவியாக 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு' நாடக வடிவங்கள் மற்றும் உத்திகளை உருவாக்கினார். மக்கள் எதிர்கொண்ட துன்பங்களைப் பற்றிய புரிதலை அதிகரிக்கும் வகையிலும் - ஒடுக்குமுறையை உடைக்கும் நோக்கில் எவ்வகையாக அவர்கள்; தங்கள் நடத்தை மற்றும் செயல்களை மாற்ற வேண்டும் என்பதற்கான விழிப்புணர்வை அதிகரிக்கும் இலக்கினையும் அவர் உருவாக்கிய அரங்க வடிவங்கள் கொண்டிருந்தன.

மூன்று நூற்றாண்டுகளுக்கு (1500 - 1822) மேலாகப் போர்த்துக்கேய காலனித்துவ



ஆட்சிக்குக் கீழ் பிரேசில் இருந்தது. கொடுமையான அடிமைத் தொழில் மற்றும் ஐரோப்பாவிலிருந்து பரவிய பெருந்தொற்று நோய்களை எதிர்கொள்வதற்கான எதிர்ப்புசக்தி இல்லாத காரணத்தினாலும் அந்நாட்டின் பூர்வீகக் குடிமக்களிற் பெரும்பான்மையினர் இறந்திருந்தனர். பெருந்தோட்டங்களின் சீனி உற்பத்தியை அழியவிடாமற் பேணும் நோக்கில் காலனித்துவ ஆட்சியாளர்களால் ஆபிரிக்காவிலிருந்து அடிமைத் தொழிலாளர்கள் அங்கு கொண்டுசெல்லப்பட்டனர். பிரேசில் வளர்ச்சியடையாத மற்றும் அதிக வறுமையால் பாதிக்கப்பட்ட மூன்றாம் உலக நாடுகளில் ஒன்று.

### பவுலோ பிரெய்ரெயின் இளமைக்காலமும் குடும்பப்பின்னணியும்

அடிப்படையில் பிரேசில், அர்ஜென்ரீனா, சிலி உட்பட்ட தென் அமெரிக்க நாடுகளில் 1960 மற்றும் 1970 காலப்பகுதிகளில் நிலவிய ஒடுக்குமுறைகள் கடுமையானவை. மோசமான அரசியல், சமூக், பொருளாதார, மானிட அவலங்கள் சார்ந்த பாதிப்புகளை அவை உண்டுபண்ணின. பவுலோ 1921 இல் பிரேசிலின் வடகிழக்குக் கரையோரப் பெருநகரான Recifeஇல் பிறந்தார். மத்திய தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதும் பவுலோவின் இளமைக்காலத்தில் அவர்களின் குடும்பம் வறுமையில் வீழ்ந்தது. 1929இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியினால் முதலில் அமெரிக்காவும் - தொடர்ந்து ஐரோப்பாவும் ஏனைய உலகநாடுகளும் பாதிக்கப்பட்டன.

குடும்பவறுமை சிறுவனான பவுலோவின் நாளாந்த வாழ்வைப் புரட்டிப்போட்டது. உணவுத் தட்டுப்பாட்டினாலும் பசியினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பள்ளிப்படிப்பு பின்தங்கத் தொடங்கியது. Pauloஇன் குடும்பம் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் 1929 காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அனைத்துச் செல்வம், சொத்துகளை அவர்கள் இழக்க நேர்ந்தது. Paulo பதின்மூன்று வயதாக இருக்கும் போது அவரது தந்தை இறந்துபோகின்றார். நான்கு பிள்ளைகளையும் தனியாளாக வளர்க்கவேண்டிய பொறுப்பு தாயாரைச் சேர்கிறது. வறுமையும் சமூக அந்தஸ்து இழப்பினையும் அனுபவிக்க நேர்கிறது. இந்த அனுபவங்கள் ஏழை மக்களின் பக்கம் நிற்கவும் அவர்களின் வாழ்வு மேம்பட உழைக்கவும் அவரை உந்தித் தள்ளியது. பட்டினிக்கும் வறுமைத்துன்பத்திற்கும் எதிரான போராட்டத்திற்குத் தன்னை அர்ப்பணிக்க முடிவு செய்தான் அச்சிறுவன். தான் அனுபவித்த வறுமை, பசிக்கொடுமை, தோல்விகளை ஏனைய மக்கள் அனுபவிக்கக்கூடாது என்று உறுதிபூண்டான். உயர் கல்வியில் சட்டம், தத்துவம் மற்றும் இலக்கியம் கற்றார். 1946 - 1954 காலப்பகுதியில் பெர்னாம்புக்கோ (Pernambuco) மாநிலத்தின் சமூக சேவைகளின் கல்வியியல் - கலாசார கற்கைகளுக்கான நிறுவனத்தின் தலைவராகப் பணிபுரிந்தார்.

### விவசாயிகள் தொழிலாளர்களுக்கான கல்வி

எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ளவும் விரும்பும் எழுத்தறிவற்றவர்களுக்குக் கற்றல் வாய்ப்புகளை ஏற்பாடு செய்தார். அவரால் பிரேசில், சிலி ஆகிய நாடுகளில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட இத்தகைய கல்வியானது சமூக முன்னேற்றத்தில் ஒரு புதிய நிலையைப் பிரதிநிதித்துவம் செய்தது. காலப்போக்கில், பவுலோ அறிமுகப்படுத்திச் செயற்படுத்திய கல்விமுறை மூன்றாம் உலகில் புதிய கற்பித்தற் கருவியாக மாறியது. அவர் உருவாக்கிய கல்விமுறைகள் பிரேசில் முழுவதும் பரவின. இரண்டு ஆண்டுகளுக்குள் வளர்ந்தோரில் (Adults) ஐந்து மில்லியன் பேருக்கு வாசிக்கவும்; எழுதவும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற இலக்குடன் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு நிறைவான ஆதரவு அளிக்காத ஆசிரியர்கள் ஒடுக்குவோரின் பக்கம் நிற்பவர்கள் என்றும் அவர் கருதினார். அவர்கள் யதார்த்தத்தில் புதிய காலனித்துவவாதிகளாகச் செயற்படுபவர்கள் என்றும் குற்றம் சுமத்தினார். காலனித்துவவாதிகளின் அதிகார நிலைநிறுத்தலுக்கு நிலங்கள் கருவிகளாக இருந்தன. பின்-காலனித்துவ காலத்தில் ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாக இல்லாதவர்கள் 'மனித ஆன்மாக்களை' ஒடுக்குமுறைக்கு உட்படுத்துகின்றனர் என உவமைப்படுத்தினார்.

காலனித்துவ காலமும் அடிமை முறைமையின் பின்விளைவுகளும் சமூகங்கள் மத்தியிலும் நாடு முழுவதும் ஆழமான தடங்களைப் பதித்திருந்தன. குறிப்பாக வடகிழக்கு பிரேசிலில் மக்கள் தொகையின் அரைவாசிக்கும் மேற்பட்டோர்; எழுத்தறிவற்றிருந்தனர். இவர்கள் மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். மிகவும் பின்தங்கிய சூழலில் வாழ்ந்தனர். தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உட்பட பல உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். இப்புறநிலையில் சிறு விவசாயிகள் மற்றும் நிலத்தொழிலாளர்களுக்கு படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதற்கான உத்திமுறைமைகளை உருவாக்கத் தொடங்கினார். அது தனிமனித வளர்ச்சி, சமூக விழிப்புணர்வு மற்றும் அரசியல் மாற்றத்திற்கு மிகவும் அவசியம் என்று அவர் கருதினார்.

### மௌனக் கலாச்சாரம்

சிறுவனாக இருந்த காலத்தில் வறுமையை எதிர்கொண்டமையானது வறிய மக்கள் மத்தியில் நிலவிய 'மௌனக் கலாச்சாரம் (Silent culture)' குறித்த கண்டடைவுக்கு பவுலோவை இட்டுச்சென்றது. அதாவது கூட்டுணர்வும் மனிதர்கள் மீதான பரஸ்பர அக்கறையும் - ஒரு மனிதன் சக மனிதர் மீது கரிசனையுடைய பண்பாட்டு வாழ்வியலைக் கொண்டிருந்தாலும் - மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான செயல்வலு, வறிய மக்களிடத்து இல்லாதிருக்கிறது. அறியாமை, பசி, வறுமையினது நேரடி விளைவுகளால் மனிதர்கள் குடும்ப அமைப்பு, பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புமுறைகளின் நேரடிப் பலிக்கடாக்களாக ஆகுகின்றனர்.

மௌனக் கலாச்சாரம் என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் அறிவு மௌனத்தைக் குறிக்கின்றது. கருத்தினை வெளிப்படுத்தத் தயங்குகின்ற நிலையைக் குறிக்கின்றது. இந்தப் போக்கு அல்லாது கலாச்சாரம் எழுத்து மூலமும் வாய்மொழியாகவும் பரிமாறக்கூடிய, வெளிப்படுத்தக்கூடிய அறிவுக்குப் புறம்பானது. இம் மௌனக் கலாச்சாரம் ஏழ்மை மற்றும் ஒடுக்குமுறைச் சூழலுக்குள் மனிதர்களை நிரந்தரமாகக் கட்டிப் போடுகின்றது. நாளாந்தத்தை மேம்படுத்துவதற்குரிய வாய்ப்பு அங்கு இல்லாமலிருக்கின்றது. ஒடுக்குமுறைச் சூழல் குறித்துச் சிந்திக்கவோ, எதிர்க்கவோ, திட்டமிடவோ, விமர்சன விழிப்புணர்வை வளர்க்கவோ, படைப்பாற்றலோடு எதிர்வினையாற்றவோ அவசியமான சக்தியை வறுமைச் சூழல் உறிஞ்சிவிடுகிறது.

மாற்றத்திற்கான புதிய கருவியாக மாணவரும் ஆசிரியரும் மாறக்கூடிய சிந்தனை அவரிடத்தில் உருவானது. இருவழித் தொடர்பாடலும் உரையாடலும் இதில் மையமான அம்சம். இம்முறையினூடு ஆசிரியரிடம் மாணவர் தனது உள்ளத்துக் கேள்விகளைத் தடையின்றி எழுப்பலாம், ஈடுபாட்டினை, நம்பிக்கையை, எதிர்பார்ப்பினை உருவாக்கலாம். அதனூடாகச் சமத்துவத்தை நிலைநிறுத்தலாம். இருதரப்பும் 'மௌன கலாச்சாரத்தை' உணரலாம். கற்றலை இலகுபடுத்தலாம், குறிப்பாகச் சொந்த அனுபவங்களை உணர்வது, வாழ்வைப் பற்றிச் சிந்திப்பது, மதிப்பிடுவது, மீளாய்வது உட்பட்ட நிலைகளை இத்தகு கல்விமூலம் சாத்தியப்படுத்தலாம்.

### சொல்லிலிருந்து செயலுக்கு

சொல்லுக்கு செயற்பாட்டுப் பரிமாணம் இல்லாவிட்டால், பிரதிபலிப்பும் பாதிக்கப்படும். அத்தோடு சொற்கள் வெற்றுப்பேச்சாக அமையும் அல்லது மாறும். மறுவளமாகப் பார்க்கும் போது, செயற்பாட்டுப் பரிமாணம் இல்லாத சொல்லும் வார்த்தையும் பிரதிபலிப்பும் விளைவும் இல்லாது போகின்றது - செயற்பாடு உரையாடல் நீக்கம் செய்யப்பட்டதாகவும் மாறுகின்றது. பெல்ஜிய மதகுருவும் சமாதானத்திற்கான விருதுபெற்றவருமான *Dominique Pire (1910-1969)* இதே விடயத்தை 'அறிவைப் பெற்றுக்கொள்ளாமற் செயற்படுவது முட்டாள்தனம். செயல்பாடில்லாத அறிவு கோழைத்தனம்' என்று கூறுகின்றார்.

மனித வளர்ச்சிக்கும் சமூக மாற்றத்திற்குமான கல்வியியல் முறைமையை உருவாக்கி உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் *Paulo Freire*. 20ஆம் நூற்றாண்டில் சிறந்த எதிர்கால சமூக அடித்தளத்தை அமைப்பதற்கான பங்களிப்பினை வழங்கியவர்களின் வரிசையில் அவர் முக்கியமானவர். அவரை லியோ டால்ஸ்டாய், மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா ஆகிய அமைதிக்கும் சமூக மாற்றத்திற்கும் பங்களித்தவர்களின் வரிசையில் வைக்கின்றார் நோர்வேஜிய கல்வியியல் நிபுணர் *Eva Nordland*. 1970களில் நோர்வேயில் கற்பித்தல் முறைமைகள் தொடர்பான துறைசார் விவாதங்களைக் கூர்மைப்படுத்தியவர் *Eva*.

இவர்கள் நால்வரும் தமது முனைப்பான செயற்பாடுகளுக்கூடாக எதிர்காலத்திற்கான வழிகாட்டிகளாக ஆனவர்கள் என்கிறார் ஏவா. இவர்கள் அனைவரும் மனிதர்களை வளர்ச்சிக்குத் தயார்படுத்துவதற்கும் மனித வளர்ச்சிக்கான செயற்பாடுகளுக்கு உகந்த சூழமைவுகளை உருவாக்கும் சமூகத் திட்டங்களில் கவனம்செலுத்தினர். பல்வேறு பரிமாணங்களில் மாறுபட்ட அணுகுமுறைகளுக்கு ஊடாகவும், கீழிருந்து மேலான புரட்சிக்கான கருத்தியல் சார்ந்தும் - செயற்பாட்டியக்கம் சார்ந்தும் வலுவான முன்னெடுப்புகளைச் செய்துள்ளனர்.

பவுலோ உருவாக்கிய கற்பித்தல் முறையையின் அடிநாதம் ஒடுக்கப்பட்டிருக்கும் மனித ஆற்றல்களை விடுவிப்பதற்கான தனிமனித முயற்சியைத் தூண்டுவதாகும். சாதாரண மனிதர்கள் சுயமரியாதையையும் மனிதப் பெறுமதியையும் மீட்டெடுப்பது முக்கியமானது என்று அவர் கருதினார். அவருடைய செய்தி மிக எளிமையானது. சாதாரண மனிதர்கள் தம்மை ஒடுக்கும் அமைப்புமுறைகளிலிருந்து தம்மைச் சுயவிடுதலை செய்துகொள்ள வேண்டும், அதிகாரங்களுக்கும் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டுப் பேணப்பட்டவற்றிற்கும் கீழ்ப்படிதலிலிருந்து விலகவேண்டும். கசப்பான அனுபவங்களை செயற்திறனாகவும், சக மனிதர் மீதான கரிசனையாகவும் மாற்றவேண்டும்.

-தொடரும்

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | பி.பி. சைதாலி, மு.சாகுல் ஹமீது

# மதச்சார்பற்ற வரலாற்றுக்கதையாடல்களும், வகுப்புவாத சவால்களும்: களத்திலிருந்து எழும் பிரதிபலிப்புகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

அந்தக் கருத்தரங்க முடிவில் மக்களிடையே உணர்வுரீதியான ஒருங்கிணைப்பு உருவாக்குவதற்காக ஒரு குழுவை மத்திய கல்வி அமைச்சகம் உருவாக்கி மக்களை ஒருங்கிணைப்பதில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கும் அதற்குத்தகுந்தாற் போல் கல்விச் சூழலையும் உருவாக்குவதற்கான வழிவகைகள் குறித்துப் பரிந்துரைகள் அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்தக்குழு அளித்த பல்வேறு பரிந்துரைகளுக்குப் பின்னர் சிறு சிறு மாற்றங்களுடன் பல்வேறு கல்விக் கொள்கைகளின் மூலம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. அந்தக் குழு ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் வரலாறு மற்றும் புவியியலின் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்தியதோடு மாநில அரசாங்கங்களும் தங்களின் தனிப்பட்ட வரலாறுகளையும், புவியியலையும் பற்றிப் பாடப் புத்தகங்கள் எழுத ஊக்குவித்தது.[1]

அந்தக் குழுவின் பரிந்துரைகளே பின்னர் மதச்சார்பற்ற வரலாற்றுப் பாடப் புத்தகங்கள் எழுதுவதற்கு வரைவிலக்கணமாக இருந்ததோடு, தேசிய ஒருங்கிணைப்பை அடையவும் உறுதுணையாக இருந்தது. மேலும், இந்தக்குழு ஏற்கெனவே இருக்கக்கூடிய புத்தகங்களை ஆய்வின் அடிப்படையிலும் கமிட்டியின் பரிந்துரைகள் அடிப்படையிலும் மாற்றியெழுதத் தூண்டியது. மேலும், இக்குழு மதங்களுக்கிடையேயான வேறுபாடுகளுக்குப் பதிலாக மக்களிடையே ஒரு இணக்கமான பண்பாடு மற்றும் சமூக உறவுகளைப் பற்றி அறிவதற்கும், இந்திய தேசத்தின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் உருவாக்கியதில் சமூகத்தில் பல்வேறு வகுப்பினர் அளித்த பங்களிப்பு ஆகியவற்றைப் பதிவுசெய்ய வலியுறுத்தியது. குழு கடந்தகாலத்தை நிதர்சனத்தின் பிரதிபலிப்பாகவும், நிகழ்காலத்தை எதிர்காலத்துக்கான திட்டமிடுதலாகவும் பார்த்தது.[2]

அந்தக் குழு தன்னுடைய முக்கிய குறிக்கோளினை விவரிக்கையில், வரலாறு என்பது கடந்தகால மற்றும் நிகழ்காலத்துக்கு எந்தப்பயனும் இல்லாத போராட்டங்களுக்கும், போர்களுக்கும் தேவையற்ற முக்கியத்துவம் கொடுப்பதை விட முன்னேற்றத்தின் வரலாற்றையும் நாட்டின் ஒற்றுமைக்கான தேடலையும் வலியுறுத்துவது மிகவும் முக்கியமானது என்று குறிப்பிட்டது. இப்பரிந்துரைகளின் மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், நமது தேசிய-அரசு வரலாற்றை வரையறுப்பதன் மூலமாகவே தேச ஒற்றுமையை அடைய முற்படுகிறது என்பதேயாகும். அதுபோலவே, வரலாற்றில் எவை மறைக்கப்பட வேண்டியவை, மறுக்கப்பட வேண்டியவை என்பதையும் அரசே தீர்மானிக்கிறது. வரலாற்றின் இயற்கையான வளர்ச்சி சில சமயங்களில் தேசிய அரசைச் சீர்குலைக்கும் திறனைக் கொண்டுள்ளது என்பதை உணர்ந்ததன் அடிப்படையில் தேசிய-அரசு வரலாற்றின் களத்தில் கூட்டு நினைவூட்டல் (*Collective Rememberance*) மற்றும் மறக்கடித்தல் (*Selective Amnesia*) ஆகியவற்றைக் கையாளுகிறது. கடந்த காலத்தின்

1 Report of the Committee on Emotional Integration, p.xiii.

2 Ibid., p.135.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங்கோன்மைகள் மற்றும் வன்முறைகள் மீது ஒரு தேசம் உருவாக்கப்பட்டிருப்பதை வரலாற்று ஆய்வு வெளிக்கொண்டு வந்துவிடும் என்பதாலேயே அதை எப்பொழுதும் பொதுநினைவில் இருந்து அழித்தொழிக்க அரசு முயல்கிறது. ஒருமைப்பாட்டைச் சிதைவுறச் செய்வதில் வரலாற்றின் பங்கு பற்றி கூறும் ரீனன் வரலாற்றுப் பிழைகளே தேசத்தை உருவாக்குவதில் மிக முக்கியமான காரணியாக இருக்கிறது என்கிறார். அதனாலேயே வரலாற்று, ஆய்வின் வளர்ச்சி தேசியவாதத்துக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாகத் திகழ்கிறது. மொத்தத்தில், தேசிய-அரசு வரலாற்றைத் தன் தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்காகவே, அதன் இயல்பான வளர்ச்சியைத் தடைசெய்வது, புதிய போக்குகளைத் தடுப்பது, எதிர் குரல்களை அடக்குவது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுகிறது.[3]

### மதச்சார்பின்மை வரலாறுகளின் வரம்புகள்

*1960 & 1970* களில் புதிய வரலாற்றுப் பாடப் புத்தகங்கள் மிகச் சிறந்த வரலாற்று ஆசிரியர்களால் தேசிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவுக்காக *(NCERT)* இந்தியா முழுவதும் எழுதப்பட்டபோது கல்விக்குழுவின் பரிந்துரைகளான உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாடு *(Committee on Emotional Integration)* பற்றிய வரலாறு எழுதப்படுவது சாத்தியப்பட்டதோடு நாடு முழுவதும் பயன்பாட்டுக்கும் வந்தது. ரொமிலாதாப்பர், ஆர்.எஸ்.சர்மா, சதீஷ்சந்திரா, பிபின்சந்திரா போன்ற மிகச்சிறந்த வரலாற்று ஆசிரியர்கள் இந்த வரலாற்றை மீண்டும் எழுதும் இத்திட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தார்கள். நாடு முழுவதும் சன்னம் சன்னமாக வளர்ந்துகொண்டிருந்த வகுப்புவாதச் சிந்தனைகளும், வகுப்புக் கலவரங்களும், இவ்வரலாற்று ஆசிரியர்கள் கடந்தகால வரலாற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மனிதநேயமிக்க மதசார்பற்ற, ஜனநாயகத்தன்மை கொண்ட வரலாற்றை எழுதுவதற்குத் தூண்டுகோல்களாக அமைந்தன. இவ்வரலாற்று ஆசிரியர்கள் மதச்சார்பற்ற அறிவியல்பூர்வமான வரலாறுகளை எழுதியதோடு, காலனிய மற்றும் வகுப்புவாத முன் முடிவுகளைக் *(Sterotypes)* கொண்ட வரலாறுகளைச் சரியாக இனம் கண்டு அடையாளப்படுத்தினர்.[4] மேலும், இந்த மதச்சார்பற்ற வரலாறு எழுதும் திட்டம் பிரிவினைவாத நம்பிக்கைகளையும், வரலாற்றுத் தொன்ம உணர்வுகளையும் விமர்சித்ததோடு புதிய மதச்சார்பற்ற பொது உணர்வை உருவாக்கும் தன்மையை நோக்கமாகக் கொண்டது.[5] தொழில்சார் மனப்பான்மையும், தரப்படுத்துதலும் வரலாற்றின் ஒரே சீரானதன்மையும் இம்முன்முயற்சியின் பிற விளைவுகள் ஆகும். இவ்வாறு எழுதப்பட்ட இப்பாடப் புத்தகங்கள் நாடு முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இம்மதச்சார்பற்ற வரலாறுகளின் தன்மைகள், மாநில அளவில் சில மாற்றங்களுடனும் விரிவாகப் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளின் பாடத் திட்டங்களிலும் உள்ளடங்கி இருக்கின்றன.

இந்நூற்றாண்டின் கடைசி பதிற்றாண்டுகளில் இப்பாடப் புத்தகங்கள் ஒரு வலுவான கடந்தகால விவரிப்புகளைக் கொண்டதாகவும் அதிகாரப்பூர்வமான உண்மைத்தன்மை கொண்டதாகவும் விளங்கின. *2005-2006*இல் எழுந்த கடுமையான எதிர்ப்புக்குப் பிறகே தேசியக் கலைப் பாடத்திட்டத்தில் *(National curriculam Frame Work)* வரலாறு பாடத்திட்டம் பெரும் திருத்தல்களுக்கு அல்லது சீரமைப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இப்பாடத்திட்ட சீரமைப்பு கற்றுக்கொள்வதற்கும், ஆராய்வதற்கும், வரலாற்றைக் கற்பித்துக் கொடுப்பதற்கும் மிகப் பொருத்தப்பாட்டோடு இருந்ததோடு, சமகாலத்தன்மை கொண்டதாகவும் அனைத்தையும் உள்ளடக்கியிருந்ததோடு இருதரப்பார் உரையாடுவதற்கான தொடர்புகளையும் புதியவழி முறைகளையும் உள்ளடக்கிய புதிய கல்விப்புலனாக மாறியது. எனினும், இப்புதியமுறைகள் சமூகத்தின் உயர் அடுக்குத் தன்மை கொண்ட பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இந்தியாவின் மிக முக்கிய பெருநகரங்களிலும் மட்டுமே வீரியமாக அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டும் வந்தது. இச்சீர்திருத்தப்பட்ட பாடத்திட்டம் இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு

3 Renan, Ernest, 'What is a Nation?', op.cit, p.3.

4 Bhattacharya, Neeladri, 'Teaching History in Schools: The Politics of Textbooks in India', in History Workshop Journal, no. 67 (2009), pp. 99-104.

5 Bhattacharya, Neeladri, 'Predicaments of Secular Histories', in Public Culture, Vol. 20, no. 1 (2008), p.70.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளிலும் ஊடுருவ வேண்டி இருந்தது. அங்கே தான் காலம் காலமாக எந்த மாற்றமும் இல்லாமல் மரபார்ந்த அரசியல், பொருளாதார வரலாறுகள் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கிறது. மதச்சார்பற்ற வரலாறு பற்றியும் அதன் உண்மையான களநிலவரங்களையும் அதன் வரம்புகளையும் மீண்டும் விவாதத்துக்கு உட்படுத்த வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. வரலாற்று ஆசிரியர்கள் நீலாதிரிபட்டாச்சாரியா மற்றும் சில்வியாகுயிச்சர் அவர்களுடைய ஆய்வுகளில் மதச்சார்பற்ற பாடப் புத்தகங்களில் உள்ள சிக்கல்களைக் குறிக்கும் கீழ்க்காணும் கருத்துகளைப் பதிவுசெய்கிறார்கள்:

- தேசத்தை ஒரு இயற்கையான அல்லது மரபார்ந்த நிறுவனமாக முன்வைப்பதோடு நிகழ்காலத்தின் தேச நிலை கடந்த கால வரலாற்றுடன் தொடர்பு படுத்தப்படுகிறது.
- தேச ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமைப்பாட்டு நோக்கத்துக்காக ஒரே சீரான மதச்சார்பற்ற வரலாற்றைக் கொண்ட தேசமாகக் கதையாடல்கள் பிரபலப்படுத்தப்படுகின்றன.
- சமகால இந்தியாவில் முஸ்லிம்களின் நிலையை வரையறுக்க இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் கடந்த காலத்தில் நடந்த வரலாற்றுத் தொடர்புகளைப் பயன்படுத்தப்படுவது என்பது இந்த முன்மொழிவுகளின் ஆபத்துக்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு.
- வரலாறு ஒரு நேரிய வளர்ச்சி கொண்டதாகவும், கருத்திணக்கம் மற்றும் ஒத்திசைவோடும், அனைத்து வறட்டுக் கோட்பாடுகளையும், இருக்கத் தன்மைகளையும் வலுவிழக்கச் செய்ததாக முன்வைக்கப்படுகிறது.
- இது கடந்த கால வன்முறைத் தொடர்களை வரலாற்றிலிருந்து அழிப்பதன் மூலமாக அடையப்பெற்றது. இவை தேசத்தை உருவாக்குதல் மற்றும் ஒருமைப்பாட்டுக்கான வழிமுறைகளோடு தொடர்புடையவை. அதேநேரத்தில் தேசத்தின் வெவ்வேறு சமூகங்களுக்கிடையே நடந்த வன்முறைகள் வரலாற்றில் இருந்து நீக்கப்படுவதோடு, தேசத்துக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான மோதல்கள் முக்கியத்துவப்படுத்தப் படுகின்றன.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவில் உண்மையான அல்லது கற்பனையான வரலாற்றுக் காயங்களுக்குப் பழிவாங்க சகிப்புத்தன்மையற்ற மனநிலை கொண்ட சமூகத்தை உருவாக்குவதைத் தவிர்ப்பதற்காக, மதத்தைப் பற்றியும் மற்றும் பிற சமூக அமைப்புகளின் செல்வாக்கு பற்றியும் வரலாற்றில் குறைத்து மதிப்பிடப்படுகிறது. மாறாக, பல்வேறு விளைவுகளுக்கு அரசியல் மற்றும் பொருளாதார காரணங்களே பிரதானமாக இருந்தன என்று கூறப்பட்டது.

இப்போக்குகள் வரலாற்றை ஒரே சீராக்கம் செய்வதாலும், மதச்சார்பற்ற தன்மை கொண்டதாக மாற்றுவதால் கடந்த காலத்தைப் பற்றியும், நிகழ்காலத்தைப் பற்றியும் புரிதல்களில் பெரும் பிளவுகளை மாணவர்களிடையே ஏற்படுத்துகின்றன. வரலாற்றை ஒரே நேர்க்கோட்டுத்தன்மை கொண்டதாகவும், முற்போக்குத் தன்மை கொண்டதாகவும் முன்னிறுத்தியதால் தற்காலத்தில் உள்ள போட்டிகள், முரண்பாடுகள், பிரிவினைவாத நீர் ஓட்டங்களைப் புரிந்துகொள்வதில் தவறிவிடுகின்றன. இறுதியில் வரலாறு தற்போதைய எதார்த்தங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கையிலிருந்து துண்டிக்கப்பட்ட சலிப்பான பாடமாக மாறுகிறது.

வளர்ந்துவரும் வகுப்புவாதப் பின்னணியில் பாடத்திட்ட திருத்தத்துக்கு எதிரான பழைய மதச்சார்பற்ற வரலாற்று ஆசிரியர்களின் இடையீடுகள் சமூகத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியதோடு, பள்ளிப் பாடப்புத்தகங்களில் புதிய விமர்சனப்பூர்வமான அணுகுமுறைகளையும், புதிய கட்டமைப்புகளையும் அறிமுகப்படுத்துவதைத் தடுத்தன. பாலின வரலாறுகளும், சுற்றுச்சூழல் வரலாறுகளும், பண்பாட்டு வரலாறுகளும், கீழ் இருந்து எழும் வரலாறுகளும், விளிம்பு நிலை ஆய்வுகளும் விமர்சனக் கோட்பாடுகள் கூடிய பின் காலனிய ஆய்வுகள் போன்ற ஆய்வுகள் எவையும் புதிய வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப்படவில்லை.

-தொடரும்

கட்டுரையாளர்: பேராசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | க. பழனித்துரை

# அரசுடன் சமூகம் இணைய வேண்டும்

நான் நற்செயல்களுக்கு எவருடனும் இணையத் தயங்குவதில்லை. செயல்களே நமக்கு விடுதலை தரும் என்ற கண்ணோட்டத்தில் செயல்படுபவன். ஆகையால், பலர் என்னை அழைக்கும்போதெல்லாம் எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது சென்று அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வேன். அதில் எனக்கும் ஒரு பலன் கிட்டும். மக்களுடன் இணைந்திருக்கும்போதுதான் மக்களின் உண்மையான நிலைமையைப் புரிந்துகொள்ள முடியும். அப்படிப் பல நிகழ்வுகளுக்குச் சென்றுவருவது இன்று என் வாழ்வில் தொடர் பணியாகிவிட்டது. அதில் ஒன்று பள்ளிக்கல்விச் செயல்பாடுகளில் இணைவது. அண்மைக் காலமாக ஒரு சமூக மேம்பாட்டுக்கான இயக்கம் பொதுப்பள்ளிகளில் சிறந்து விளங்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்துத் தொடர் பயிற்சியளித்து அவர்களை மாணிக்க மாணவர்கள் என்ற பெயரிட்டு உற்சாகமூட்டி சமூகச் செயல்பாடுகளில் ஈடுபடுத்துகிறது. அதில் என்னை ஈடுபடுத்திக்கொள்ள அவர்களுடன் உரையாடுவதைத் தொடர் செயல்பாடாக்கியுள்ளேன்.

பொதுப்பள்ளிகளைப் பாதுகாத்து மேம்படுத்துவது சமூகத்தின் தலையாயப் பணி. கல்வியைக் கண்ணாகப் பாவித்து அதற்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்படும் சமூகம் மேம்பட்டுவிடும். எனவே, ஒரு கட்டடத்திற்கு அஸ்திவாரம் போன்றது மனித வாழ்வுக்கு ஆரம்பகாலக் கல்வி. எனவே, தொடக்கக் கல்வியை எந்த அளவுக்குச் செறிவாக எல்லாத் தரப்பு மக்களுக்கும் நம்மால் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நாம் முயன்று கொடுக்க வேண்டும். அதன் மூலம்தான் சமத்துவமற்ற தன்மையை எல்லா நிலைகளிலும் நம் சமுதாயத்தில் நீக்கி சமத்துவத்தைக் கொண்டுவர முடியும்.

இங்குதான் நாம் சிக்கலில் ஆட்பட்டு நிற்கிறோம். பொதுப்பள்ளியை ஏழைகளுக்கானதாக்கிவிட்டோம். அது கவனிப்பாரற்றுச் செயல்படுவதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பளித்து விட்டது. எனவேதான் நமது பொதுப்பள்ளிகளைப் பாதுகாக்க வேண்டும் எனப் பலர் களத்தில் செயல்படுகின்றனர். ஏழைகளைப் பற்றிச் சிந்திப்பதும் பொது நிறுவனங்களைப் பாதுகாப்பதும் அவற்றை மேம்படுத்துவதும் மிக முக்கியப் பணிகள். காரணம் ஏழைகளால் கல்விக்கோ மருத்துவத்திற்கோ செலவிட முடியாது. அவர்கள் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும் உழைத்துச் சேர்த்த பணம் போதாது என்பதால்தான் ஏழைகளுக்கு அரசு விலை இல்லா உணவுப்பொருள் கொடுக்கிறது; வீடுகட்டித் தருகிறது; வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கிறது. இந்தச் சூழலில் பொது நிறுவனங்களைப் பாதுகாப்பது ஏழைகளைப் பாதுகாப்பதாகும்.

அரசாங்கம் ஊழல் நிறைந்ததாகச் செயல்பட்டாலும், பல நற்செயல்களைச் செய்யாமல் மக்களாட்சி நாட்டில் இருக்க முடியாது. அப்படி அரசு எடுக்கின்ற நற்செயல்களுக்கு ஆதரவாக நிற்பதுதான் சமூகக் கண்ணோட்டம் கொண்டவர்களின் பண்பாக இருக்க முடியும். பொதுப்பள்ளியை மேம்படுத்த அரசு எடுக்கும் நல்ல முயற்சிகளில் பங்கெடுப்பது அத்தியாவசியமானது என்று உணர்ந்ததால் அவர்கள் அழைக்கின்ற நிகழ்வுக்குச் சென்றிட முனைவதுண்டு.

அப்படி அண்மையில் ஒரு நிகழ்வுக்குச் சென்றுவரப் பள்ளிக் கல்வித்துறை கேட்டுக் கொண்டது. அதன்படி 24.6.2025 அன்று சின்னாளப்பட்டியிலிருக்கும் அரசுப் பள்ளிக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தேன். பொதுவாக, அரசுப்பள்ளி என்றால் அது பாவப்பட்டது என்ற எண்ணம் பலருக்கும் உண்டு. ஆனால், நான் அப்படிப்பட்ட எண்ணம் கொண்டவன் அல்லன். ஏனெனில், எல்லா நிறுவன வெற்றிக்கும் அங்குள்ள மனிதர்களின் செயல்பாடுகள்தாம் காரணங்கள். அங்குள்ள மனிதர்களின் தன்மைக்கேற்பத்தான் நிறுவனங்களும் இருக்கும்; அமைப்புகளும் இருக்கும்; செயல்பாடுகளும் இருக்கும். ஒரு நிறுவனத்தை அதன் செயல்பாடுகளில் உச்சம்பெறவைப்பதும், உட்காரவைப்பதும் அங்கே பணிபுரியும் மனிதர்கள்தாம். இதுதான் மேலாண்மைக் கோட்பாடு.

அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் இரண்டு நாள்களுக்கு முன்பே பேசி, தேதியையும் நேரத்தையும் என்னிடம் வாங்கிவிட்டார். மதியம் 2.50க்குப் பள்ளி வளாகத்திற்கு வாருங்கள் என்றார். அந்தப் பள்ளிக்கு மதியம் சரியாக 2.50க்குச் சென்றேன். தலைமையாசிரியர் அறைக்குச் சென்றேன், ஆசிரியர் ஒருவர் என்னைத் தலைமையாசிரியர் அறையில் அமரவைத்தார். உடனே அந்த அறை எப்படி இருக்கிறது எனக் கவனித்தேன். தலைமையாசிரியர் அறை சுத்தமாக இருந்தது. அனைத்துப் பொருள்களும் முறையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அனைத்துத் தகவல்களும் கரும்பலகையில் படிக்கத் தெளிவாக எழுதப்பட்டிருந்தன. தலைமை ஆசிரியர் அறையில் வள்ளலார் படம் அங்கு வருவோரை வரவேற்றுக்கொண்டிருந்தது. அந்தத் தலைமை ஆசிரியர் தகைசால் ஆசிரியராக இருந்ததை அவருடன் உரையாடியபோது காணமுடிந்தது. நிகழ்வின் நோக்கத்தைத் தெளிவான மொழியில் விளக்கினார். மிகவும் பக்குவப்பட்ட மனிதராகத் தெரிந்தார். செய்தித்தாள் படிப்பவராக இருந்ததால் மிக எளிமையாக அவருடன் என்னால் உரையாட முடிந்தது. சரியாக நான்கு மணிக்கு மரத்தடியில் நல்ல இயற்கைச் சூழலில் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆசிரியை ஒருவர் மிகத் தெளிவாக சிறப்புக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிவிட்டு அனைவரையும் வரவேற்றார். தலைமையாசிரியர் நல்ல தமிழில் என்னை அறிமுகப்படுத்திவிட்டுப் பேச அழைத்தார்.

பொதுவாக, மாணவர்களுடன் உரையாடும்போது, வாழ்க்கை அனுபவப் பகிர்தலோடு ஆரம்பிப்பது என் வழக்கம். குறிப்பாக, என் பள்ளி வாழ்க்கைச் சவால்களைச் சமாளித்து வந்ததைச் சம்பவங்களுடன் விளக்குவேன். அதையே இங்கும் செய்துவிட்டு, நம் மாணவர்களுக்கு இன்று தேவை சான்றிதழ் மட்டுமன்று; நல்ல தகுதிகளும் நல்ல பண்புகளும்தாம். இவற்றை நாம் வளர்த்துக்கொண்டால் சமுதாயம் தேடும் நாடு தேடும் மனிதராக நாம் விளங்க முடியும் என்பதை விளக்கினேன். அங்கே கூடியிருந்த மாணவர்கள் அனைவரும் அமைதியாக, கவனமாக உரையைக் கேட்டுக்கொண்டிருந்தது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அனைவரும் சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்த மாணவர்கள். எந்த ஆசிரியரும் விசில் ஊதி மாணவர்களை மேய்க்கவில்லை. இயல்பாக அனைவரும் அமைதியாகக் கவனமாக அமர்ந்திருந்தனர். எந்த மாணவரும் அருகில் இருந்த மாணவருடன் பேசி என்னைச் சிரமப்படுத்தவில்லை. என்னைக் கவனித்து என்னை ஆர்வமூட்டிய வண்ணம் இருந்தார்கள். இது எனக்கு வித்தியாசமாகவே இருந்தது. உரையையும் உரையாடலாகத்தான் நிகழ்த்தினேன்.

உங்கள் கனவு என்ன என்று கேட்டபோது, பெரும்பாலும் IAS ஆகவேண்டும், மருத்துவராக வேண்டும், வழக்கறிஞராக வேண்டும் என்றுதான் கூறினார்கள். உடனே, நீங்கள் பணியாளராக வேண்டுமா, ஒரு நல்ல சமூகத்திற்கு வழிகாட்டும் பொறுப்புமிக்க மனிதராக மற்றவர் போற்றும் மனிதராக வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு, சிலர் நல்ல தலைவராக வேண்டும் என்றனர்.

வாழ்க்கை குறிக்கோள்கள் கொண்டது. மனிதர்கள் தமக்காக வாழக்கூடியவர்கள் அல்ல. மனிதர்கள் லட்சியங்களுக்காக வாழக்கூடியவர்கள். மருத்துவராக வேண்டும் என்பது தவறன்று, மருத்துவராகி என்ன செய்யப்போகிறோம் எப்படிச் செய்யப் போகிறோம், யாருக்காக வாழப்போகிறோம் என்பதில்தான் லட்சியம் உள்ளது. ஒரு ரூபாய் மருத்துவர், ஐந்து ரூபாய் மருத்துவர், பத்து ரூபாய் மருத்துவர்களைப் பார்த்து இருக்கிறோம். ஏழைகளுக்காக வாழ்வதை லட்சியமாகக் கொண்டவர்கள்தாம் அவர்கள். எனவே, ஒரு குறிக்கோளுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் என்றால் இந்தச் சான்றிதழ் படிப்பினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகக்கூடியது அல்ல. இதற்கு நமக்கு ஒரு கனவு வேண்டும். அது நம்மைத் தூங்கவிடக் கூடாது. அந்தக் கனவு ஆழ்மனதிலிருந்து அந்தக் கனவை நிறைவேற்றும் வரை நம்மைத் தட்டி எழுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். நம்மைச் செயலில் தோயவைக்க வேண்டும்.

நாடும் நாமும் சிறப்படைய நமக்குத் தேவை இன்று புதிய தலைமைத்துவம். தலைமைத்துவம் என்பது மற்றவர்களை அடக்கி ஆள்வது அன்று. மற்றவர்களுக்கு வழிகாட்டுவது. நமக்கு நாமே தலைமை ஏற்பது. முதலில் அந்தத் தலைமைத்துவத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கான அறிவு, ஆற்றல், திறன், நல்லுணர்வு அனைத்தும் நாம் வளர்த்துக் கொண்டால்தான் நம்மை நாம் மாற்றிக்கொள்ள முடியும், நம்மால் மற்றவர்க்கு வழிகாட்ட முடியும்.

அடுத்து நாம் எங்கிருந்தாலும் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும். நம் வீட்டில் பொறுப்புடன் செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும். நம் வீட்டில் நாம் பொறுப்புடன் செயல்படும்போது வீட்டில் உள்ள அனைவரும் நம்மை மதிக்கக்கூடியவராக, மற்றவர்களின் அன்பைப் பெறக்கூடியவர்களாக நாம் மாறிவிடுவோம். அதேபோல் பள்ளியில் நம் அறையின் துய்மைக்கு நாம் பொறுப்பேற்க வேண்டும் நம் அறை நம்முடையது. அதன் தூய்மை நம் கையில் என்ற உணர்வுடன் புரிதலுடன் செயல்பட வேண்டும். வகுப்பில் நாம் தலைமை ஏற்கும்போது பிறரால் அறியப்படுவோம், ஆசிரியரால் அறியப்படுவோம், அடுத்து பள்ளிக்குத் தலைமை ஏற்றுப் பள்ளி நிகழ்வுகளில் பங்கேற்பது, அவற்றை நடத்துவது எனப் பல பொறுப்புகளைப் பள்ளியில் எடுத்துச் செயல்படும்போது, நாம் மற்றவர்களால் மதிக்கப்படக்கூடியவராக மாறிவிடுவோம். அதன்மூலம் நம் ஆளுமைத்திறன் வளரும்.

அடுத்து நாம் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் மிக முக்கியமான பணி. மற்றவரை நேசித்தல், மற்றவர்மேல் அன்பு பாராட்டுதல், இரக்கம் கொள்ளுதல், கருணை காட்டுதல், நேர்மறையாகப் பேசுதல், இனிமையாகப் பேசுதல், மற்றவர்களை மரியாதையுடன் நடத்துதல் எந்த இடத்திலும் அறமற்றுச் செயல்படாமல் இருத்தல், நியாயத்தின் பக்கம் நிற்றல் போன்ற பண்புகளை வளர்த்துக்கொண்டு செயல்படுதல்தாம் இன்று நமக்குத் தேவை.

அடுத்து நமக்குள் ஒளிந்திருக்கும் தனித்திறன் என்ன என்பதைக் கண்டுபிடித்து வளர்த்தல். சிலருக்குப் பாட வரும், சிலருக்கு ஆட வரும், சிலருக்குப் பேச வரும், எழுத வரும், சிலருக்கு விளையாட்டு பிடிக்கும், சிலருக்கு ஓவியம் வரும் அவற்றைக் கண்டுபிடித்து அதை வளர்க்க நாம் கற்றுக்கொண்டு விட்டால் நாம் நாமாகத் தனித்துவம் மிக்கவராக வளர்ந்துவிடுவோம். நாம் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள். எனவே, நம்மிடம் உள்ள தனித்துவத்தைக் கண்டுபிடித்து நம்மை வளர்த்து மெருகேற்றிக்கொள்ள வேண்டும்.

அடுத்து இவை அனைத்துக்கும் மேலாக நாம் சமூகக் கண்ணோட்டம் கொண்டவராக நம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்கு. நாம் தனியே வாழ இயலாது. மனித வாழ்க்கை ஒரு கூட்டுறவில் நடைபெறும் நிகழ்வாகும். சமூகத்தில் பிரச்சினைகளும் பிணக்குகளும் நிறைந்திருக்கும்போது தனிமனிதர்களாக நாம் நிறைவாக அமைதியாக மகிழ்ச்சியாக வாழ இயலாது. எனவே, சமூக நிகழ்வுகளில் நமக்கும் பங்கு உண்டு என்பதை உணர்ந்து சமூகத்தில் நாம் ஒரு பங்காளராகப் பயணிக்க நம்மை நாம் தயார் செய்துகொள்ள வேண்டும்.

மேற்கூறிய செயல்பாடுகள் அனைத்தும் அவையாக நம்மிடம் வந்து சேர மாட்டா. அதற்கான தனித்துவ முயற்சி வேண்டும். பயிற்சி வேண்டும். ஒரு லட்சியக் கனவு நம் ஆழ்மனதுக்குள் தங்கி நம்மை இயக்கும்போதுதான் அந்தப் பயிற்சியிலும் முயற்சியிலும் நாம் ஈடுபடுவோம். இவை மிக எளிதாக வருவதில்லை. நாம் கடினமாக உழைக்க வேண்டும். கடின உழைப்புக்குத் தயாராகாத எவரும் மேம்படுவதும் இல்லை, முன்னேறுவதும் இல்லை.

நாம் நம்மை உயர்த்திக்கொள்ள முனையும்போது சவால்கள் தொடர்ந்துவந்த வண்ணம் இருக்கும். அவற்றைச் சமாளிக்க நாம் கற்றுக்கொண்டுவிட்டால் நாம் உயர்வதை நாமே உணர முடியும். அதுதான் நமக்கு உந்து சக்தி. அடுத்து வளரும் மனிதருக்கு எது எதிரி என்றால் கூச்சமும் அச்சமும்தான். எனவே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கூச்சத்தையும் அச்சத்தையும் போக்கி வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் நடைபெற நாம் ஒற்றைப் புள்ளியில் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டவர்கள்தாம் முன்னேறி இருக்கிறார்கள். மகாபாரதத்தில் அர்ச்சுனன் ஆலமரத்து உச்சிக்கிளையில் இருந்த கிளியின் கழுத்தில் இருக்கும் வெள்ளை மட்டும்தான் தெரிகிறது என்று கூறி அதை அம்பு வீசி, வீழ்த்தி வெற்றிபெற்றதுபோல் நாம் ஒற்றைப் புள்ளியை இலக்காகக் கொண்டு செயல்படப் பழக வேண்டும் என்று கூறி உரையை நிறைவுசெய்தேன்.

அடுத்து பின்னூட்டமாக இரண்டு மாணவர்கள் கேள்வி கேட்டார்கள். ஆண் ஒருவர் பெண் ஒருவர். அதற்குப் பதிலளித்து முடித்தவுடன் மாணவர்களிடம், இந்தக் கூட்டத்தில் நான் கூறிய பெரும்பாலான பண்புகள் நிறைந்த ஒரு மாணவனை, ஒரு மாணவியைத் தேர்ந்தெடுங்கள் என்று கோரினேன். மாணவர்களே ஆண்களில் ஒருவரையும் பெண்களில் ஒருவரையும் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களுக்குப் புத்தகங்களைப் பரிசாக வழங்கினேன்.

அந்த நிகழ்வுக்கு நன்றி கூறிய ஆசிரியை, அந்த இரண்டு மாணவர்களும் தகுதிகள் உடையவர்கள் என்பதை அந்த மாணவர்களின் செயல்களைக் கூறி விளக்கினார். எங்கள் மாணவர்கள் நேர்மையானவர்கள், தகுதியுடையவர்களைச் சரியாகத் தேர்வுசெய்தார்கள் என்று விளக்கியது நிறைவாக இருந்தது. நல்ல தலைமை ஆசிரியர், பொறுப்புடன் நிகழ்வை நடத்தியது, மாணவர்களின் கட்டுப்பாட்டு ஒழுங்கு, ஆசிரியர்களின் முழுமையான பங்கேற்பு ஆகியவை பெரிய நம்பிக்கையைத் தந்தன.

அந்த நிகழ்வை முடித்து தலைமையாசிரியர் அறைக்கு வந்தபோது, தாம் ஓர் எழுத்தாளர் என்று கூறி அவர் எழுதிய புத்தகத்தைத் தந்தார். பள்ளியை விட்டு வெளியேறும்போது ஒரு நற்செயலுக்குப் பாத்திரமாக இருந்த நல்ல உணர்வுடன் வெளியேறினேன்.

●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்

கவிதை | ASM. முனியாண்டி



தண்ணீர்ப் பானையில்
குலதெய்வமும்,
மஞ்சளில் அம்பிகையும்,
அரிசியில் சிவனும்,
ஊறுகாயில் குபேரனும்,
அஞ்சறைப்பெட்டியில்
மகாலட்சுமியும்,
உப்பில் அன்னலட்சுமியும்
துவரம்பருப்பில் முருகனும்
குடியிருக்கிறார்கள் என்று
சொன்ன அம்மாவிடம்
மகன் கேட்டான்
நாம மட்டும் ஏம்மா வீடில்லாம
வீதியில குடியிருக்கிறோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

THE ZUSAANLI GROUPS
TZG
Since 1992

# NAYAGARA
## HAIR GRIP OIL

# மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
# ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாசஃப்ரீ.**

**நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.**

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



கிடைக்குமிடம் :

## வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A, பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்-1.

**செல் : 93676 22248, போன் : 04142-355418**

**மேலும் விபரங்களுக்கு : 96003 09546, 93676 22256**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்.தனசேகரனின் கவிதை உலகம்



Death is a scandal. The machine is functioning,
We are all hostages.

*- Elias Canetti*

சொன்னால் எவரும் நம்பமாட்டார்கள். ஆனால் ஓர் உண்மையை நான் சொல்லித்தான் தீர வேண்டும், பொன்.தனசேகரன் நாற்பதாண்டுக்கும் மேலாக என் குடும்ப நண்பராக உள்ளவர்; மூத்த பத்திரிகையாளர். 'தினமணி' ஏட்டின் ஆசிரியர்களில் மாபெரும் ஆளுமைகளாகத் திகழ்ந்த மூவரைப் பற்றிய சிறப்பான நூல்களை எழுதியவர். ஊடகத் துறையைப் பற்றிய ஆழமான புரிதலையும் தகவல்களையும் கொண்டிருப்பவர். ஆனால் அவர் கவிஞர் என்பதும் அவருடைய மூன்று கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன என்பதும் எனக்கு அண்மைக் காலம் வரை தெரியாமல் இருந்தது என்பதை மற்றவர்கள் நம்புவது கடினம். அவருடைய 'பரமபத சோபன படம்' என் கைக்கு வந்த பிறகுதான் அவருடைய கள்ளமில்லாத, நேர்மையான வாழ்க்கை முறையைப் போலவே அவருடைய கவிதைகள் அமைந்துள்ளன என்பதை அறிந்துகொண்டேன்; வெட்கக்கேடுதான், ஆனால் இதுதான் உண்மை.

எனக்கும் கவிதைகள் பிடிக்கும். அரசியல் என் இரத்தத்தில் இரண்டறக் கலந்துவிட்டதால், அரசியலும் சமூக உணர்வும் கொண்ட கவிதைகளுக்கு முன்னுரிமை கொடுப்பேன். நஸிம் ஹிக்மத் முதல் மஹ்மூத் தார்வீஷ் வரை தாயகத்தின் விடுதலைக் குரலைத் தம் கவிதைகளில் ஒலித்தவர்கள் வரை, தமிழ் தேசியக் குரல்களான பாரதிதாசன் முதல் இன்குலாப் வரை - தத்துவ, அரசியல் சார்ந்த கவிதைகளை என் இரசனைக்குள்பட்ட கவிதைகளின் வகைகள் பலதரப்பட்டவை. என் நெஞ்சில் நிலைத்திருக்கும். அழகான, ஆழமான அரசியல் கவிதைகள் என்பன சுவரொட்டி சுலோகங்கள் அல்ல. கவிதைக் கலையில் ஆழ்ந்த ஞானம் உடையவர்களால் எழுதப்படும் அரசியல், சமூகக் கண்ணோட்டம் உடைய கவிதைகளே நீடித்து நிலைபெற்று நிற்கும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பன அரசியல், சமூக உணர்வைக் கொண்டவைதான். சமுதாய உணர்வுடன் மாபெரும் உலகக் கலைஞர் -நாடகாசிரியர், சோன்னெட் வகைக் கவிதைகளை எழுதியவர் ஷேக்ஸ்பியர். எடுத்துக்காட்டாக 'லியர் அரசன்' (King Lear) நாடகத்தில் இடம் பெறும் கவிதைகளிலொன்று:

நைந்த ஆடைகளூடாக
சிறு சிறு தவறுகள் தென்படும்
பட்டாடைகளும் பகட்டு அங்கிகளுமோ
எல்லாவற்றையும் மூடிவிடும்.
பாவத்திற்குத் தங்க முலாம் பூசிவிட்டால்
நீதியின் வலுவான ஈட்டியும்கூட
முனையுடைந்து போகும்.
ஆனால் பாவத்திற்குக் கந்தலாடை உடுத்தினாலோ
சித்திரக் குள்ளனின் சிறு துரும்பும்கூட
அதைக் குத்திக் கிழித்துவிடும்.

இமய மலைத் தொடர்ச்சியாய் சீனாவில் நீண்டு நெடுதுயர்ந்து நிற்கும் மலைகளிலொன்று 'குன்லுன்' அதைப் பற்றிய கவிதைகளிலொன்று இதோ:

புவிக்கு மிக உயரத்தில்
நீலவான் வெளியினுள்
கட்டுக்கடங்காது நிற்கும் குன்லுன்
நீ
மனிதர் உலகில் சிறந்தவை அனைத்தையும்
பார்த்து வருகிறாய்.
வெருண்டோடும் உன் முப்பது லட்சம்
வெண்பசுமைக் கல் ட்ராகன்கள்
குத்திடுங் குளிரால்
விசும்பினை உறைய வைக்கும்.
கோடையில் உருகும் உன் நீர்த் தாரைகள்
ஓடைகள் நதிகளில் வெள்ளம் பெருக்கி
மீன்களாய் ஆமைகளாய்
மனிதரை மாற்றும்.
ஆயிரம் இலையுதிர் காலங்களாய்
நீ செய்த நன்மை தீமைக்கு
தீர்ப்பேதும் கூறியவர் யார்?
குன்லுன்!
உன் உயரமனைத்தும்
அன்றி
உன் வெண்பனியனைத்தும்
தேவையற்றவை.
வான் முகட்டைத் தொட
என் வாள் உயருமெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மூன்று துண்டாக்குவேன்:
ஐரோப்பாவுக்கு ஒரு கூறு,
அமெரிக்காவுக்கு ஒரு கூறு,
கீழ்த்திசையில் வைத்திட ஒரு கூறு.
அப்போது வையகத்தில் அமைதி ஆளும்
கோளம் எங்கிலும்
வெப்பமும் குளிரும்
ஒரே சீராய் நிலவும்.

இரண்டாயிரமாண்டு சீனத் தத்துவ மரபையும் கவிதை மரபையும் கற்றுத் தெளிந்த மா சே துங் எழுதிய கவிதை; இயற்கையின் எழிலும் சமதர்ம உலகப் பார்வையும் இரண்டறக் கலந்து நிற்கும் கவிதை.

'வாழ்க்கை அதன் இயல்பிலேயே போகிறது' என்பது பொன். தனசேகரனின் கவிதைகளின் வாயிலாகப் புலப்படும் கருத்து எனச் சொல்லப்படுகிறது. வாழ்க்கையின் இயல்பு என்பது என்ன? சமுதாயத்தால் கட்டமைக்கப்படாத, அதன் தாக்கம் பெறாத, அதன் நெறிகளை ஏற்றோ ஏற்க மறுத்தோ தனிமனித வாழ்க்கை என்னும் படகை ஓட்ட முடியுமா?

எதிரே வருவதைப் பார்த்ததும்
எழுந்து நிற்காவிட்டால்
மரியாதை இல்லை.
என் கால் மீது
என் காலைப் போட்டு அமர்ந்தாலும் குற்றம்
சொந்தப் பெயரைச் சொல்லி
அழைத்தால் அவதூறு

அதாவது நாம் வாழும் சமுதாயம் நிலப் பிரபுத்துவ விழுமியங்களிலிருந்து இன்னும் விடுபடவில்லை. இதுதான் யதார்த்த நிலை. வெறும் 'காட்சி பிழை' அல்ல. அதுபோலத்தான் 'மரபு'ம்

காரிய சித்தி பெற
ராகுகாலம்
எமகண்டம்
பார்த்து
அமிர்த யோகத்தில்
சஞ்சாரம் பண்ண
பஞ்சாங்கத்தில்
புதையும் அடகு போன
மனம்.

இது ஒட்டுமொத்த 'இந்து' சமுதாயத்தின் மீது இன்னும் ஆதிக்கம் செலுத்திவரும் 'பண்பாடு' அல்லவா? இந்தப் 'பண்பாடு' இன்று அரசியல் பின்புலத்தால் வலுப்பெற்று விளங்குகிறது அல்லவா?

பொன் தனசேகரன் தன்னுணர்வோடு அரசியல் கவிதைகளை எழுதாமல் இருக்கலாம். ஆனால் அரசியலற்ற கவிதை என்று அவர் உணர்வுபூர்வமாக எழுதிய ஒரு கவிதை இன்றைய இந்தியாவில் ஒடுக்குமுறைக்கும், பொய் வழக்குக்கும் உள்படுத்தப்பட்டு காராக்கிரகத்தில் ஆண்டுக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல், சமூகப் போராளிகளின் அனுபவத்திற்குப் பொருத்தமாக உள்ளது என்பதுதான் என் 'வாசிப்பு அனுபவம்:

கைகளை உயர்த்தாதே என்றார்கள்;
கைகளைக் கட்டி நின்றேன்
கைகள் கைகளைச் சிறைப்பிடித்து.
...
நாவை அடக்கு என்றார்கள்;
பேச்சை அடக்கி மௌனியானேன்.
மனதுக்குள் மன்றாடியது குரல்.
'தனிநபர் இடைவெளி விட்டு' என்பதிலும் அரசியல்
இருப்பதாகக் கருதுகிறேன்:
கேள்வி கேட்டவர் காணாமல் போனார்
பதில் சொல்ல நானும் இல்லை

என்று முரண்நகையோடு அல்லது கிண்டலோடு முடிவடைகிறது என்றாலும்' கோவிட் தொற்று நோய்' பரவிய போது, மோடி அரசின் அக்கறையற்ற தன்மையாலும், பரிசோதிக்கப்படாத ஊசி மருந்தாலும் பசி பட்டினியாலும் செத்து மடிந்தவர்களை சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்தவர்களை - அதிலும் குறிப்பாக - பிழைப்புக்காக மாநிலம் விட்டு மாநிலம் வந்து நாதியற்றுப்போன பல்லாயிரம் தொழிலாளிகளை என் 'அரசியல்' மனம் நினைத்துப் பார்க்கிறது.

'சாவு' என்பது பற்றிய சிந்தனை கவிஞரின் பல கவிதைகளில் ஊடாட்டம் செய்கிறது. 'இறந்த காலம்' கிண்டலோடு முடிவடைகிறது:

நான் பார்த்துச்
சொல்கிறேன் விவரமாக.

இது ஒருபுறம் என்றால், 'தீண்டத்தகாதவர்கள்' என மனசாட்சியற்ற நம் சாதிய சமுதாயத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள மக்கள் இறந்து போன பின்

எரிக்கவோ, புதைக்கவோ
இது வழியில்லை
என்று மறித்தது கும்பல்.

இந்த வரிகளுக்கு இதுதான் பொருள் என மனம் கருதுகிறது - கவிதை படைத்தவரின் நோக்கம் வேறாக இருந்த போதிலும். இப்படி அவரது கவிதைகளிலுள்ள சில வரிகளுக்கு நான் வலிந்து பொருள் கொள்வதாக என் மீது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் சாட்டப்படலாம். இருக்கட்டும். வாசிப்பு அனுபவம் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கலாம் அல்லவா?

கோத்தகிரிக்கு நானும் என் துணைவியாரும் குடிபெயர்ந்த போது சந்தித்த, வேறு ஊருக்குச் சென்றுவிட்டாலும் தொடர்பில் இருக்கிற, தாயகம் திரும்பிய தேயிலைத் தோட்டத் தொழிலாளி யாழ் மதி'யின் கவிதை வரிகள் என் நினைவுக்கு வருகின்றன:

தளிருக்கு வழிவிட்டு
பழுத்த இலை உதிர்கிறது
சில்வர் ஓக் மரத்திலிருந்து.
கொழுந்து கிள்ளிய காம்பில்
புதிய அரும்புகள்
துளிர்க்கின்றன.
தேயிலைக் காட்டிலேயே
வயதைத் தொலைத்து
உதிர்ந்துபோன கிழவர்களுக்குப் பதிலாய்
பள்ளிக்குப் போகாத சிறுவர்கள்
தேயிலை பறிக்கப்
பழகிக் கொண்டிருக்கிறார்கள்
தத்தம் தாய்களிடமிருந்து.

'வார்த்தைகளைத் திணிக்காமல்' பொன். தனசேகரனின் கவிதைகள் உள்ளன என்பதை ஒப்புக் கொள்கிறேன். 'வார்த்தைகளைத் திணிக்காமல்' அரசியல், சமூக உணர்வுடன் எழுதப்பட்டுள்ள ஒரு கவிதையை நினைவு கூறாமல் இருக்க முடியவில்லை: ஏறத்தாழ ஐம்பதாண்டு காலம் இலக்கியப் படைப்புகளை வழங்கி வந்த நோர்வீஜியக் கவிஞர் ரோல்ஃப் யாகோப்சென்னின் *(Rolf Jacobssen)* - நவீனத் தொழில்நுட்பம், இயற்கை ஆகியவற்றுக்கிடையே சமநிலை பேணப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்த கவிஞர் ரோல்ஃப் யாகோப்சென்னின் *(Rolf Jacobssen)* 'அவர்கள் உறங்கும் போது' என்ற கவிதை:

எல்லா மனிதர்களும்
அவர்கள் உறங்கும் போது
குழந்தைகளே
அப்போது அவர்கள் போர் செய்யக்கூடியவர்களாக
இருப்பதில்லை
சொர்க்கமெனத் தோன்றும் உறக்கம் தரும்
அமைதியான இலயத்தில்
அவர்கள் தங்கள் கைகளைத் திறக்கிறார்கள்
சுவாசிக்கிறார்கள்.
சிறு குழந்தைகளைப்போல
உதடுகளை நெளித்து சுளித்துக் கொண்டு
தங்கள் கைகளைப் பாதி திறக்கிறார்கள்
படைவீரர்களும் இராஜதந்திரிகளும் பணியாள்களும்
ஆண்டைகளும் .
நட்சத்திரங்கள் காவல் காக்கின்றன
மெல்லிய மூடுபனி வானத்திற்குத் திரையிட்டுள்ளது
யாரும் எவருக்கும் ஊறு விளைவிக்காத சில மணி நேரம்
நமது இதயங்கள் மலர்ந்தும் மலராதிருக்கும் அப்போது
நம்மால் ஒருவரோடொருவர் பேச முடிந்தால்
பொன்னிறத் தேனீக்கள் போல
சொற்கள் காற்றில் மிதந்து வரும்
கடவுளே, உறக்கம் என்ற மொழியை எனக்குக் கற்றுக்
கொடு.

என் 'அரசியல்', 'சமூக' உணர்வுகளை மூட்டை கட்டி வைத்து விட்டு பொன்.தனசேகரனின் கவிதை உலகிற்குள் நுழைகிறேன்: எதை விலக்குவது, எதைப் பிடித்துக் கொள்வது என்று தடுமாறுகிறது என் மனம்.

'சாவு' பல கவிதைகளின் கருப்பொருளாக இருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன் விபத்தொன்றில் சிக்கி, அவரது மூளையிலும் சிறிது அடிபட்டுவிட்டது. அதுதான் 'சாவு' பற்றிய சிந்தனை அவரை ஆள்கொண்டதோ? சில கவிதைகள் 'சர்ரியலிச'மாக எனக்குத் தெரிகின்றன. எடுத்துக்காட்டாக 'வாய்க்கூடு':

வாயைத் தைத்து
என் கையில் தலையைக் கொடுத்துவிட்டு
சுவடு தெரியாமல் மறைந்து போனார்.
உற்றுப் பார்த்தேன்; அது என் தலை.

செவ்வியல் தமிழ் இலக்கியத்திலும் சமய நூல்களிலும் கவிஞருக்கு நல்ல பிடிப்பு இருக்கிறது. 'ஏமாற்றம்' கவிதை இதற்கோர் எடுத்துக்காட்டு.

சமகாலத் தமிழ்க் கவிதை உலகில் பெரிய நாற்காலியில் உட்கார வைக்கப்பட வேண்டியவர் தனசேகரன். அவரது கவிதா மண்டலத்திற்குள் எட்டிப் பார்க்க எனக்கு இப்போதாவது வாய்ப்புக் கிடைத்ததே என மகிழ்கிறேன்.

இது ஒருபுறம்; மறுபுறம் பெர்டோல்ட் ப்ரெஹ்ட் என்னையும் பொன்.தனசேகரனையும் இழுத்துக் கொண்டு செல்கிறார் ஓர் எளிய உண்மையைத் திரும்பச் சொல்ல:

"அவரை. மீன், மாவு, வீட்டு வாடகை, காலணிகள், மருந்து ஆகியவற்றின் விலை அனைத்தும் அரசியல் முடிவுகளைச் சார்ந்துள்ளன".

ஆசிரியர்: பொன். தனசேகரன்
வெளியீடு: போதிவனம், சென்னை-600014
விலை: ரூ.100

---

*கட்டுரையாளர்: மார்க்ஸிய அறிஞர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்ப்புக் குரல்களை முன்னிறுத்தும் ஈழத் தமிழ் நாடகங்கள்

கண்டியில் உள்ள பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை ஈழத் தமிழ் நாடக இலக்கியத்திற்கு தொடர்ந்து தனது பங்கினை ஆற்றிவருகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்த்துறை பேராசிரியரான சுவாமி விபுலானந்த அடிகள் ஒரு நாடக ஆசிரியரும் ஆவார்.' மதங்க சூளாமணி' என்கிற நாடக இலக்கண நூலை எழுதிய முன்னோடி இவர். மகாகவி பாரதி பற்றிய முதல் ஆய்வினையும் நடத்தியவர் என்பது நாம் அறிந்த செய்தி. பின்னர் வந்த தமிழ்த் துறை தலைவர்களான பேராசிரியர்கள் கணபதிப் பிள்ளை, வித்தியானந்தன், தில்லைநாதன், துரை மனோகரன், தற்போதைய தமிழ்த்துறை தலைவர் பிரசாந்தன் வரை அனைவரும் நாடக ஆசிரியர்கள் . சிங்கள நாடக முன்னெடுப்புகளும் பேராதனை பல்கலைக்கழகத்தின் கல்விப் புலத்தால் பெரிதும் அரவணைக்கப்பட்ட ஒன்று . இத்தகைய பாரம்பரிய பின்புலத்துடன் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை ஈழத்தமிழ் நாடக இலக்கியத்தை மையப் பொருளாக்கி ஐந்தாவது தமிழியல் மாநாட்டை கொரோனா பெருந்தொற்றின் போது 2020 ஆம் ஆண்டில் நடத்தியது. இதற்கான கட்டுரைகள் துறைசார்ந்தவர்களிடமிருந்து பெறப்பட்டன.தமிழ்நாட்டு நாடகத்திற்கும் ஈழத் தமிழ் நாடகத்திற்கு இடையேயான பிணைப்பினை நினைவு கூறும் வகையில் தமிழகத்து நாடகச் செயற்பாட்டாளர்களான வெளி ரங்கராஜன், பிரஸன்னா ராமஸ்வாமி, பிரளயன் கி.பார்த்திபராஜா, ஆர். ராஜூ ஆகியோர் ஜூம் வாயிலாக அரங்கத் தலைமை உரையை அழைப்பின் பேரில் நிகழ்த்தினர். நாடக ஆர்வலனாக நானும் ஒரு சிற்றுரையை நிகழ்த்தினேன். மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் களாக செயல்பட்ட கலாநிதி செல்லத்துரை சுதர்சன், திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன் ஆகியோர் பதிப்பாசிரியர்களாக அவை அனைத்தையும் 'ஈழத்தில் தமிழ்நாடக இலக்கியம்' என்கிற நூலாகத் தொகுத்துள்ளனர். அவ்வற்றிலுள்ள சிலவற்றைப்பற்றி சுருக்கமாக நாம் பார்க்கலாம்.

ஈழ நாடக அரங்கினதும் கல்விப் புலத்தினதுமான முக்கிய அடையாளமாக விளங்கும் பேராசிரியர் சி.மௌனகுரு இம்மாநாட்டின் துவக்க உரையை நிகழ்த்தியுள்ளார். ஈழ நாடகம் மட்டுமின்றி தமிழ்நாட்டு நாடகம் பற்றியும் அவர் வரலாற்றுப் பார்வையுடன் தன் கருத்துகளை வெளிப்படுத்தி உள்ளார். நாடகம் பிரதானமாக ஆற்றுகை வடிவம் என்றாலும் அது இலக்கியப் பிரதியாகவும் பெற்றுள்ள முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். தொடர்ந்த இலக்கியப் பாரம்பரியம் நம்மிடையே இருந்தபோதிலும் நாடகம் பற்றிய நல்லெண்ணங்கள் வளராததன் காரணமாகவே அதன் வரலாறும் பிரதிகளும் தொலைந்து போனதை குறிப்பிடுகிறார். செவ்விலக்கியங்கள் நாடகப் பிரதிகளை தம்முள் கொண்டுள்ளன என்பதை தெரிவிக்கும் அவர் நாடகமாகவே இலக்கிய கர்த்தாக்கள் அவற்றை எழுத முன்வராதது பற்றிய தனது ஆதங்கத்தை வெளியிடுகிறார். " அது கம்பராமாயணம் அன்று. அது ஓர் கம்ப நாடகமே. கம்பன் நாடகம் எழுதியிருப்பின் தமிழருக்கு . காளிதாசன் போல ஒரு நாடக ஆசிரியன் கிடைத்திருப்பான்" என்கிறார். கூத்துப் பனுவல்களாக பள்ளு, குறவஞ்சி நூல்கள் 16, 17 ஆம் நூற்றாண்டிலிருந்தே நம்மை தொடர்வன என்பதைக் கூறிவிட்டு பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்கள் நவீன தமிழ் நாடக இலக்கியத்தின் தோற்றுவாய் என்று குறிப்பிடுகிறார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, சுவாமி விபுலானந்தர் ஆகியோரைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்த கருத்துகளை உள்ளடக்கிய வசனங்கள் புனைகதை எழுத்தாளர்கள் எழுதிய நாடகங்கள், இந்திரா பார்த்தசாரதி, பேராசிரியர் ராமானுஜம், நா.முத்துசாமி, மு.ராமசாமி, இன்குலாப் ஆகியோர் நாடகப் பிரக்ஞையுடன் எழுதிய நாடகங்கள் ஆகியவற்றையும் நாடக இலக்கியத்தின் தொடர்ச்சியாகக் கருதுகிறார். இப்போக்குகளுக்கு இணையாக ஈழத்தமிழ் நாடக இலக்கியங்களின் வளர்ச்சி பற்றியும் எழுதியுள்ளார். மேலைத் தேய மரபுகளின் வழிவந்த சிந்தனைகளின்பாற்பட்டவற்றை நாம் கண்மூடித்தனமாக அணுகாது விமர்சனப் பார்வையுடன் நமக்கானவற்றை அடைய வேண்டும் என்கிற அறிவுறுத்தலுடன் தனது கட்டுரையை முடிக்கிறார் மௌனகுரு.

அரங்குகளில் படிக்கப்பட்ட கட்டுரைகளில் முன்னேற்பாட்டின்படி ஈழ நாடகங்களின் இலக்கியத்தன்மை குறித்து அதிகம் விவாதிக்கப்பட்டுள்ளன. நாடகப் பனுவல்கள் எவ்வாறு காலனி ஆதிக்கத்தையும் பின் காலனித்துவ இலங்கையையும் எதிர்கொண்டன என்பதை நவதர்ஷினி கருணாகரன் தனது கட்டுரையின் கருப்பொருளாகக் கொண்டுள்ளார். நாடகத்தின் அரசியல் ஒரு எதிர்ப்புக் குரலாக வெளிப்படுவதை அவர் அடையாளம் காட்டுகிறார். காலனி ஆதிக்கத்தின்போது அயலவர்களின் ஆட்சிக்கு எதிரானதாயும் இலங்கை சுதந்திரம் பெற்றபின் இன முரண்பாடுகளை களைவதற்கு ஆர்வம் காட்டியதையும் சங்கிலி பூதத்தம்பி ஆகியோரை பற்றிய நாடகங்கள் கொண்ட மாறுதல்களை அவர் அவற்றிற்கான வரலாற்றுப் பின்னணியுடன் சுட்டிக்காட்டுகிறார். இரண்டு நாடகங்களும் பலமுறை எழுதப்பட்டதால் ஒரே பனுவல் அவற்றிற்கு இல்லை. சங்கிலி அரசன் பற்றி எஸ். தம்பி முத்து பிள்ளை பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய பனுவல்களையும் பூதத்தம்பி பற்றி

நல்லையா பிள்ளை, த.சண்முக சுந்தரம் ஆகியோர் எழுதிய பனுவல்களையும் ஆய்வுக்குள்ளாக்கிறார். ஈழ நாடகத்தின் மேலோங்கிய பண்பாக எதிர்ப்புக் குரலை இனம் காண்கிறார் நவதர்ஷினி.

இந்த எதிர்ப்புக் குரல் எதிர்ப்பு பண்பாடு அரசியல் பொருளாக நாடகங்களில் வெளிப்படும் போது நாடகங்களின் உருவம் உள்ளடக்கம் நெறியாள்கை ஆகியவற்றிலும் பல பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதை காணமுடிகிறது. இந்நூலில் இடம் பெற்றுள்ள நாடகப் பனுவல்களில் முக்கியமாக கந்தன் கருணை, மண் சுமந்த மேனியர், அபசுரம், இராவணேசன் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். இவற்றில் பழமை வாதம், மக்களை ஏமாற்றும் எத்தனம், மூடநம்பிக்கைகள் சுயலாப அரசியல் ஆகியவை பல்வேறு கோணங்களில் பார்க்கப்பட்டுள்ளன.

ஈழ நாடகம் கூத்தினை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அநேக நாடகர்கள் முறையாக கூத்து பயிற்சி பெற்றவர்கள் ஆவார்கள். ராமாயணம், மகாபாரதம் கதைகளை கூத்து பாணியில் நிகழ்த்தினாலும் அவற்றில் சமகால அரசியல் முக்கியத்துவம் கொள்கிறது. பழமையான எண்ணங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறது. இளைய பத்மநாபனின் (பத்தண்ணா) நாடகங்களை அவற்றிற்கு உதாரணமாகக் காட்டலாம். துரோணர் ஏகலைவனிடம் விரலை காணிக்கையாக பெறுவது ஆளும் வர்க்கத்தினர் ஆளப்படும் வர்க்கத்தினரை வலிமையற்றவர்களாக வைத்திருக்கும் தந்திரமாகும். மண் சுமந்த மேனியர்.இதை எழுதியவர் குழந்தை ம. சண்முகலிங்கம். நாடகத்தின் பல்வேறு அங்கங்களிலும் திறன் கொண்டவர். மண் சுமந்த மேனியர் நாடகம் பற்றி கலாச்சார அரசியல் பார்வையுடன் தேவகுமாரி சுந்தரராஜனும் அதன் போர்க்கால வாழ்க்கை சூழல் குறித்தான பார்வையுடன் வைதேகி செல்வர் எமிலும் எழுதியுள்ள கட்டுரைகள் மூலம் ஈழ அரங்கில் மண் சுமந்த மேனியர் பெற்றுள்ள கூடுதல் முக்கியத்துவத்தை நாம் அறிகிறோம். இராவணேசன் நாடகம் காலனி ஆதிக்கம் விடுபட்ட காலத்தில் தமிழ் தேசிய இனவாத அரசியலை முன் வைக்கும் பனுவலாக து.கௌரீஸ்வரன் பார்க்கிறார். செய்யுள் நடையில் எழுதப்பட்ட மஹாகவியின் மேடைப்பா நாடகங்கள் பற்றி நீண்டதொரு கட்டுரையை மருதூரினி பொன்னுத்துரை எழுதியுள்ளார். வானொலிக்காக எழுத ஆரம்பித்த மஹாகவி பின்னர் மேடை நாடகங்களை எழுதினார்.

மலையகத் தமிழர்கள் பற்றிய முழுமையான வரலாறு இன்னமும் கூட எழுதப்படவில்லை. தமிழர்களான கங்காணிகளாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரோபோ பாதை

பாதை மாறாது
அனிச்சையாகும் உடல்
திசையறிந்து தானாக
திரும்பும் விழிகள்
அடுத்தடுத்து இங்கேதானென
எட்டு வைக்கும் பாதங்கள்
ஏற்ற இறக்கங்களை
மனப்பாடம் செய்திருக்கும்
சிறு மூளை
நேரந்தவறாமலிருக்க
வேகம் எனச்சொல்கிற மனது
தசையுயிர் ரோபோவாகிக்
கடக்கிற மெட்ரோ தருணங்களில்
தொட்டியிலிருக்கும் பூவொன்று
பாதாளத்தில் சிரிக்கிறது.

அவர்களுக்கு நிறைய இன்னல்கள் ஏற்பட்டன. அவர்களது இன வரைவியலை முதன்முதலாக நாடகப் பனுவலாக்கிய பெருமை கோ.நடேசையர் என்கிற இலங்கை மலைநாட்டவருக்கு உண்டு. 1937 அவர் எழுதிய 'இலங்கை தோட்ட இந்திய தொழிலாளர் அந்தர பிழைப்பு' நாடகத்தைப் பற்றிய ரா.பிரியதர்ஷினியின் கட்டுரை பல அரிய தகவல்கள் கொண்டுள்ளது. 'பெண்ணிலைவாத நோக்கில் கூத்து மீளுருவாக்கப் பனுவல்' கட்டுரையில் கலாவதி கலைமகள் கூத்தின் அதிகாரப் பண்புகள் எவ்வாறு மீறப்பட்டும் மாற்றி அமைக்கப்பட்டும் உள்ளன என்பதை சான்றுகளுடன் விளக்குகிறார். அல்லி கூத்து,சீதைத்துயர் ஆகியன ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ரா.கணகேஸ்வரியின் கட்டுரை 'வேர்களும் விழுதுகளும்' நாடகப் பிரதியில் கனடா வாழ்துறையூரான் எழுதிய நாடகத்தையொட்டி புலம் பெயர்ந்தோரின் வாழ்க்கைப் பிரச்சனைகளை எடுத்தியம்புகிறது. எழுதினார் கத்தோலிக்க நாடகங்கள் ஈழ நாடகங்களில் முக்கிய இடம்பெறுகின்றன. காலனிய ஆதிக்கத்தை நிலை நாட்ட வந்த போர்த்துக்கீசியர்கள் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக ஏற்கனவே மதம் மாறிய தமிழர்களைக் கொண்டு தமிழ் நாடக வடிவங்களை நாடினர். அவற்றில் ஒன்றான ஞான சௌந்தரி நாடகம் பற்றிய கட்டுரையை யோ. யோண்சன் ராஜ்குமார் எழுதியுள்ளார். அது வழமையான கத்தோலிக்க நாடகங்களைப் போலில்லாது மத எல்லைகளைத் தாண்டிய படைப்பாக உருவானது என்கிறது கட்டுரை. நாடக இலக்கிய உருவத்தில் அபத்த வாத நாடகம் என்பது ஒரு முக்கிய பிரிவு. ந.சுந்தரலிங்கத்தின் அபசுரம் பற்றி வி.கிருபானந்தம் எழுதியுள்ளார். இதை அபத்தவாத சாயல் கொண்ட நாடகம் என்கிறார் கட்டுரையாளர்.

தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம் சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடுகளை தொடர்ந்து நடத்துவதுடன் அவற்றில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளையும் நூல்களாக வெளியிட்டு அதன் பயன் பலரையும் சென்றடையுமாறு செய்து வருவது பாராட்டிற்குரியது.

**ஈழத்தில் தமிழ் நாடக இலக்கியம்**
**பதிப்பாசிரியர்கள்: கலாநிதி செல்லத்துரை சுதர்சன்**
**திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன்**
**வெளியீடு: தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம், இலங்கை.**
**பக்கங்கள் 590. விலை குறிப்பிடப்படவில்லை.**

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர், திரைப்பட இயக்குநர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.எட்வின்

# 65/66



**பாசாங்குகளை உடைக்கும் விஷ்ணுபுரம் சரவணன்**

தம்பி விஷ்ணுபுரம் சரவணனின் எழுத்திற்கு சிறப்பு செய்கிற மாதிரி மூன்று விஷயங்களை நான் பார்க்கிறேன்.

சரவணன் எழுதி "புக்ஸ் பார் சில்ரன்" வெளியிட்டுள்ள "ஒற்றைச் சிறகு ஓவியா" என்ற குழந்தைகள் நூலுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான 'பால புரஸ்கார்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது "கயிறு" என்ற சிறு நூல் ஒரு லட்சம் பிரதிகளைக் கடந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

"என்னத்தையாவது எழுதி பிங்க் நிற அட்டையுடன் வெளியிட்டுவிட்டால் அது குழந்தை இலக்கியம் என்று நம்புகிற பாசாங்கிற்கு எதிராக எழுதி வருபவர் விஷ்ணுபுரம் சரவணன்" என்று தனது முகநூல் பக்கத்தில் எழுதி இருக்கிறார் தோழர் ஆதவன் தீட்சண்யா.

இந்த மூன்று விஷயங்களுக்காகவும் "காக்கைச் சிறகினிலே" சார்பிலும் தனிப்பட்ட முறையில் என் சார்பிலும் சரவணனுக்கு அன்பு கசியும் வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருது கிடைத்திருப்பதற்காக வாழ்த்துவதில் ஒரு நியாயம் இருக்கிறது. அவர் எழுதிய ஒரு புத்தகம் ஒரு லட்சம் பிரதிகளைக் கடந்து விற்றுத் தீர்ந்திருப்பதற்காக வாழ்த்துவதிலும் ஒரு நியாயம் இருக்கிறது. ஆதவன் பாராட்டியிருக்கிறார் என்பதற்காக வாழ்த்துவது எந்த விதத்தில் நியாயம்? நன்றாக எழுதக்கூடிய எவரையும் வாழ்த்தக்கூடிய மனிதர்தானே ஆதவன் என்ற கேள்விக்கான பதிலைத் தரவேண்டியது இருக்கிறது.

ஆதவனது இந்தப் பாராட்டு என்பது சரவணனது ஏதோவொரு படைப்பின்மீதான பாராட்டு அல்ல. சரவணனின் ஒட்டுமொத்த படைப்புகளின் மீதான அங்கீகாரம். குழந்தைகளுக்கான எழுத்தை நேசிக்கும் ஒரு பெரிய திரளின் ஒரு பிரதிநிதியின் குரல்.

குழந்தைகளுக்கான எழுத்திற்கென்று ஒரு சந்தை இன்று உருவாகியிருக்கிறது. இந்தச் சந்தை குழந்தைகளுக்கான எழுத்தாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இருக்கிறது.

இந்தத் தேவை, எதையாவது எழுதி சந்தைக்கு கொண்டுவரும் எழுத்தாளர்களையும் உருவாக்கி இருக்கிறது. இது குழந்தைகளுக்கான எழுத்திற்காக தவம் இருப்போரை கவலைகொள்ளச் செய்கிறது. இந்த நேரத்தில் விஷ்ணுபுரம் சரவணன் இந்தப் போதாமைகளை உடைத்துக்கொண்டு எழுதுகிறார்.

மொழி, காலம், களம், கரு, தீர்வு என எல்லாக் கோணங்களிலும் குழந்தை இலக்கியத்தின் போக்குகளை உடைக்கிறார். இதைத்தான் குழந்தை இலக்கியத்திற்கான இன்றைய பாசாங்குகளை சரவணன் உடைப்பதாக ஆதவன் கூறுகிறார்.

"மிகுபுனைவு" என்பது இன்றைய குழந்தை இலக்கியத்தின் பொதுக்கூறாக இருக்கிறது. இந்தப் போக்கை இந்தக் காலத்தோடு மட்டும் சுருக்கி ஏதோ கடந்த காலங்களில் ஆரோக்கியமாக இருந்ததாகக் கருதிவிடக் கூடாது. அவ்வாறு கருதினால் அந்தக் கருத்தும்கூட மிகுபுனைவுதான். மகிழ்ச்சியைத் தரக்கூடியது, நடப்பதற்கு சாத்தியமில்லாதது என்று மிகுபுனைவை வரையறுக்கலாம். இந்த வரையறை என்பது சிறார் எழுத்தாளர்களை ஆசிர்வதிக்கக்கூடிய ஒரு "உரிமம்". யாரும் எந்தக் கேள்வியும் கேட்கமுடியாது. இந்த உரிமத்தை பலர் தங்களது பொறுப்புணர்ச்சியைத் துறப்பதற்காகப் பயன்படுத்துகிறார்கள். இந்த பூமி தோன்றுவதற்கு பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் தங்களது கதைக்கான காலத்தை தீர்மானிக்கின்றனர். இந்த மிகுபுனைவென்பது குழந்தைகளை வெகுவாக ஈர்க்கவே செய்கிறது. குழந்தைகள் கண்கள் பெருத்து வெளியே வரும்வரைக்கும் வாசிக்கவே செய்கிறார்கள்.

குழந்தைகளின் வாசிப்பைக்கூட இந்தக் கதைகள் பெரிதாக்குகின்றன. இது மகிழ்ச்சிதரக்கூடியதுதான். ஆனாலும் பொதுவாக இந்தக் கதைகள் குழந்தைகளை ஒரு மயக்க நிலையிலேயே வைத்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில்தான் தன்னை வேறுபடுத்திக் கொள்கிறார் சரவணன். பாசாங்கற்று எழுதக்கூடியவர்கள் பாசாங்கின் ஏதாவது ஒருசில கூறுகளைத்தான் உடைக்கிறார்கள். இவரோ பாசாங்கின் ஏறத்தாழ அனைத்துக் கூறுகளையும் உடைக்க முயல்கிறார்.

1) முகிலன்
2) பவித்ரா
3) பிரின்சி
4) சாதிக்
5) ஓவியா

இந்த ஐந்து சொற்களும் வெறும் பெயராக யாருக்கேனும் தோன்றுமெனில் சத்தியமாக அவர்களுக்கானதல்ல இந்தக் கட்டுரை. இந்த ஐந்துபேரும்தான் "ஒற்றைச் சிறகு ஓவியா" என்ற இந்தக் கதையின் மாந்தர்கள். இந்த ஐந்து குழந்தைகளையும் முதல் அத்தியாயத்தில் இருந்து இருபத்திநான்காவது அத்தியாயம் வரைக்கும் சேர்த்தே வைத்திருப்பார்.

திட்டமிடுவது, செயல்படுத்துவது என்பவை எந்தவொரு காரியத்திற்குமான இரு முக்கியமான கூறுகள். திட்டமிடுதலையும், அதை செயல்படுத்துவதிலும் இந்த ஐந்து குழந்தைகளையும் எந்தக் கட்டத்திலும் ஒன்றாகவே வைத்திருக்கிறார் சரவணன். "எண்பதா இருபதா" என்று பார்த்துவிடுவோம் என்று இந்த மண்ணின் பிரதம அமைச்சரே அசிங்கமாக பேசுகிற நேரம் இது.

இந்த மதம் கடந்த ஒற்றுமைதான் இதுபோன்ற கயமைகளை எதிர்கொள்வதற்கும் சாய்ப்பதற்கும் அவசியம் என்பதை உணர்த்துகிறார் சரவணன்.

குழந்தைகளின் கதைகளில் இருக்கும் அனைத்து அம்சங்களும் இந்தக் கதையிலும் இருக்கின்றன. இங்கும் ஒரு குழந்தைக்கு சிறகு முளைக்கிறது. அந்தக் குழந்தை பறக்கிறாள்.

இந்தக் கதையிலும் அதிசயமான ஒரு "பச்சை நாக்கு" குழந்தைகளுக்கு கிடைக்கிறது. பெரும்பாலுமான கதைகளில் நிகழ்வது போலவே இந்தக் கதையிலும் அந்த அதிசய பச்சை நாக்கு களவு போகிறது. அதை இந்தக் குழந்தைகள் கண்டடைகிறார்கள். கதையின் நகர்வுகளில் எந்தவொரு இடத்திலும் மிகுபுனைவிற்கு பஞ்சமே இல்லை.

மோதிரத்தை கைமாற்றிப் போட்டால் ஓவியா மறைந்துவிடுவதும், மீண்டும் கைமாற்றிப் போட்டால் உருவத்திற்கு வருவதும் சுவாரசியமான மிகுபுனைவின் கூறுகள். இப்படி ஏராளம் இருக்கின்றன.

ஆனால், ஒரு மிகுபுனைவை

1) இன்றின் கள எதார்த்தத்தை சுட்டுவதற்காகவும்,

2) இன்றின் பிரச்சினைகளை எடுத்து வைப்பதற்காகவும்

3) அவை தரும் வலிகளைப் பேசுவதற்காகவும்

4) அவை சமுகத்தின் மீதான ஆதிக்கத்தின் அநீதிகள் என்று உணர வைப்பதற்காகவும்

5 அதற்கெதிரான கேள்வி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை எடுத்து வைப்பதற்காகவும்

6) அதற்கெதிரான இயக்கத்தை கட்டமைக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்வதற்காகவும் பயன்படுத்துவது என்பது தமிழில் இதுவரை வந்துள்ள சிறார் இலக்கியத்தில் நிச்சயமாகப் புதிது.

களவுபோன அந்த பச்சை நாக்கின் ஒரு பகுதியை மீட்க வேண்டுமெனில் ஒரு பாத்திரத்தை நல்ல தண்ணீரில் கழுவ வேண்டும். ஆனால் ஊரில் உள்ள அனைத்து அடிபைப்புகளிலும் மஞ்சள்நிற தண்ணீர்தான் வருகிறது. அதனால் நல்ல தண்ணீருக்காக குழந்தைகள் படும் சிரமப்படுகிறார்கள். வண்ணமற்று இருந்த அந்த ஊரின் தண்ணீர் ஏன் பழுப்பானது என்று குழந்தைகளைக் கேட்க வைக்கிறார். அந்த ஊரில் இருந்து எண்ணெய் எடுக்கப்படுவதாகவும், அதை குழாய் மூலம் கொண்டுபோகும்போது கசிவு ஏற்படுவதால் தண்ணீர் மாசுபடுவதாகவும் அந்தத் தாத்தாவை சொல்ல வைக்கிறார்.

சாலை மறியல் என்பதும், வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றுவதும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது பாதிப்பிற்கான நியாயம் கேட்பதன் வடிவங்கள் என்று குழந்தைகளை புரிந்துகொள்ள வைப்பது என்பது சரவணனின் தனித்துவம்.

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை | களந்தை பீர்முகம்மது

# ஒன்றிலொன்று



சலீம் சாருக்கு இப்போதுதான் மனசு கனக்கிற மாதிரியிருந்தது. நேற்றுச் சாயங்காலம் சென்னையிலிருந்து புறப்பட்டு இன்று காலை ஊர்வந்துசேர்ந்த இந்த நிமிடம்வரை ஏற்படாத எண்ணம் இப்போது ஏன் ஏற்பட்டது? வீட்டுக்கு முன் ஆட்டோ வந்து நிற்கின்ற அந்த நேரம் பார்த்து மனத்துக்குள் ஒரு சுளுக்கு ஏற்பட்டதுபோல நௌஷாத் ஞாபகத்தில் வந்து விழுந்தான்.

ஆட்டோவிலிருந்து இறங்கினார். அவருடைய மனைவியும் இறங்கிவிட்டார். அவர்களுக்கும் முன்னாலேயே ஆட்டோ டிரைவர் இறங்கி அவருடைய பெட்டிகளையும் பைகளையும் இறக்கி வீட்டு வாசலில் கொண்டுபோய் வைத்தான். அதைப் பார்த்தபடி ஆட்டோகாரருக்குப் பணம் கொடுப்பதற்காக மணிபர்ஸைத் திறந்தார் சலீம் சார்.

பேருந்து நிலையத்திலிருந்து வீடுவரை வருவதற்கு அறுபது ரூபாய்க் கட்டணம் என்று தெரியும். அதனால் அவர் டிரைவரிடம் எவ்வளவு ரூபாய் என்று கேட்கவில்லை. நூறு ரூபாய்த் தாளை உருவினார். அநேகமாகத் தான்தான் இந்த ஆட்டோக்காரரின் முதல் கிராக்கியாக இருந்திருக்க வேண்டும் என்று சலீம்சார் தானாகவே நினைத்தார். பேருந்து நிலையம் சுறுசுறுப்பாவதற்கும் முன்பே அவர்கள் வந்து இறங்கிவிட்டார்கள் அல்லவா? அதனால் ஆட்டோ டிரைவரிடம் எவ்வளவு என்று கேட்காமல் கௌரவமான முறையில் நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு அப்படியே நகர்ந்துவிடலாமென்று எண்ணினார். சில்லறை இல்லை சார் என்று அவன் சொல்ல நேர்ந்தாலும் நேரலாம்; அப்படியொரு இக்கட்டை அவனுக்கு நாம் கொடுக்க வேண்டாம், ஆட்டோ வாடகை நூறு ரூபாயாகவே இருந்துவிட்டுப் போகட்டும், இப்போது என்ன கெட்டுவிட்டது என்ற எண்ணம். இன்று அவனுக்குத் தொழில் நன்றாக இருந்தால், தன்னுடைய கைராசியை அவன் மெச்சிக்கொள்ளலாம்தானே?

பொதுவாகவே அவரோ அவருடைய மனைவியோ ஏழைப்பட்டவர்களிடம் அல்லது இரங்கத்தக்கவர்களிடம் அவ்வளவு கறாராகவெல்லாம் எப்போதும் நடந்து கொள்வதில்லை. சலீம் சாருக்குக் கைநிறைய ஓய்வூதியப் பணம் வருகிறது. காணாத குறைக்கு இரண்டு மகன்களும் மாதாமாதம் பணத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். வீட்டின் களஞ்சியம் நிரம்பி வழிவதை அவருடைய மனக் கண்கள் பார்க்கின்றன. இவ்வளவையும் வைத்துக்கொண்டு என்னதான் செய்வது? மகளையும் நல்ல சீர்செனத்தியோடு கட்டிக்கொடுத்தாயிற்று. பணி ஓய்வுக்குப் பின், மகன்கள் சம்பாத்தியம் வீடுவந்து சேரும் தருணத்திலேயே தெருவீட்டில் ஆளுயர நிலைக்கண்ணாடியை நிறுவினார். அதன்முன் நின்று ஒவ்வொரு நாளும், நேற்றைய தினம் தான் தன் நாளை நல்லவிதமாகச் செலவழித்தோமா, பிறருக்கு உபகாரமாக இருந்திருக்கிறோமா என்று கேள்வி கேட்கிறார்; பிம்பத்திடமிருந்து பதில்களையும் பெறுகிறார். தன்னிடம் உள்ளதை வறியோர்க்கு ஈவோம் என்ற நிலைக்கு எப்போதோ வந்துவிட்டார். ஆனால், நௌஷாத்திடம்தான் மனது தாறுமாறாய்ப் போய்விட்டது. அது ஏனென்று கண்ணாடியின் முன் நின்று கேள்விகேட்டாக வேண்டும் என்கிற பதைபதைப்பு பெருகிக் கொண்டிருக்கிறது.

அந்த நினைப்போடு டிரைவரிடம் நூறு ரூபாய்த் தாளை நீட்டினார். டிரைவர் சொன்னான், "பணம் இருக்கட்டும்; நான் ஒங்க ஸ்டூடண்ட் சார்," என்று பணிவாகக் கைகூப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றான். சலீம் சாருக்குச் சின்ன திடுக்கிடல். தன்னிடம் படித்த எல்லாப் பையன்களையும் தனக்கு நன்றாகத் தெரியுமென்று இவ்வளவு நாளும் நம்பிக்கொண்டிருக்கிறார். மாணவர்களின் பெயர்களும் அவர்கள் பள்ளிக்கூடத்தில் புரிந்த சாதனைகளும் அல்லது தன்னிடம் காட்டிய அன்புகலந்த மரியாதைகளும் என எல்லாவற்றையும் அவர் நன்கறிவார்.

உற்றுப் பார்த்தார். இந்த உருவம் தன் வகுப்பில் இருந்ததாக அவருக்குச் சுத்தமாக ஞாபகமில்லை. தன் ஞாபகச் சக்திக்குச் சவால் அளிக்கும்விதமாக அவ்வளவு பணிவாக ஆட்டோ டிரைவர் நிற்பது அவருக்குக் கூடுதலான வதைப்பாக இருந்தது. ஏற்கெனவே சில நிமிடங்களுக்கு முன்னர்தான் நௌஷாத்திடம் தான் நடந்துகொண்ட விதத்திற்காக மனம்வருந்திப் பிராயச் சித்தம் தேட முடிவெடுத்திருக்கிறார். கூடுதலாக இந்தப் பையன் வேறு வதைக்கிறானே, இவன் பேரென்ன ஊரென்ன?

" தம்பி, நீ யாரப்பா? எனக்கு உன் முகம் ஞாபகம் வரமாட்டேங்கே!"

" சார் நான் முத்துமாணிக்கம். எனக்குப் படிப்பு அவ்வளவா வரல்ல. அதனால ஒங்களுக்கு என்ன தெரியாம போயிருக்கலாம்... நீங்க சயன்ஸ் பாடம் எடுத்தீங்க..."

சரியாகத்தான் சொல்கிறான். தான் ஓய்வுபெற்ற ஐந்தாண்டுகளுக்குள் தனக்கு இவ்வளவு பெரிய ஞாபக மறதியா என்று வருந்தினார். " ஏம்ப்பா படிச்சி நல்ல வேலைக்குப் போயிருக்கலாமே," என்று கேட்டார். டிரைவர் "குடும்ப கஷ்டம், படிப்பு வேற வரல..." என்றான்.

இருந்தாலும் ஆட்டோ ஓட்டக்கூடிய ஒரு டிரைவரிடமிருந்து தனக்கொரு சலுகை கிடைத்துவிடக் கூடாது. ஏதாவது வழிசெய்ய வேண்டும். டிரைவரின் தோள்மீது கைபோட்டு எதிரேயிருந்த டீஸ்டாலுக்குக் கூட்டிச் சென்றார்.

ஸ்டாலுக்குள் நுழைந்ததும், "சார் பத்து நாள்ல வந்துருவேன்னு சொல்லிப் போய்ட்டு அப்படியே மாசக்கணக்கா ஒக்காந்திட்டீங்களே," என்று கடைக்காரர் விசாரித்தார். அவர் கடைக்காரருக்கு விளக்கம்சொல்லிக்கொண்டே பிஸ்கெட்டையும் சூடான வடையையும் எடுத்து ஒரு தாளில் பொதிந்து ஆட்டோ டிரைவரிடம் கொடுத்தார். தானும் ஒரு வடையை எடுத்துக் கடித்தார். ஒரு பெஞ்சில் உட்கார்ந்தார். முத்துவையும் உட்காரச் சொன்னார். டிரைவர் உட்காராமல் பவ்வியமாக அவர் முன் நின்றான். முத்து நிற்பதும் அன்று நௌஷாத் நின்றதும் ஒன்றுபோலத்தான் இருக்கிறது. தன்னுடைய செய்கையில் நௌஷாத் வெருண்டுபோய்விட்டானே....

வெளியே வந்ததும் முத்து மீண்டும் சலீம்சாருக்கு வணக்கம் சொன்னான். "தம்பீ, இன்னொரு நாள் இந்தப் பக்கமா வரும்போது வீட்டுக்கு வந்துட்டுப் போப்பா," என்ற அவர் சொல்லில் அவன் மயங்கிநின்ற நேரம்பார்த்து ரூபாயை அவனுடைய பையில் திணித்து, "போய்ட்டு வா தம்பி" என்று சட்டென்று வீட்டுக்குள் நுழைந்தார்.

வீட்டுக்குள் வந்ததும், ஆத்திரம் அவசரத்திற்கு முத்துவைக் கூப்பிடத் தோதாக அவனுடைய எண்ணை வாங்காமல் வந்துவிட்டோமே என்று நினைத்தார். அப்படியே ஒருநாள் நடைப்பயிற்சிபோவதுபோல பேருந்துநிலையம் சென்று அவனிடம் எண்ணை வாங்கிச் சேமித்துக்கொள்ள வேண்டும்.

நீண்ட பயணம் அலுப்பைத் தந்தது. ஆனால், மனைவி யாதொரு அலுப்புமில்லாமல் வீட்டு வேலைகளைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். அதைப் பார்த்தபடியே கண்ணாடியின் முன் போய் நின்றார். பிம்பம் சோர்வாக இருந்தது. இப்போது வேண்டாம், கொஞ்சம் கழித்துப் பேசுவோம் என்று நினைத்துச் சாய்வுநாற்காலியில் தன் கட்டையைச் சாய்த்தார். தூக்கம் வரவில்லை. நௌஷாத்தும் முத்துவும் மாறிமாறி வருகிறார்கள்.

எக்மோர் பக்கத்தில் தரமான நல்ல ஹோட்டல் இருப்பதாக சலீம்சார் கேள்விப்பட்டிருந்தார். மனைவியும் மகளும் பேரன் பேத்திகளும் ஒருநாளாவது அங்குபோய்ச் சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தார்கள். அதனால் ஒருமுறை எல்லோருமாக அந்த ஹோட்டல் போனார்கள். மதிப்பிற்குரிய சலீம் சார் தன் குடும்பத்தோடு உள்ளே வரவும் நௌஷாத்திற்கு மிகுந்த மகிழ்ச்சி. பள்ளி நாள்களில் ஓர் ஆசிரியராய்த் தன்னைப் புடைத்துக் காட்டாமல் கனிவும் மென்மையுமாக மட்டுமன்றி, நல்ல ஜாலியாகவும் எல்லா மாணவர்களோடும் உறவாடிய சலீம் சார். ஊரில் ஒருமுறை படம்பார்க்கப் போகும்போது தனக்காகவும் தன் நண்பனுக்காகவும் அவரே டிக்கெட் எடுத்துத் தன்னருகிலேயே உட்கார வைத்துப் படம்பார்த்த நாளெல்லாம்கூட இனிய நினைவாக உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகள் கஞ்சத்தனமாய் ஒளியை இறக்கிக்கொண்டிருந்தன. அந்த ஒளியினூடாக சலீம்சாரும் அவருடைய குடும்பத்தினரும் உள்ளே நுழைந்தது அபூர்வமான காட்சியாக இருந்தது. புன்னகை முகமாகச் சென்ற நௌஷாத் அவர்களை வரவேற்று சலாம் சொன்னான். சலீம்சாரும் சலாம் சொன்னபடி அவனை ஏறிட்டுப் பார்த்தார். இது நௌஷாத் அல்லவா? சலீம் சாருக்கு அதிர்ச்சி. அவன் ஒரு சப்ளையராக ஹோட்டல் பெயர்தாங்கிய உடையில் நிற்கிறான். ஒருவேளை அவனாக இருக்க முடியாதென்று அவர் நினைத்தாலும் வலிய வந்து தனக்கு சலாம்சொன்னதால் அவன் நௌஷாத்தாகத்தான் இருக்க வேண்டும் என்ற திடமான எண்ணம் வந்தது. இப்பவும் தன் முன் நின்று அவன் சிரிக்கிறான். நம்ப முடியவில்லை.

சலீம் சாரிடம் எங்கோ ஓரிடம் வெறுப்பு மனம் இருந்திருக்கிறது, அவரை அறியாமல்! அது உடன் வெளிப்பட்டது. நௌஷாத் அவரிடம் நலத்தை விசாரிக்கிறான். ஏது சார் இவ்வளவு தூரம் என்று கேட்கிறான். அதெல்லாம் நீ விசாரிக்கக் கூடாது என்கிற மாதிரியான ஒரு வெறுப்புப் பார்வையை அவன்மீது வீசினார் சலீம். நௌஷாத் சுருண்டுவிட்டான். விழியின் தீப்பொறியை அவன் பார்த்தான். “சார், நான் நௌஷாத்,” என்று அவருடைய ஞாபகத்தை மீட்ட முயன்றான். அவர் அதை வாங்கிக்கொள்ளவேயில்லை. மனைவியும் மகளும் கூட அவரை விநோதமாகப் பார்த்தார்கள். சலீம் சாரிடம் கனிவான முகத்தை எப்போதும் பார்த்துப் பழகிய அவர்களுக்குக்கூட இன்றைக்கு எப்படி இவரிடம் இவ்வளவு விசித்திரமான பார்வை இருக்கிறது என்று குழம்பினார்கள். “இவன் என்கிட்ட படிச்சான், என் ஸ்டூடண்ட்,” என்று அவர்களிடம் சொல்லி அறிமுகம் செய்யமுடியாமல் தவித்தார்.

வேறு ஹோட்டலுக்குப் போய்விடலாமா என்று யோசனை வந்தது. எங்கேயோ ஏதோ சாப்பிட வேண்டுமென்ற நோக்கத்தில் அவர்கள் வரவில்லை. இங்கேதான் வந்தாக வேண்டுமென்கிற பிடிவாத நோக்கில் வந்திருக்கிறார்கள். குழந்தைகள் ஆசை ஆசையாக இருக்கிறார்கள்.

மனச் சங்கடத்தோடு ஒரு டேபிளின் முன் உட்கார்ந்தார்கள். நிறைய சப்ளையர்கள் நின்றிருந்தார்கள். சலீம் சார் உட்கார்ந்திருக்கும் டேபிளுக்கு நௌஷாத்துதான் பரிசாரகன். அவன் சற்றே மனம் தளர்ந்தவனாக, “சார் என்ன சாப்பிடுறீங்க,” என்று கேட்டான். அவன் பரிமாறலில் சாப்பிட விருப்பமில்லாமல் சற்றுத் தள்ளியிருந்த இன்னொரு டேபிளுக்கு அனைவரையும் அழைத்துச் சென்று உட்கார வைத்தார். நௌஷாத் தன்னைத்தானே சபித்துக்கொண்டான். எல்லோரும் பார்க்கத் தான் அவமானப்பட்டுவிட்டோம் என்று மருங்கியவனாக ஓர் ஓரமாய்ப்போய் ஒதுங்கினான். சாப்பிட்டு முடிக்கும்வரை சலீம்சார் அவன் நின்ற திசையில் பார்க்காமல் தவிர்த்தார். புறப்படும்போதும் இயல்பாகப் புறப்பட்டுப் போனார்.

தன்னோடு வந்தவர்களெல்லாம் நல்ல உணவை உண்டு மகிழ்ச்சியுடன் வந்தாலும், சலீம் சாரின் மனம் நிலைகுலைந்திருந்தது. தன்னிடம் பயின்று பெரிய பெரிய வேலைகளுக்கும் அதிகாரங்களுக்கும் போனவர்கள் அனந்தம்பேர் இருக்கிறார்கள். தான் ஓய்வு பெற்றுவிட்டாலும் இன்றளவும் தன்னை வந்து பார்த்து மரியாதைசெய்யும் மாணவர்களால் தன் வாழ்வு சுடர்வதான கர்வம் அவருக்கு. தங்களின் திருமணத்திற்கோ வேறு மங்கல நிகழ்வுகளுக்கோ அவரை வந்து அழைத்துச் செல்லும் மாணவர்கள் குறைவில்லாமல் இருக்கிறார்கள். வேறெங்கோ திருமணம் செய்துகொண்டவர்கள் தத்தம் மனைவியரோடு வந்து கௌரவம் செய்துள்ளார்கள். வெளிநாட்டில் பெரிய வேலைக்குப் போய்விட்டிருந்த கிருஷ்ணன் சில மாதங்களுக்கு முன்தான் தன் பெற்றோர்களோடு வந்து அவருக்கு மரியாதை செய்து பரிசுப் பொருள்கள் வழங்கியதோடு நில்லாமல் அவருடைய பாதங்களைப் பணிந்தும் வணங்கினான், அதுவொன்று போதும் அவருடைய வாழ்நாள் திருப்திக்கு. அந்தச் சமயத்தில் தன் மகளின் கணவர் வீட்டிலிருந்ததும், அதை அவர் பார்த்துப் பரவசப்பட்டதுமான சம்பவத்தை எப்படி மறக்க ஏலும்?

இப்படியான பெருமித உலகில் ஒரு ஹோட்டல் சப்ளையர் நுழைய முயல்வதை அவரால் ஏற்க முடியவில்லை. அவன் யாராயிருந்தால் என்ன? “இவன் என் ஸ்டூடண்ட், என்னிடம் படித்தான்,” என்று மனைவி, மக்களிடம் எப்படி அறிமுகம் செய்ய ஏலும்? தன்னைத் தற்காத்துக்கொண்டோம் என்று நினைத்து அந்நிகழ்வை மறக்க முயன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவொன்றும் அவ்வளவு கடினமாக இல்லை. சட்டென்று அந்த எண்ணம் கைகூடிற்று.

அந்தச் சம்பவத்தின் பின்னும் பல நாள்கள் சென்னையில் மகளின் வீட்டில் தங்கியிருந்திருக்கிறார். நௌஷாத்தின் நினைவு தலையெடுக்கவில்லை. ஊர்வந்து இறங்கி, ஆட்டோவில் ஏறி அந்த ஆட்டோவும் தான் பணிபுரிந்த பள்ளிக்கூடத்தைத் தாண்டிவரும் நேரம்பார்த்து நௌஷாத்தின் நினைவு எட்டிப்பார்த்தது. சலீம்சாருக்கு ஏனோ உதட்டில் சுரிப்பு தட்டியது. நௌஷாத்தை அப்படித் தட்டிவிட்டிருக்க வேண்டாமோ? அவனைக் கொஞ்சம் மென்மையாக அணுகியிருக்கலாம். சாப்பிட்டுவிட்டு வரும்போது ஒரு சலாம் சொல்லிவிட்டு வந்திருக்கலாம். இதுவரையிலும் யாரிடமும் நாம் அப்படி நடந்து கொண்டதில்லையே... நான் ஏன் அப்படி ஆனேன்?

முத்துவுக்கு ஒரு காரணம் இருப்பதுபோல நௌஷாத்துக்கும் ஒரு காரணம் இருந்திருக்கிறது. அதை என்னவென்றாவது கேட்டு ஆறுதல்படுத்தியிருக்கலாம். நௌஷாத் என்ன சாதாரணமானவனா? பள்ளி மாணவர் தலைவர் தேர்தலில் அவன் பெற்ற வெற்றி எவ்வளவு பெரியது; எவ்வளவு வசீகரமானது? அறுநூறு மாணவர்கள் படித்த பள்ளிக்கூடத்தில் அவனுக்குத்தான் 485 வாக்குகள் கிடைத்தன. மாணவிகளெல்லாம் அவனுக்காகப் பள்ளிக்கூட வாசலில் நின்று வாக்கு சேகரித்தார்களே! வாக்குகள் விழுந்திருக்கும் தன்மையைப் பார்த்தால், ஒரு மாணவிகூட நௌஷாத்துக்கு எதிராக ஓட்டுப்போட்டிருக்க மாட்டார்கள் என்று அன்று அவருக்குத் தோன்றியது. அவன் வெற்றிபெற்றதும் மாணவிகள் ஒட்டுமொத்தமாய் நின்று கைதட்டிக் கூச்சல்போட்டு ஆரவாரம் செய்தார்களே... அவனைத் தோளில் தூக்கிவைத்தபடி மாணவர்கள் அங்குமிங்குமாய்ச் சுற்றியபோது இந்தப் பெண்களுமல்லவா கூடவே ஓடினார்கள். "அந்தக் காட்சியை எல்லா ஆசிரியர்களும் கூடிநின்று வேடிக்கை பார்த்தபோது, நான் மட்டும்தானே அவனிடம் சொன்னேன், 'நௌஷாத்து எனக்கும் ஓட்டுப்போட உரிமையிருந்திருந்தா நானும் ஒனக்குத்தாண்டே போட்டிருப்பேன்,' என்றுகூறி அவனின் தோளில் தட்டிச் சிரித்தேன். அப்போது எல்லா மாணவர்களும் மாணவிகளுமாய்க் கைதட்டிப் பாராட்டியபோது நௌஷாத் எப்படியிருந்தான், நான் எப்படியிருந்தேன்? அந்த நாளின் மகிழ்ச்சியை அந்தச் சொற்களால்தான் என்னால் கொண்டாட முடிந்தது... அன்று சாயங்காலம் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் நௌஷாத் என்ற பையன் வெற்றிபெற்ற விதத்தையும் மாணவிகள் அவனைக் கொண்டாடியதையும் இதோ பக்கத்திலிருக்கிற என் மனைவியிடம்கூடச் சொல்லிப் பூரிப்படைந்தேன்தானே. அந்த நௌஷாத்துதான் இந்த சப்ளையர் பையன் என்று சொல்லத் திணறித்தான் அப்படி அலட்சியம்செய்துவிட்டேனா?"

'அவ்வளவு வசீகரனான நௌஷாத் என் முன்னால் ஒரு சப்ளையராக வந்து நின்றான். அதைத் தாங்க முடியாத அதிர்ச்சியில்தான் அப்படி நடந்துவிட்டேன்போல. இந்த முத்துவுக்கு ஒரு பிரச்சினையைப் போல நௌஷாத்துக்கும் ஏதோவொரு பிரச்சினை இருந்திருக்கும். அது என்னவென்று தெரியாமல் அவனை அலட்சியம்செய்துவிட்டேன்.'

அவனும் முழுவதுமாய்ப் படித்து நல்ல வேலைக்குப் போயிருந்தால், நிச்சயமாக என்னை வந்து பார்த்திருப்பான். எனக்கு நன்றி சொல்லியிருப்பான். ஏதாவது பரிசுகூடத் தந்திருக்கலாம். ஆனால், அவனைவிடவும் குறைவான மதிப்பெண்கள் எடுத்துப் படித்து நல்ல வேலைக்குப் போனவர்களெல்லாம் என்னை வந்து பார்த்துக் கௌரவம் செய்திருக்கும்போது, நௌஷாத் மட்டும் என்னை வந்து பார்க்கவில்லை; பார்க்காமல் கௌரவம்செய்திருக்கிறான். என் அனுபவத்தில் அவனை நான் புரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டேன்.

முத்துவுக்குச் சொல்ல முடிந்தது, நௌஷாத்துக்குச் சொல்ல முடியவில்லை. முத்து இலவசமாய் என்னைச் சவாரிக்கு இட்டுவந்து என்னைத் தண்டிக்கப் பார்த்தான். நல்லவேளை நான் அந்தத் தண்டனைக்கு ஆளாகவில்லை. ஒருவேளை நௌஷாத்துக்காகத்தான் முத்து என்னைத் தண்டிக்க முயன்றானோ?

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொஞ்சம் கண்மூடி ஓய்வெடுக்கப் பார்த்த சலீம் சாரை நௌஷாத் அவரின் தூக்கத்திற்குத் தடைபோட்டவனாய் நெருங்கி நின்றான். ●

---

கதாசிரியர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | அஜயன் பாலா



# நூற்றாண்டு காணும் மகத்தான திரைக்கலைஞன்

## குருதத்

குருதத் எனும் மகத்தான திரைக்கலைஞனின் பெருமைமிக்க நூற்றாண்டு இது.

கடந்த வருடம் குருதத்தின் சம கால திரைக்கலைஞரும் பாலிவுட்டின் முதல் ஷோ மேன் என அழைக்கப்பட்டவருமான ராஜ்கபூர் அவர்களுக்கு நூற்றாண்டு. இதை மிகப் பெரிய சம்பவமாக பாலிவுட் கொண்டாடியது. ஆனால் அவரினும் சிறந்த படைப்புகள் என்று மட்டும் அல்லாமல், இன்றும் மகத்தான காவியமாக் கருதப்படும் பியாசா காகேஸ் கெ பூல், ஷாபி அவுர் குலாம் போன்ற படங்களைத் தந்த குருதத்தின் நூற்றாண்டை கொண்டாட யாரும் இல்லை.

இது ஒரு கசப்பான வாழ்க்கையின் விதி. இருவருமே காதலை தங்கள் திரைப்படங்களில் அபாரமாகக் கொண்டாடினர். ஆனால் ராஜ்கபூர் சினிமாவைக் கவர்ச்சியான கொண்டாட்டமாக மாற்றினார். ஆனால் குருதத் அதைக் கலையாக நேசித்தார்.

கபூரின் காதல்கள் நாடகத்தன்மை மிகுந்தவை சோகத்துக்கும் துயரத்துக்கும் திரையில் விலைப்பட்டியல் உண்டு என்பதை உணர்ந்து கண்ணீரைக் காசாக்கியவர். ஆனால் குருதத்தின் படங்கள் கண்ணீரை வரவழைக்காது ஆனால், அது இதயத்தை ஊடுருவிசெல்லும். நம்மைத் தூங்க விடாமால் நிம்மதியிழக்கச் செய்துவிடும். மனித வாழ்வில் துயரங்களைக் காட்டி நம்மையும் பண்பட்டவனாக மாற்றும்.

56 வருடங்களுக்கு முன் 1964இல் அக்டோபர் 10ஆம் நாள் இந்திய ஊடகங்களில் பரபரப்பான அந்தச் செய்தி வந்தடைந்து; அனைவரது இதயத்தையும் தீயால் கருகச்செய்தது. குருதத் எனும் மகத்தான கலைஞன் மும்பையில் தன் வாடகை வீட்டில் தற்கொலை செய்து கொண்ட தகவல் அது. 39 வயதேயான குருதத்தின் மனைவி கீதாதத் மற்றும் அவர்களது மூன்று குழந்தைகள். அந்த நாளில் அவரைப்பிரிந்து மீளாத் துயரத்தில் இருந்தனர்.

இன்று உலகமே குருதத் படங்களைக் கொண்டாடுகிறது. பியாசா தான் இன்றும் இந்தியாவின் சிறந்த தர்மான வணிகப்படமாகக்

**இன்று உலகமே குருதத் படங்களைக் கொண்டாடுகிறது. பியாசா தான் இன்றும் இந்தியாவின் சிறந்த தரமான வணிகப்படமாகக் கருதப்படுகிறது. உன்னதமான காதல் திரைப்படம் என்றாலே பியாஸாதான். வெண்ணிற இரவுகள், ரோமியோ ஜூலியட் போல இலக்கியக் காதல் கதைகள் உண்டாக்கியத் தாக்கத்துக்கும் சாப்ளினின் சிட்டி லைட்ஸ் திரைப்படமாக உருவாக்கியத் தாக்கத்துக்கும் சற்றும் குறைவில்லாதது பியாஸா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறது. உன்னதமான காதல் திரைப்படம் என்றாலே பியாஸாதான். வெண்ணிற இரவுகள், ரோமியோ ஜூலியட் போல இலக்கியக் காதல் கதைகள் உண்டாக்கியத் தாக்கத்துக்கும் சாப்ளினின் சிட்டி லைட்ஸ் திரைப்படமாக உருவாக்கியத் தாக்கத்துக்கும் சற்றும் குறைவில்லாதது பியாஸா.

முதல் முறையாக பியாஸா படத்தைப் பார்த்துவிட்டு மனம் என் கை நழுவிப்போவதை அறிந்து பாதியிலேயே படத்தை நிறுத்திவிட்டேன். என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட படம் இயக்கிய இந்தியாவின் மகத்தான படைப்பாளியான குருதத் வாழும் போது எந்த அங்கீகாரமும் கிடைக்கவில்லை. அன்று பியாசா படுதோல்விப்படம். தொடக்கத்தில் குருதத் வாழ்க்கையும் தொடர் வெற்றிகளால் பிரகாசித்தது பாஸி, ஜால், சிஐடி, ஆர் பார் என வரிசையாக வெற்றிப்படங்களாகக் கொடுத்தார். ஆனால், அந்த அவரது இயக்கம் பல வண்ணப்படங்களின் வருகையால் ஆட்டம் கண்டது. அழுத்தமான கதைகளுக்கும் எதார்த்த சித்தரிப்புகளுக்கும் வரவேற்பு குறைந்து, பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகமுள்ள படங்கள் வரவேற்பு பெற்றன. அவரது சம காலாத்தவரும் சக போட்டியாளருமான ராஜ்கபூர் இதை அறிந்து தன் படங்களில் நாயகிக்கு ஆடைகளை குறைத்து இந்திய மனங்களின் ஏக்கத்தைப் பூர்த்தி செய்தார். அவர் படங்களில் நாயகி அழும்போதுகூடக் கவர்ச்சியாக உடைஉடுத்தி, அதிகமாக உடல் பாகங்களை வெளிப்படுத்தி அழுவார். நம் ஊர் குடும்ப பாங்கான பாத்திரத்துக்கு புகழ்பெற்ற பத்மினியையே அவர் சித்தரித்த விதம் கண்டு பல தமிழ் ரசிகர்கள் இதயம் பிளவுண்டது.

ஆனால், ராஜ்கபூரின் இந்த சூட்சுமத்தை குருதத் செய்யத்துணியவில்லை. அழுத்தமான காதல் கதைகளும் நேர்த்தியான தொழில்நுட்பமும் என்ற அவரது சினிமா ரசனை வியாபார ரீதியாக தோல்வி கண்டது. பியாஸாவைத் தொடர்ந்து காகஸ் கீ பூல், ஷாகித் பீபி அவுர் குலாம் போன்ற படங்கள் சுமாரான வெற்றி பெற்றாலும் பியாஸாவால் உண்டான கடனை அடைக்கும் அளவுக்கு அவரால் பணம் ஈட்ட முடியவில்லை.

இதன் நடுவே தான் அவர் வாழ்க்கையில்



**குருதத் காதலி வஹீதா ரஹ்மான் மனைவி கீதாதத் ஆகியோருடன்**

புயல் ஒன்று நுழைந்தது. அந்தப் புயல் வஹீதா ரஹ்மான். நம் தமிழ்நாட்டின் செங்கல்பட்டில் பிறந்தவர். ஹேமமாலினிக்கு முன்பு இந்தியில் நுழைந்து வெற்றிக்கொடி நாட்டிய முதல் நாயகி. எம்.ஜி.ஆரின் அலிபாபாவும் 40 திருடர்களும் படத்தில் அறிமுகமாகி பின் அப்படியே மும்பைக்குச் சென்றார். அப்போது சிஐடி படத்தை துவக்கியிருந்தார் குருதத். அப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கேட்டு குருதத்தை சந்திக்கச் சென்றார். அந்தப் படவாய்ப்பு வஹீதாவை நட்சத்திரமாக்கியது.

வஹீதா அப்படி ஒன்றும் அழகில்லை. ஆனாலும் அவரிடம் ஒரு அபரிதமான கவர்ச்சியும் அழகும் பொங்கி வழிந்தது. காமிராவுக்கும் வஹீதாவுக்கும் கெமிஸ்ட்ரி அற்புதமாக அமைந்தது. தொடர்ந்து குருதத்துடன் சேர்ந்த படங்கள் அனைத்தும் வெற்றி பெற்றன. குருதத்தின் இதயம் வஹிதா வசம் முழுமையாக சிறைபட்டது. கணவனின் காதல் போக்கு அறிந்த கீதாவும் வேறு வழியில்லாமல் குடும்பத்தைக் காப்பற்ற மீண்டும் திரையுலகில் பாட முடிவு செய்தார்.

ஆர்.டி.பர்மன் அப்போது ஒரு புதிய பாடகியை லதா மங்கேஷ்கருக்கு ஒரு மாற்றாக உருவாக்க நினைத்து கீதாவை அழைத்து வாய்ப்பு கொடுத்தார். ஒரு காலத்தில் உச்சத்தில் இருந்த கீதாவின் குரல் அன்று பர்மன் எதிர்பார்ப்பை ஈடுசெய்ய முடியவில்லை. ஆனாலும் ஆர்.டி.பர்மன் விடாமல் முயற்சித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடையே இதை அறிந்த லதா மங்கேஷ்கர் தன் தங்கை ஆஷாபோன்ஸ்லேவை அனுப்பி ஆர். டி. பர்மனின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்ய வைத்தார். இந்த வெறுப்புகளால் கீதா தனது கணவனைவிட்டு முழுமையாகப் பிரிந்தார். ஒருபக்கம் தனக்காக தன் திறமையையே தியாகம் செய்து குடும்பத்துக்காக அர்ப்பணித்த காதல் மனைவி கீதா மற்றும் குழந்தைகள்; இன்னொருபக்கம் சினிமா எனும் கலை வஹீதாவின் மாயச்சிரிப்பு.

பாழும் கலைஞனுக்கு அதீத இதயத்தையும் உச்சமான ரசனையையும் கொடுக்கும் இயற்கை, இன்னொருபக்கம் அவன் அதை அனுபவிக்காதபடி நடைமுறை வாழ்வின் அனைத்து விதிகளையும் அவனுக்கும் சமமாகக் கொடுத்து கால்களை பூட்டி விடுகிறது.

**வஹீதா அப்படி ஒன்றும் அழகில்லை. ஆனாலும் அவரிடம் ஒரு அபரிதமான கவர்ச்சியும் அழகும் பொங்கி வழிந்தது. காமிராவுக்கும் வஹீதாவுக்கும் கெமிஸ்ட்ரி அற்புதமாக அமைந்தது. தொடர்ந்து குருதத்துடன் சேர்ந்த படங்கள் அனைத்தும் வெற்றி பெற்றன. குருதத்தின் இதயம் வஹிதா வசம் முழுமையாக் சிறைபட்டது.**

ஒருபக்கம் மனம் காதலால் இழுக்க இன்னொருபக்கம் குடும்ப நியமம் அவன் கால்களை இழுக்க அவன் எந்த பக்கமும் போக முடியாமல் இரண்டுக்குமிடையே குருதத் சிக்கித் தவித்தார். இதிலிருந்து தப்பிக்க அவருக்கு உதவியது மதுபோத்தல்கள். தினமும் அதீதக் குடியும் சிகரட்டும் தூக்க மாத்திரையும் அவரை அலைக்கழித்தன.

இப்படியான சூழலில்தான் அவர் தயாரித்தப் படங்கள் தொடர் தோல்வி அடைந்து நிலைமை முன்னிலும் மோசமாகி, சொத்துக்கள் பறிமுதல் ஆனது. வீடுகளை இழந்து வாடகை வீட்டுக்குக் குடிவந்தனர்.

இன்னொருபக்கம் வஹிதா தொடர் வெற்றியால் புகழ் உச்சிக்குச் சென்றார். அவராலும் குருதத்தின் காதலை ஏற்க முடியவில்லை. காரணம் கீதாவும் அவர்களது குழந்தைகளும் அவருக்கும் நெருக்கம். தன்னால் இன்னொரு பெண்ணின் வாழ்க்கை பாழாவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இதனால் குருதத்தை தவிர்த்தார். இப்போது குருதத்துக்கு யாரும் இல்லை. மனைவியும் குழந்தைகளைப் பார்க்க அனுப்ப மறுத்துவிட்டார்.

ஒரே ஒருவர் அவருக்கு ஆறுதலாக இருந்தவர். அப்ரார் ஆல்வி. அவரது எல்லா படங்களுக்கும் அவர்தான் கதையாசிரியர். அவர் மட்டும் அவ்வப்போது அவர் குடியிருப்புக்கு வந்து போவார். அன்று குருதத் அவரிடம் ராஜ்கபூர் கால்ஷீட் தந்துள்ளதாகவும் மீண்டும் படம் தயாரித்து கடனை அடைக்கப்போவதாகவும் மகிழ்ச்சியுடன் கூறியிருக்கிறார். பட வேலைகள் மும்முரமாகத் தொடங்கின. ஆனால், என்ன காரணத்தாலோ ராஜ்கபூர் படப்பிடிப்புக்கு வரவில்லை. அன்று மாலை அப்ரார் ஆல்வி குருதத் குடியிருப்புக்குச் சென்றபோது இன்னொரு காரணமும் ஆல்விக்கு தெரியவந்தது. தனது குழந்தைகளைப் பார்க்க விரும்பியபோது மனைவி அனுப்ப மறுத்துவிட்டதைச் சொல்லி குருதத் மீண்டும் அதிகமாக குடிக்கத் துவங்கியிருக்கிறார்.

மறுநாள் கீதா குழந்தைகளுடன் குருதத்தை இறந்த நிலையில்தான் பார்க்க முடிந்தது. அவர் சாகும் தருவாயில் அவரது வாய் 'கீதா கீதா' என்றே சொல்லிக்கொண்டிருந்தாக அருகிலிருந்தவர்கள் பதிவு செய்துள்ளனர்.

குருதத் படத்தின் புகழ்பெற்ற பாடலொன்று கீதாதத் பாடியிருப்பார். ககஸ் கீ பூல் படத்தில் வரும் *Waqt Ne Kiya Kya Haseen Sitam* - எனும் அப்பாடல் இருவருக்காகவும் எழுதப்பட்டது போலவே இருக்கும்; அதன் வரிகள் வசீகரமான அநீதியை வாழ்க்கை நம்மீது சுமத்திவிட்டது.

**"என்னில் நான் இல்லை**
**உன்னிலும் நீ இல்லை**
**ஒரு பாதையில் இருவரும் சந்தித்தோம்**
**இணைபிரியாத ஜோடிகளாய் வாழ்வை**
**துவக்கினோம்**
**சில அடிகள் கடக்கும் முன்பே**
**ஏனோ அந்த பாதை பாதியில் அறுந்துவிட்டது**
**பாதியில் முடிந்துவிட்டது".**

பிறகு கணவனை மறக்க கீதாவும் குடியில் வீழ்ந்து 1972இல் தனது வாழ்வை முடித்துக் கொண்டார்.

●

**கட்டுரையாளர் : எழுத்தாளர், திரைப்பட இயக்குநர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் இல்லா விமானங்கள்
## வரலாற்றுச் சுருக்கம்
## (A short history of Drones)

நடந்துமுடிந்த இஸ்ரேல் X இரான் போரில் 'டிரோன்கள்' (*Drones*) என்று அழைக்கப்படும் தானியங்கி விமானங்கள் / ஆள் இல்லா விமானங்கள் பரவலாகப் பேசப்பட்டன. இரண்டு நாடுகளும் ஆள் இல்லா விமானங்களைப் போரில் பயன்படுத்தினாலும் குறைந்த விலையில் உள்நாட்டிலேயே, உள்நாட்டுப் பொறியாளர்களைக்கொண்டு வடிவமைக்கப்பட்ட ஆள் இல்லா விமானங்களை இரான் பயன்படுத்தியது. மாத்திரம் அல்ல, யாராலும் ஊடுருவிச் செல்லமுடியாது என்று உலகநாடுகள் நம்பிக்கொண்டிருந்த இஸ்ரேலின் பாதுகாப்பு அரண் என்று சொல்லப்பட்ட 'இரும்புக்கூண்டுகளின் மீது' (*Iron-domes*) ஆள் இல்லாப் போர்விமானங்களை இரான் பறக்கவிட்டது. அது அந்த அரணை வலுவிழக்கச் செய்தது.

அதன்பிறகு கண்டம்விட்டுக் கண்டம்தாவும் ஏவுகணைகளை ஏவி இஸ்ரேல் நகரங்கள்மீது துல்லியமாகத் தாக்குதலைத்தொடுத்து இஸ்ரேலையும் அதன் கூட்டாளி அமெரிக்காவையும் நிலைகுலையச்செய்தது. இஸ்ரேலில் உலகிலேயே சிறந்த உளவு அமைப்பு என்று சொல்லப்பட்ட மொசாத் தலைமையகக் கட்டிடத்திலேயே ஏவுகணைத்தாக்குதல் நடத்திப் பல இராணுவத்தளபதிகளைக் கொன்றது. இஸ்ரேலை யாராலும் வெல்லமுடியாது என்னும் பிம்பத்தை அடித்து நொறுக்கியது. இந்தத்தாக்குதலில் இரானுக்கு ஏற்பட்ட இழப்பு அதிகம் என்றாலும், வலிந்து போரைத்திணித்த இஸ்ரேலுக்கு இரான் ஏற்படுத்திய இழப்பும் வலியும் மிகமிக அதிகம்.

இரானிடம் அணுகுண்டுகள் இல்லை, விரைவில் அணுகுண்டுகளை உருவாக்கிவிடுவார்கள் என்று சொல்லித்தானே இரான் அணுக்கருச் செறிவூட்டல் தளங்கள்மீது இஸ்ரேல் குண்டுகளை வீசியது. ஃபார்டோ (*Fordow*) அணுக்கருத்தளம் மலைக்கு அடியில் 80 மீ. (260 அடி) ஆழத்தில் அமைந்திருக்கிறது. அதனை அழிக்கும் வல்லமை இஸ்ரேலுக்கு இல்லை. ஆனால் அமெரிக்கா வைத்திருக்கும் 13,600 கி.கி. எடைகொண்ட குண்டை, பி-2 விமானத்திலிருந்து (*B-2 bomber*) வீசினால், ஃபார்டோவை அழிக்கமுடியும் என்பதால் இஸ்ரேல் அமெரிக்காவையும் போருக்குள் இழுத்தது. அமெரிக்காவும் அதன்படியே B-2 குண்டுகளைவீசி இரான் செறிவூட்டல் மையத்தை அழித்துவிட்டதாகக் கூறியது.

ஆனாலும், முட்டாள் முரடனின் மூர்க்கமான தாக்குதலைத் தடுப்பதற்குத் தனக்குப் போதிய வலு இல்லை என்று தெரிந்து முன்னறிவுடன் நடந்துகொண்டது இரான். தாக்குதலுக்கு முன்பாகவே 60 விழுக்காடு செறிவூட்டப்பட்ட யுரேனியத்தோடு பல அறிவியல், தொழில்நுட்பத் தளவாடங்களையும் வேறு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றிவிட்டது. அமெரிக்காவின் தாக்குதலுக்குப் பதிலடியாக கத்தார் நாட்டில் இருந்த அமெரிக்க இராணுவத்தளத்தின்மீது இரான் ஏவுகணைத்தாக்குதல் நடத்தியது.

உலக அரசியல், உள்நாட்டு அரசியல் பேசுவது அல்ல இக்கட்டுரையின் நோக்கம். ஆனாலும் போர் அரசியல் பேசாமல் போர்பற்றி எப்படி எழுதமுடியும்? ஆள் இல்லா விமானங்கள் இஸ்ரேல் X இரான் போரில் பெருமளவு பயன்படுத்தப்பட்டதால் இப்போதைய பேசுபொருளாகியிருக்கிறது.

### ஆஸ்திரியாவின் பலூன் தாக்குதல்

ஆஸ்திரியா, 1840 ஜூலையில் குண்டுகள் நிரப்பப்பட்ட 200 பலூன்களை பறக்கவிட்டு 'கால-உருகி' (*time fuse*) கொண்ட குண்டுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**The Queen Bee – பிரிட்டன் பிரதமர் வின்ஸ்டன்ட் சர்ச்சில் பார்வையிடுகிறார்**

வெனிஸ்மீது வீசுவது என்னும் திட்டத்தை நிறைவேற்றியது. ஒவ்வொரு பலூனிலும் 24 முதல் 30 பௌண்ட் (13.6 கி.கி.) எடைகொண்ட குண்டு வைக்கப்பட்டிருந்தது.

பலூன்கள் பெரும்பாலும் தரையிலிருந்தே பறக்கவிடப்பட்டன. சில பலூன்கள் *SMS Vulcano* என்னும் போர்க்கப்பலில் இருந்தும் பறக்கவிடப்பட்டன. ஒரேஒரு குண்டு வெனிஸ் நகர்மீது வீழ்ந்திருக்கிறது. மற்றவை, காற்றுவீசும் திசை மாறியதால் தங்கள் இலக்குகளைவிட்டு விலகிச்சென்றுவிட்டன. சில பலூன்கள் சென்ற திசையிலேயே திரும்பியும்விட்டன.

ஆஸ்திரியா, ஆள் இல்லாமல் பலூன்களில் குண்டுகளை வைத்துப் பறக்கவிட்டு வெனிஸ்மீது தாக்குதல் தொடுத்ததுதான் பின்னால் உருவாக்கப்பட்ட ஆள் இல்லா விமானங்கள் உருவாக்கத்திற்கு அடித்தளம் இட்டது எனலாம். இன்றைய ஆள் இல்லாப் போர்விமானங்களின் வரலாறு முதலாவது உலகப்போரின்போதே தொடங்கிவிட்டது.

## ஆள் இல்லா விமானம்

ஆள் இல்லா விமானம் (*UAV - Unmanned Aerial Vehicle*) என்பது அந்த விமானத்தை, விமானத்தில் அமர்ந்து இயக்குவதற்கான விமான ஓட்டிகளும், பயணிகளும் இல்லாமல் விண்ணில் பறப்பது ஆகும். அதுவும் இரண்டுவகையாக வடிவமைக்கப்படுகிறது. ஒன்று தரைநிலையத்திலிருந்து மின்சைகைகளைக்கொண்டு இயக்கப்படும் ஆள் இல்லா விமானம் (*RPV - Remotely Piloted Vehicle*), மற்றொன்று முன்கூட்டிய கட்டளைகளுடன் அதுவாகவே இயங்கும் வகையில் வடிவமைக்கப்படும் தானியங்கி விமானம்(*Automated Drones*). ஆள் இல்லா விமானங்கள் கட்டுக்குள் வைக்கப்படும் வேகத்திலும் உயரத்திலும் நீண்ட நேரம் பறக்கும் வலிமைகொண்டவை.

## முதல் ஆள் இல்லா விமானம்

பிரிட்டன் தனது முதல் மிகச்சிறிய ஆள் இல்லா விமானத்தை 1917-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விண்ணில் பறக்கவிட்டு சோதனை செய்தது. என்றாலும் முதல் உலகப்போரின் போது 1930-இல்தான் 'இராணி தேனி' (*Queen Bee*) என்னும் பெயர்கொண்ட முதல் ஆள் இல்லா விமானம் உருவாக்கப்பட்டது. அது 17,000 அடி உயரத்தில் மணிக்கு 100 மைல் (160 கி.மீ.) என்னும் வேகத்தில் 300 மைல்.(480 கி.மீ.) பறக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. பிரிட்டனின் விமானப்படையிலும், கடற்படையிலும் 380 'இராணி தேனி' வகை ஆள் இல்லா விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.

போர்க்காலத்தில் போர்ப் பயிற்சிக்காக விண்இலக்குகளாகப் பயன்படும் வகையில் ஆள் இல்லா விமானங்கள் பிரிட்டனால் உருவாக்கப்பட்டன. அந்த ஆள் இல்லா விமானங்கள் விண்ணில் பறக்கும்போது எழுப்பிய ஓசை, ஆண் தேனிக்கள் பறக்கும்போது எழுப்பும் ஓசையை ஒத்திருந்ததால் 'ஆண்தேனீக்கள்' என்று குறிப்பிடும்வகையில் 'டிரோன்கள்' (*drones*) என்று பெயரிட்டு அழைக்கப்பட்டன.

அமெரிக்கா, 1918-அக்டோபர் மாதம் ஆள் இல்லா விமானத்தைப் பறக்கவிட்டு சோதனை செய்தது. அமெரிக்கா பறக்கவிட்ட அந்த முதல் ஆள் இல்லா விமானத்தின் பெயர் 'கெட்டரிங் உளவுப்பூச்சி'(*Kettering Bug*). அது 50 மைல் ( 80 கி.மீ.) வேகத்தில் பறந்து 75 மைல் (121 கி.மீ.) தொலைவில் அமைந்த இலக்கைத் தாக்ககூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலகப்போரின்போது ஆள் இல்லா விமானங்கள் உளவுபார்ப்பதற்குப் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டன.

### ஆள் இல்லா விமானங்களின் பயன்கள்

ஆள் இல்லா விமானங்கள் வியட்னாம் போரில் முதன்முதலாக பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டன. உளவுபார்ப்பதற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. கூடுதலாக, எதிரியின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கும், நிலையான இலக்குகள்மீது குண்டுகளை எடுத்துச்சென்று வீசி வெடிக்கச்செய்வதற்கும், எதிரிகளைக்குழப்பும் விதத்தில் துண்டறிக்கைகளை வீசுவதற்கும் என்று ஆள் இல்லா விமானங்களின் பயன்பாடு போர்க்களத்தில் பலதரப் பட்டதாக இருந்தது.

வியட்னாம் போரைத்தொடர்ந்து மற்ற நாடுகளும் ஆள் இல்லா விமானங்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தை வளர்த்தெடுக்கத் தொடங்கினர். புதிய வகை டிரோன்கள் நீண்டதூரமும், கூடுதல் உயரமும் எழும்பிப் பறக்கும் வகையில் வளர்ச்சியடைந்தன. மிக நீண்டதூரப் பறத்தலுக்கு எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டது. அதனைத் தீர்க்கும்வகையில் 'சூரிய மின்திறன்' (*solar power*) பயன்படுத்தும் விதத்தில் ஆள் இல்லா விமானங்கள் வடிவமைக்கப்பட்டன. குறிப்பிட்ட இலக்குக்கு அப்பாற்பட்டு குறிப்பிட்ட நபரை இலக்காககொண்டு தாக்கும் ஆள் இல்லா விமானங்களும் வடிவமைக்கப்பட்டு, இந்தக்காலப் போர்களில் பயன்படுத்தப்படுகின்றன.

இன்றைய போர்களில் பயன்படுத்தப்படும் ஆள் இல்லா விமானங்கள் அளவில் பெரியவை, நீண்ட தொலைவு பயணிக்கக்கூடியவை, கணினிக் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடியவை என்பதாக வளர்ச்சியடைந்துள்ளன. என்றாலும் 'டிரோன்கள்' (*drones*) என்றே அழைக்கப்படுகின்றன. இரான் ஆள் இல்லா விமானங்களை உற்பத்திசெய்துப் பயன்படுத்துவதோடு பிறநாடுகளுக்கும் விற்பனைசெய்கிறது.

ஆள் இல்லா விமானங்கள் போருக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுபவை அல்ல. போருக்கு அப்பாற்பட்டு ஆள் இல்லா விமானங்கள் பயன்படுத்தப்படும் தளங்கள் நிறையவே உள்ளன. பருவநிலை மாற்றங்களை ஆய்ந்தறியவும், இயற்கைப்பேரழிவுக் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப்பொருள் வழங்கவும், நிலநடுக்கம், எரிமலை போன்ற இயற்கைச்சீற்றங்களைப் படம்பிடிக்கவும், மனிதர்கள் செல்லமுடியாத இடங்களைப் படம்பிடிக்கவும் ஆள் இல்லா விமானங்கள் பெரிதும் பயன்படுபவையாக உள்ளன.



Iran's 4,000 kim. Range attack drone, Shahed-149 under operation



சீனாவின் கொசு டிரோன்

செப்டம்பர் 11 தாக்குதல் என்றும் 9/11 தாக்குதல் என்றும் அடையாளப் படுத்தப்படும் அமெரிக்க இரட்டைக் கோபுரங்களை விமானங்களைக் கொண்டு தாக்கி அழித்தது என்றுமே மறக்கமுடியாதது. 2001-ஆம் ஆண்டு இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்கள், நான்கு அமெரிக்க உள்நாட்டுப் பயணிகள் விமானத்தைக் கடத்தினர். இரண்டு விமானங்கள் நியூயார்க் நகரத்தின் உலக வர்த்தக மையமான இரட்டைக்கோபுரங்களின்மீது (*twin towers*) மோதித் தகர்த்தன. மூன்றாவது விமானம் அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகன் மீது மோதியது. நான்காவது விமானம், விமானப் பயணிகளின் எதிர்வினை காரணமாக பெனிசில்வேனியா மீது பறந்தபோது ஒரு விளைநிலத்தில் விழுந்து நொறுங்கியது.

அத்தாக்குதல்களில் 2,977 பேர் கொல்லப்பட்டனர். உலக வரலாற்றில் மிகவும் கொடுமையான தீவிரவாதத் தாக்குதலாக அது இருந்தது. அதன் விளைவாக அமெரிக்கா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரவாதத்திற்கு எதிரான போரை அறிவித்து பல தீவிரவாதக் குழுக்களை வேட்டையாடியது, அல்லது அப்படிச்சொல்லிக்கொண்டே அப்பாவிமக்களைக்கொன்றது.

9/11 தாக்குதல் அமெரிக்காவைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. என்பது உண்மை. அதன்பிறகான காலத்தில் அதுபோன்ற மற்றொரு தாக்குதல் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதில் அமெரிக்கா கவனம்செலுத்தியது. அதன் விளைவாக ஆட்கள் செல்லமுடியாத தரைநிலைகளையும், வான்பரப்பையும் உளவுபார்க்கும் வகையில் ஆள் இல்லா விமானங்கள் உருவாக்கப்பட்டுப் பாதுகாப்பு நோக்கில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 'திருப்புப்பொறியியல்' (reverse engineering)

நடந்துமுடிந்த இஸ்ரேல் X இரான் போரில் இரானிய பொறியியலாளர்கள் மற்றுமொரு சாதனையையும் ஆள் இல்லா விமானங்களைத் தயாரிப்பதில் நிகழ்த்தியுள்ளனர். அதனைத் 'திருப்புப்பொறியியல்' (reverse engineering) என்றுப் பெயரிட்டு அழைக்கின்றனர். அதாவது இஸ்ரேல் இரான் மீது ஏவும் ஆள் இல்லா விமானங்களில் சிலவற்றைக் கைப்பற்றி, முற்றாகப் பிரித்தெடுத்து, அவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கும் தொழில்நுட்பத்தைக் கற்று, அதே தொழில்நுட்பத்தில் ஆள் இல்லா விமானங்களைத் தயாரித்து அவற்றை ஏவிய நாட்டின்மீதே பறக்கவிட்டுத் தாக்குதல் நடத்துவது. இப்படி பல நூறு விமானங்களை இரான் தயார்செய்து இஸ்ரேலைத் தாக்குவதற்கு வைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. இதனை எதிர்கொள்ளமுடியாமல் இஸ்ரேல் நடுங்குவதாகவும் போர்க்களச்செய்திகள் கூறுகின்றன.

### கொசு டிரோன்கள்

இந்தக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போது என் நண்பரும் ஆங்கிலப் பேராசிரியருமான ஜெனோ ஃபெர்னாண்டோ அனுப்பியிருந்த வாட்சப் செய்தி என் கவனம் ஈர்த்தது. சீனாவின் 'தேசிய இராணுவ தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் ஒரு டிரோனை வடிவமைத்திருக்கிறார்கள். அதன் சிறப்பு என்னவென்றால் அது 2 செ.மீ. நீளம் மட்டுமேகொண்டது! அதன் எடை அரை கிராம் !! அச்சு அசல் ஒரு கொசுவைப்போலவே இருக்கிறது! தொடுதிரைக்கைபேசியால் /திறன் பேசியால் (smart phone) இயக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ரேடார் திரையில் அது சிக்காது.

அத்தனைச் சிறிய டிரோனில் ஒரு காமரா (camara), ஒரு மைக்ரபோன் (microphone), உளவறியும் உணர்விகள் (sensors) இடம்பெற்றுள்ளன. இராணுவ நடவடிக்கைகளுக்காக என்று சீன இராணுவத்துறையினர் கூறுகின்றனர். என்றாலும் எந்த ஒரு புதிய தொழில்நுட்பமும் ஏதோ ஒரு காலகட்டத்தில் பலரும் பயன்படுத்துவதாக மாறியுள்ளதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

### மனித உருவில் விலங்கு?

இப்போது அனைவர் கைகளிலும் இருக்கும் திறன்பேசி வந்தபிறகு பேசுவது ஒட்டுக்கேட்கப்படுகிறது. பெண்களை ஒளிப்படம் எடுத்து அதனைக்காட்டியே அவர்களை மிரட்டிப் பணியவைப்பதும் நடக்கிறது. இந்தச்சூழலில் இப்புதியவகை டிரோன் பயன்பாட்டிற்கு வருமானால், படுக்கை அறையில் பறப்பது கொசுதான் என்று உறுதியாக நம்பிவிடமுடியுமா? கொசுவலை இப்புதிய 'கொசுக்களிடம்' இருந்து பாதுகாப்பளிக்குமா? இப்படியான 'கொசு டிரோன்கள்' இந்தப்பூமியை வெட்டவெளி ஆக்கிவிடும் அல்லவா?. நாம் எங்குசென்றும் மறைவிடம் தேடிக்கொள்ளமுடியாத சூழல் ஏற்பட்டுவிடும்தானே! எப்படி விலங்குகளுக்கு 'ஒளிவு மறைவு ' இல்லையோ அப்படி ஒரு நிலை மனிதர்களுக்கும் ஏற்படும் வாய்ப்புகளை தவிர்க்கமுடியுமா? அந்தச்சூழலில் நாம் மீண்டும் மனித உருவில் விலங்குகளாக மாறும் சூழலும் ஏற்படலாம் அல்லவா?. அச்சமின்றி அப்படி ஒரு நிலையை எண்ணிப்பார்க்க முடியுமா? உலகம் எங்கே போய்க்கொண்டு இருக்கிறது? முன்னோக்கியா, பின்னோக்கியா? முன்னோக்கி வளரும் தொழில்நுட்பம், பண்பாட்டைப் பின்னோக்கித் தள்ளிவிடுகிறது என்று சொல்லலாமா?

●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | **துருவன்**



# விண்ணை வளைக்கப் போகும் இந்தியா!

இந்திய விண்வெளி வீரர் சுபன்ஷு சுக்லாவின் வரலாற்று சிறப்புமிக்க விண்வெளிப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. விண்ணுக்கு மனிதர்களை அனுப்பி வைக்கும் இஸ்ரோவின் ககன்யான் திட்டத்திற்கு ஒரு முன் உதாரணமாக பார்க்கப்படுகிறது. அவரின் விண்வெளி அனுபவம் நல்ல பலன் கொடுக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

41 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியர் ஒருவரின் முதல் விண்வெளிப் பயணம் இது என்ற பெருமைகளை பெற்றுள்ளது. நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ஸ்பேஸ்எக்ஸின் ஃபால்கன் 9 ராக்கெட் மூலம் அவர் ஜூன் 25 ஆம் தேதி இந்திய நேரப்படி நண்பகல் 12.01க்கு விண்வெளிக்குச் சென்றார். காலநிலை, ராக்கெட்டில் தொழில்நுட்ப கோளாறு உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் காரணமாக இவரது பயணம் 7 முறை தள்ளி வைக்கப்பட்டது. நீண்ட காத்திருப்பிற்குப் பிறகு அவர் விண்வெளிக்கு பயணம் மேற்கொண்டார்.

தனியார் வணிக விண்வெளி நிறுவனமான ஆக்ஸியம் ஸ்பேஸால் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. இந்த நிறுவனம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து விண்வெளிக்கு விண்வெளி வீரர்களை அனுப்பி வருகிறது. இது, ஆக்ஸியத்தின் நான்காவது (AX-4) விண்வெளிப் பயணமாகும். நாற்பது ஆண்டுகளில் இந்தியா, போலந்து மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளின் வீரர்கள் விண்வெளிக்குச் செல்வது இதுவே முதல் முறை என்பதால், இந்த நிகழ்வு உற்சாகத்துடன் பார்க்கப்பட்டது.

### சுபான்ஷு சுக்லாவின் பயணம்

ராக்கெட் ஏவப்பட்ட சுமார் 15 முதல் 20 நிமிடங்களுக்குப் பிறகு, க்ரூ டிராகன் C213 விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைப்பதற்கான சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. சுற்றுப்பாதையில் நுழைந்ததும், அமெரிக்க விண்வெளி வீரரும் விமானத் தளபதியுமான பெக்கி விண்கலத்தை இயக்குவதில் உதவி செய்யும் சுபான்ஷு சுக்லாவுடன் பொறுப்பேற்றார். மிஷன் நிபுணர் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி (போலந்தைச் சேர்ந்த ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி விண்வெளி வீரர்), மற்றும் மிஷன் நிபுணர் டிபோர் கபு (ஹங்கேரி) ஆகியோர் மிஷன் பைலட் சுக்லாவுடன் ஆக்சியம்-4 இன் குழு உறுப்பினர்களாக உள்ளனர். சுமார் 28 முதல் 36 மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, விண்கலம் பூமியிலிருந்து சுமார் 400 கிலோமீட்டர் தொலைவில் மணிக்கு 27,600 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றி வரும் விண்வெளி நிலையத்துடன் விண்கலத்தை மிக சாதுரியமாக இணைப்பது (Docking) என்பது மிகவும் சவாலானது. இதை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர். பூமியின் ஈர்ப்பு விசையிலிருந்து தப்பிக்க இந்த அதிவேக சுழற்சி அவசியம்.

இந்த இணைப்பு - டாக்கிங் என்பது இரண்டு ரயில் பெட்டிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதை ஒத்திருக்கிறது. இருப்பினும், விண்கல டாக்கிங் ஒரு முக்கியமான வேறுபாட்டைக் கொண்டுள்ளது: அது முற்றிலும் காற்று புகாததாக இருக்க வேண்டும். (காற்று இல்லாத இடத்தில், சிறிதளவு காற்று கசிவைக் கூடத் தடுக்க கூடிய அமைப்பு அங்கு இருக்க வேண்டும்.) இது விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. டாக்கிங் செய்தவுடன், விண்வெளி வீரர்கள் விண்கலத்திற்கும், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கும் இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளி உடைகள் இல்லாமல் நகரலாம், ரயில் பெட்டிகளுக்கு இடையில் நகர்வது போல, ஆனால் நுண் ஈர்ப்பு விசையில் இந்த நகர்வுக்கு பல மணிநேரம் ஆகும். விண்வெளிக் கலம் இணைந்த பிறகு இந்த குழுவினர் விண்கலத்திலிருந்து வெளியேறி ISS-க்குள் நுழைந்தார்கள். ஏற்கனவே அங்குள்ள NASA விண்வெளி வீரர்களான Anne McClain, Nicole Ayers, Johnny Kim; Roscosmos Kirill Peskov, Sergei Ry-zhikov, □ Alexei Zubritsky; w JAXA விண்வெளி வீரர் Takuya Onishi ஆகியோர் விண்வெளி நிலையத்தில் இவர்களை வரவேற்றனர். நான்கு பேர் கொண்ட AX-4 குழுவினர் அவர்களுடன் இரண்டு வாரங்கள் தங்கியிருந்து, பல்வேறு அறிவியல் சோதனைகளை மேற்கொண்டனர். முதல் 2- 3 நாள் ஓய்வுக்குப் பிறகு - இந்த நாட்களில் விண்வெளி வீரர்கள் தங்கள் உடலை நுண் ஈர்ப்பு விசையில் பழக்கப் படுத்த வேண்டும், அதன் பின்னர் தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளவார்கள். நான்காம் நாள் ஷுபன்ஷு சுக்லா தனது ஆய்வுப் பணிகளைத் தொடங்கினார். முதன்முதலாக மயோஜெனிசிஸ் (Myogenesis) பரிசோதனை அதாவது எடையற்ற நிலையில் தசை செல்கள் எவ்வாறு சீர்குலைகின்றன என்பதை ஆராய்வதே இந்தப் பரிசோதனையின் முக்கிய நோக்கம். நுண்ணோக்கி மூலம் செல்களின் கட்டமைப்பு புரதங்களின் மாற்றங்கள் ஆய்வு செய்யப்பட்டன. விண்வெளியில் தசைச் சுருக்கம் (muscle atrophy) ஏற்படுவதற்கான உயிரியல் காரணங்களைப் புரிந்துகொள்வதே இந்த ஆய்வின் நோக்கம். இந்த ஆய்வு விண்வெளி வீரர்களின் உடல் பாதுகாப்புக்கு மட்டுமல்லாமல், பூமியில் தசை நலிவு நோய்கள் (muscular dystrophy) வயது முதிர்ந்தோரின் தசை இழப்பு போன்ற பிரச்சினைகளுக்கான சிகிச்சைகளைக் கண்டறியவும் உதவும்.

### தொடர்ந்த ஆய்வுகள்

ஐந்தாம் நாள் முதல், விண்வெளிப் பயணத்தின்போது வீரர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்காக நுண்பாசி (மைக்ரோ ஆல்கே) உற்பத்தி குறித்த ஆய்வுகளை சுபான்ஷு சுக்லா தொடங்கினார். எடையற்ற நிலையில் நுண்பாசிகளின் வளர்ச்சியைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆறாம்,ஏழாம் நாள்களில் சைனோபாக்டீரியா என்கிற நுண்ணுயிரிகளின் வளர்ச்சி குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எட்டாம் நாளில் தர்டிகிரேடு என்கிற சிறப்பு நுண்ணுயிரிகளைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். இந்த நுண்ணுயிரிகள் கடும் வெப்பம், குளிர், கதிரியக்கம் (radiation), உயர் அழுத்தம் ஆகியவற்றைத் தாங்கும் திறனுடையவை 10 ஆண்டுகளுக்கும் மேலாக நீரற்ற நிலையில் இருந்தாலும் இவற்றின் உயிர்த்திருத்தல் (survival mechanism) குறித்து ஆய்வு செய்யப்பட்டது. 11ஆம் நாளில் தாவர வளர்ச்சி குறித்த ஆய்வுகள் தொடங்கப்பட்டன. விண்வெளியின் எடையற்ற நிலையில் விதைகள் எவ்வாறு முளைக்கின்றன என்பது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 12ஆம் நாள் முதல் 14ஆம் நாள் வரை முளைத்த தாவரங்களின் படங்கள் எடுக்கப்பட்டு, அவை பூமிக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக மைனஸ் 80 டிகிரி செல்சியஸ் குளிரூட்டியில் பாதுகாக்கப்பட்டன. 18ஆம் நாள் மூளை ரத்த ஓட்டம் பற்றிய செரிப்ரல் ஹீமோடைனமிக்ஸ் ஆய்வு, நியூரோமோஷன் வி.ஆர்.ஆய்வு, டெலிமெட்ரிக் ஹெல்த் ஏ.ஐ. ஆய்வு போன்ற கூட்டு ஆய்வுகளில் சுபான்ஷு சுக்லா பங்கேற்றார். 19ஆம் நாள் பூமிக்கு விண்வெளி நிலையத்தில் தொடர்ந்து பணியாற்றும் வீரர்கள் வழியனுப்பு விருந்தும் நடத்தினர். தங்களது பணி வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து ஜூலை 14 ஆம் தேதி மாலை 4.40 மணிக்கு விண்வெளி நிலையத்தில் இருந்து டிராகன் விண்கலம் மூலம் அவர்கள் 4 பேரும் புறப்பட்டனர்.

விண்கலம் பூமியை நெருங்கும்போது பாராசூட்டுகள் 2 நிலைகளில் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக முதலில் ஜூலை 15 ஆம் தேதி பகல் 2.57 மணிக்கு பூமியில் இருந்து சுமார் 5.7 கிலோ மீட்டர் உயரத்தில் பாராசூட்டுகள் விரிந்து விண்கலத்தின் வேகத்தை குறைத்தது. தொடர்ந்து, பூமியில் இருந்து சுமார் 2 கிலோ மீட்டர் உயரத்தில் விண்கலம் வந்தபோது, பிரதான பாராசூட்டுகள் விரிந்தது. அது விண்கலத்தின் வேகத்தை முற்றிலுமாக குறைத்தது. சுமார் 22.5 மணி நேர பயணத்துக்கு பிறகு இந்திய நேரப்படி மாலை 3.01 மணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள பசிபிக் பெருங்கடலில் டிராகன் விண்கலம் பத்திரமாக இறங்கியது. விண்கலம் கடலில் இறங்கியதும், அங்கு ஏற்கனவே தயாராக இருந்த அமெரிக்கா கடற்படையினர் விண்கலத்தை மீட்டு, அங்கிருந்த மீட்பு கப்பலில் ஏற்றினர். பின்னர் விண்கலத்தின் கதவுகள் மாலை 3.40 மணிக்கு திறக்கப்பட்ட உடன், திட்டத்தின் கமாண்டர் பெக்கி விட்சன் முதலில் வெளியே வந்தார். அவரை தொடர்ந்து இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா, போலந்தை சேர்ந்த ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி மற்றும் ஹங்கேரியை சேர்ந்த விண்வெளி நிபுணர் திபோர் கபு ஆகிய 4 பேரும், கையசைத்தப்படி வெளியே வந்தனர்.

18 நாட்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 4 வீரர்களும் இருந்ததால் அவர்கள் உடல் மற்றும் மனதளவில் சோர்வாக இருப்பதை களைவதற்கு அவர்களுக்கு தசை அழுத்தம், மனோதிட பயிற்சி 7 நாட்கள் அளிக்கப்பட்டது.

இந்தநிலையில், “சர்வதேச விண்வெளி நிலையத்தில் மற்ற வீரர்களுடன் இணைந்து பணியாற்றியது சிறப்பாக இருந்தது. என் மீதும், என் பணியின் மீதும் ஆர்வம் காட்டிய அனைத்து இந்தியர்களுக்கும் நன்றி” என்று சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பூமிக்குத் திரும்பிய இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

### மைக்ரோ கிராவிட்டி-நுண் ஈர்ப்பு விசை

விண்வெளி ஆய்வு மையத்தில் நமது பூமியின் நிலப்பரப்பை ஒப்பிடும் போது 90 சதவீதம் அளவிற்கு ஈர்ப்பு விசையிருக்கும். அங்கு காற்று இல்லாத காரணத்தால் உடல் எடையை உணர முடியாத நிலை இருக்கும். இதை “நுண் ஈர்ப்பு” (மைக்ரோ கிராவிட்டி) என்று அழைக்கிறோம். நுண் ஈர்ப்பு விசை என்பது பூஜ்ஜிய ஈர்ப்பு விசை அல்ல. ஒரு லிஃப்ட் கீழே இறங்கும்போது அல்லது ஒரு ஜெயண்ட் வீல் அதன் கீழ்நோக்கி ஊசலாடத் தொடங்கும்போது மிதக்கும் அந்த விரைவான உணர்வு ஒரு சிறிய நுண் ஈர்ப்பு விசையை வழங்குகிறது. விண்வெளியில், விண்வெளி வீரர்கள் இந்த விசையை தொடர்ந்து அனுபவிக்கிறார்கள். புவியீர்ப்பு விசையின் கீழ்நோக்கிய இழுப்புக்கும் விண்கலத்தின் முன்னோக்கிய இயக்கத்திற்கும் இடையிலான இந்த சமநிலை எடையின்மையை உருவாக்குகிறது.

### விண்வெளி வாழ்க்கை

விண்வெளி வீரர்கள் முதன்முதலில் நுண்புவியீர்ப்பு விசையில் நுழையும் போது, அவர்களின் உடல்களும் மூளையும் ஒரு புதிய அனுபவத்தை எதிர்கொள்கின்றன. அந்த திடீர் எடையின்மை அவர்களின் கண்கள் பார்ப்பதற்கும் அவர்களின் உடல்கள் உணர்வதற்கும் இடையே ஒரு விசித்திரமான மோதலை உருவாக்குகிறது. அவர்களின் மூளை பொதுவாக ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் விண்வெளி சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும். உடலின் திரவங்கள் மேலிருந்து கீழ் என்று இல்லாமல் கீழிருந்து மேல் நோக்கி செல்லும், இதனால் கண்களில் ரத்த அழுத்தம் அதிகரிக்கலாம். கூடவே தலையில் அழுத்தம் அதிகரிக்கலாம். தண்ணீர் அருந்துதல் இயற்கையாகவே குறைந்து விடும் என்பதால் சிறுநீர் வெளியேற்றுதல் குறையும், இதனால் சிறுநீரகக் கற்கள் தோன்றும் வாய்ப்பு அதிகரிக்கும். விண்வெளி சூழலுக்குப் பழக்கப்படுத்துதல். அடிப்படைப் பணிகள் கூட நுண் ஈர்ப்பு விசையில் புதிர்களாக மாறுகின்றன. ஒரு பொருளை அடைவது உடலை சுழல வைக்கக்கூடும், மேலும் ஈர்ப்பு விசை இல்லாமல் "நிற்பது" சாத்தியமற்றது. பூமியின் இழுப்பை எதிர்க்கப் பழகிய தசைகள் நிலையான பயன்பாடு இல்லாமல் பலவீன மடைகின்றன. இயக்கங்கள் மிகைப்படுத்தப் படுகின்றன, மேலும் மென்மையான தடுமாற்றம் விண்வெளி வீரர்களை ISS இன் மறுமுனையில் உள்ள சுவர்களில் மோதச் செய்யலாம். இருப்பினும், விண்வெளி வீரர்களின் தகவமைப்பு விரைவானது. சில நாட்களுக்குள், மூளை ஈர்ப்பு விசையை விட காட்சி குறிப்புகளை அதிகம் நம்பியிருக்கும் இடம் சார்ந்த நோக்கு நிலையை மீண்டும் இதன் மூலம் இணைக்கிறது. இயக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. மேலும் மிதப்பது இயற்கையான உணர்வாகிறது.

### அறிவியல் சோதனைகள்

விண்வெளி மையத்தில் 14 நாட்கள் தங்கும் AX-4 குழுவினர் சுமார் 60 அறிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


COURTESY: AXIOM SPACE

கேப்டன் சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்தில் 7 ஜன்னல்கள் கொண்ட Cupola Module-லிலிருந்து பூமியின் பிரமிக்க வைக்கும் புகைப்படம்

பரிசோதனைகளை செய்கின்றனர். ஒரு முக்கிய ஆய்வு நுண் ஈர்ப்பு விசையில் பயிர்கள் முளைப்பதை உள்ளடக்கியது. தார்வாட் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் ஐஐடி தார்வாட் ஆராய்ச்சியாளர்கள் பச்சைப்பயறு மற்றும் வெந்தயம் போன்ற வேகமாக வளரும் தாவரங்களின் விதைகளை சோதிப்பார்கள். பூமியில், ஈர்ப்பு விசை வேர்களை 'கீழேயும் தளிர்கள் 'மேலே யும்' செல்ல வழிநடத்துகிறது. ஈர்ப்பு விசையின் திசை இழுப்பு இல்லாத நிலையில் வேர் மற்றும் தளிர் வளர்ச்சியின் வடிவத்தை அவர்கள் உன்னிப்பாகக் கவனிப்பார்கள். இந்த ஆராய்ச்சி நீண்ட கால பயணங்களுக்கு முக்கியமான விண்வெளி விவசாயத்தை செயல்படுத்தவும், நீண்ட கால விண்வெளி பயணிகளின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் உதவும். கூடுதலாக, விண்வெளி வெளிப்பாட்டின் விளைவுகளை ஆய்வு செய்ய குழுவினர் அரிசி உட்பட ஆறு வகையான விதைகளை எடுத்துச் சென்றுள்ளனர். இந்த விதைகள் பூமிக்குத் திருப்பி அனுப்பப்பட்டு, பயிரிடப்பட்டு, நன்மை பயக்கும் மரபணு பண்புகளை அடையாளம் காண தலைமுறை தலைமுறையாக பகுப்பாய்வு செய்யப்படும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், *PSLV C60* மிஷன் மூலம் விண்வெளியில் கௌபரி விதைகளை இஸ்ரோ வெற்றிகரமாக முளைக்கச் செய்தது. ராக்கெட்டின் நான்காவது கட்டத்தில் விதைகள் முளைக்கும் ஒரு தொகுதி இருந்தது. இது நுண் ஈர்ப்பு விசையில் முளைப்பு சாத்தியம் என்பதை நிரூபிக்கிறது. இந்த ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கும் "விண்வெளி உயிரியல்" ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகும். பூமியின் ஈர்ப்பு விசைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை தகவமைப்புகளை ஆராய இஸ்ரோ இந்திய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. விண்வெளிப் பயணம் பார்வையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்கான கண் கண்காணிப்பு சோதனைகளிலும் விண்வெளி வீரர்கள் பங்கேற்பார்கள். நுண் ஈர்ப்பு விசையில், கண் அசைவுகள் ஒழுங்கற்றதாக மாறும், இது எதிர்கால பயணங்களுக்கு ஒரு முக்கியமான ஆய்வுப் பகுதியாகும். சுபான்ஷு சுக்லா ஆறு உயிரியல் பரிசோதனைகளுக்கு தலைமை தாங்கி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். நாசாவுடனான இஸ்ரோவின் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 2024 இல், சுபான்ஷு சுக்லா மற்றும் பால்கிருஷ்ணன் நாயர் ஆகியோர் ஆக்சியம் தலைமையிலான பயிற்சியை ஆ மேற்கொண்டனர். இந்த பயணத்திலிருந்து பெறப்பட்ட அனுபவம்.

### மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கட்டமைப்பு

சர்வதேச விண்வெளி நிலையம் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளின் உதவியுடன் கட்டப்பட்டுள்ளது,விண்வெளியில் மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கட்டமைப்பு சர்வதேச விண்வெளி நிலையமாகும். சர்வதேச விண்வெளி நிலையம் *900 m3* நீளம் உடையது. இது *400,000* கிலோ எடை கொண்டது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் *2,247 m2* சூரியத் தகடுகள் உள்ளன. இது ஆண்டுக்கு *7,35,000* கிலோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. சர்வதேச விண்வெளி நிலையம் பூமியிலிருந்து *370-460* கிலோ மீட்டர் உயரத்தில் சுற்றுகிறது.

### மைக்ரோ கிராவிட்டி ஆய்வகம்

சர்வதேச விண்வெளி நிலையம் என்பது விண்வெளியில் ஆராய்ச்சி தளத்தை உருவாக்கிப் பயன்படுத்துவதற்கான உலகளாவிய மனித முயற்சிகளில் முன்னோடி சாதனையாகும். *2000* ஆம் ஆண்டு முதல், இந்த நிலையம் அதிக திறன் கொண்ட மைக்ரோ கிராவிட்டி ஆய்வகமாக உருவானது. இதில் பல்வேறு ஆய்வுகளைச் விஞ்ஞானிகள் செய்து வருகின்றனர். சர்வதேச விண்வெளி நிலையம் *2000* ஆம் ஆண்டு நவம்பர் *2* ஆம் தேதி எக்ஸ்பெடிஷன் *1* இல் தொடங்கி *20* ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகிறது. ஆய்வகம் ஒரு கால்பந்து மைதானத்தின் அளவிற்கு விரிவடைந்துள்ளது. 21 நாடுகளைச் சேர்ந்த 260க்கும் மேற்பட்ட நபர்கள் 60க்கும் மேற்பட்ட பயணங்களைக் மேற்கொண்டுள்ளனர். இந்த விண்வெளி நிலையம் 2030ஆம் ஆண்டு வரை செயல்படும் விதத்தில் இயங்கும்.

### இந்திய விண்வெளி நிலையம்

சீனா ஏற்கனவே தனக்கான டிங்கோங் விண்வெளி நிலையத்தை உருவாக்கி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவும் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள், பாரதிய அந்தரிக்க்ஷ நிலையம் உருவாக்க வேண்டும் என்ற முனைப்புடன் இஸ்ரோ தற்போது செயல்பட்டு வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள், 8 டன் எடையுள்ள, ரோபோ திறன்களைக் கொண்ட, சர்வதேச விண்வெளி நிலையத்தின் (ஐ.எஸ்.எஸ்) முதல் தொகுதியை, இஸ்ரோ நிலைநிறுத்த திட்டமிட்டு உள்ளது. 'பாரத் விண்வெளி நிலையம்' என குறிப்பிடப்படும் இந்த லட்சிய திட்டப்பணிகள் வருகிற 2028-ம் ஆண்டு தொடங்கப்படும். தொழில்நுட்ப முன்னேற்றங்களை பயன்படுத்தி, 20 முதல் 1,215 டன்கள் வரை சுமந்து செல்லும் திறன் கொண்ட புதிய ராக்கெட்டை உருவாக்க உள்ளது. தற்போதைய இந்திய ராக்கெட்டுகளால் 10 டன் எடையுள்ள செயற்கைகோள்கள் மற்றும் கருவிகளை கொண்டு செல்ல முடியும். 2035-ம் ஆண்டிற்குள் சர்வதேச விண்வெளி நிலைய பணியின் ஒரு பகுதியாக விண்வெளி வீரர்களை அனுப்பும் திட்டத்துடன், எதிர்காலத்தில் இஸ்ரோ பணிகளுக்கு ஒரு பெரும் மைல் கல்லாக விண்வெளி நிலையப் பணி அமைந்துள்ளது,

### யார் இந்த சுபான்ஷு சுக்லா?

சுபான்ஷு சுக்லா இந்திய விமானப் படையின் விமானி மேலும், பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் ஆய்வு நிறுவனத்தில் (IISc) பணியாற்றி வருகிறார். பீம் (BHEEM) எனப் பெயரிடப்பட்ட ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, அதில், வேற்றுக்கிரகங்களில் மாதிரி வாழ்விடத்தை வடிவமைப்பது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஆய்வுக் குழுவில் சுபான்ஷு சுக்லாவும் இடம் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுபான்ஷு சுக்லா, உத்தரப் பிரதேச மாநிலத் தலைநகரான லக்னோவில் அக்டோபர் 10, 1985, ஆண்டு பிறந்தார். கார்கில் போரில் இந்திய வீரர்கள் அடைந்த சாதனைகள் அவரை ஆயுதப்படைகளில் சேரத் தூண்டின. அவர் புனேயில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் (NDA) பட்டம் பெற்றார், இது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் எதிர்கால அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் இராணுவ அகாடமியாகும். சுக்லா ஜூன் 2006 இல் இந்திய விமானப்படை யின் (IAF) போர் விமானப் பிரிவில் சேர்ந்தார். 2024 ஆம் ஆண்டில் MiG -21, MiG -29, சுகோய் Su-30, டோர்னியர் மற்றும் ஹாக் போன்ற விமானங்களை இயக்குவதில் சுமார் 2,000 மணிநேர விமான அனுபவத்தைப் பெற்றார். ஜூன் 2019 இல் அவர் விங் கமாண்டராக பதவி உயர்வு பெற்றார், அதே ஆண்டு விண்வெளி மருத்துவ நிறுவனம் (IAM) மூலம் IAF இன் விண்வெளி வீரர் தேர்வு செயல்முறைக்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்தியாவின் ககன்யான் பணிக்கான நான்கு விண்வெளி வீரர்களில் ஒருவராக (பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், அஜித் கிருஷ்ணன் மற்றும் அங்கத் பிரதாப் ஆகியோருடன்) சுக்லா பட்டியலிடப்பட்டார். 2021 ஆம் ஆண்டு ரஷ்யாவில் உள்ள காகரின் விண்வெளி வீரர் பயிற்சி மையத்தில் அடிப்படை விண்வெளி வீரர் பயிற்சியை முடித்த சுக்லா, ரஷ்யாவிலிருந்து திரும்பிய பிறகும் பெங்களூருவில் உள்ள விண்வெளி வீரர் பயிற்சி மையத்தில் தொடர்ந்து பயிற்சி பெற்றார். 2024 ஆம் ஆண்டு இந்திய விமானப்படையில் குழு கேப்டனாக பதவி உயர்வு பெற்றார். சுக்லா, கம்னா சுபா சுக்லா என்ற பல் மருத்துவரை மணந்தார். இந்திய பாதுகாப்புப் படையில் சேர்ந்த அவரது குடும்பத்தில் முதல் நபர் இவர்தான்.

பின்குறிப்பு : பூமியைச் சுற்றிவந்த 634வது மனிதர் என்ற பெருமையை சுபான்ஷு சுக்லா, விண்வெளிப் பயணிகளின் பதிவேட்டில் அதிகாரப்பூர்வமாக இடம்பிடித்தார். ●

கட்டுரையாளர் : அறிவியல் எழுத்தாளர்

Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரண்டாவது அட்டைத் தொடர்ச்சி...

# தமிழ்நாடு வளமும் நலமும் திட்டக்குழுவின் வழித்தடம்

2015 செப்டம்பரில், இந்தியா உள்பட 193 நாடுகளை உள்ளடக்கிய ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில், 2030-ம் ஆண்டுக்குள் உலக நாடுகள் வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals - SDGs) எட்டுவது குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பல்வேறு வளர்ச்சிக் குறியீடுகளையும் இலக்குகளையும் கொண்ட 17 அம்ச குறிக்கோள்களை ஐ.நா.சபை உலக நாடுகளுக்கு பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில், இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் முன்முயற்சிகளை எடுத்துவருகின்றன. இதுதான் தமிழ்நாடு திட்டக் குழுவையும் இப்படியான ஒரு முக்கிய அறிக்கையைத் தயாரிக்கத் தூண்டியிருக்கிறது.

இல்லம் தேடிக் கல்வி, மக்களைக் காக்கும் மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பெண்களுக்கான இலவசப் பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், மீண்டும் மஞ்சப்பை உள்ளிட்ட பல்வேறு சமூகநலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. எல்லா மாநிலங்களையும் உள்ளடக்கிய தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளில், தமிழ்நாடு முதன்மை மற்றும் முன்னிலை இடங்களை வகிப்பதும் அடங்கும். தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் சில சமூகநலத் திட்டங்களால் ஈர்க்கப்பட்டு, அண்டை மாநிலங்கள் மட்டுமின்றி, தூரத்திலிருக்கும் வடஇந்திய மாநிலங்களும் வெவ்வேறு வடிவங்களில் அவற்றை அறிமுகப்படுத்த முனைகின்றன. இது தமிழ்நாட்டின் முன்னோடித் தரத்துக்கு வலு சேர்க்கிறது.

இலவசத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடைக்கல்லாக இருப்பதாக, பொருளாதார நிபுணர்கள் தொடர்ந்து விமர்சனங்களை முன்வைத்தாலும், அப்படியான திட்டங்களைச் சார்ந்துதான் ஆட்சியிலிருக்கும் கட்சிகளும் ஆட்சிக்கு வரும் கட்சிகளும் இயங்க வேண்டிய நிலைமை. அந்த வகையில், இத்தகைய திட்டங்களை குறைகள் களைந்து திறம்படச் செயல்படுத்துவதுதான் ஆளும் அரசுகளுக்குரிய பெரும் சவால். அந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் முனைப்புடன் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவதாக நம்பலாம்.

வறுமை ஒழிப்பு, மருத்துவ நலன், தரமான கல்வி, பால் பேதமின்மை, மகளிர் மேம்பாடு, அடிப்படைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பருவநிலை மாற்ற விளைவுகளை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட 17 முக்கிய அம்சங்கள் சார்ந்து, வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள், திட்டங்கள் குறித்து திட்டக்குழு சமர்ப்பித்த நீண்ட அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கடி சுட்டிக்காட்டும் “எல்லோருக்கும் எல்லாமும்” என்ற நோக்கின் அடிப்படையில், தமிழ்நாட்டின் வருங்கால வளர்ச்சி அமைந்திட இந்த அறிக்கை வழிகாட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

வளர்ச்சியின் பலன்கள் எல்லா தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும். இல்லையெனில், அது “பொருளாதார வீக்கம்” என்றே நிபுணர்கள் கருதுகிறார்கள். வீக்கம் என்றால் நோயின் அறிகுறி.

இந்தியா போன்ற ஜனநாயக அமைப்பைக் கொண்ட நாடுகளில், வேகமான வளர்ச்சியையும் பெருந்திரளான மக்களின் நலனையும் ஒருசேரக் கையாள்வதில் பெரும் சிக்கலும் சவாலும் நிறைந்திருக்கிறது. ஆட்சியிலிருப்பவர்கள் இந்தப் பிரச்சினையில் எந்த அளவுக்கு நுட்பமான தெளிவைப் பெற்றிருக்கிறாகிறார்கள் என்பதைப் பொருத்தே, “எல்லோருக்கும் எல்லாமும்” என்ற தடத்தில் வேகமாக முன்நகர முடியும்.

இந்த அடிப்படையில், தமிழ்நாடு திட்டக்குழுவின் விரிவான பல்நோக்கு அறிக்கைகள் முக்கியக் கவனத்துக்கும் விவாதத்துக்கும் உரியவை. பொருளாதார நிபுணர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் அவரவர் தளங்களில் இவை பற்றி கூடிப் பேசி, தக்க ஆலோசனைகளை அரசுக்கு வழங்கலாம். ஐ.ஐ.டி. போன்ற முன்னோடி உயர்கல்வி மையங்களில் உள்ள நிபுணர்கள், மாநில திட்டக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சாத்தியங்கள் பற்றியும் அவற்றை வேகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வாய்ப்புகள் பற்றியும் அரசுக்கு எடுத்துரைக்கலாம். சமூக ஆர்வலர்கள், அரசியல் நோக்கர்கள் இன்னபிற துறையாளர்கள், அவர்கள் பார்வையில் இந்த அறிக்கைகளின் பரிந்துரைகள் செயலாக்கம் பெறுவதற்கு கூடுதல் வளம் சேர்க்கலாம்.

திட்டமிடப்படா இலக்கு வெறும் ஆசையாக சுருங்கிவிடும் என்பார்கள். அவ்வாறின்றி, தமிழ்நாட்டின் வளர்ச்சி வேகத்தைக் கருத்தில்கொண்டு தயாரிக்கப்பட்டவையே, மாநிலத் திட்டக் குழுவின் இந்த அறிக்கைகள். தங்குதடையின்றி செயல்வடிவம் பெறட்டும்.

திராவிட மாடல் குறித்து விமர்சனங்கள் இருக்கலாம். அது கடந்து, அதன் முன்மாதிரி முயற்சிகள் கவனத்திற்குரியவை.

●

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Posted at Egmore RMS Patrika Channel
Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org